# St. James Kayts Canada Association Silver Jubilee Book




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன்.



கதிரவன் உறங்கு திசை சென்று உறங்கினாலும்
உறங்காதுவிழித்திருந்துகாவல் செய்யும் படையாளியே
மும்மடி நூற்றாண்டுமக்கள் நலம் காக்கும் தூயவரே
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம் காத்தருள்வாய் என்றும்

தேர்ந்துகொண்ட மூவரில் இயேசுவின் பங்காளியாகி
தாபோர் மலைசென்றுயேசுவின் மகிமை கண்டீர்
ஏற்காதமக்கள் மட்டில் அக்கினிவிழவும் கேட்டீர்
துன்பக் கின்னத்தில் பருகிடவரமும் பெற்றீர்

புரவிமீதுவாள் கொண்டுவான் மீதுவலம் வந்து
துருக்கர் படைமேற்கொள்ளாபாதுகாத்தபடையாளி
அம்மைநோய் வந்தபோதுவலம் வந்துகாத்தவரே
கொடியதுன்பம் வந்திடாதுதொடராகக் காத்திடுவீர்
மணம் கமழும் சாம்பிராணி இதமாகச் சுகம் தர
குதிரையின் காலோசைகடகடஎனக் கேட்டிடவே
விழித் தெழுந்துஒளிந்தங்குபார்த்தபோது
கெம்பீரமாய் சென்றதனைகண்டவரும் நம்மில் உண்டு

வானுயர்ந்தகொடிமரத்தில் பறக்கின்றபடையாளி
படபடஎன்றஓசையுடன் பறக்கின்றகாட்சியது
கடகடஎன்றுபுரவிமீதுவலம் வாரீரோ என்று
ஆர்வமுடன் ஞானத்தில் அண்ணாந்துபார்க்கின்றோம்

கடல் கடந்துசென்றுவரதுணைசெய்யும் படையாளி
துணையாளிசென்றாலும் துணைநின்றுகாக்கின்றீர் குடும்பமதை
காவல் நிலையம் அருகிருந்தும் சேட்டைஏதும் செய்யாமல்
காவலர்க்கும் காவலராய் நம் பதியைக் காத்திட்டீர்

படிப்படியாய் வளர்ந்துவந்துபுதுப் பொலிவுபெற்றிருந்தீர்
வரவாற்றில் நீங்காத இடம்பிடித்துசிறப்புடன் விளங்குகின்றீர்
மாற்றங்கள் செய்வதற்குதடையுண்டுநம் நாட்டுசட்டத்தில்
மாற்றமின்றிநிலைகொண்டுகாத்திடுவீர் நம்புகின்றோம்

காவலூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவின் தேசிய கீதம்

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள்
உண்மை தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நீ எழில் கண்டு (உ)வப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம்நிலப் புகழை, சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுத்தோம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுத்தோம்!

## Official Lyrics of O Canada

O Canada!
Our home and native land!
True patriot love in all thy sons command.
With glowing hearts we see thee rise,
The True North strong and free!
From far and wide
O Canada, we stand on guard for thee.
God keep our land glorious and free!
O Canada, we stand on guard for thee.
O Canada, we stand on guard for thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து!

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானமளந் தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழி
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

## புனித யாகப்பர் பேரில் பாடல்

வரமருள் புகழ் கொண்டயாகப்பரை
வந்தடி பணிந்து நாம் வாழ்த்திடுவோம்.. ஓ.2
எம் துயர்தீர்த்திட வேண்டிடுவோம்
என்றும் எமக்கருள் சொரிந்திடுவார்

துன்ப வருத்தங்கள் சூழ்ந்த நாமே
தொல்லைகள் பாவங்கள் நிறைந்த நாமே..ஓ.2
கோவில் எம் காவலூர் யாகப்பரை
கும்பிடவே பிணி நீங்கிடுமே

குதிரையில் ஏறிப் படை வகுத்து
குழறவே பகைவரைச் சிதறடித்து..ஓ.2
அதிரவே கலக்கிய யாகப்பரின்
அடியினை தாழ்பணிந்திடுவோம்…ஓ..ஓ..2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



St. Peter's Basilica, Rome.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## His Holiness



# POPE FRANCIS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



St. James the apostle church, Spain.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Canadian Cardinal



## THOMAS CHRISTOPHER COLLINS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை புனித. யாகப்பர் பங்குமக்கள்(1993—2018) 25 வருடங்களாக புனித. யாகப்பர் திருவிழா நடத்தும் புனித. லூர்து மாதா தேவாலயம். (டவுண்ரவுன்,ரொறொன்ரோ)

Kayts St. James parishioners celebrate the feast of St. James at the Our lady of Lourdes church for the past (1993-2018) 25 years. (Downtown, Toronto)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Auxiliary Bishop of Toronto



# Vincent H. Nguyen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ST. MARY'S CATHEDRAL, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Bishop of Jaffna



# REV. DR. JUSTIN B. GNANAPRAGASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


St.James Church


St.Anthony ‘s Church


St.Joseph ‘s  Church


St.Mary ‘s  Church

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Emeritus Bishop of Jaffna



# REV. DR. EMMANUEL THOMAS SAVUNDRANAYAGAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

December 2018

Dear friends,

I extend my congratulations to the Kayts' St. James Church community on your twenty-fifth anniversary of celebrating together at Our Lady of Lourdes Parish in Toronto.

The importance of your language and cultural traditions in your life has brought you together and has kept your community together. I pray that you will continue to grow in the love of Our Lord and that you keep your faith strong.

May Our Lord bless you always.

Yours sincerely in Our Lord,

+ Thomas Card. Collins

Cardinal Thomas Collins,
Archbishop of Toronto

Thomas Cardinal Collins, Archbishop of Toronto | 1155 Yonge Street, Toronto, Ontario M4T 1W2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Most Reverend Vincent H. Nguyen
Auxiliary Bishop of Toronto - Eastern Pastoral Region

5 Winding Court, Toronto, Ontario MIC 4X2
Telephone: (416) 724-0900 • Fax: (416) 724-0902 • Email: eastern.region@archtoronto.org

November 15, 2018

Kayts, St. James Church Association
c/o Francis X. Kulendran Navaratnam
1607 – 40 Teesdale Place
Toronto ON M1L 1L3

Dear Members,

I extend my best wishes to you on this the 25th anniversary of the Kayts, St. James Church Association in Toronto.

Congratulations on the wonderful work you are doing. I understand you have successfully accomplished many humanitarian services for refugees, new immigrants and to others in need. You also continue to support children and families in Kayts, Sri Lanka.

Your journey with our Lord and your Sri Lankan community helps lead us to a deeper relationship with Jesus. I pray you continue to grow in your service to God and the church. May God bless you and your families, I remain,

I am with you in the Lord.

+Vincent Nguyen

Most Reverend Vincent H. Nguyen
Auxiliary Bishop of Toronto

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt. Revd. Dr. Justin B Gnanapragasam*
*Bishop of Jaffna*

*Bishop's House,*
*P.O. Box No. 02*
*Jaffna – Sri Lanka.*
**Tel : +94(0) 21 222 2649(O)**
**+94(0) 21 222 8518(R)**
**Email: gnanamjb48@gmail.com**

23rd November 2018

# I bestow my blessings upon the Association of St. James' Church Kayts, Canada

**Message from the Bishop of Jaffna**

St. James' Church, Kayts is one of the oldest churches in Our Diocese. I am pleased to say that from my childhood I received many blessings of God through the powerful intercession of St. James. I experienced divine presence from this beautiful Church.

I join with the parishioners of this Church in Canada to thank and praise God when they celebrate the Silver Jubilee of the Foundation of St. James' Church Association. I bestow my blessings upon all of them who contribute in many ways for the growth of their Church in Kayts.

St. James' Church, Kayts is now renovated beautifully with the generous contribution of this Association. Many other useful activities are also carried out by them. May the Lord bless you to continue your good mission.

The Right Revd. Dr. Justin B Gnanapragasam
**Bishop of Jaffna,**
**Sri Lanka.**

*I have to come that they may have life, and have it to the full. Jn. 10:10*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழா வாழ்த்துச்செய்தி

பிறந்திருக்கும் பாலகன் இயேசுவின் ஆசிகளோடு, இவ்வருடம் கனடாவாழ், ஊர்காவற்துறை புனித யாகப்பர் ஆலய இறைமக்கள் ஒரே குடும்பமாக ஒன்று சேர்ந்து தங்கள் வெள்ளிவிழா நிகழ்வுகளை கொண்டாடும் இத்தருணத்தில், கனடா தூய ஆரோக்கிய அன்னை பங்குத் தந்தையாகிய நான் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பேருவகை அடைகிறேன். மலர இருக்கும் 2019ம் ஆண்டு அனைத்து குடும்பங்களும் இறையாசீரை பெற்றுக்கொள்ள எனது செபத்தோடு கூடிய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

"என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள். ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவில் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே."

"என் அருள் உனக்குப் போதும்."

May God Bless You.

Charles Collins

அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ்

பங்குத்தந்தை

November 30, 2018

OUR LADY OF GOOD HEALTH PARISH TORONTO

131 Birchmount Road, Scarborough ON M1N 3J7 Tel. 416 264 OLGH(6544), Fax 416 264 6545 office@olghtamilparish.com www.olghtamilparish.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Blessings from Our Lady of Lourdes, Downtown Parish Priest

It is with great joy and gratitude to extend congratulations to the Association of St. James Kayts Canada, on the celebration of the 25th Anniversary of the first Mass celebrated at Our Lady of Lourdes Church here in Toronto.

The community has grown and deepened in faith since its beginning. The church has benefited through the generous service of the Tamil members of our community, and, especially with the outreach to refugees, new immigrants and others in need. This is a reality, in which, the gifts of the Spirit are in service to the Church.

May your fidelity to God the Holy Spirit always lead you to a freedom to be with his Son, our Lord Jesus Christ. And with him, drawn by the Spirit, be led to the tenderness of the Father. May God the Holy Spirit continue to bless and guide you and congratulations again on this milestone of your 25thAnniversary.

God Bless and Take Care,

**Fr. John**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rev. Fr. P. Josephdas Jebaratnam
B Ph (Rome), B. Th., S.T.D (Rome)
Vicar General
Diocese of Jaffna

Bishop's House
P.O BOX 2
Jaffna – Sri Lanka

# Your have shown your sense of gratitude through various ways for the last twenty-five years

## Message from Vicar General

I am very pleased to write this felicitation message to the Association of St. James' Church, Kayts in Canada when the members of this Association celebrate the Silver jubilee of its foundation.

Even though you live as expatriates in a foreign land you never forget the roots of your existence in your homeland, the roots such as the Church which nurtured you in faith, your Village where you grew, your School that formed you, the Society that shared love and concern, and your Environment which enriched your life etc.

The most significant foundation of your life of faith is the Church that you belong to, the Church where you received your Baptism, Confirmation, First-Communion, Sacrament of Matrimony, along with these your basic experience of the Divine presence that you received in and around your Church, that is, St. James' Church, Kayts.

Wherever you are called to live now, you are always feeling the sense of gratitude towards your Church in Keyts. Your have shown this sense of gratitude through various ways for the last twenty-five years. The beautifully renovated Church at Kayts, and your helping hand towards the development of your village, school and society in keyts are some of the examples to witness your love towards the place of your foundation of faith.

I implore God Blessings and the Intercession of St. James upon all of you that the grace of God may continue to help you to grow in your life of faith and guide your life towards peace and joy.

May God bless your Association of St. James' Church abundantly.

**Very Revd. Fr. P. Josephdas Jebaratnam**
**Vicar General**
**Diocese of Jaffna**
**Sri Lanka**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித. மரியாள் ஆலய பங்குத்தந்தையின் வாழ்த்துச் செய்தி.

புலம் பெயர்ந்துகனடாவில் வாழ்ந்தாலும் தம் தாயகமக்களைதம் இதயத்தில் சுமந்து,தம் எண்ணங்கள்,சிந்தனைகளில் எம் மக்களின் குறைதீர்க்கும் ஆவல் கொண்டு வாழ்ந்துவரும் கனடாவாழ் காவலூர் மக்களை நினைந்து நன்றிப் பெருக்கோடு வாழ்த்துகின்றேன்.

இற்றைக்கு இருபத்தைந்துஆண்டுகளுக்குமுன் தாயகமக்களின் துயர்துடைக்க-ஆரம்பிக்கப்பட்டகனடாவாழ் ஊர்காவற்றுறைமக்களின் ஒன்றியம் இவ்வாண்டுஅதன் பணியில் வெள்ளிவிழாகாணுவதையிட்டுஊர்காவற்றுறைபங்குத்தந்தையாகியநான் மகிழ்ச்சியடை கின்றேன். குறிப்பாககல்வியின் தரத்தை உயர்த்த இவர்கள் எடுக்கும் முயற்சியைநான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

ஊர்காவற்றுறைமண்ணைப் பொறுத்தமட்டில் பலகல்விமான்கள் வாழ்ந்த (இடமது) முன்னயநிலைமை இன்றயமக்களும் பெறவேண்டும் என்று நினைத்து பாடசாலை களினூடாகவும், பங்குத்தந்தையினூடாகவும் கல்விஊக்குவிப்புக்கென்றும் நீங்கள் செய்யும் உதவிகளைஉங்கள் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். எனவே இச்சந்-தர்ப்பத்தில் என் மனம் நிறைந்தவாழ்த்துக்களை கூறிதொடர்ந்தும்,உங்கள் உறவுகளை மறந்து விடாதுதங்கள் உதவிகளைதொடர்ந்துசெய்யும்படிகேட்டு, மீண்டும் என் வாழ்த்துக்களையும், ஆசீர்களையும் கூறி நிற்கின்றேன்.

**அருட்பணி. பா. பி. இராசசிங்கம்.**
**பங்குத்தந்தை**
**புனித. மரியாள் ஆலயம்,**
**ஊர்காவற்றுறை.**
**Nov.15. 2018.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Holy Family Provincialate*
*121, Main Street*
*Jaffna*
*Sri Lanka*

*Tel: 021 222 2460*
*E-mail: jfhfprovincialate@gmail.com*

## யாழ் திருக்குடும்ப சகோதரிகள்
## (Jaffna/ Holy Family Sisters of Bordeaux)
## மாகாண தலைவியின் ஆசிச் செய்தி

கனடா வாழ் ஊர்காவற்றுறை தூய யாகப்பர் ஆலய பங்கு மக்களாக ஒன்றிணைந்து, கனடா மண்ணில் கால்பதித்த இருபத்தைந்து வருடங்களை நினைவுகூர்ந்து சிறப்பிக்கும் இன்றைய யூபிலி நிகழ்விற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் இடம்பெற்ற முப்பது வருட கொடூர உள்நாட்டுப் போர் எம் தமிழினத்தை பல்வேறு வழிகளில் சிதைத்தது. ஆயிரமாயிரம் குடும்பங்கள் சொந்த மண், வாழ்விடம், உறவுகளை இழந்து அகதிகளாக பல சர்வதேச நாடுகளிலும் புலம்பெயர்ந்து தஞ்சமடைந்த (1983-1992) காலப்பகுதி, இன்றும் எங்கள் சிந்தனைகளில் உயிரோட்டமான உணர்வுகளுடன் நினைவிருக்கின்றன.

இத்தகைய ஒரு வேதனையின், இழப்பின், இடப்பெயர்வின், வெறுமையின், பிரிவுகளின் பின்னணியில் கனடா- ஒன்ராறியோவில் வாழுகின்ற எம் பங்கு சகோதரர்கள், காலத்தால் அழியாத விசுவாசத்தையும், தூய யாகப்பர் ஆலயப் பங்கு சமூகத்தின் மட்டில் மதிப்போடு கூடிய பாசத்தையும், தங்களோடு சுமந்து சென்று கடந்த இருபத்தைந்து வருடங்களிலும் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து, இந்த விசுவாச கலாச்சாரப் பின்னணிக்கு விழா எடுப்பது, பெரிதும் மதிப்பதற்கும் பாராட்டுவதற்குமுரிய அம்சமாகும்.

நான் இந்தப் பங்கைச் சார்ந்த சகோதரி என்ற வகையில், எனது பங்கும், பங்கு மக்களும் எனக்குக் கொடுத்த வரம் "விசுவாசம்" எனும் சொத்தாகும். இக் கொடையை எண்ணி நான் என்றும் பெருமையடைகின்றேன்.

எமது அழகிய, நெருக்கமான, அன்புறவான கிராம வாழ்க்கையிலிருந்து, புலம்பெயர்ந்தாலும்; இன்றும் அழியாத நினைவுகளால், ஒன்றிணைக்கும் இன்றைய நாளின் பெருமையை, மகத்துவத்தை நான் பெரிதும் மதிக்கின்றேன். எமது தூய யாகப்பர் ஆலய வளாகம் தந்த உயரிய மனித மதிப்பீடுகள், குடும்பங்கள் அன்பின் ஆலயங்களாக வாழக் கொடுத்த, இறைவார்த்தையை மையமாகக் கொண்ட அத்திவாரம் இவை எமக்கே உரித்தான, தனித்துவமான பரம்பரைச் சொத்துகள்.

மறுபுறம், யாழ்/ போர்டோவின் திருக்குடும்ப சகோதரிகள்- குறிப்பாக மாகாணத் தலைவியாக நோக்குமிடத்து; பன்னிரெண்டு துறவற சகோதரிகளை எம் துறவற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக்கு அளித்து "விசுவாசம்" ஊற்றெடுக்கும் பங்குத்தளமாக, தூய யாகப்பர் ஆலயம் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. இவ் ஆலயத்தை நோக்கி, எமது சபை சார்பாக நன்றியையும், மதிப்பையும் வெளிப்படுத்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சகோதரிகள் டொறத்தி அந்தோனி பெனிக்னா மனுவெல்தம்பி இப்பங்கிலிருந்து வந்த முதல் சகோதரிகள் என்பதையும் நன்றியோடு இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

எமது தூய யாகப்பர் ஆலயம், மிகப் பழமை வாய்ந்த, இலங்கை வரலாற்றிலே இடம் பிடித்திருக்கின்றது என்பதை நாங்கள் இந்நேரம் நினைவுகூருவது மிகப் பொருத்தமானது. ஊர்காவற்றுறை துறைமுகம் வரலாற்று பிரசித்திபெற்ற இடங்களுள் ஒன்று. வேத போதகர்கள் (missionaries) தங்கியிருந்து பணி செய்த பங்குப் பணிமனை (Mission House) இவையெல்லாம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்று சிறப்பம்சங்களாகும்.

இத்தனை சிறப்புகளும் ஒன்றுசேர, எம்மை வளப்படுத்தும் எமது பங்கு, தூய யாகப்பர் ஆலய சமூகம் எமது நாட்டில் மட்டுமல்ல, கனடாவிலும் வளர்ந்து, இன்று இருபத்தைந்து ஆண்டுகளை வரலாற்றில் பதிப்பது அழகிய, அர்த்தமுள்ள விசுவாச சாதனை, என்றால் மிகையாகாது.

கனடா - ஒன்ராறியோ வாழ் குடும்பங்கள் ஒவ்வொன்றும், இறையன்பிலும் சமாதானத்திலும் கட்டியெழுப்பப்பட திருக்குடும்ப சகோதரிகளின் செபமும், வாழ்த்துக்களும், இறையாசீரும் உரித்தாவதாக.

Dear children! We the Holy Family Sisters of Bordeaux wish you God's blessings & a bright future for you all.

"எங்கள் செபங்களில் உங்களைக் குறிப்பிட்டு, உங்கள் அனைவரையும் நினைத்துக் கடவுளுக்கு என்றும் நன்றி கூறுகிறோம். 1தெச 1:2

"சமாதானத்தின் ஊற்றாகிய ஆண்டவர் எப்பொழுதும் எல்லா வகையிலும் உங்களுக்குச் சமாதானம் அருள்வாராக. ஆண்டவர் உங்கள் அனைவரோடும் இருப்பாராக." 2தெச 3:16-17

Sr. Christa.

சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
யாழ் திருக்குடும்ப மாகாண தலைவி
யாழ்ப்பாணம்

cmariathas@gmail.com (Email ID of Sr. Christa Mariathas)

04.12.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவின் நோக்கம்!

ஒரு சமுகத்தில் வாழுகின்றமக்கள் தங்களுடையகுடும்ப,சமுதாயவரலாற்றைபெரும்பாலும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதில்லை. இதன் நிமித்தம் தங்களுடையவருங்காலசந்ததியினர்,தாம் யார்? எங்கிருந்துவந்தோம்,என்ன தொழில் செய்தோம்,நமதுசமுதாயத்தில் காணப்பெற்றகலை,கலாச்சாரப் பண்பாடுகள் என்ன? நமதுசமுதாயத்தின் வளர்ச்சிப் படிகளுக்கு முன்னின்று உழைத்த பெரியோர்கள் யார்? நமதுசமுதாயத்தில் காணப்படும் வரலாற்று அடையாளங்கள்,அல்லதுஆவணங்கள் என்ன? எப்போது? யாரால்? உருவாக்கப்பட்டது,எமதுமக்களிடம் காணப் பெற்ற ஆற்றல்கள் என்ன? என்பன போன்ற நல்லநிகழ்வுகளை அறியக் கூடாதவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு சமுதாயம் சிறப்பாக இயங்கவேண்டுமானால்,அதற்குஅவர்கள் தங்களுடையவரலாற்றைத் தெரிந் திருக்கவேண்டும். ஒருசமூகத்தின் வரலாறுஅந்தசமுதாயத்திற்குமிகுந்தபலன் தரத்தக்கதாக இருக்கும். அது நிகழ் காலத்தில் பிரச்சனைகளைச் சமாளிக்கவும்,வரும்காலத்தைமுன்னறிந்துசெயற்படும் ஆற்றலையும் தரும் என்பது உறுதி.

கடந்தகாலத்தின் நல்லநிகழ்வுகளைஞாபகப்படுத்திக் கொள்வதுநமதுகடமை. இது தனிநபருக்குஞானமாகவும், சமுதாயத்திற்கு அத்தியாவசியமான,விலைமதிப்பற்றபொக்கிசமாகவும் இருக்கிறது. எனவே நமது சமுதாய மறதிையக் களைவதற்காக நூல் குழுவினர்திரு. டிறோசன் திரு. எல்மோ அண்டனி, திரு. ஜேம்ஸ், திரு.குலேந்திரன் திரு.சுரஸ்,திரு.றஞ்சன்ஆகியோர் இணைந்துசெயற்பட்டதன் விளைவாக இவ் வெள்ளிவிழாமலர் வெளிவந்துள்ளது.

கனடாவில் வாழும் காவலூர் புனிதயாகப்பர் பங்குமக்கள்,கனடாவில் 25 வருடங்கள் புனிதயாகப்பர் பெருவிழாவை-கொண்டாடிய நிறைவின் வெளிப்பாடாக இம்மலர் வெளிவந்தபோதும்,காலப் போக்கில் 300 வருட காலமாக ஊர்காவற்றுறையில் அருள்பாலித்து வந்த நமது ஆலய வரலாறும்,நம் முன்னோர்களினது ஆற்றல்கள், வழிபாட்டு நடைமுறைகள், ஆன்மீகத் தொண்டுகள் கலை, கலாச்சார பண்பாட்டுக்களுடனான விளையாட்டுக்கள் என்பனவும் தேவை கருதி இம்மலரில் பதிவுசெய்துள்ளோம்.




Book club members.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

மிகுந்த இறைபக்தியை தம்மகத்தே உடையவர்களான காவலூர்க் கிறிஸ்தவர்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற நாடுகளிலும் தமது இறை வழிபாட்டு முறைகளை சிறப்பான முறையில் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தவகையில் காவலூர் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த கத்தோலிக்க குடும்பங்கள் அனைத்தும் கனடாவிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து வருவதுடன் இறை வழிபாடுகளிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவது மிகவும் வரவேற்க்கப்பட வேண்டிய விடயம். இவ் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் கனடாவில் கடந்த 25 வருட காலம் வாழ்ந்த அனுபவங்களை நினைவு கூரும் வகையில் ஓர் அழகான ஞாபகார்த்த மலரை வெளியிட்டுள்ளமை எனக்கு மிகுந்த மன நிறைவை ஏற்படுத்துகிறது.

மிகுந்த சிரமங்களின் மத்தியில் 1995ம் ஆண்டில் ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டு மலர் வெளியிடப்பட்டது. அனேக வருடங்களின் பின்பு பல முக்கிய தகவல்களை உள்ளடக்கியதாக இந்தச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இம் மலரின் வெளியீட்டுக் குழுவினர் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர் என்பதை இதில் உள்ள தரமான உள்ளடக்கங்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த பல வருடங்களாக புனித யாகப்பர் ஆலயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழிபாட்டு முறைகளை மிகவும் ஒழுங்காக வரிசைப்படுத்தி எழுதப்பட்டிருப்பது யாகப்பர் ஆலய மக்களின் ஆழமான இறையன் பின் பிரதிபலிப்பு என்றே கூறலாம்.

யாகப்பர் ஆலய மக்களின் பூர்வீகம்பற்றிய வரலாற்று ஆய்வுக்கட்டுரை மிகவும் பயனுடைய தகவல்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. ஈழத்தமிழ் மக்களின் வரலாறு சரியான முறையில் பதிவு செய்யப் படாத காரணத்தினால் பல்வேறு முக்கியமான நிகழ்வுகள் பற்றிய தரவுகள் முற்றாக மறைந்து போய் விட்டன. அந்த வகையில் இக் கட்டுரையும் "இளமை அது இனிமை" என்ற சுவையான கட்டுரையும் பெறுமதிமிக்க பதிவாக அமைந்துள்ளன.

இறைவனுக்குப் பணி செய்வதற்காக யாகப்பர் ஆலயத்தில் இருந்து அநேக மதகுருமார்களும், அருட் சகோதரிகளும் பொதுநிலையினரும் உருவாகியுள்ளமை மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. அதுதொடர்பான விபரங்கள் இம்மலரில் வரிசைப்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளவை பாராட்டத்தக்கது.

இந்த ஆலயத்தைச் சேர்ந்த பலரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிந்துள்ளேன். ஆசிரியர்களாகப் பணி புரிந்த திரு.லீனஸ் அவரது இளைய சகோதரன் ஸ்ரனிஸ்லாஸ், துரைராஜா, தேவசகாயம் ஆகியோர் பல வருடங்களாக இந்த ஆலயத்தின் பொறுப்பாளராக செயற்பட்டுவந்த திரு.குருசுமுத்து அவரது புதல்வன் பொலிஸ் பரிசோதகர் திரு.செபமாலை உட்பட பலருடனும் நான் பழகியுள்ளேன். அவர்கள் யாவரும் புனித யாகப்பர் ஆலயத்தின் வளர்ச்சிக்காக எந்த அளவுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

அதே போன்று யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அடுத்த தலைமுறையினரும் மிகுந்த இதயன்புடன் செயற்பட்டு வருவது மனம் நிறைவை ஏற்படுத்துகிறது.

யாகப்பர் பங்கு மக்களின் ஒற்றுமையும் இறையன்பும் என்றும் நிலைத்திருக்க புனித யாகப்பரின் அருளையும் ஆசியையும் வேண்டி வாழ்த்துகிறேன்.

**S.M.யோசப் (இளைப்பாறிய ஆசிரியர்)**
**(ஊர்காவற்றுறை.)**
**நீர்கொழும்பு - இலங்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் திறந்து பேசுகிறோம்.

**வாசகர் அனைவர்க்கும் அன்பு வணக்கம்!**

கனடா தேசத்தில் ஊர்காவற்றுறை புனித. யாகப்பர் சமூகம் இன்று 25 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறோம் என்றால் கனடாவில் நம்மவர்களினால் போடப்பட்ட அத்திவாரமே முதன்மைக் காரணமாக விளங்குகிறது. 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' என்ற முதுமொழிக்கு இணங்க கனடாவில் குடியமர்ந்து எம்மண் வாசனை மாறாது நமது நாட்டுக் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக்காத்துவரும் நம்மவர்களினால் கட்டமைக்கப்பட்ட நிர்வாகக்குழு முதலிடம் வகிக்கின்றது. தலைமைத்துவத்தின் கீழ் ஒற்றுமையாக இயங்கிவரும் அங்கத்தவர்களின் கைகள் இணைபிரியாது கோர்த்து நிற்பது அதன் வெற்றிக்கு மூல காரணமாக விளங்குகிறது.

1993ஆம் ஆண்டிலிருந்து, 2018 நடப்பு ஆண்டு வரை நான்கு படிமுறை வளர்ச்சி கண்ட நிர்வாகக் குழுவில் தலைமை வகித்த தலைவர்களும், செயலாளர்களும், பொருளாளர்களும், நிர்வாகக்குழு அங்கத்தவர்களும் பொறுப்புணர்வுடனும், கடமையுணர்வுடனும் செயற்பட்டமை நமது சமுகத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் வழி வகுத்ததெனலாம். நிர்வாகம் தொடர்ந்து செயற்பட முக்கிய காரணம், நிர்வாகத்தில் அங்கத்தவர்களை தெரிவு செய்யும்போது போட்டி இன்றி மக்களால் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டமையும், யாருமே பதவி ஆசை கொண்டவர்களாக செயற்படாமல் தாராள மனத்துடன் செயற்பட்டமையும் அதன் வலிமைக்குக் காரணமெனலாம். இவற்றோடுகூட மூத்த தலைமுறையினர் இளைய தலைமுறையினர்களை மதித்து நடந்ததும், இளைய தலைமுறையினர் மூத்த தலை முறையினரை கனம்பண்ணி நடந்ததுமே சிறப்பான அம்சமாகும். இதில் சிறப்பு என்னவென்றால் நாட்டின் முதுகெலும் பென்று வர்ணிக்கப்படும் இளையோரிடம் முதியோர் பொறுப்புகளை நம்பி ஒப்படைப்பதும், எடுத்துக்கொண்ட பொறுக்குக்களை இளையோர் திறம்பட செய்து முடிப்பதாலேயே எமது சமூகம் கனடாவில் 25 வருடங்களில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது.

இப்பாரிய வளர்ச்சி கண்டதற்கு நம்மவர்கள் தேர்ந்தெடுத்த முக்கிய கருவி,நம் மூதாதையரின் விசுவாசச் சுவடுகளைப் பின்பற்றியது. இதனால் இறைவன் தம் கண் பார்வையில் நம்மைக் கண்கா ணித்து நமக்கு ஆலோசனை வழங்கி நம்மை வழி நடத்துகிறார். எதைச்செய்தாலும் கடவுளுக்கு முதலிடம் கொடுத்து செபத்தோடு ஆரம்பித்து, செபத்தோடு எல்லாவற்றையும் நிறைவு செய்வதனால் யாவும் நன்மையாக நடந்துகொண்டிருக்கிறது. முதல் வேதசாட்சியாக மரித்த புனித. யாகப்பரை எமது பாதுகாவலராக ஏற்று வருடம்தோறும் அவருக்கு விழா எடுப்பதால், புனித. யாகப்பர் கனடாவில் அனைவராலும் வியந்து பேசக்கூடிய வகையில் நம்மை உயர்த்தியுள்ளார்.

மேலும் நிர்வாகம் குறைகளை மேன்மைப்படுத்தாமல், நிறைவுகளை மேன்மைப்படுத்திப் பாராட்டுவதும், குறைகளைத் தீர்க்க கலந்தாலோசித்து, சம்மந்தப்பட்டவர்களுடன் நட்பான முறையில் நேரில் கதைத்துத் தீர்ப்பதும் பிளவு ஏற்படாமல் பலமுடன் நடைபோட ஏதுவாக அமைந்துள்ளது.

வரவு செலவுக் கணக்குகளை சரியான முறையில் கையாள்வதும், எடுக்கப்படுகின்ற தீர்மானங் களை இறுதிவரை வழுவாது நடைமுறைப்படுத்துவதும் முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதலாம். அத்துடன் நிர்வாகம் எடுக்கும் முடிவுகளுக்கு சமூகம் எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஒத்துழைப்பு வழங்குவ தும் சிறப்பான காரணிகளில் ஒன்றாக இடம்பெறுகிறது. யாராவது ஒரு சிலர் அபிப்பிராயம் வெளியிட்டாலும் வளர்ச்சிப்படிக்கு முட்டுக்கட்டையாக இல்லாமல் ஒதுங்கி நிற்பதும் எமது வளர்ச்சிக்கு மெருகூட்டுகின்றது.

இவ்வாறான கட்டுக்கோப்பும், ஒழுங்குகளும் சிறப்பாக இடம்பெறுவதனாலேயே எமது தாயகத்தில் புனித. ஆலயத்தையும், புனித. கப்பலேந்திய மாதா ஆலயத்தையும் புனரமைப்பதற்கு கரம் கொடுக்கக் கூடியதாக அமைந்தது. மற்றும், முன்பள்ளி பாடசாலை (பாலர் பாடசாலை) நிலக்கீழ் தண்ணீர்த்தடாகம், இடம்பெயர்ந்து மீண்டும் வந்தபோது ஏதோ எம்மாலான உதவிகளைச் செய்யக்கூடி யதாக இருந்தது. நத்தார் விழாக் கொண்டாட்டங்களில் கலை நிகழ்ச்சிகள் மூலம் சிறுவர்கள். பெரி யவர்கள் தாய் மண் வாசனையோடு கூடவே கலை நிகழ்ச்சிகளை சிறப்புற நடத்தி வருவதால் தமிழ் பண்பாடு, கலாச்சாரம்,கலை கட்டிக்காக்கப்படுகிறது. கோடைகால ஒன்று கூடலில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதால் வெற்றி, தோல்விகளை மனக்கசப்பின்றி ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது. பல்கலைக்கழகம் செல்லும் பிள்ளைகளுக்கு பரிசு வழங்கி கௌரவிக்கப்படுவதால் பிள்ளைகள் கல்வி யில் முன்னேற்றமடைவதைக் காணக்கூடியதாக உள்ளது. 'ஊர் கூடி வடம் பிடித்தால் தேர் ஊர் வந்து சேரும்' என்ற முதுமொழிக்கு இணங்க தொடர்ந்து இறையருளோடும், புனித. யாகப்பரின் பரிந்துரை யோடும் நல்மனதுடன் ஒற்றுமையாகச் செயல்படுவோம். நன்றி, வணக்கம்.

**குலேந்திரன்-தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பர் ஆலய வளர்ச்சிப்படிகள்

யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க பாரம்பரியத்தின் ஊற்றுவாய்களின் ஒன்றாகவும், ஆன்மீக வளர்ச்சிக்கும், ஆழ்ந்த விசுவாச வாழ்விற்கும் வளமூட்டிய விளைநிலமாக விளங்குகின்ற நீண்ட வரலாற்றைக் கொண்ட தீவகத்திலே ஆன்மீக வாழ்வின் அடையாளச் சின்னமாக விளங்கும் புனித யாகப்பர் ஆலயம் 300 ஆண்டுகளைக் கடந்து கெம்பீரத்துடன் நிலைநிக்கின்றது.

1716ம் ஆண்டு தொடக்கம் 1815ம் ஆண்டு வரை களிமண்ணால் கட்டப்பட்ட ஆலயம்.

1815ம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி கோவைக் குருவானவர் அருட்பணி. டல்காடோ என்ற தியான சம்பிரதாயசபைக் குருவானவரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

1854ம் ஆண்டு ஆலய முகப்பு கட்டி முடிக்கப்பட்டது.

1854ம் ஆண்டு ஆலய முகப்பில் சம்மனசு சுவாமியார் என அழைக்கப்பட்ட அருட்பணி. விஸ்ரானி (Fr. Vistanni) என்பவரால் சிலுவை நாட்டப்பட்டது. அதே காலப் பகுதியில் சிலுவைப்பாதை படங்கள் அமைக்கப் பட்டு பொலிவு பெற்றது.

1890ம் ஆண்டு அருள் அடிகளார் அருட்பணி டோறாட் (A.Daurat) என்பவரால் சீமெந்து கொண்டு சுவர், நிலப்பகுதி அமைக்கப்பட்டு, கூரை ஓடுகளால் வேயப்பட்டு புதுப்பொலிவு பெற்று 1911இல் நிறைவு பெற்றது.

1911ம் ஆண்டு ஆலய குருமனை கட்டப்பட்டது.

1936ம் ஆண்டு ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

கோவில் கட்டுவதற்கான கற்கள், மரங்கள், ஓடுகள், எங்கிருந்து வரவழைக்கப்பட்டன என்பதற்கான குறிப்புகள் காணப்படாதவிடத்தும், பயன்படுத்தப்பட்டுள்ள முருகைக் கற்கள், ஓடுகள், கூரைப் பகுதிக்குப் பாவிக்கப்பட்ட தீராந்திகள், கதவுகள், யன்னல்கள் சுத்தமான தேக்கம் பலகைகளால் காணப்படுவதால் இவை ரங்கூனில் இருந்து வரவழைக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

1955ம் ஆண்டு ஆலய மணிக் கோபுரம் திரு செபமாலை என்பவரால் கட்டப்பட்டது.

1990இல் இலங்கை இராணுவ நடவடிக்கைகளினால் ஆலயம் சிதைவுற்று, கூரைகள் சின்னாபின்னமாக்கப் பட்ட ஆலயத்தில் மக்கள் ஒன்று கூடுவதற்கு ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆலயம் முற்றாக இடிக்கப்பட்டு புதிதாகக் கட்டப்பட்டால்தான் வழிபாடுகள் செய்யலாம் என்ற நிலைக்கு ஆலயம் சிதைவுற்றுக் காணப்பட்டது. இந்த நிலையில் அருட்பணி. சாள்ஸ் கொலின் அடிகளாரின் ஒத்துழைப்போடும் 2004ம் ஆண்டு அருட்பணி. அன்ரனி ஞானப்பிரகாசம் அவர்களது காலப்பகுதியில் போரினால் சேதம் அடைந்த ஆலயக் கூரை திருத்தப்பட்டது. இதற்குமுன்னின்று உழைத்தவர்களில் திரு. மரியநாயகம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

2010ம் ஆண்டு ஊர் மக்களினதும், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்வோரினதும் உதவியுடன் தூய யாகப்பர் அரங்கு கட்டப்பட்டது.

2015ம் ஆண்டு பங்குனி 22ம் திகதி அருட்பணி.பா.பி.இராசசிங்கம் அவர்களினால் ஆலயப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2015ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதி நிறைவு செய்யப்பட்டது. இப்புனரமைப்பு வேலைகளுக்கு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் மக்களும், ஊர் மக்களும் பண உதவி செய்தனர். ஆலய பீடமுற்றம் புனரமைக்கப்பட்டு கற்பீடம் நிறுவப்பட்டது. கடற் படையினரின் ஏவுகனை வீச்சினால் தகர்க்கப்பட்ட கைக்கோயில் கட்டப்பட்டது. திருப்பண்டக அறை புதிதாகக் கட்டப்பட்டது. ஆலய விறாந்தை நிலமும், உட்பக்க வெளிப்பக்கச் சுவர்களும் புனரமைக்கப்பட்டது. புதிய மின் இணைப்புகளும், மின் விசிறிகளும், ஒலி பெருக்கியும் பொருத்தப்பட்டது. 2018ஆம் ஆண்டு பக்தர்களுக்கு இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது.

N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பங்கு – தோற்றமும் வளர்ச்சியும்

மாந்தைக்கு அடுத்தாற்போல் கத்தோலிக்கரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பட்டினம் ஊர்காவற்றுறையாகும். போத்துக்கேயர் காலம் முதல் நானூறு ஆண்டுகளுக்கு மேலாக கத்தோலிக்க பாரம்பரியங்களோடு வளர்ந்த காவலூர்ப் பங்கு பெத்தக்கெனி ஆண்டகையின் காலத்தில் (1849-1853) மன்னார்ப் பங்குடன் மதுரை மறை மாவட்டத்தைச் சேர்ந்த இயேசுசபைக் குருமாரின் பரிபாலனத்தின் கீழ் இருந்தது. அதற்கு நெடுங்காலத்துக்கு முன் காவலூர் தீவுப்பற்று அடங்கலாக கோவைக் குருவர் எனப்படும் வேதபோதகக் குருமார் அல்லது தியான சம்பிரதாயக் குருமாரின் பரிபாலனத்தில் இருந்தது. பிரான்சிஸ்கன் சபைக் குருமாரே முதலில் இப்பகுதியில் மறைப்பணி ஆற்றியவர்கள் எனத்தெரிகிறது. அல்லைப்பிட்டி, மண்டைதீவு, நெடுந்தீவு, லைடன்தீவு, எழுவைதீவு அனைத்தும் ஊர்காவற்றுறைப் பங்கு என்ற பெயராலேயே அழைக்கப்பட்டது. அன்றியும் ஊர்காவற்றுறையே தலைமைத் தானமாய் விளங்கிற்று என்பது திருச்சபை வரலாற்றில் காணக்கிடக்கிறது.

ஆயர் யூலன் ஆண்டகையின் காலத்தில் (1893-98) மண்டைதீவு தனிப்பங்குத் தளமாகியது. புங்குடுதீவு, எழுவைதீவு என்பன 1902ஆம் ஆண்டு முதல் நெடுந்தீவுப் பங்கு எனப் பிரிக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டது. எழுவைதீவு 1911ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையுடன் இணைக்கப்பட்டது. கரம்பொன் பங்கு 1938ஆம் ஆண்டு தனிப்பங்குத் தளமாகியது. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, நாரந்தனை, புங்குடுதீவு என்பன ஒன்றாக இணைக்கப்பட்ட பங்குத் தளமாய் இருந்தது.

1908ம் ஆண்டு ஊர்காவற்றுறை, நாரந்தனை, நெடுந்தீவு என்பன தனித்தனி நிருவாகப் பங்குகள் ஆகின. மண்டைதீவும், அல்லைப்பிட்டியும் இணைக்கப்பட்டு ஒரு பங்கு ஆயிற்று.

1990ம் ஆண்டின் நிலைவரங்களின்படி சுருவில், மெலிஞ்சிமுனை என்பன கரம்பன் பங்கு எனவும், நாரந்தனை, சின்னமடு (சரவனை), புங்குடுதீவு என்பன நாரந்தனைப் பங்கு எனவும், மண்டைதீவு, அல்லைப்பிட்டி இணைந்து மண்டைதீவுப் பங்கு எனவும், எழுவைதீவு, ஊர்காவற்றுறை, அனலைதீவு, நயினாதீவு யாவும் ஊர்காவற்றுறைப் பங்கு எனவும் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டது.

காவலூர்ப் பங்கிலே நான்கு ஆலயங்கள் உள, உதய திசையில் புனித அந்தோனியார் ஆலயமும், மேற்கிலே புனித யாகப்பர் ஆலயமும், மத்தியில் புனித மரியாள் ஆலயமும், புனித சூசையப்பர் ஆலயமும் அமைந்து நகரை அலங்கரித்து நிக்கின்றன.

1850ம் ஆண்டுக்குப்பின் அமலமரித்தியாகிகள் சபைக் குருமாரே ஊர்காவற்றுறை உட்பட தீவுப்பகுதி முழுவதிலும் மறைப்பணி ஆற்றினர். கிடைக்கப்பெற்ற விபரங்களின் அடிப்படையில் 1790 களிலிருந்து இங்கு பணியாற்றிய குருமாரின் படடியலைக் கீழே தருகின்றோம்.

1854க்குப் பின் உள்ள விபரங்களே ஊர்ஜிதப் பட்டவைகளாக ஆயர் இல்லப் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது.

1780 களின் இறுதிப் பகுதியில் கோவைக் குரவரான வண. வியோனாடோ றிபெயிறோ அடிகளார் பணி ஆற்றினார்.

1815 வண.டல்காடோ –கோவைக் குரவர்

1816ம் ஆண்டிலிருந்து 1842ம் ஆண்டுவரை வண. செபஸ்தியாங்குதீனு. மற்றும்

வண. சீ செல்வதோர் பியாதிசு

வண. லவுஸ் தீத்த

வண. பிலிப்நேரியு

வண. கோன்ஸ்தந்தீனு கோமஸ்

வண. கயித்தான் தியேஸ்

வண. சீ. சீ. யூசைப் பேதுரு

வண. சீ. சீ. பேதுரு கொவிஞ்ஞ

வண. பிரான்சீஸ்கு தியேசு

1842—1849 தெரியவில்லை

1849—1852 வண. சில்வானுஸ் லோறன்ஸ்

1854க்குப்பின் சேவை விபரம் தெரியவில்லை

1877 முதல் 1893 X.N. சந்திரசேகரர்

1894—1902 வண. E. வேளாண்டர்

1902—1907 வண. A. டோறா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1907—1910 வண. E. டெலோஜெஸ்
1910—1911 வண.N. பெறேறா
1911—1913 வண. ஓவென் வில்லியம்
1913—1913 ஐப்பசி வரை வண.E. வியாட்சே
1913 கார்த்திகை -1914 ஐப்பசி வரை வண.F. றோடே
1914 ஐப்பசி – 1918 மார்கழிவரை வண.ஓவன் வில்லியம்
1919 தை – 1921 சித்திரை வரை வண. S. ஆசீர்வாதம்
1921 வைகாசி – 1923 புரட்டாசி வரை வண.H. பெரூசல்
1923 ஐப்பசி -1924 தை வரை வண.S.R. மாட்டீன்
1924 வைகாசி – 1927 வண. A. டோறா
1927 –1930 வரை வண. S.G. கில்லறி
1931 ஆவணி – 1931 வண. B.A. மருசலின்
1931 புரட்டாதி – 1932 ஆவணி வரை வண. S.P. அல்பிறட்
1932 புரட்டாதி – 1935 சித்திரை வரை வண. A. பிறெளண்
1935 வைகாசி 1935 ஐப்பசி வரை வண. S. கோமஸ்
1935 கார்த்திகை – 1939 பங்குனி வரை வண. N. யோசவ்
1939 ஆடி – 1941 ஆடி வரை வண. S. ஆசீர்வாதம்
1941 ஆடி – 1947 மாசி வரை வண. J.A. இராசநாயகம்
1947 பங்குனி – 1948 புரட்டாதி வரை வண. B. வில்லியம் இயேசுதாசன்
1948 ஐப்பசி – 1950 ஆடி வரை வண. N.A. பெனடிக்ற்
1950 ஆடி 1953 சித்திரை வரை வண. பிலிப் பொன்னையா
1953 ஆடி – 1960 மாசிவரை வண.V.R. தார்சீசியஸ்
1960 பங்குனி – 1963 மார்கழி வரை S. A. ஞானப்பிரகாசம்
1964 தை – 1964 வைகாசி வரை வண. விக்ரர் குரூஸ்
1964 ஆனி – 1965 ஆவணி வரை வண.லோறன்ஸ் சேவியர்
1965 ஆவணி – 1967 ஆவணி வரை வண. M.J. மரியாம்பிள்ளை
(பங்குத் தந்தை. கல்லூரி அதிபர்)
1967 ஆவணி – 1969 மார்கழி வரை வண. S.A. சுவாம்பிள்ளை
1970 வைகாசி --1971 வரை வண. தார்சீசியஸ் பெர்னான்டோ
1971 வைகாசி – 1972 ஆடி வரை வண. B.E. அல்பிறட்
(பங்குத் தந்தை. கல்லூரி அதிபர்)
1972 மார்கழி – 1974 மாசி வரை வண. S.J. பிரான்சிஸ்
(பங்குத் தந்தை.கல்லூரி அதிபர்)
1974 மாசி – 1978 பங்குனி வரை வண.லோறன்ஸ் சேவியர்
1978 வைகாசி – 1983 ஆடி வரை வண. A. பிரான்சிஸ் குலாஸ்
1983 ஆவணி – 1985 சித்திரை வரை வண. N. பீற்றர்
1985 வைகாசி – 1991 சித்திரை வரை வண. S. F. கிருபானந்தன்
1991 சித்திரை – 1996 வண.யூயின் பிரான்சிஸ்
1996 – 1998 வண. அன்ரனி பாலா
1998 – 2001 வண. S.J. இயேசுதாஸ்
2001 – 2005 வண. A. ஞானப்பிரகாசம்
2005 – 2010 வண. X. W. யேம்ஸ்
2010 – 2015 வண. C.J. ஜெயக்குமார்
2015 – வண. P.F. இராசசிங்கம்

நன்றி விக்ரோறியா & றேமன் இராசபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த மக்கள் ! ஓர் வரலாற்று ஆய்வு.

1976ம் ஆண்டு என்று நினைக்கின்றேன். பண்டத்தரிப்பு ஞானொடுக்க மண்டபத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி வண. தனிநாயகம் அடிகளாரை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரிடம் ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய சமூகத்தவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? அவர்களது மூதாதையர்கள் யார் ? எங்கிருந்து வந்தவர்கள் ? என்று கேட்டேன். அவர் என்னை அன்போடு பார்த்து என்னை அருகிலிருந்த நாற்காலியில் அமரும்படி சொன்னார். நானும் மரியாதையுடன் அமர்ந்தேன். இவ்விடயத்தை இப்போது விபரமாகக் கூற நேரம் போதாது சுருக்கமாகக் கூறுகின்றேன் கேளும் என்று சொல்லி விளங்கப்படுத்தினார். இவர்கள் சோழப் பேரரசு காலத்தில் இந்தியாவில் இருந்து படை எடுத்து வந்தவர்களில் ஒரு பகுதியினர். சோழப் பேரரசுப்படைகளுடன் கூலிப்படைகளும் இலங்கைக்கு வந்தார்கள். இவர்கள் இங்குவந்து தமது ஆட்சியை நிலைநாட்டிய பின்பு அரசபடைகள் திரும்ப இந்தியாவுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் கூலிப்படைகளாக வந்தவர்களில் ஒரு பகுதியினர் இங்கேயே தங்கி விட்டார்கள். இதில் ஒரு பகுதியினர் ஊர்காவற்றுறை மேற்கிலும், ஒரு பகுதியினர் நாவாந்துறையில் பள்ளவெளி என்ற இடத்திலும் இன்னுமொரு பகுதியினர் இளவாலையிலும், மற்றுமொரு பகுதியினர் மன்னார் பனங்கொட்டிக்கொட்டில் என்ற பகுதியிலும், மாத்தறை யிலும் குடியேறி வசிக்கலாயினர் என்று சொன்னவர் இவர்கள் அரச செல்வாக்குப் பெற்றவர்களாகவும் காணப்பட்டனர் என்று சொல்லி முடித்தார். அவரிடம் இன்னும் ஒரு கேள்வியையும் கேட்டேன் சுவாமி இவர்கள் இலங்கையில் என்ன தொழில் செய்தார்கள் ? என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில். ஊர்காவ-ற்றுறை மேற்கில் குடியேறியவர்கள் கடலோடிகளாக வணிகம் செய்தார்கள். நாவாந்துறையில் குடியே றியவர்கள் உள்ளூரில் வணிகம் செய்தார்கள் இளவாலையில் குடியேறியவர்கள் விவசாயம் செய்தார்கள். மன்னாரில் குடியேறியவர்கள் கடல்தொழில் செய்தார்கள். மாத்தறையில் குடியேறியவர்கள் தோட்டத் தொழிலும் செய்தார்கள் என்று அன்போடும் பொறுமையோடும் சொல்லி முடித்தார்.

நம்மவர்களில் சிலரை பட்டினத்தார் பரம்பரை என்ற சொல் வழக்கில் அழைத்து வந்தனர் நான் நினைக்கிறேன். ஒரு வேளை நாவாந்துறையில் குடியேறி உள்ளூரில் வணிகம் செய்தவர்களையே பட்டின த்தார் பரம்பரையினர் என்று அழைத்திருக்க வேண்டும். தன்டேல் என்ற சொல் வழக்கும் காணப்படுகிறது இது மாலுமிகளின் தலைவருக்கு வழங்கப்பட்ட பெயர். ஆகவே நம்மவர்கள் மாலுமிகளாகத் தொழில் புரிந்தமைக்குச் சான்றாக விளங்குகின்றது.

கடலோடிகளாக வணிகம் செய்தவர்களில் திரு.நீக்கிலாப்பிள்ளை என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் இலச்சுமி கோவிந்தா என்ற கப்பலில் கப்பல் தலைவனாக கடமை ஆற்றியவர். இலச்சுமிகோவிந்தா என்ற இந்தக் கப்பல் கரம்பனைச் சேர்ந்த சூரியன் என்பவர்க்கும் நீக்கிலாப்பிள்ளை அவர்களின் மனைவி தங்க மாணிக்கம் அவர்கட்கும் சொந்தமானது. அதாவது சூரியனும், தங்கமாணிக்கமும் முதல் போட்டுவாங்கிய கப்பல்.



1942ம் ஆண்டு இரண்டாம் உலகமகாயுத்தம் இடம் பெற்ற காலத்தில் பர்மாவுக்குச் சென்று அரிசி ஏற்றி வந்தபோது யப்பானிய நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கி அழிக்கப்பட்டது. கப்பலில் மொத்தம் 8 பேர் கடமையா-ற்றினார்கள் என்றும் இவர்களில் 5 பேர் உயிருடன் பிழைத்து ஊர் வந்தார்கள் என்று திரு.நவரெட்டினம் அவர்கள் சொல்லக் கேட்டேன். இதன் விபரம் ஈழநாடு என்ற பத்திரிகையில் திரு.யெயராயசிங்கம் என்பவரால் கட்டுரையாக வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பானியர் ஏன் கப்பலுக்குக் குண்டு போட்டார்கள் என்று கேட்டேன். அந்தக்காலம் பிரித்தானியருக்கும், யப்பானியருக்கும் இடையே போர் நடந்த காலம். அதனால் அவர்கள் குண்டு போட்டார்கள் என்று சொல்லி விபரிக்கலானார்.

நாங்கள் இந்துமகா சமுத்திரத்தின் வழியாக பிரயாணப்பட்டு வந்து கொண்டிருந்தபோது வெகு தொலைவில் சிறியதொரு மரக்கட்டை மிதப்பது போல் ஒரு உருவம் காணப்பட்டது. சிறிது நேரத்தில் அது ஒருபெரிய கப்பலாக அருகில் வந்து முதலில் ஒரு குண்டைப் போட்டது. அந்த வேளை ஒருவர் அம்மியில் அரைத்துக்கொண்டிருந்தார். குண்டுத் தாக்குதலால் அரைத்துக் கொண்டிருந்தவரின் கால் துண்டாடப்பட்டு துடித்துக்கொண்டிருந்தது. சம்பவம் நடந்துகொண்டிருந்த வேளையில் நீக்கிலாப்பிள்ளை அவர்கள் பிரித்தானியக் கொடியை ஏற்றினார். ஏனெனில் வந்திருப்பது பிரித்தானியக் கப்பல் என்று நினைத்தார். இதனால் யப்பானியக் கப்பல் மேலும் இரண்டு தடவைகள் தாக்கினார்கள். கப்பல் மூழ்கத் தொடங்கியது.

கப்பல் மூழ்கத் தொடங்கவும் எல்லோரும் அபயக் குரல் எழுப்பினார்கள். கப்பல் தலைவர் திரு நீக்கிலாப் பிள்ளை அவர்கள் மௌனமாக கப்பல் அணியத்தில் தூய சிலுவை ஒன்றையும் புனித அந்தோனியார் சொருபம் ஒன்றையும் கையில் தாங்கியபடி அமர்ந்திருந்தார். கப்பல் தலைவருடைய இரண்டு பிள்ளைகளும் (ஆபரணம், நவரெத்தினம்) கப்பலில் இருந்தார்கள். இவர்கள் தகப்பனாரிடம் சென்று கட்டிப்பிடித்துக் கதறி அழுதார்கள். தகப்பனாரிடம் அப்பு நாங்கள் எல்லோரும் சாகப்போகிறோம் இப்போ என்ன செய்வது என்று கதறி அழுதார்கள். தகப்பனார் பிள்ளைகளைப் பார்த்துச் சொன்னார். நான் கப்பலை விட்டு வரமாட்டேன். ஆனால் நீங்கள் உயிருடன் வீடு போய்ச் சேருவீர்கள். நான் இல்லையென்ற குறையை அம்மாவுக்கு தெரியா-தபடி பார்த்துக் கொள்ளுங்கள். அம்மாவுடைய கண்கள் கலங்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். என்று சொல்லிக் கொண்டு தனது தலை முடியை அவிழ்த்து கொண்டை கட்டிக்கொண்டிருக்கும் போது கப்பல் நீரில் மூழ்கி தகப்பனையும் பிள்ளைகளையும் பிரித்துவிட்டது.

இவ்வாறாக கப்பல் மூழ்கியதும் குண்டுத் தாக்குதலால் உடைந்து சிதறிய பலகைத் துண்டுகள் ஆங்காங்கு மிதந்தவண்ணம் இருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் உயிரைக் காக்கும் பொருட்டு உடைந்து சிதறிய பலகைத் துண்டுகளைப் பிடித்தவண்ணம் ஆங்காங்கே மிதந்த வண்ணம் இருந்தார்கள். ஒருவர் தனது உயிரைக்காக்கும் பொருட்டு தவிட்டு மூட்டையின் மேல் ஏறி அமர்ந்து கொண்டார். ஆனால் தவிட்டு மூடை நேரம் ஆக ஆக நீரில் மூழ்கத் தொடங்கவே அவரும் ஒரு பலகைத் துண்டைப் பிடித்துக்கொண்டார் இன்னொருவர் பீப்பா மீது ஏறி இருக்க முயற்சித்தார் பீப்பா உருளத் தொடங்கவும் அவரும் ஒருபலகைத் துண்டைப் பிடித்துக் கொண்டார். பொழுது சாயத் தொடங்கியதும் கப்பலின் கீழ்த்தளத்திற்கு செல்லும் பகுதியை மூடிவைக்கும் மூடி மிதந்தவண்ணம் இருந்ததினால் எல்லோரும் அந்த மூடியில் ஏறிக் கொண்டார்கள். இந்தவேளையில் நவரெட்டினம் ஒரு பலகைத் துண்டைப் பிடித்தபடி மிதந்த வண்ணம் இருந்தார். அப்போது நவரெட்டினத்துடைய அண்ணன் ஆபரணம் நீந்தி வந்துபிழைத்தால் இருவரும் பிழைப்போம் இறந்தால் இருவரும் இறப்போம் என்று சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டுபோய் பெரியமூடியில் ஏறிக்கொண்டார்கள். இவ்வாறாக அந்த மூடியில் ஏறியவர்கள் அனைவரும் ஒருவர் ஒருவருடைய கைகளைக் கோர்த்தபடி அதாவது முழங்கைகளை மடித்து ஒருவர் ஒருவரை விட்டுவிலகாதபடி எல்லோரும் ஒன்றாகப் பலகையின் மீது நின்றார்கள். ஆனால் கப்பல் தலைவர் தனியாக ஒரு பலகையில் மிதந்த படி சற்றுத் தொலைவில் இருந்தார். பொழுதும் சாய்ந்தது.

பொழுது நன்றாக விடிந்தது இவர்கள் மட்டுமே கடலில் காணப்பட்டார்கள். கப்பல் தலைவரைக் காணவில்லை. பிள்ளைகள் மட்டுமல்ல அனைவரும் கப்பல் தலைவருக்காக அழுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படியாக இருந்த வேளையில் ஜேம்ஸ் என்பவருக்கு சித்தசுவா தீனம் ஏற்பட்டதால் சாப்பாடு எடுத்து வருகிறேன் என்று சொல்லி இரண்டு தடவைகள் இவர்களை விட்டுப் பிரிந்து சற்றுத்தூரம் நீந்திச் சென்று வந்தார். மூன்றாம் முறை இவ்வாறு சென்ற போது பெரியதொரு சுறா மீன் ஜேம்ஸ் என்பவரை இவர்கள் கண் முன்பாகவே இழுத்துச் சென்றுவிட்டது. எல்லோருக்கும் பயம் வந்துவிட்டது. சுறா மீனிடமிருந்து தங்களைக் காப்பாற்றுவதற்காக அனைவரும் தங்கள் ஆடைகளைக் களைந்து விட்டார்கள். ஏனெனில் வெள்ளையைக் கண்டால் சுறா மீன் வரும் என்பது இவர்கள் கருத்து இப்படியாக மூன்று நாட்கள் ஒருவர் ஒருவருடைய கைகளைக் கோர்த்தபடி பலகையின் மீது மிதந்த படி நின்றார்கள். மூன்றாவது நாள் அவ்வழியே வான் பரப்பில் வந்த பிரித்தானிய விமானம் இவர்களை இனம்கண்டதால் பிரித்தானிய கடற்படைக் கப்பல் மூலம் இவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். பிரித்தானிய கப்பற்படைப்பிரிவினர் இவர்களுக்கு முதல் உதவி செய்தனர். காயம்பட்டவர்களுக்கும் ஒருவர் ஒருவருடைய கைகளைக் கோர்த்தபடி நின்றதனால் கை மடிப்புகளில் புண் ஏற்பட்டிருந்தது. அதற்கும் வைத்தியம் செய்தார்கள். இதன் பிற்பாடு இவர்கள் ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இவர்களை ஊருக்கு அனுப்பிவைத்த போது அனைவருக்கும் நீலநிற ஆடை அணிவித்து அனுப்பி வைத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தார்கள். இருபது வருடங்களுக்குப் பின்பு இந்தக் கதையை திரு. நவரெட்டினம் அவர்கள் சொன்ன போது அவரது குரல் கரகரத்து கண்களில் கண்ணீர் ததும்பியது.

யப்பானியர் குண்டு போட்டு கப்பல் மூழ்கும்போது யப்பானியர் எடுத்த புகைப்படம் திரு.பொன்னையா அவர்களிடம் கைவசம் இருந்தது. பிரித்தானிய அரசாங்கம் இவர்களிடம் யப்பானியர் உங்களைக் குண்டுபோட்டுத் தாக்குவதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது, நாங்கள் பிரித்தானியக் கொடியை ஏற்றியதுதான் காரணம் என்று கூறினார்கள். இதனால் திரு.நீக்கிலாப்பிள்ளையுடைய மனைவி தங்கமாணிக்கம் அவர்கட்கு மரிக்கும் வரை பிரித்தானியாவில் இருந்து உதவிப் பணம் அனுப்பிவைக்கப்பட்டது. அது மட்டும் அல்ல திரு.ஆபரணம் அவர்கட்கு தரைப்படையில்(ஆமியில்) பீரங்கிப் படைப்பிரிவிலும், திரு.நவரெத்தினம் அவர்கட்கு கடற்படைப்பிரிவில்( Royal Navy ) கப்பல் தலைவன்(Navy Captain) ஆக வேலை செய்வதற்கு பிரித்தானிய அரசால் வாய்ப்பளிக்கப்பட்டது.



தங்கமாணிக்கம் தன்னுடைய கணவன் திரு. நீக்கிளாப்பிள்ளையின் மரண ஞாபகமாக புனித யாகப்பர் ஆலய முன்றலில் திருச்சிலுவை ஒன்று கட்டுவித்தார். அதில் "ஓ திருக்குருசே என் ஏக நம்பிக்கையே வாழ்க" என்ற சொற்பதம் குறிப்பிடப்பட்டிருந்தது. திருச்சிலுவை ஆரம்பத்தில் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் அது சிதைவடைந்ததினால் தற்போது காணப்படும் திருச்சிலுவை சீமெந்தால் கட்டப்பட்டது. மரண ஞாபகமாகக் கட்டப்பட்டாலும் தற்போது இதைப் பார்க்கும்போது நம்மவர்கள் கடலோடிகளாக வணிகம் செய்தது ஞாபகம் வருகிறது.



இதற்கு மேலும் மெருகூட்டும் வகையில் இந்தக்கடல் பயணத்தில் பங்கெடுத்து மூழ்கி மிதந்து உயிர்பிழைத்து வந்த திரு. நவரெத்தினம் அவர்கள் காலமானபோது அவருடைய ஞாபகமாக ஊர்காவற்றுறை முச்சந்தியில் 1988ம் ஆண்டளவில் (வாடிவீட்டின் முன் பக்கம்) புனித யாகப்பரின் திருச் சொருபம் வாள்கொண்டு குதிரையில் பவனி வருவதுபோல் திரு. நவரெத்தினம் குடும்பத்தினரால் அமைக்கப்பட்டது. யுத்த அனர்த்தத்தினால் அது சிதைவடைந்தபோது தன்னார்வத் தொண்டர்களினால் புனரமைக்கப்பட்டது. புனித யாகப்பர் ஆலய 300 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தற்போது காணப்படும் சொருபம் ஆலய நிர்வாகத்தினரால் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.



தொடர்ந்து நம்மவர்கள் வெளிநாட்டுக் கப்பல்களில் திறம்பட வேலை செய்வதற்கும், உயர் பதவிகள் வகிப்பதற்கும் நம்முன்னோர்களது எடுத்துக்காட்டுகளே காரணம் எனலாம். பிற்பட்ட காலங்களில் வெளிநாட்டுக் கப்பல்களில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு பெரும்தொகைப் பணம் தேவைப்பட்டது. இந்த இடத்தில் ஒரு சதக் காசும் வாங்காமல் நம்மவர்க்குக் கப்பல்களில் வேலை வாய்ப்புத் தந்த திரு. சிலுவைதாஸ் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.



N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித சந்தியாகப்பரின் வாழ்க்கைப்பாதையில்



இயேசுவின் சீடர் புனித பெரிய யாகப்பர் என்றும், புனித ஜேக்கப் என்றும் ,புனித யாக்கோபு என்றும், புனித சந்தியாகு என்றும், புனித சந்தியாகப்பர் சந்தியோகுமையர் என்றும் அழைக்கப்படுபவர். இவர் அருளப்பரின் (யோவான்) சகோதரர். செபதேயு, புனித சலோமையின் தவப்புதல்வர். இயேசுவுக்கு நெருக்கமானவர், தேவ மாதாவின் மிகுந்த அன்பிற்குரியவர். முக்கிய மூன்று சீடர்களில் ஒருவர்.

இயேசு: நான் குடிக்கப்போகும் கிண்ணத்தில் உங்களால் குடிக்க முடியுமா? யாகப்பர்&அருளப்பர்: "முடியும்" (மத்தேயு:20:22)

புனித சந்தியாகப்பருக்கு இறைவன் இயேசு கேட்ட கேள்வியின் பொருளும் அதற்கு அவர் சகோதரரோடு சேர்ந்து அளித்த பதிலின் பொருளும் ஆரம்பத்தில் புரியவில்லை. அதன் பொருள் புரியாமலே பதில் சொல்லிவிட்டனர். ஆனால் இறைவன் இயேசுவின் கொடூர சிலுவை மரணமும் அதற்குப் பின் அவர் உயிர்த்த பின்பும்தான் புரிந்தது. "நான் குடிக்கப்போகும் கிண்ணத்தில் நீங்களும் குடிப்பீர்களா" என்பதன் பொருள். அவர் குடித்த கிண்ணம் துன்பக்கலம். அவர் மனுமக்களுக்காக மரித்தது போல் நானும் மரிப்பேன்.

அவர் கிண்ணத்தில் பருகும்வரை எனக்குத் தூக்கம் இல்லை. அதேவேளை அவருக்காக மரிக்கும் வரை அவரை அறிவிப்பேன். அதற்காக நான் எத்தனை நாடுகள் சென்றாலும் பரவாயில்லை எவ்வளவு தூரம் நடந்தாலும் பரவாயில்லை. என்னுடைய இலக்கு ஒன்றே ஒன்றுதான் ஒரே ஒருவர்தான் அவர்தான் இயேசு! சுறுசுறுப்பானவர், ஜெருசலேம், யூதேயா, கலிலேயா, சமாரியா, இத்தாலி மற்றும், ஸ்பெயின் வரை சென்று போதித்தார்.

கையில் ஒரு கம்பை எடுத்துக் கொண்டு அதில் ஒரு தண்ணீர்க் குடுவையை மாட்டிக் கொண்டு ஓய்வில்லாமல், கால் கடுக்க ஒரு பரதேசி போல் இயேசுவுக்காக அலைந்து திரிந்தார். வீர விசுவாசத்தோடு போதித்தார். ஒருவித ஆற்றலோடு காணப்பட்டார். ஆற்றலோடு ஜெபித்தார். எப்போதும் ஆண்டவராகிய இயேசுவை நோக்கி கரங்களைக் குவித்து ஜெபித்துக் கொண்டே இருந்தார். ஜெபிக்கும் போது அவர் கண்கள் வானத்தை நோக்கியே இருந்தன. சென்ற இடங்களில் எல்லாம் வல்லமையோடும், ஆர்வத்தோடும், ஆற்றலோடும் போதித்தார்.

அற்புதங்கள் பல செய்தார். தனிமையான பயணத்தின் போதும், இயேசுநாதரைப் பற்றி போதிக்கும் பல வேளைகளில் அவரோடு வான தூதர்கள் காணப்பட்டார்கள். நூறு சம்மனசுகள் இவரைச் சூழ்ந்துவர இத்தாலி தேசத்தில் இயேசுவை அறிவித்தார். எப்போதும் இயேசுவுக்காக வேதசாட்சியாக மரிக்கக்காத்து க்கொண்டிருந்தார். இயேசுவின் கிண்ணத்தில் பருக ஆவலோடும் ஆசையோடும் இருந்தார்.

அவர் எங்கு சென்றாலும் முதலில் சொல்லும் வார்த்தை "உங்களுக்குச் சமாதானம் உண்டாகுக" என்பதுதான். விவிலியத்தில் அதிகம் பேசாத புனித சந்தியாகப்பர் பேசிய ஒன்றிரண்டு இடங்களும் உணர்ச்சி பூர்வமானதும் உணர்வுப்பூர்வமானதும்தான். அதில் நம்மைக் கவர்ந்தது மேலே கூறிய இயேசுவின் கேள்வியும் அதற்கு அவர் தன் சகோதரனோடு அளித்த பதிலும்தான். வீரம், துணிச்சல், கம்பீரம், தூய்மை, அர்ப்பணம், ஆழமான அன்பு, பாசம் மற்றும் கோபம் இவைகள் அனைத்தும் கலந்த கலவைதான் புனித சந்தியாகப்பர்.

புனித யாகப்பர் செய்த புதுமைகளும் அவர் பல தருணங்களில் அந்நாட்டில் காட்சியளித்து மொகமதியர் கிறிஸ்தவர்களை எதிர்த்துச் செய்த போரில் கிறிஸ்தவர்களுக்கு துணைசெய்து மொகமதியரை அழித்து நிர்மூலமாக்கியதுமான உண்மைச் சம்பவங்களும், பிறவும். கூம்பர் என்பவரால் உண்மை அத்தாட்சிகளோடு எழுதப்பட்டிருக்கின்றன

N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பர் ஆலய வரலாறும், வழிபாட்டு நடைமுறைகளும்.

புனித யாகப்பர் ஆலய 300ஆவது ஆண்டு நிறைவு 2016ம் ஆண்டு கொண்டாடப்பட்டது. முதல் 100ஆண்டுகள் 1716-1815 ஆண்டுகள் வரை வரலாற்றுச் சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. களி மண்ணால் ஆன கோவில் இருந்ததாக வாய்மொழியில் காவி வந்தவர்கள் சொல்கிறார்கள்.

1815-1991ஆண்டு வரை "ஊர்காவற்றுறை பங்கு தோற்றமும் வளர்ச்சியும்" என்ற ஆய்வுத் தொகுப்பை "விக்ரோரியா" அவர்கள் ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டுச் சிறப்பு மலரில் பதிவு செய்யப்பட்ட கட்டுரையில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

திரு.கி.ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் எழுதிய "வரலாற்றுப்பாதையில் புனித யாகப்பர் ஆலயம்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை புனித மரியாள் ஆலய நூற்றாண்டுச் சிறப்பு மலரில் படிப்பதில் இருந்து ஓரளவு அறியக்கூடியதாக இருக்கிறது. இதைவிட புனித யாகப்பர் ஆலய கோவில் முகப்பில் பொறிக்கப்பட்டுள்ள ஆண்டு இலக்கங்கள் கட்டுமான வளர்ச்சிப் படிகளைக் காட்டி நின்கின்றது. இவற்றை விட வேறு எந்த ஆதாரங்களும் இல்லாதிருப்பது நம் துர்அதிஸ்ரம் என்றே கூறலாம்.

புனித மரியாள் ஆலயம் ஆசனக் கோவிலாக அபிஷேகம் செய்யப்படும் வரை ஊர்காவற்றுறையில் காணப்படும் புனித யாகப்பர் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், புனித மரியாள் ஆலயம், புனித சூசையப்பர் ஆலயம். இவற்றில் எந்த ஆலயத்தில் பெருவிழா இடம்பெறுகிறதோ அந்த ஆலயப் பணிமனையில் பங்குக் குருவானவர் தங்கி இருப்பார். புனித சூசையப்பர் ஆலயத்திற்கு குருமனை இல்லாத காரணத்தினால் புனித சூசையப்பர் ஆலயத் திருவிழாக் காலங்களில் குருவானவர் புனித மரியாள் ஆலயபங்கு மனையில் தங்கி இருப்பார். கிறிஸ்து பிறப்பு விழா, கிறிஸ்து உயிர்ப்பு விழா எந்தக் கோவிலில் இடம்பெறுகிறதோ அந்தக்காலங்களிலும் பங்குக் குருவானவர், விழா இடம்பெறும் ஆலயத்தில் தங்கியிருப்பார். கிறிஸ்து பிறப்பு, உயிர்ப்பு விழா ஆண்டுக்கு ஆண்டு மாறி மாறி, இந்த வருடம் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்றால் அடுத்தவருடம் புனித மரியாள் ஆலயத்திலும், அடுத்த வருடம் புனித சூசையப்பர் ஆலயத்திலும், அதற்கு அடுத்த வருடம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் இடம் பெறும். திருவிழா இடம்பெறாத காலங்களில் குருவானவர் புனித மரியாள் ஆலயத்தில் தங்கி இருப்பார்.

எந்த ஆலயப் பங்கு மனையில் குருவானவர் தங்கி இருக்கின்றாறோ அந்த ஆலயத்தில் நண்பகல் திருந்தாதி மணி அடிக்கப்படும். பங்கு மனையில் பங்குக் குருவானவர் தங்கி இருக்கவில்லை என்றால் அந்த ஆலயத்தில் காலையிலும், மாலையிலும் மட்டும் திருந்தாதி மணி அடிக்கப்படும். குருவானவர் தங்கி இருக்கும் ஆலயத்தில் காலை, நண்பகல், மாலை. மூன்று வேளையும் திருந்தாதி மணி அடிக்கப்படும்.



திருந்தாதி மணி டங்! டங்! டங்! என்று ஒரே தடவையில் முதல் மூன்று முறை இடைவெளி இல்லாமல் அடித்தபின்பு மூன்று அல்லது நான்கு செக்கன்ட் இடைவெளியில் இரண்டாவது தடவையாகவும் டங்!டங்! டங்!என்று 3 முறை அடித்த பின்பு 3-4 செக்கன்ட் இடைவெளியில் திரும்பவும் டங்!டங்!டங்! என்று 3 முறை அடித்த பின்பு 3-4 செக்கன்ட் இடைவெளியில் இப்போது இரண்டு முறை டங்! டங்! என்று அடித்து முன்புபோல் 3-4 செக்கன்ட் கழித்து பதினொரு(11) முறை டங்! டங்!------- என்று அடித்து முடிக்க வேண்டும். திருந்தாதி மணி காலையில் 5 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் மாலையில் 6 மணிக்கும் அடிப்பது வழக்கம். திருந்தாதி மணி அடிக்கும் வேளையில் அவரவர் தம் தம் வீடுகளில் திரிகாலச் செபம் சொல்வது வழக்கத்தில் இருந்தது.



மணிக் கோபுரத்தில் இரண்டு விதமான மணிகள் கட்டப்பட்டிருந்தன. ஒன்று சாதாரன மணி இரண்டாவது மணி சில்லுப் போன்ற கருவியுடன் பொருத்தப்பட்ட மணி. தனியாகப் பொருத்தப்பட்ட மணியின் நாக்கு ஒருபக்கம் அடிக்கக் கூடியதாகவும் சில்லுப்போன்ற கருவியில் பொருத்தப்பட்ட மணியின் நாக்கு இரண்டு பக்கம் அடிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ஆலய வழிபாடுகளுக்கு ஆயத்தமாக முதல் மூன்று மணி அடித்து பின்பு ஆயத்த மணி அடித்து வழிபாட்டை ஆரம்பம் செய்வார்கள். அதாவது முதலாம் மணி ஒரு முறை டங்! என்று அடித்து 3--4 செக்கன் இடைவெளியின் பின்பு டங்டாங் ! டங்டாங் ! என்று 2-3 நிமிடங்கள் அடித்து இடைவெளி விட்டு 3-4செக்கனில் ஒரு முறை டங்! என்று அடித்து நிற்பாட்டுவார்கள். இரண்டாம் மணி டங் ! என்று ஒரு முறை அடித்து 1-2 செக்கனில் இரன்டாவது டங்! என்று அடித்து 1-2 செக்கனில் டங்டாங் !டங்டாங் என்று 2-3நிமிடங்கள் அடித்து நிற்பாட்டி டங்! என்று ஒரு முறை அடித்து 1-2 செக்கனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் டங்! என்று அடித்து நிற்பாட்ட வேண்டும். மூன்றாம் மணி முதல் டங்! என்று அடித்து1-2 செக்கனில் டங்! என்று அடித்து 2-3 செக்கனில் டங்! என்று அடித்து 1-2 செக்கனில் டங்டாங்! டங்டாங்! என்று 2-3 நிமிடங்கள் அடித்து நிற்பாட்டி திரும்பவும் டங்!---டங்---டங் என்று மூன்று தடவைகள் அடித்து நிற்பாட்டுவார்கள். ஆயத்த மணி 2-3 செக்கன் இடைவெளியில் 5 தடவைகள் டங்!டங்!டங்!டங்!டங்! என்று அடிப்பார்கள்.

எழுந்தேற்றம் போடும் போதும், நற்கருணை ஆசீர்வாதம் போடும் போதும், திருமுழுக்குக் கொடுக்கும் போதும், தாலி கட்டும் போதும், சொருபம் சுற்றும் போதும் ஆலய மணிகள் இரண்டும் ஒலிக்கும் ஓசை (டங்!டங்!டங்! டங்டாங்! டங்டாங்! டங்டாங்!) பக்திப்பெருக்கோடு மனதிற்கு இதமாகவும்இருக்கும்.

இறந்தவர்களுக்காக ஆலய மணி ஒலிக்கும் போது முதலில் ஒரு முறை டங்! என்றுஅடித்து 1-2 செக்கனில் டங்! டங்! என்று இரண்டு தடவைகள் அடிப்பார்கள். மாறி மாறி 10—15தடவைகள் அடிப்பார்கள். இந்த மணி ஒலி எந்த ஆலயத்தில் இருந்து ஒலிக்கப் படுகிறதோ அந்தப்பங்கைச் சேர்ந்தவர்கள்இறந்துவிட்டார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். வீடுகள் எரிந்தால் அவசர அவசரமாக (டங்!டங்!டங்!)இடைவெளி இல்லாமல் துரிதமாக அடிப்பார்கள். இந்த அவசர மணி ஒலி எந்த ஆலயத்திலிருந்து எழுப்பப்படுகிறதோ அந்தப் பங்கில் வீடு எரிகிறது உதவிக்கு அழைக்கிறார்கள் என்று தெரிந்து அங்கு சென்று தீயை அணைப்பதில் அனைவரும் எந்தவித பாகுபாடுமின்றி ஈடுபடுவார்கள்.



திரு அவை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி சில சீர்திருத்த முடிவுகளை திருத்தந்தை தூய 23ம் அருளப்பர் அவர்கள் 1962இல் ஆரம்பித்து முடிவுகள் எடுத்ததின் பயனாக திரு அவையில் பல முன்னேற்றகரமான நடைமுறைகள் நடைமுறைக்கு வந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடி முடிவெடுக்கும் முன்பு திருப்பலிப் பூசை இலத்தீன் மொழியில் இடம்பெற்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் சீர்திருத்த முடிவுகளை எடுத்ததின் பயனாக திருப்பலிப் பூசை அந்தந்த நாட்டில் பேச்சு வழக்கில் நடைமுறையில் காணப்படும் தாய் மொழியில் திருப்பலிப் பூசை 1962ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வந்தது. 1962ஆம் ஆண்டிற்கு முன்பு திருப்பலிப் பூசையை குருவானவர் பீடத்தைப் பார்த்தபடி அதாவது குருவானவர் தமது முதுகை மக்களுக்குக் காட்டியபடி திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். 1962ஆம் ஆண்டிற்குப் பின்பு குருவானவர் திருப்பலியை மக்களைப் பார்த்தபடி ஒப்புக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

திருப்பலிக்கு வேண்டிய ஆயத்தங்களை ஆலய மூப்பர் (சங்கிஸ்தான்) செய்வார். 1962ஆம் ஆண்டிற்கு முன்பு குருவானவர் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது ஏழு விதமான ஆடைகளை அணிவார்.[The AMICE:, The ALB:, The CINCTURE:, The MANIPLE:, The STOLE:, The CHASUBLE:, The DALMATIC ] தற்போது இரன்டு விதமான ஆடைகளை மட்டும் அணிகிறார். [The STOLE:, The DALMATIC ] 2ம் வத்திக்கான் சங்க சீர்திருத்தக் கருத்துக்களின்படி அந்தந்த நாட்டுக் கலாச்சார தேசிய ஆடையுடன்(வேஷ்டி,சால்வையுடன்)திருப்பலி ஒப்புக் கொடுக்கலாம். திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் ஊதா (நாவல்) நிறத்திலும் வேதசாட்சிகள் பெருவிழாவின் போது சிகப்பு நிறத்திலும், பொதுக்காலத்தில் பச்சை நிறத்திலும், மாதாவுடைய, புனிதர்களுடைய பெருவிழாக்களில் வெள்ளை நிறத்திலும், திருவருகைக் காலத்தின் 3வது கிழமை பிங்(றோஸ்) நிறத்திலும் குருவானவர் ஆடை அணிவார்.

ஞாயிறு வாரத்தில் மூன்று திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கு பிரத்தியேகமாக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். மாணவர்கள் திருப்பலிக்கு வருவது வரவு எடுக்கப்படும். வரவெடுக்கப்பட்ட மாணவர்களில் கூடுதலாகப் புள்ளி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். புனிதர்களுடைய படங்கள், செபமாலை என்பனவும் வழங்கப்படும்.

ஆலயத்தில் நற்கருணை இருப்பதற்கு அடையாளமாக சிகப்பு விளக்கு எரிந்துகொண்டிருக்கும். திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்போது நற்கருணைப் பேளைக்கு வலப்பக்கத்தில் 3 மெழுகுதிரிகளும் இடது பக்கத்தில் 3 மெழுகுதிரிகளும் ஏற்றப்பட்டிருக்கும். நற்கருணை ஆசீர்வாதம் இடம்பெறும் போது இந்த 6 மெழுகுதிரிகளுடன் கதிர்ப்பாத்திரத்திற்கு வலப்பக்கம் 7 மெழுகுதிரிகளும் இடப்பக்கம் 7 மெழுகுதிரிகளும் ஏற்றப்பட்டிருக்கும்.

ஞாயிறு திருப்பலியிலும், பாடல் திருப்பலியிலும் , திருவிழாத் திருப்பலியிலும் , நற்கருணை ஆசீர்வாதத்திலும், இறந்தவர்களுக்கான திருப்பலியிலும், தூபம் காட்டப்படும். இறந்தவர்களுக்கான பலி ஒப்புக் கொடுக்கப்படும் போது குருவானவரும் பீடப்பரிசாதகரும் கறுப்பு நிற ஆடை அணிவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர்களுக்கான பலி ஒப்புக்கொடுக்கும் போது நடுக்கோவிலில் நீள்சதுரமான மேசை ஒன்றை கறுப்புநிறத் துணியால் மூடி அதன்மேல் இறந்தவர்களை அடக்கம் செய்யும் (வெற்றுப்) பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டிருக்கும். மேசையின் நான்கு மூலையிலும் உயரமான மெழுகுதிரித் தண்டில் மெழுகுதிரி கொழுத்தப்பட்டிருக்கும். திருப்பலி முடிவில் இறந்தவருக்காக அந்தப் பெட்டியைச் சுற்றி தூபம் காட்டி ஆசிநீர் தெளித்து மன்றாடப்படும்.

திருப்பலி வேளையில் புனிதர்களுக்கு மெழுகுதிரி ஏற்றப்படுவது தடைசெய்யப்பட்டிருந்தது. ஆரம்ப காலத்தில் புனித யாகப்பர் திருச் சொருபம் குதிரையில் பவனி வந்தவண்ணம் இருந்தது. மக்கள் குதிரையைத் தொட்டு வணங்கியதால் குதிரையை மேகத்தைப்போல் வடிவமைத்தார்கள். பீடத்தில் காணப் படும் சிலுவையில் அறையப்பட்ட திருச் சொருபம் இந்தியாவில் ஒரு வீட்டில் பரணியில் இருந்து எடுத்து வரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

புனித யாகப்பர் திருவிழாவின் இறுதி நாள், திருச் சொருபம் மிகவும் பயபக்தியுடன் வீதி வலம் வரும் அப்போது வீதிகள் தண்ணீர் தெளிக்கப்பட்டு இருமருங்கும் குருத்தோலை கட்டி அலங்கரிக்கப்பட்டிருக்கும். புனித யாகப்பர் திருச் சொருபம் வீதி வலம் வரும்போது மக்கள் வீட்டுவாசல்களில் நின்று தூபம் போடுவார்கள். முச்சந்தியில் கடை உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் வெடி கொழுத்துவார்கள். இறுதியாக சொருப ஆசீர்வாதத்தின் பின்பு திரு. செபமாலை என்பவரால் வான வேடிக்கை இடம்பெற்று வந்ததாகவும் வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்ததினால் அந்நிகழ்ச்சி தற்போது கைவிடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

தவக்காலத்தில் பெரிய சிலுவைப்பாதை தியானம் இடம்பெறும். ஆண்டவருடைய திரு உருவம் சிகப்புநிற ஆடை அணிவித்து அதில் சிலுவை சுமத்தப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்படும். ஆலயம் வந்து சேர்ந்ததும் ஆண்டவர் உயிர் விடும் காட்சி மூச்சு(சுவாசம்)மேலேபோய் கீழேவந்து கண் விழித்து மூடி தலை சாய்த்து விழும் காட்சி உள்ளத்தைத் தொடும். இதன் பின்பு மரித்த ஆண்டவருடைய திருச்சொருபம் ஆசந்தியில் (பாடை) வைத்து ஆலயத்தைச் சுற்றி எடுத்து வரப்படும் அந்த சமயத்தில் மக்கள் ஆசந்தியின் கீழாக சென்று வருவார்கள் இப்படியாக சென்று வருவதினால் நோய் பிணி தீரும் என்பது வைதீகம் கடைசியாக ஆண்டவருடைய திருச் சொருபம் கல்லறைப் பெட்டியில் வைக்கப்படும். இதை கல்லறை ஆண்டவர் என்று அழைப்பார்கள். இப்போது இந்தக் கல்லறை ஆண்டவரை நெற்துணியால் மூடுவார்கள். வாசனைத் திரவியங்கள் தெளிப்பார்கள். இன்னும் சிலர் கல்லறை ஆண்டவரை கறுப்புநிற நாடாவால் அளந்து கையில் கட்டுவார்கள். காரணம் காத்துக் கறுப்பு பேய் பிசாசு அணுகாது என்பது வைதீகம்.

பெரிய வியாழக்கிழமை நற்கருணை இடமாற்றம் செய்யப்படும் பெரிய வியாழன் திருப்பலி முடிந்த நேரத்தில் இருந்து இரவு 12 மணிவரையும் பெரிய வெள்ளி பகல் 6 மணிமுதல் மாலை திருப்பலி வரை நற்கருணைச் சந்திப்பு இடம்பெறும். பெரிய வெள்ளிக் கிழமை ஆண்டவர் இறந்த பின்பு உயிர்ப்புப் பெறும்சடங்கு நடைபெற்று ஆண்டவர் உயிர்பெற்று எழும்வரை ஆலய மணி ஒலிக்காது. பதிலாக கிறிச்சான் என்ற மரத்தால் செய்யப்பட் கருவியைப் பாவித்து ஆலய மணிக்குப் பதிலாக ஒலி எழுப்புவார்கள்.

பீடத்தின் முன் கிறாதி அமைக்கப்பட்டிருக்கும் அதில் முழந்தாளில் இருந்து நற்கருணை நாவில் எடுக்க வேன்டும். முழங்காலுக்கு மேல் ஆடை அணியும் பெண்களுக்கு சில குருமார் நற்கருணை கொடுக்க மாட்டார்கள். அப்படியே துப்பட்டி அணிந்து தலையை மூடிக் கொள்ளாதவர்களுக்கும் சில குரு மார் நற்கருணை கொடுக்க மாட்டார்கள். நற்கருணை எடுப்பதற்கு மூன்று மணித்தியாலத்துக்கு முன் எந்த உணவும் உண்ணக்கூடாது. முற்காலத்தில் நள்ளிரவு முதல் எந்த உணவும் உட்கொள்ளக் கூடாது.

கார்த்திகை மாதம் சேமக்காலை சந்தித்து இறந்தவர்களுக்காகச் செபிப்பார்கள். குருவானவரைச் சந்திக்கும் போது "சுவாமி இயேசுக்கிறிஸ்து துதிக்கப்படுவாராக" என்று முழந்தாள் மடித்து ஆசாரம் செய்வார்கள். ஒருவர் இறந்தால் அவர்களின் ஞானப்பிள்ளைகள் அவர்களின் தலை மாட்டில் மெழுகு வர்த்தி ஏற்றுவார்கள் முதல் நன்மை எடுத்தவர்கள் ஞானப்பெற்றோரிடமும், வயதானவர்களிடமும் முழந்தாளில் இருந்து ஆசீர் பெறுவார்கள் புதிதாகத் திருமணம் செய்பவர்களின் உறவு முறையையும் விக்கினங்களையும் அறிய 1ம் 2ம் 3ம் கூறல் என்று குருவானவர் அறிவித்தல் செய்வார். இதற்கமைய திருமணமாக இருக்கும் மணவாளன், மணவாட்டி இவர்கள் ஏற்கனவே திருமணம் செய்திருந்தால், அல்லது திருமண அருட்சாதனத்துக்குப் புறம்பான வாழ்க்கை வாழ்ந்திருந்தால் அவை பற்றிய விடயங்களை பங்குத் தந்தையிடம் அறிவிக்க விஷேஸ்த்த கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவநாள் திருவிழாக்களில் செபமாலை, பிராத்தனை, அடைக்கலச் செபம், விருத்தம் என்பன இடம்பெறும். புனித யாகப்பர் பெருவிழா, புனித உத்தரிய மாதா பெருவிழா, புனித அன்னம்மாள் பெருவிழா, கப்பல் ஏந்திய மாதா பெருவிழா, கிறிஸ்து அரசர் பெருவிழா. என்பன புனித யாகப்பர் பங்கில் இடம் பெறும் முக்கிய பெருவிழாக்களாகும். திருவிழா நாட்களில் சிலர் அன்னதானம் வழங்குவார்கள். பக்தர்கள் அன்னதானத்தை பனை ஓலையில் செய்த பிளாவில் வாங்கிச் செல்வார்கள்.

புனித யாகப்பர் பங்கு மக்கள் ஆளமான விசுவாசமுடையவர்கள். விசுவாசத்துக்குப் புறம்பான காரணங்களை எதிர்த்துச் செயல்பட்டவர்கள். இந்த வகையில் தங்கமாணிக்கம் என்பவர் தன்னுடைய நிலத்தை இந்து ஆலயம் (சிவன் கோவில்) கட்டுவதற்கு விற்பனை செய்ததினால் அவரை ஆலயத்துக்குள் அனுமதிக்கவில்லை. இதனால் அவருடைய மூத்த மகன் பொன்னையா பரிசுத்த போப்பாண்டவருடன் தொடர்புகொண்டு கடிதம் மூலம் அனுமதி பெற்று பங்குச்சுவாமியாருடைய ஒப்புதலுடன் தங்கமாணிக்கம் மீண்டும் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட்டார்.

எங்கும் எப்போதும் பெண்கள் ஆண்களைவிட ஆண்மீகப் பணியில் கூடுதலாக ஈடுபாடுடையவர்களாகக் காணப்படுவது வழக்கம். அந்தவகையில் எமது பங்கிலும் பெண்கள் பிற்பகல் 3 மணிக்கு ஒன்று கூடி செபமாலை சொல்லுவார்கள். 3 மணிக்கு ஆலய மணியை ஒலிக்கச் செய்வதின் மூலம் பெண்கள் ஆலயத்துக்கு வருவார்கள். இவ்விடயத்தில் 'பிலிப்பாச்சி' என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் அம்பலப்புலத்தில் இருந்து கால்நடையாக நடந்து 3 மணிக்கு முன்பாகவே வந்து விடுவார். வரும்போதே செபமாலை சொல்லிக் கொண்டே வருவார்.



நற்கருணைச் சுற்றுப்பிரகாரம் மிகவும் பயபக்தியுடன் இடம்பெறும். இந்த விழா எல்லா ஆலய மக்களாலும் ஒன்றுபட்டு செய்யப்படும் ஒரு விழாவாகும். கதிர் பாத்திரத்தை குருவானவர் எடுத்துவர, அதற்கு மேலாகப் பிடிக்கப்படும் நாற்சதுர குடையைப் பிடிப்பதற்கு மேலாப்பு என்று இதை அழைப்பார்கள். நான்கு ஆலயத்தைச் சேர்ந்தவர்களும் பங்கெடுப்பார்கள். நற்கருணை சுற்றுப்பிரகாரம் வலம் வரும்போது அந்த ஆண்டு முதன் நன்மை எடுத்த பிள்ளைகள் இடைஇடையே பூக்கள் தூவியபடி நற்கருணைக்கு முன் வலம்வருவார்கள்.

புனித யாகப்பர் பெருவிழா அன்று மாலை சங்கிஸ்தான் வீட்டிற்கு குடிமக்கள் பலகாரம் பருசுப்பொருள் எடுத்துச் சென்று அங்கிருந்து குருமனைக்கு ஊர்வலமாக எடுத்துச்சென்று குருவானவருக்கு வழங்குவார்கள். குருவானவர் மக்களுக்கு (தோடம்பழ) இனிப்பு வழங்குவார். கிறிஸ்து பிறப்புவிழா அன்று ஆலய முன்றலில் வினோத உடைப் போட்டி இடம்பெறும். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கப்படும். பிற்பட்ட காலத்தில் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் பதிலாக இடம்பெறத் தொடங்கியது. இந்நிகழ்ச்சி வண. பொன்னையாச்சுவாமி பங்குக் குருவாக இருந்த காலத்தில் ஆரம்பமானது என்று அறியக்கூடியதாகக் காணப்படுகிறது.



N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய கனடா மக்கள் ஒன்றியம்.

1985ஆம் ஆண்டு மாசிமாதம் 21ஆம் திகதி நான் கனடாவில் மொன்றியல் மானிலத்தில் அகதி உரிமை ஏற்கப்பட்டு குடியேறினேன். அப்போது எமது யாகப்பர் ஆலயப்பங்கு மக்கள் எவரும் கனடாவில் குடி அமரவில்லை. அதன் பிற்பாடே திரு.றேமன், திரு.தி.ஜோசப், திரு.டிக்சன், திரு.சுரேஸ், திரு.சேகர், என்பவர்கள் படிப்படியாகக் கனடா வந்து ரொறொன்டோவில் குடிஅமர்ந்தார்கள். நான் சேகர், மாலாவுடன் மொன்றியலில் இருந்து 1988ஆம் ஆண்டு வைகாசிமாதம் ரொறொன்டோ வந்து குடிஅமர்ந்தேன்.

1989ஆம் ஆண்டு திரு. டேவிட் தோமஸ் அவர்கள் இரணை தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சில காலம் புனித யாகப்பர் ஆலய குருமனையில் தங்கி இருந்த வெளிநாட்டுக் குருவானவருடன் வசித்தவர். இவருக்கு நமது பங்கு இளைஞர்களுடன் ஏற்கனவே பழக்கம் இருந்தது. இதனால் அவர் சேகரை சந்தித்து ஒட்டாவாவில் இருந்து ஒரு தமிழ் குருவானவரை வருவித்து தமிழில் சிலுவைப்பாதை தியானம் செய்ய இருப்பதாகவும், அதற்கு யாகப்பர் பங்கு மக்களின் ஒத்துழைப்பை விரும்புகிறேன் இந்த உதவியைச் செய்ய முடியுமா என்று கேட்டதற்கு இணங்க சேகர், டிக்சன், சுறேஸ், சகாயறாயன் உதவியுடன் முதன்முறையாக கனடாவில் சிலுவைப்பாதை தியானத்தை பயனுள்ளவகையில் செய்து முடித்தோம்.



1989ஆம் ஆண்டு திரு.யோசப் அண்ணன் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு அதில் தவறாயன் செயலாளராகவும், சேகர் தனாதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்தோம். இந்த முதல் முயற்சியை உருவாக்கியவர் திரு.சேகர் அவர்களே.

இவ்வாறாக நாம் செயற்பட ஆரம்பித்த காலத்தில் இந்தியன் ஆமியின் வருகையினால் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் எமது பகுதியில் குடியேறினர். 1988ஆம் ஆண்டு புனித யாகப்பர் ஆலயம் புதிதாகப் புனரமைக்கப்படுவதற்காக அதி வணக்கத்துக்குரிய தீயோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களினால் அத்திவாரம் போடப்பட்டிருந்தது. இதற்கான சகல முயற்சிகளையும் திரு. மரியநாயகம் அவர்களே முன் எடுத்திருந்தார். புதிதாகக் கட்டப்பட இருந்த ஆலய வடிவம் கூட பிளாஸ்ரிக்கால் வடிவமைக்கப்பட்டு குருமனையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. ஆலய கட்டுமானப் பணி தொடங்குவதற்கு முன்பாக தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக நிலத்துக்கடியில் தண்ணீர்த் தாங்கி ஒன்றைக் கட்டுவதற்காக திரு.மரியநாயகம் அவர்கள் கனடா வாழ் யாகப்பர் ஆலய மக்களிடம் பண உதவியைக் கேட்டிருந்தார். சேகருடைய ஆலோசனையின்படி 10 பேர் மாதாந்த சீட்டுப் போட்டு 5000 கனேடிய டொளர்களை அனுப்பி வைத்தோம்.



1992ஆம் ஆண்டு சேகர், டேவிற்றின் உதவியுடன் டவுண்டவுணில் உள்ள புனித லூட்ஸ் தேவாலயத்தில் முதன்முறையாக புனித யாகப்பர் பெருவிழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடினோம். 1993ஆம் ஆண்டு முதன் முறையாக கிறிஸ்மஸ் விழாவை திரு.ஜேம்ஸ் வீட்டில் குறைந்த அளவு மக்களுடன் கொண்டாடினோம். 1994ஆம் ஆண்டு சேகர், சசீந்திரன், சுரேஸ் மூவரும் ரோறொண்டோ மார்க்கம் பகுதியில் அமைந்துள்ள புனித பொனிபஸ் ஆலயக் குருவானவரை சந்தித்து ஆலயத்தின் கீழ்ப் பகுதியில் அமைந்துள்ள மண்டபத்தில் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடினோம். அதன் பிற்பாடு சுரேசும், டிக்சனும் சேர்ந்து புனித பொனிபஸ் ஆலயத்தின் மண்டபத்தில் தொடர்ச்சியாகக் கொண்டாடி வந்தோம்.

1999ஆம்ஆண்டு வண.சாள்ஸ் அடிகளார் குருவானவராகத் திருநிலைப்படுத்தப்பட்டு முதன் முறையாக கனடாவுக்கு வந்தபோது எமது மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு மண்டபம் எடுத்து அவருக்கு வரவேற்புக் கொடுத்தோம். அந்த விழாவின் இறுதியில் சாள்ஸ் அடிகளார் புதிய நிர்வாகக் குழுவைத் தெரிவு செய்தார். அதில் தலைவராக திரு.ஜேம்ஸ், செயலாளராக திரு.சுரேஸ், தனாதிகாரியாக திரு.சேகர், உப தனாதிகாரியாக திரு.பிரான்சிஸ் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

புதிய நிர்வாகக் குழுவின் முதல் கூட்டம் 2000ஆம் ஆண்டு தை மாதம் சுரேஸ் வீட்டில் நடைபெற்றது. சந்தாப் பணமாக ஒரு குடும்பத்துக்கு மாதம் 5 டொலர் வீதம் வருடம் 60 டொலர் சேகரிப்பதாக முடிவுசெய்யப்பட்டு அதன் பொறுப்பு சேகரிடம் கொடுக்கப்பட்டது. 6-10-2000 ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகர் நிர்வாகக் குழுவிலிருந்து விலகுவதாகக் கூறியதால் பிரான்சிஸ் தனாதிகாரியாகவும், சசீந்திரன் உப தனாதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். ஆயினும் சசீந்திரனே காசுப்பொறுப்பை எடுத்து நடத்தினார். இது எனக்குப் பேருதவியாக இருந்தது. சசீந்திரன் சந்தாப் பணம் சேகரிப்பதில் மிகவும் கடுமையாக உழைத்தார். இதன் பலனாகவே கோவில் பணிக்கு வேண்டிய பணத்தை அவ்வப்போது அனுப்பக் கூடியதாக இருந்தது.

2004ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26ஆம் திகதி இலங்கையில் சுனாமி கடல் அலை பாரிய பேரழிவை ஏற்படுத்தியது. 26ஆம் திகதி எமது கிறிஸ்மஸ் விழா கொண்டாடுவதா? இல்லையா? என்ற சூழ்நிலையில் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டு அந்த விழாவிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணம் சேர்ப்பதாக முடிவு செய்யப்பட்டு, சேர்க்கப்பட்ட பணத்தை வண.சாள்ஸ் அடிகளாரின் உதவியுடன் அதி வணக்கத்துக்குரிய தீயோகுப்பிள்ளை ஆண்டகையிடம் பணம் கொடுக்கப்பட்டது.



திரு.சேவியர் ஆசீர்வாதம் அவர்கள் சிறுவர்களுக்கு கோடை கால நிகழ்ச்சிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் ஆடி மாதத்தில் பூங்காவில்(பாக்கில்)நாம் எல்லோரும் ஒன்றுகூடி தொடர்ச்சியாக வருடந்தோறும் சிறப்பாக அந்த நிகழ்வையும் செய்து வருகின்றோம்.

2005ஆம் ஆண்டு காவலூரில் புனித யாகப்பர் ஆலயம் புனரமைக்கப்பட்டு ஆடி மாதம் 25ஆம் திகதி திருவிழா கொண்டாடப்பட்டது. ஆலயம் இனி திருத்த முடியாது என்று பலராலும் கூறப்பட்ட போதிலும் திரு.மரியநாயகம் அவர்கள் துணிந்து வந்து சகல பொறுப்புக்களையும் தானே எடுத்து புனித யாகப்பர் ஆலயத்தை மிகவும் சிறப்பான முறையில், பலரும் வியக்கும் வகையில் புனரமைத்தார் இதற்கு வண.சாள்ஸ் அடிகளாரும் முன்னின்று பெரிதும் உதவிசெய்தார். இதனைப் பாராட்டும் முகமாக 2005ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம் திகதி காவலூரில் நடந்த புனித யாகப்பர் பெருவிழா திருப்பலி ஆராதனையின் முடிவில் ஆலயத்தில் வைத்தே கனடாவாழ் யாகப்பர் ஆலய பங்கு மக்களினால் பொன்னாடை போர்த்தி, ஒரு கேடயம் வழங்கப்பட்டு அவரைக் கௌரவித்தோம். அதே ஆண்டு அருட்செல்வி தெக்கிளா அவர்களின் 50ஆவது யூபிலி நடைபெற்றபோது கனடாவாழ் யாகப்பர் பங்கு மக்களினால் கேடயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

ஊர்காவற்றுறையில் எமது பங்கு மக்களின் பிள்ளைகளுக்கு கல்வியை மேன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ரியூசன் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு அதற்குத் தேவையான பணமும் சேர்க்கப்பட்டு அதற்கான செயல்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டது. ஆனாலும் மீண்டும் யுத்தம் ஆரம்பித்ததினால் மக்கள் இடம் பெயர்ந்த காரணத்தினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

2008ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வன்னியில் கஸ்ரப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முடிவு செய்து திரு.டெல்மன் ஜோசப் தலைமையில் பணம் சேர்த்து 1070 கனேடிய டொளர்கள் அனுப்பப்பட்டது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின்பு மீண்டும் எமது ஊருக்கு திரும்பி வந்து குடியமர்ந்த மக்களுக்கு உதவி செய்யும் முகமாக எமது சந்தாப் பணத்தின் ஒரு பகுதியை திரு.லீனஸ் மாஸ்ரருக்கு அனுப்பி மேற்கு வீதியில் 10 குடும்பங்களுக்கும், அம்பலப்புலத்தில் 7 குடும்பங்களுக்கும் பணம் கொடுக்கப்பட்டது. திரு.இரத்தினம் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பணம் சேர்த்து அனுப்பப்பட்டது.



2011ஆம் ஆண்டு மாசி மாதம் திரு.நிமலன் ஜோசப்(சூட்டி) தலைமையில் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது. திரு. நிரஞ்சன் சேவியர் செயலாளர் ஆகவும், திரு.டிக்சன் துரைசிங்கம் பொருளாளராகவும், திரு.டெல்மன் ஜோசப் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு எமது பணியை புதிய நிர்வாகக் குழுவிடம் ஒப்படைத்தோம். புதிய நிர்வாகக் குழு எமது நலன்புரிச்சங்கத்தில் ஒரு திருப்புமுனை எனலாம். இவர்களுடைய காலத்தில் இளைஞர்கள்(ஆண்களும்,பெண்களும்) கூடுதலாகப் பங்கேற்றனர். கோடை ஒன்று கூடலில் கயிறு இழுத்தல், முட்டி அடித்து உடைத்தல். தலையணை சண்டை, கிறீஸ் மரம் ஏறுதல் போன்ற விளையாட்டுக்கள் உள்வாங்கப்பட்டன.



2015ஆம் ஆண்டு தற்போது செயல்படும் நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது. திரு. குலேந்திரன் நவரெத்தினம் தலைவராகவும், அனன்சியா கொலின் அவர்கள் செயலாளராக வும், உதவிச் செயலாளராக றொசிற்றா எல்மோ அவர்களும், பொருளாளராக திரு.சேவியர் ஆசீர்வாதம் அவர்களும், உதவித் தலைவராக திரு.டிறோசன் யேசுதாசன் அவர்களும் செயற்பட்டு வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைச்சந்தித்து எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன். உடனே கடிதம் எழுதி ரொறொன்ரோவில் புலோர் பாதஸ் என்னும் இடத்தில் உள்ள பெரிய ஆலயமாக உள்ள புனித பீற்றர் தேவாலயத்தில் அப்போது பங்கு தந்தையாக இருந்த அருட் தந்தை சிஜா எனும் குருவானவரிடம் அனுப்பினார், அவரும் எனக்கு உதவி செய்ய மிகவும் ஆர்வம் காட்டினார்.

அந்தக் காலத்தில் இப்போது இருப்பதுபோல் ரொறொன்ரோவில் தமிழில் வானொலியோ. தொலைக்காட்சியோ இல்லை தொலைபேசிச் செய்தி மட்டும் உலகத்தமிழர் இயக்கத்தால் நடந்துகொண்டிருந்தது அவர்களிடம் உதவி கேட்டு இந்தச் செய்தியை பரப்பினேன் அத்துடன் எனது கையால் தமிழில் எழுதிய பிரசுரமும் சில கடைகளில் வைத்தேன் இதற்கிடையில் எனது நண்பன் ஊர்காவற்றுறை மேற்கைச் சேர்ந்த சேகர் செய்தி கேட்டு என்னுடன் தொடர்புகொண்டார். அவரோடு அவர் இல்லம் சென்றேன். அங்கு பல இளைஞர்களைக் கண்டேன். அவர்கள் அனைவருமே ஊர்காவற்றுறை மேற்கு இளைஞர்கள் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அவர்கள் எனது திட்டத்திற்கு உடனே உதவிக்கரம் கொடுக்க தயாரானார்கள் அவர்களுடன் கூடி புனித இராயப்பர் தேவாலயத்தில் சிலுவைப்பாதைக்கு ஒழுங்கு செய்தோம். நாம் எதிர்பார்த்தது இருநூறு பேர் வரை ஆனால் அன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வருகைதந்திருந்தார்கள். அத்துடன் ஓட்டாவாவில் படித்துக்கொண்டு இருந்த அருட் தந்தை பொஸ்கோ அவர்கள் தாமாகவே முன்வந்து எங்களுடன் இணைந்து பெரிய வெள்ளிக்கிழமை சிலுவைப்பாதை நிகழ்வை திருப்பாடுகளின் நிகழ்வாகவே மாற்றியமைத்துக்கொண்டார்

அன்று ஆயிரக்கணக்கில் கத்தோலிக்க மக்களை நேரடியாகக் கண்ட நான் உடனே அறிவித்தல் செய்தேன் இன்று முதல் தமிழில் கத்தோலிக்க சமூகம் உருவாகவேண்டும் அத்துடன் தமிழில் திருப்பலி செய்ய நாம் வாரம், வாரம் ஒன்று கூடவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன் ஆகவே என்னுடன் இணைந்து செயல்பட பலா் முன்வந்தனர். உடனே உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைக்கும் தமிழில் திருப்பலி ஆயத்தம் செய்தோம் அது பேப்பில் அமைந்திருந்திருக்கும் புனித நாமம் தேவாலயத்தில் இரண்டாம் முறையாக கத்தோலிக்க தேவசமூகமாக திருப்பலியில் ஒன்று கூடினோம், ஆர்வத்துடனும் அதிகாரத்துடனும் நிமிர்ந்து கொண்டு அத்தருணத்தில் மேற்கூறியவைகளைச் செய்தேன் என்றால் புனித யாகப்பர் ஊர்காவற்றுறை மேற்குப் பங்கைச் சேர்ந்த தேவலாய சமூகம் என்னுடன் பக்கபலமாக இருந்து உதவி செய்தமையால்தான். 1988ல் ஆடி மாதம் மிட்லன் வேத சாட்சிகள் யாத்திரை தொடங்கவும் உறுதுணையாக இருந்தார்கள்.

சில வருடங்களின் பின்பு புனித யாகப்பர் திருவிழாவைக்கொண்டாட இவர்கள் எடுத்த தீர்மானத்தில் நான் அவர்களை டவுன்ரவுனில் அமைந்திருக்கும் எனது பங்காகிய புனித லூர்து மாதா தேவாலயத்தில் திருவிழாகொண்டாட அழைப்புவிடுத்தேன் அது முதல் அவர்கள் புனித லூர்து மாதா தேவாலயத்தில் ஒவ்வொரு வருடமும் கடந்த இருபத்தைந்து வருடங்களாக புனித யாகப்பர் திருவிழா கொண்டாடுகிறார்கள். அத்துடன் ஆரம்பத்தில் சில திருமணங்களும் அருட் தந்தை சால்ஸ் கொலின் அவர்களின் பத்து வருட நிறைவை இறைவனுக்கு நன்றி செலுத்த ஒப்புக்கொடுத்த திருப்பலியும் புனித லூர்து மாதா தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். கடந்த இருபத்தைந்து வருடங்களில் ஊர்காவற்றுறை மேற்கு மக்கள் வருடத்திற்கு ஒரு முறை வருகை தந்தாலும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் தேவையை நிறைவு செய்யக் காத்திருக்கிறேன். கடந்த மூன்றரை நூற்றாண்டு புனிதசந்தியோகுமையோரின் காலத்தின், கால் நூற்றாண்டு காலம் ஊர்காவற்றுறை மேற்கு மக்கள் ரொறொன்ரோவில் புனித லூர்து அன்னையின் ஆலயத்தில் ஒன்று கூடி இறைவனை வணங்கி தங்களின் வரலாற்றையும், விசுவாச வாழ்வையும், நம்பிக்கையின் இயல்பையும் தம்மவர்கள் மத்தியில் பகிர்ந்து தொடர்ந்து தேவ பிரசன்னத்தின் யாத்திரையில் பயணிக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியில் இறைவனுக்கு நன்றி கூறி இவர்களின் திருயாத்திரையில் நானும் இணைந்து வாழ்த்துக் கூறி இறை பாதம் பணிகின்றேன்.

மறைப்பணி தோமஸ் டேவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பர் ஆலய கனடா வாழ் மக்களின்
# கோடைகால ஒன்று கூடல்,
# அறிந்ததும்! தெரிந்ததும்!



எமது ஆலய மக்கள் வருடா, வருடம் புனித யாகப்பர் திருவிழாவை திருப்பலி நிறைவேற்றி கொண்டாடி வரும் அதேவேளை கோடைகால ஒன்று கூடலையும் நடத்தி வருகிறோம். ஆரம்ப காலத்தில் ஒன்று கூடல்கள் எனது கனடா வருகைக்கு முன் திருநாள் திருப்பலி முடிந்தபின், எல்லோருமாக ஒருவர் வீட்டில் கூடி சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டு திருநாளை மகிழ்வாக கொண்டாடினார்கள். நான் கனடா வந்தபின் எனது அறிவுக்கு எட்டியவரை திரு. ஜேம்ஸ் இல்லத்திலும், திரு. சேவியர் இல்லத்திலும் இப்படி கொண்டாடப்பட்டது. பின்பு சில ஆண்டுகள் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. சேவியர் அவர்களால் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. நாம் எல்லோரும் ஒரு பூங்காவில் (Park) ஒன்று கூடி சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளையும், மக்களை மகிழ்விக்கக் கூடிய நிகழ்ச்சிகளையும் நடத்த வேண்டும் என்பது எனது விருப்பம் என்பதை சபையில் தெரிவித்தார். அதை சபையும், நிர்வாகமும் ஏகமனதாக ஒப்புக்கொண்டு பூங்கா ஒன்று கூடலை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்

ஒன்று கூடுவதற்கான பூங்காவை தெரிவு செய்து, பதிவு செய்யும் வேலைகளை திரு. சேவியர் அவர்கள் ஆறு மாதங்களுக்கு முன்பாகவே பதிவு செய்து விடுவார். நேரகாலத்துக்குப் பதிவு செய்வதனால் நாம் நீண்ட தூரம் பிரயாணப்பட்டு சிரமப்படாமல் மிகக் குறுகிய நேரத்தில் பூங்காவை சென்றடையக் கூடியதாக உள்ளது, அது மட்டுமல்லாமல் பூங்கா ஒன்று கூடலை ஒழுங்கு செய்பவர்கள் அதற்கான முகவரியையும், வரை படத்தையும் நேரகாலத்துடன் தந்துதவுவதால் நாம் சிரமமின்றி பூங்கா ஒன்று கூடலில் இலகுவாகக் கலந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

பூங்காவில் நாம் ஒன்று கூடும் அன்றைய நாளில், நேரகாலத்துடன் திரு. சேவியர் திரு. எல்மோ அன்ரனி அவர்களின் தலைமையில் ஆண்கள் ஒன்று கூடி, கூடாரங்களை அமைத்து, இருக்கை வசதிகளை செய்து முன்கூட்டியே ஒழுங்கு செய்து வைப்பார்கள். இது ஒன்று கூடும் மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். காற்று, மழை, வெய்யில் முதலான பாதிப்புக்களுக்கு இவை மிகவும் பாதுகாப்பாக இருக்கும்.

சிறுவர்களை உற்சாகப்படுத்துவதும், ஒன்று கூட்டுவதுமே பிரதான நோக்கமாதலால், அவர்களுக்கான ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கும். குறிப்பாக விளையாட்டுப் பொருட்கள், குளிர்பானங்கள் உணவுவகைகள் என்பன இவற்றுள் அடங்கும். அவற்றோடு காலை உணவு, நண்பகல் சமையலுக்கான பொருட்கள், பிற்பகல் உணவுக்கான ஏற்பாடுகள், பரிசுப்பொருட்கள் பாவனைக்கு வேண்டிய தண்ணீர், சமையல் செய்வதற்கான அடுப்பு வசதிகள், முதலுதவிக்கான மருத்துவ வசதிகள் என்பவை நிர்வாகத்தினரால் திட்டமிடப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும்.

ஒன்று கூடல் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறியக் கொடுக்கப்பட்டிருக்கும் குறித்த நேரத்தில் மக்கள் ஒன்று கூடுவது தெரிந்த விடயம்தானே! மெது, மெதுவாக வரத் தொடங்குவார்கள். சிறுவர்களோடு வருபவர்கள் தங்களுக்குரிய விளையாட்டுப் பொருட்களையும் எடுத்து வருவார்கள், கைக் குழந்தைகளை உடையவர்கள் தாங்கு தொட்டிலில் குழந்தைகளைத் தாங்கி வருவார்கள், வளர்ந்த குழந்தைகளை உடையவர்கள் வண்டிலில் குழந்தைகளை எடுத்து வருவார்கள், வயதானவர்கள் மெதுவாக வருவார்கள், இளவயதினர் உற்சாகத்துடன் வருவார்கள், வரும்போதே கைகளை அசைத்து பலவித ஒலி எழுப்பி உற்சாகமான நல்ல வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே வருவார்கள். இவை பார்ப்பதற்கு இனிமையாகவும் கேட்பதற்கு இதமாகவும் இருக்கும்.

இந்த ஒன்று கூடலில் சிறுவர் விளையாட்டுப் போட்டிகள் முக்கிய பங்கை வகிக்கிறது. காரணம், குளிர்காலத்தில் வீட்டில் அடங்கிக் கிடக்கும் சிறுவர் நல்ல சந்தோஷமாகவும், உற்சாகத்தோடும் பூங்காவில் விளையாடுவார்கள். கூடி விளையாடுவது சிறுவர்களுக்கு மிகவும் விருப்பமானது, இதனால் பூங்காவில் தம் வயதை உடைய நண்பர்களைக் கண்டதும் பேரானந்தம் கொண்டு மகிழ்வுடன் விளையாடுவார்கள். அதே வேளை வாலிபப் பெண்கள் ஒரு கூட்டமாகவும், வாலிபப் பையன்கள் ஒரு கூட்டமாகவும், வளர்ந்த ஆண்கள், பெண்கள் கூட்டம், கூட்டமாகவும் சேர்ந்து கதைத்து மகிழ்வார்கள். இன்றைய உலகில் இவை சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் பயன்தரத்தக்கது.

சிறுவர்கள், பெரியவர்கள், குடும்பஸ்தர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சிளை, ஒழுங்கு படுத்துவதில் திரு. வில்பேட், திரு. பயஸ், இளவயது யுவதிகள் றொபின்ரா, தனுஷா. இவர்களுடன் இணைந்து இளையோர் ( Youth ) முன்னின்று செயல்படுவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புனித யாகப்பர் பெருவிழா கனடாவில் டவுண்ரவுனில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை தேவாலயத்தில் கொண்டாடத் தொடங்கி தொடர்ந்து 25 ஆண்டுகளாக அந்த ஆலயத்திலேயே கொண்டாடி வருகிறோம். அதற்கு அந்த ஆலயத்தில் அமைந்துள்ள தமிழ் நிர்வாகக் குழுவினர் எமக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து வருகிறார்கள். ஆலயத்தில் அமைந்துள்ள தமிழ் பாடகர் குழாம் திருவிழாத் திருப்பலியில் மிகவும் பக்தியுடன் பாடல்களைப் பாடி திருப்பலியைச் சிறப்பிக்கின்றார்கள். திருப்பலிக்கு முன்னதாக செபமாலை சொல்லப்பட்டு புனித யாகப்பர் மன்றாட்டுமாலை (பிராத்தனை) சொல்லப்படும். அதன் பின்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலி நிறைவில் புனித யாகப்பரின் அடைக்கலச் செபம் சொல்லப்படும். அடைக்கலச் செபம் சொல்லி முடிந்ததும், புனித யாகப்பர் திருச்சொரூபத்துக்கு தூபம் காட்டப்பட்டு திருச்சுரூப ஆசீர்வாதம் இடம்பெறும். முடிவில் தன்னார்வத் தொண்டர்களினால் சிற்றுண்டி குளிர்பானம் மக்களுக்கு வழங்கப்படும்.

திருவிழாவில் பயன்படுத்தப்படும் புனித யாகப்பர் திருச்சுரூபம் திரு.மரியநாயகம் அவர்களினால் இலங்கையில் இருந்து அனுப்பப்பட்டதாகும். திருவிழா திருப்பலி முடிவு பெற்றதும், திருச்சுரூபம் திரு. பிரான்சிஸ் அவர்கள் தமது இல்லத்துக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்து செபித்து வருவார். திருப்பலியில் காட்சிக்கு வைக்கப்படும். புனித யாகப்பரின் கொடி திரு.குலேந்திரன் அவர்களினால் அன்பளிப்பாகக் கொடுக்கப் பெற்றோம். திருச்சொரூபம் வைக்கப்படும் கூடு திரு. அலக்ஸ்மன் அவர்களினால் அன்பளிப்பாகத் தரப் பெற்றோம்.




கோடை கால ஒன்று கூடலில் மக்கள் ஒன்று கூடும் இடங்களில் கூடாரம் அமைக்கப்படும். மக்கள் வந்ததும் ஆரம்ப செபத்துடன் ஒன்று கூடல் ஆரம்பமாகும். முதலில் காலை உணவு வழங்கப்படும். அதன் பின்பு புனித யாகப்பர் உருவம் பதித்த கொடியும், கனடா தேசியக் கொடியும் ஏற்றப்படும். கொடிகள் ஏற்றப்பட்டதும், ஓ கனடா தேசியப் பாடல் பாடப்படும். பாடி முடிந்ததும் கூடிவந்துள்ள மக்கள் இரண்டு, அல்லது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சிறுவர்கள், பெரியவர்கள், தம்பதியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். அதே வேளையில் நண்பகல் உணவுச் சமையல் கூடிவந்தவர்களினால் சமைத்துக் கொண்டிருப்பார்கள். சமையல் முடிந்ததும், நண்பகல் விருந்து இடம்பெறும். விருந்துக்குப் பின் குளிர்பானம், பழங்கள், ஐஸ்கிறீம் என்பனவும் வழங்கப்படும். பிற்பகல் விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும், அதே வேளை கொத்து றொட்டி, “பாபிக்கி” தயாராகிக் கொண்டிருக்கும். அதிலும் மக்கள் மகிழ்ச்சியுடன் பங்கெடுப்பார்கள். முடிவில் இறுதிச் செபத்துடன் கொடிகள் இறக்கப்பட்ட பின்பு மகிழ்வுடன் இருப்பிடம் செல்வோம்.

வருடாந்த கிறிஸ்மஸ் ஒன்று கூடல் மண்டபம் வாடகைக்கு ஒழுங்கு செய்யப்பட்டு நமது சமுதாயத்தின் கலை கலாச்சார பண்பாடுகள் பேணிவளர்க்கப்பட்டு வருவது வரவேற்கத் தக்கதொன்றாகும். ஆரம்ப செபத்துடன் ஆரம்பமாகும் இவ்விழா, கிறிஸ்மஸ் கறோல் கீதங்களுடன் தொடரும். விழாவில் சிறுவர்கள், பெரியவர்கள் தனிப்பாடல்கள், கூட்டுப்பாடல்கள், நடனங்கள், நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள். இசைக் கருவிகள் மீட்டுதல் என்பன இடம் பெறும். சிறுவர்களுக்கு “இசை நாற்காலி”(மியூசிக் சியார்) போட்டி இடம்பெறும், நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர் வளர்ந்தவர்கள், தம்பதியர்கள் ஆகியோருக்கு விஷேட போட்டி நிகழ்வுகளையும் நடத்துவார். நிர்வாகக் குழுவின் ஆண்டறிக்கை, வரவு, செலவு, கையிருப்பு நிதி விபரம், தலைவர் உரை என்பன இடம்பெறும். கிறிஸ்மஸ் தாத்தாவின் நடனம், சிறுவர்களுக்கான இனிப்புப் பண்டங்கள், பரிசில்கள் வழங்குதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும். போட்டிகளில் பங்கெடுத்து வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். சிற்றுண்டி, இரா உணவு வழங்கப்பட்டு இறுதிச் செபத்துடன் விழா இனிதே நிறைவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1999ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரை எனது பணியில் சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன். எமது சமூகத்துக்கு மரியநாயகம் மாமா மிகப்பெரிய வரலாற்று ஆவணத்தை விட்டுச் சென்றிருக்கின்றார். புனித யாகப்பர் ஆலயத்தை யார் எப்போது கட்டத் தொடங்கினார்கள் என்ற வரலாறு யாருக்கும் தெரியாது. எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற வரலாற்று அடையாளத்தை பாரிய யுத்தம் முழுமையாக அழித்து விட்டது. ஆனாலும் மரியநாயகம் மாமா ஒரு புதிய வரலாற்றை மீண்டும் கட்டி எழுப்பினார். எமது சமூகத்துக்கு அவர் தந்த மிகப்பெரிய வரலாற்றுச் சின்னம் எமது புனித யாகப்பர் ஆலயம். இதைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. இந்தக் காலப்பகுதியில் சசீந்திரன் என்னோடு இணைந்தது எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. சில விடயங்களில் மிகவும் உறுதியாகச் செயல்பட்டார். சந்தாப்பணம் சேகரிப்பதில் மிகவும் அக்கறையோடும், உற்சாகத்தோடும், உறுதியுடனும் செயற்பட்டார். இவருடைய இந்த உழைப்புத்தான் மரியநாயகம் மாமா பணம் கேட்கும் போதெல்லாம் உடனடியாகப் பணத்தை அனுப்பக் கூடியதாக இருந்தது. அதன்பின் றஞ்சன் செயலாளராக எம்முடன் இணைந்து கொண்டார். இப்போது எமது நிர்வாகக் குழு திரு. ஜேம்ஸ், திரு.சசீந்திரன், திரு.றஞ்சன், திரு.பிரான்சிஸ், திரு.சுரேஸ் ஆகியோர் இணைந்த ஒரு பலமான நிர்வாகக் குழுவாகச் செயற்பட்டது. பல சவால்களுக்கு நாம் முகம் கொடுக்க நேர்ந்த போதும் இறுதிவரை மனம் தளராது உழைத்தோம். இதில் திரு.இராயசேகரத்துக்கும் முக்கிய பங்குண்டு. இவர் எமது சமூகத்தின் மீது அளப்பெரிய அக்கறை கொண்டவர். எமது சமூகத்தைப் பற்றி எவரும் குறைவாக எடைபோடவோ, அல்லது தரக்குறைவாகப் பேசுவதற்கோ இடம் அமைந்து விடாதபடி ஒவ்வொரு அசைவுகளையும் மிகவும் அவதானமாகப் பார்த்துச் செயல்பட்டார். இவரிடம் ஒரு பணியைக் கொடுத்து விட்டால் போதும் அந்தப் பணியை முடிக்கும் வரை உறங்க மாட்டார். இப்படிப்பட்டவர்கள் போட்ட அத்திவாரத்தினால்தான் இன்றும் எமது நிகழ்வுகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறுகின்றது. இளைய சமூகம் இதைத் தொடர வேண்டுமானால் ஒவ்வொரு குடும்பத்தவர்களும் என்று சொல்வதைவிட ஒவ்வொருவரும் தாய் மண்வாசனையுடன் எமது சமூகத்தை முன்னடத்திச் செல்ல முன்வரவேண்டும்.

நிர்வாகக்குழுவின் நான்கு படிமுறைகள்.

1993ஆம் ஆண்டு--------------------திரு. யோசப்.தலைவர்
திரு. தவறாயன்.செயலாளர்
திரு. சேகர். பொருளாளர்

1999ஆம் ஆண்டு--------------------திரு.யேம்ஸ். தலைவர் உப தலைவர் திரு. சேவியர்
திரு. சுறேஸ். திருமதி. மாலா. செயலாளர்
திரு. றஞ்சன். செயலாளர் ( தேவை கருதி தெரிவு செய்யப்பட்டார்)
திரு. சேகர், திரு. பிரான்சிஸ். பொருளாளர்
திரு. சசீந்திரன். பொருலாளர் (தேவைக்கருதி தெரிவுசெய்யப்பட்டார்)
திரு. றொய்சன் உப பொருளாளர்

2011ஆம் ஆண்டு--------------------திரு. நிமலன் சூட்டி. தலைவர்
திரு. டெல்மன் யோசப். உப தலைவர்
திரு. நிறஞ்சன் சேவியர். செயலாளர் குலேந்திரன் உப செயலாளர்
திரு. டிக்சன். பொருளாளர்

2015ஆம் ஆண்டு--------------------திரு. குலேந்திரன். தலைவர்
செல்வன். டிறோசன். உப தலைவர்
திருமதி. அனன்சியா. செயலாளர்
திருமதி. றொசிற்றா எல்மோ. உப செயலாளர்
திரு. டிக்சன். பொருளாளர்
திரு. சேவியர். பொருளாளர் (தேவைக்கருதி தெரிவுசெய்யப்பட்டார்)

திரு.யேம்ஸ் நவரெத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதைவும் பொலிவும் ஒரு பார்வை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித. யாகப்பர் ஆலயம் புனரமைக்கப்படும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கனடாவில் புதிய யாகப்பர் சொரூபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 

தூய கப்பலேந்திய மாதா ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கப்பலேந்திமாதா ஆலயம்



பொதுவாக சிந்தாத்திரை மாதா என்று அழைக்கப்படும் மேரி மாதா கடலோடிகளின் பாதுகாவலி என்று கத்தோலிக்க மக்களினால் வணங்கப்படுபவர். இந்தவகையில் சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயம் வேளாங்கன்னிமாதா ஆலயம், கடலலைகளால் பாதிக்கப்பட்டு கரைஒதுங்கிய மாலுமிகளால் கட்டப்பட்டவரலாறு உண்டு. சிந்தாத்திரைமாதாவை கப்பல் ஏந்தியமாதா என்றும் அழைக்கின்றார்கள் இந்தவகையில் ஊர்காவற்றுறை மேற்கு புனித. யாகப்பர் ஆலயத்துக்கருகில் அமைந்துள்ள புனித. கப்பலேந்தி மாதா தேவாலயம் தோன்றியதற்கான வரலாற்றுச் சான்றுகள் எதுவும் நம்மிடம் இல்லாதபோதும், இவ்வாலயம் 1940 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டதாகவும், இவ்வாலயத்தை திருமதி. வேலுசெல்லமுத்து, திரு. இராசா, திரு. சந்தியாப்பிள்ளை போன்றோரின் ஊக்குவிபபுடன் புனித.யாகப்பர் சமூகத்தவர்களும் சேர்ந்து சிறிதாக அமைக்கப்பட்டு காலப்போக்கில் பெரிதாகக் கட்டப்பட்டதாக அறிகிறோம். திரு. தியாகு ஈசாக்கு என்பவரால் சில திருத்த வேலைகள் செய்யப்பட்டு கடற்படையின் உதவியுடன் கடலில் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது, அந்த ஆண்டிலிருந்து எமது பங்கு வாலிபர்களுக்கு வெளிநாட்டுக் கப்பல்களில் வேலைவாய்ப்புக் கிட்டியது.

இவ்வாலயம் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளதால், முன்பொருகாலத்தில் பிரதானபோக்குவரத் துப் பாதையாக ஊர்காவற்றுறையிலிருந்து தீவுப்பகுதிகளுக்கு நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, போன்ற இடங்களுக்குப் பயணம் செய்பவர்களுக்குப் பாதுகாவலியாகவும், பருவகாலத்தில் மீன் பிடிக்கவரும் யாழ் கரையூர்,மயிலிட்டி, போன்ற ஊர்களில் உள்ளமீனவர்கள் மீன்பிடிப்படகுகளின் மூலம் இவ்வாலயத்தைக் கடந்துசெல்லும்போது, பயணத்துக்குப்பாதுகாப்பும், தொழில் விருத்தியும் வேண்டி வெடி கொழுத்தி அருள் வேண்டிச் செல்வதுவழக்கம்.

புனித. கப்பலேந்தி மாதா ஆலயத்திருவிழா ஆடி மாதம் 28ஆம் திகதி காலை கொடியேற்றி மாலை திருநாட் திருப்பலியும், அதைத்தொடர்ந்து மாதாவின் திருச்சொருபச் சுற்றுப்பிரகாரமும்,கடலில் அலங்காரம் செய்யப்பட்டபடகில் பவனியாகவும் எடுத்துவருவது மனதைத்தொடும் ஒரு நிகழ்ச்சியாகும்

போர்க்காலச் சூழலால் ஆலயம் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துகாணப்பட்டதால் ஆராதனைகள் இடைநிறுத்தப்பட்டு தற்போதுமீண்டும் புனரமைக்கப்பட்டு யாழ் ஆயர் அதி. வண.யஸ்ரின் B. ஞானப்பிரகாசம் அவர்களினால் ஆவணி 26ம் திகதி 2018ல் திருப்பொலிவு செய்யப்பட்டு வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் ஊர்காவற்றுறை மேற்கு புனித. யாகப்பர் பங்கு அனைத்து மக்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். காரணம் எம்மால் செப உதவியும், பண உதவியுமே செய்யமுடிந்தது. ஆனால் நமது ஊரிலும், கொழும்பிலும் குடியமர்ந்துள்ள நீங்களே புனித. யாகப்பர் ஆலயத்தையும், புனித. கப்பல் ஏந்தி மாதா ஆலயத்தையும் யாவரும் வியந்து பாராட்டும் வகையில் கட்டிமுடித்து, பராமரித்து, வழிபாடும் செய்துவருகின்றீர்கள். எனவே புலம் பெயர்ந்த மக்கள் சார்பில், கனடாவாழ் புனித. யாகப்பர் மக்கள் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.
N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து



காவலூர்என செல்லமாக அழைப்பார்கள்பரம்பரை கிறிஸ்தவர்கள் என்று சொல்வதில் பெருமையும் அடைவார்கள். நான்கு கத்தோலிக்க தேவாலயங்களைக் கொண்ட அழகான ஊர்காவற்றுறை. கடல்; கடற்கோட்டை, இந்து ஆலயங்கள், மகிழ்வான மக்களைக் கொண்ட அழகான இடம். கோடை காலம் June—Sep வறட்சியான காலம் என்றாலும், தண்ணீர் இல்லை என்று எப்போதும் குறை சொல்லாமல் வாழும் மக்கள்.

1970ஆம் ஆண்டுகளிலிருந்து 2017ஆம் ஆண்டு வரை,'இயேசு வளர,வளர ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.' லூக்கா (2:52).

எமது சமூக வாழ்வை திரும்பிப் பார்க்கும் போது மேலே கூறப்படும் இறை வார்த்தை மிகவும் பொருத்தமான ஒன்றாக அமைகின்றது. ( Kayts Town ) நான்கு ஆலயங்களால் அதன் அழகை மெருகூட்டுவது போல் அமைந்துள்ளது. மூன்று பாடசாலைகளை தன்னகத்தே கொண்டதாகவும் அமைந்துள்ளது. ஆதிக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த வாழ்வை ஓர் மாதிரியாகக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. மக்கள் அனைவரும் ஒன்றாக, குழுமமான வாழ்வை கொண்டதாக இப்புவியில் அமைந்ததாக காணப்படும் ஓர் செழிப்பான இடமாகவே காட்சி தரும். இங்கு செழிப்பென்று நான் கருதுவது, மக்கள் நெருக்கமான உறவுடன் வாழ்ந்தமையை "செழிப்பான" என்ற சொற்பதத்தால் அழைத்துள்ளேன்.

பொருளாதாரம் பொதுவாக எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவிற்கு அமைந்துள்ளது என்று சொன்னால் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள்.St. James west street centre of the Kayts. மிகவும் நெருக்கமான, இறை விசுவாச வாழ்வை வாழ்வின் நடுநாயகமாகவும், தமது குடும்பங்கள் அனைத்தும், ஆலயத்தை மையமாகக் கொண்டு வாழ்வை நடத்தி உயர்வைக் கண்ட இடமாகவும் St.James. விளங்குகிறது.

இறை நம்பிக்கையுடன், கல்வியும், நல்லொலுக்க வாழ்வை முக்கியமாகக் கொண்டுள்ளதைக் காண முடிகின்றது. காலை வாழ்வு தொடங்குவது ஐந்து மணிக்கு நான்கு ஆலய மணிகளுடன் ( Angr. திருந்தாதி என்று தமிழ் ) மிகவும் சுறுசுறுப்பாகவேஅனைவரும் செயற்படுவார்கள். பிள்ளைகளின் பராமரிப்பு பாடசாலைக்கு அனுப்பிவைத்தல் போன்றவற்றுள் பெற்றோர் ( தாய்மார் ) சுறுசுறுப்பாக இருப்பார்கள்.

1980 வரை அழகான, செழிப்பான வாழ்வையும், இன்ப, துயர (எல்லா) நிகழ்வுகளும் வழமை போல் எந்த நிகழ்வுகள் என்றாலும் St. James உறவுகள் ஒன்று சேர்வதில் அவர்களுக்கு அவர்களே சாட்சியாக இருக்கிறார்கள். சமூக வாழ்வின் வட்டத்தில் மனக்கசப்பு இருக்கத்தான் செய்யும். சில சமயம் குடும்பங்களில் ஏற்படும் கோபம், மனத்தாங்கல் இயல்பாகவே இருந்தது. ஆயினும் இன்ப, துன்ப நிகழ்வுகளில் மீண்டும் ஒன்று சேர்வது ஓர் முன்மாதிரியான ( செயல் அல்லது நிகழ்வு )வாழ்வைக் காணக்கூடியதாக இருந்தது.

இப்படியாக இந்த இன்பகரமான நம்மவரின் வாழ்க்கை ஓட்டத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ( தேடிவந்தது ) ஏற்பட்ட காலம். பெரும்பாலானோர் (கப்பல்) வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்று, படிப்படியாக ஒவ்வொரு குடும்பத்திலும் வெளிநாட்டிற்க்கு அல்லது கப்பல் வேலைவாய்ப்புப் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற காலம். படிப்படியாக பொருளாதார வளர்ச்சி காணக்கூடியதாக இருந்தது. இங்கு எல்லோருக்கும் நல்ல வசதியான கல்வீடுகள் அமைந்திருந்தமை (Very good houses) குறிப்பிடத்தக்கது.

1977ஆம் ஆண்டு இடம்பெற்ற மிகவும் கசப்பான நிகழ்வாகிய இனக்கலவரம் எமது நாட்டில் ஏற்பட்ட சமயம் வேலை காரணமாக ஏற்கனவே கொழும்பில் வாழ்ந்த எம் உறவுகள் பலர் Kayts க்கு வந்தார்கள். அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள், துன்பங்கள் .... அந்த நாட்கள் மீண்டும் எமது உறவுகளுக்கு உதவி செய்யவும், அவர்களுடன் பகிர்ந்து வாழ்ந்த ஓர் காலம் என்னால் மறக்க முடியவில்லை. மீண்டும் நாடு வழமைக்குத் திரும்பியதும் இயல்பு வாழ்க்கை தொடர்ந்தது.

1981, 1982, 1983...Kayts பல நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்தது. எமது மக்களின் வரலாறு காணா தமிழ், சிங்கள இனங்களுக்கிடையான போராட்டம். இக்காலங்களில் Kayts ல்இடம்பெற்ற சோகமான நிகழ்வுகள்...இளையோர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள. தொடர்ந்து நிம்மதி இழந்த வாழ்வு, பலர் வெளிநாடுகளுக்குச் செல்லவும்,Colombo நோக்கியும், இன்னும் சிலர் Jaffna நோக்கியும் சென்றார்கள். 1990 Aug மாத நடுப்பகுதியில் பாரிய இடப்பெயர்வு நிகழ்ந்தது. 1998ல் மீண்டும் Kayts பக்கம் மக்கள் திரும்பிப் போனார்கள். 2009க்குப் பின்பு நாடு நீண்ட வரலாறு காணா சோகமான, துயரமான இழப்புக்கள் நிறைந்த அனுபவங்களோடு...(இயல்பு) வாழ்வு தொடர்ந்தது.St.James. மக்கள்,Kayts Town மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை ஓர் இன்பமான அனுபவம்தான்.

எமது முதியோர் எப்போதும் பொது விடயங்களில் எல்லோருடனும் அன்பாக, உதவிசெய்பவர்களாக இருப்பதிலும், மற்றவர்களது உயர்விலும், முன்னேற்றத்திலும் மிகவும் அக்கறையாகவே இருந்தார்கள். விசுவாச வாழ்வு முக்கியமான ஓர் வாழ்வாகக் கருதினார்கள். இதனால் அனைத்துக் குடும்பங்களின் வாழ்வு விசுவாச வாழ்வையும், ஆலயத்தையே அத்திவாரமாகக் கொண்டு வாழ்ந்தார்கள் என்று சொன்னால் எப்போதும் பொருத்தமாக இருக்கும். பெரியோர்களது முன்மாதிரியான வாழ்வும், உறவினர்கள் அவர்களை எப்பொழுதும் மதிக்கும் தன்மையும் வார்த்தைகளால் வடிக்க முடியாத ஓர் உணர்வாகும்.

Small Kayts என்று சொல்லும் அளவிற்கு Canada நாட்டில் மக்கள் தமது வாழ்வைத் தொடங்கினார்கள் இங்கும் St. James என்று சொல்லும் அளவிற்கு நிறைந்த குடும்பங்கள். ஏனைய நாடுகளிலும் பார்க்க Canada வில் பெரும்பாலான Kayts மக்கள் குடியேறினார்கள். வளர்ந்து வரும் இளம் சமுதாயம், இங்கு பிறந்து வளரும் சிறுவர்கள் தொடர்ந்து இறையன்பிலும், பிறர் அன்பிலும், நல்லொழுக்கத்திலும், பெரியோரை மதித்தும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து செழிப்பான வாழ்வு வாழ இறையாசீருடன் சேர்ந்த வாழ்த்துக்கள்.

25 வருட நிறைவில் இறை அருளின் துணையும், புனித. யாகப்பரின் பரிந்துரையும் புனித. யாகப்பர் குழுமங்களுடன் கனடாவில் இணைந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் நான் குருவானவராகத் திருநிலைப்படுத்தப்பட்டு முதன்முதல் கனடா வந்தபோது கனடா வாழ் புனித. யாகப்பர் பங்கு மக்கள் பெருவரவேற்பு அளித்து மகிழ்வித்தனர். இதில் திரு. சேகர், மாலா அவர்கள் பெரும் பங்கு வகித்தனர். சுனாமியினால் பேரிடர் ஏற்பட்ட போது கனடா காவலூர் சமூகத்தினர் உடனடியாக பெருந் தொகைப் பணம் திரட்டி யாழ் ஆயருக்கு வழங்கும்படி எனக்கு அனுப்பி வைத்தார்கள். இந்நிகழ்வு யாழ் மேற்றிராசனத்தில் பெருமைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது. அத்துடன் புனித. யாகப்பர் ஆலயத் திருத்த வேலைகள் இடம் பெற்றபோது என்னையும் ஒருவராக இணைத்துக்கொண்டார்கள். குறிப்பாக இறுதி ஆலய திருத்த வேலைக்கான பெருந்தொகைப்பணம் எனக்கு அனுப்பப்பெற்று பங்குத் தந்தை இராசசிங்கம் அவர்களிடம கொடுக்கப்பெற்றது. தொடர்ந்து 25 வருடங்கள் காவலூர் சுவாசக்காற்றை கனடாவில் சுவாசிக்கச் செய்யும் காவலூர் என் உடன் பிறப்புக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.என்றும், எப்பொழுதும் எல்லாம் வல்ல தந்தையின் ஆசீரும், எம் பாதுகாவலாம் புனித. பெரிய யாகப்பரின் பரிந்துரையும் கிடைக்க மன்றாடி வாழ்த்துவதில் பெருமையும், நிறைவுமடைகின்றேன்.

அருட்பணி. சாள்ஸ் கொலின்.
ஆரோக்கிய மாதா தமிழ் பங்குத் தந்தை
டொறொண்டோ, ஒன்ராறியோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மூப்பர்!

ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலிக்கு வேண்டிய ஆயத்தங்கள், திருவிழாக் கொண்டா ட்டங்களுக்குத் தேவையான ஒழுங்குகள், பீட அலங்காரம், குருவானவருக்கு வழிபாட்டிற்கான ஆடைகளை முன்கூட்டியே ஆயத்த நிலையில் வைத்திருப்பது, செபமாலை, மன்றாட்டு மாலை, அடைக்கலச் செபம் சொல்வது, திருந்தாதி மணி அடிப்பது, திருவருட்ச் சாதனச் சடங்குகளுக்கு ஆயத்தம் செய்வது போன்ற விடயங்களுக்கு ஆலய மூப்பர், அல்லது சங்கிருஸ்தான் என்பவர் முக்கிய பங்கு வகிக்கின்றார். ஆரம்ப காலத்தில் இவரே திருமுழுக்கு, முதல்நன்மை, திருமணம் ஆகியவற்றுக்கு பாடங்கள் கற்பித்து ஆயத்தம் செய்வதால் இவரை உபதேசியார் என்றும் அழை ப்பார்கள்.

அந்தவகையில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் புனித யாகப்பர் ஆலயத்தின் மூப்பராயிருந்த திரு. சாந்தா குரூஸ், ஆலயப் பணியில் மிகுந்த அர்ப்பணத்தோடு சேவையாற்றிய வரென அன்றும், இன்றும் இவ்வாலய மூதாதையர்களாலும், வழித்தோன்றல்களாலும் நினைவு கூரப்பட்டு வருகின்றார். இவர் திரு. கிறிஸ்தோத்திரம் என்பவரின் தாயின் தமயனாராவார், திரு. சாந்தா குரூஸ் மூப்பனார் ஆலயத்தில் பணி புரிவதற்கு பரிசுத்த பாப்பரசரிடமிருந்து நற்சாட்சிப்பத்திரம் ஒன்று இவருக்கு வழங்கப்பட்டிருந்தது என்பது தெரியவருகிறது.

இவரைத் தொடர்ந்து 1975ஆம் ஆண்டுவரை புனித யாகப்பர் ஆலயத்தில் சங்கிருஸ்தாமாகவும் மூப்பராகவும் பணியாற்றி ஆலயத்துக்கு அருந்தொண்டாற்றிய திரு. பே. குருசுமுத்து அவர்கள் காவலூர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

இவர்களைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் திரு. தம்பிஜயா, திரு.ஜயாத்துரை ,திரு. கு. செபமாலை, திரு. ப. அந்தோனிசாமி, திரு. பவுலப்பர் என்பவர்கள் சேவையாற்றினார்கள் யுத்த அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து திரும்பவும் நமது ஊருக்கு வருகை தரத்தொடங்கியதும் திரு. அருமைநாயகம், திரு. ஆரோக்கியசாமி, அவர்களும் தொண்டாற்றினார்கள். தற்போது திரு. விஞ்சன் இலாசறஸ் இப்பணியை தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றார்.

N.K



காவலூர் மக்களின் நன்மதிப்பைப் பெற்று, புனித. யாகப்பர் ஆலயத்தில் சங்கிருஸ்தாமாகவும், மூப்பராகவும் பணியாற்றி ஆலயத்துக்கு அருந்தொண்டாற்றிய திரு. பே. குருசுமுத்து அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புக்குரிய பி.நீ. மரியநாயகம்.





கனடாவில் புனித யாகப்பர் பங்கின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் இந்த வேளையில், முக்கியமாக நினைவு கூரப்பட வேண்டிய ஒருவர் திரு. பி.நீ. மரியநாயகம் அவர்கள். கனடா கிளைக்கும் ஊர்காவற்றுறை பங்குக்கும் இணைக்கும் பாலமாக செயற்பட்டவர் இவரே என்றால் மிகையாகாது. கனடா மட்டுமல்லாது வெளிநாடுகளில் வாழும் அனைத்து காவலூர் புனித யாகப்பர் பங்கு மக்களுடனும் தொடர்பு கொண்டு உதவிகள் பெற்று புனித யாகப்பர் தேவாலயத்தைக் கட்டியெழுப்பிய பெருமை இவரையே சாரும்.

யாழ் மாவட்டத்திலிருந்து பன்னிரண்டு மைல்கள் தொலைவில் உள்ள ஊர்காவற்றுறை மேற்கைச் சேர்ந்த திரு. திருமதி. பிலிப்பையா மேரிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனாக 1926ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஐந்தாம் திகதி திரு. மரியநாயகம் பிறந்தார். இவருக்கு ஐந்து பெண் சகோதரிகள் உள்ளனர். சிறு வயதிலேயே இவர் கடவுள் பக்தி கொண்டவராகவும், ஆலய பணிகளில் ஈடுபாடு கொண்டவராகவும், பீடப்பணியாளராக பங்குபற்றுவதில் விருப்பமுடையவர் ஆகவும் காணப்பட்டார். தமது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பயின்றார். இவர் படித்துக் கொண்டிருக்கும் போதே இவரின் தகப்பனார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். அதனால் குடும்பச் சூழ்நிலை காரணமாக 1948ஆம் ஆண்டு காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சாதாரண தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்தார். இவரின் கடமை உணர்வையும், திறமையையும் அவதானித்த அப்போதய பிரித்தானிய அதிகாரிகள் இவரை தொழிற்சாலையின் அலுவலகத்தில் எழுதுவினைஞராக தரமுயர்த்தினார்கள். இவர் தனது விடா முயற்சியாலும், திறமையினாலும் படிப்படியாக முன்னேறி சிறாப்பராக பதவி உயர்வு பெற்றார். 1986 வரை அங்கு பணி புரிந்து ஓய்வு பெற்றார்.

இவர் சீமெந்துத் தொழிற்சாலையில் பணி செய்த காலத்திலேயே 1959ஆம் ஆண்டு றோஸ்மேரி என்பவரைத் திருமணம் செய்தார். இவருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளும் உள்ளனர். இவர் காங்கேசந்துறையில் பணி புரிந்த நாட்களில் ஆலயங்களுக்கு பல உதவிகள் செய்வதிலும், பொதுச் சேவைகள் செய்வதிலும் விருப்புடையவராகக் காணப்பட்டார். காங்கேசந்துறையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் இல்லாதபடியால் அங்குள்ள மக்கள் அயல் கிராமங்களான மயிலிட்டி, இளவாலை, ஊறணி போன்ற இடங்களுக்கு திருப்பலிகளுக்குச் சென்று வந்தார்கள். இதனால் இவர் காங்கேசந்துறையில் ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென்று சீமெந்துத் தொழிற்சாலை அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து, அவர்களிடமிருந்து ஆலயம் கட்டுவதற்கான இடம், அதற்கான பொருளாதாரச் செலவு என்பவற்றைப் பெற்றுக்கொண்டார். தேவாலயம் கட்டுவதற்கான அனுமதியை அன்றைய யாழ் ஆயர் மறைந்த அதி வணக்கத்துக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் பெற்று, ஆலயம் அமைத்தார். 1974ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினத்தன்று, தொழிலாளர்களின் பாதுகாவலனாம் புனித சூசையப்பர் தேவாலயம் அதி வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திரு. மரியநாயகம் அவர்கள் ஆலயத்தொண்டு செய்வதோடு நின்றுவிடாமல் பொதுச் சேவைகள் செய்வதிலும் ஆர்வம் காட்டினார். மயிலிட்டி காசநோயாளர் மருத்துவ நிலையத்திலும், தெல்லிப்பளை மனநோயாளர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் இவரது தன்னார்வத் தொண்டுச் சேவையால் ஆறுதலடைந்தனர். கிறிஸ்து பிறப்புக் காலங்களில் நோயாளர்களை மகிழ்விக்கும் நோக்கில் காங்கேசந்துறையிலிருந்து கிறிஸ்மஸ் கறோல் மூலம் பணம் சேர்த்து ஆடைகள், இனிப்புகள் கேக் என்பன வாங்கி நோயாளர்களுக்குக் கொடுத்தார். அதுமட்டுமல்லாது, இளவாலை கன்னியர்மட அருட்செல்விகளின் உதவியுடன் பாடசாலை மாணவிகளை நடனம், கிறிஸ்மஸ் பாடல்கள் என்பவற்றில் பயிற்றுவித்து, குருமார்கள், அருட்செல்வியர்கள் சகிதம் வைத்திய சாலைக்குச் சென்று நோயாளர்களை மகிழ்வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் எடுத்த பெருமுயற்சியால் 1982ஆம் ஆண்டு பங்குனி மாதம் காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலை வளாகத்தில் இயேசுவின் திருப்பாடுகள் காட்சிப்படுத்தப்பட்டது. உரும்பிராய் பங்குக் குருக்களின் உதவியுடன், உரும்பிராய் மக்களால் மிகவும் பிரம்மாண்டமான முறையில் இயேசுவின் திருப் பாடுகள் நடித்துக் காட்டப்பட்டது. இந்நிகழ்வை கண்டுகளிக்க பல ஊர்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

நமது ஊரிலும், சமுதாயத்திலும் மிகவும் பற்றுடையவராக இருந்ததினால், தனது பணி ஓய்வின் பின் தனது ஊரில் அமைந்துள்ள புனித யாகப்பர் ஆலயத்தை புனரமைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். போரினால் இடிந்து அழிந்து போன ஆலயத்தை குருமார்களுடன் இணைந்து கட்டியெழுப்புவதில் மும்மரமாகச் செயற்பட்டார். 1988இல் ஊர்காவற்றுறைப் பங்குக்குப் பொறுப்பாகவிருந்த குருவானவர் எஸ்.எவ் கிருபானந்தனுடன் சேர்ந்து முயற்சிகளை முன்னெடுத்தார். அதன் முதற்கட்டமாக கனடாவிலுள்ள புனித யாகப்பர் பங்கு மக்களுடன் தொடர்பு கொண்டு பண உதவி செய்யும்படி கேட்டார். அப்போது ஆலயத்தின் பங்கு மக்கள் பத்துப்பேரே கனடாவில் வசித்தனர். ஆரம்ப கட்ட புனரமைப்புக்காக அவர்களினால் ஐயாயிரம் கனேடிய டொலர்கள் அனுப்பி வைக்கப்பட்டது எமது ஊரின் வறட்சி நிலையை மனதிற்கொண்டு அவரின் திட்டப்படி ஆலய வளாகத்துக்கு நிலத்தடி தண்ணீர்த் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் மீண்டும் தொடர்ந்த போர் அனர்த்தங்களினால் மக்கள் ஊர்காவற்றுறை யிலிருந்து இடம் பெயர்ந்தனர். ஆலய கட்டுமானப் பணிகளும் ஸ்தம்பிதமடைந்தது. அதேவேளை இடம் பெயர்ந்து கொழும்பில் வசித்த புனித யாகப்பர் பங்கு மக்களை ஒன்று கூட்டி, புனித யாகப்பர் திருவிழாவை கொழும்பிலும் கொண்டாட முன்னின்றவர்களுள் இவரும் குறிப்பிடத்தக்கவர்.

போர் ஓய்ந்து சமாதானம் வந்த பின்பு இடம் பெயர்ந்து பல்வேறு ஊர்களில் வாழ்ந்த மக்களில் சிலர் திரும்பவும் ஊர் திரும்பினார்கள். திரு. மரியநாயகம் அவர்கள் கொழும்பிலேயே வசித்தார். ஆனாலும் அவர் தன் முயற்சியைக் கைவிடவில்லை. கொழும்பில் வசித்தாலும் வெளிநாடுகளில் வாழும் மக்களுடன் தொடர்பு கொண்டு புனித யாகப்பர் ஆலயத்துக்குத் தேவையான பொருட்களை வாங்குவதிலும், ஆலயத்தை புனரமைப்பதிலும் அக்கறை காட்டினார்.

2000மாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் பங்குத் தந்தையாக இருந்த வண. ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாருடன் இணைந்து ஆலயக் கூரை திருத்த வேலைகள் தொடங்கப்பட்டது. அதன் பின் பங்குத் தந்தையாக இருந்த வண.எக்ஸ்.டபிள்யு. ஜேம்ஸ், வண.சி.யீ. ஜெயக்குமார் இவர்களுடன் வண. சாள்ஸ் கொலின்ஸ் இவர்களுடன் இணைந்து புனித யாகப்பர் ஆலயத்தை புனரமைப்புச் செய்து பாதுகாப்பான வழிபாட்டிடமாக மாற்றினார்.

ஆலயத்தை மட்டுமல்லாமல் ஆலய வளாகத்துக்குள் அமைந்துள்ள சனசமூக நிலையத்தையும் புனரமைப்புச் செய்து அதற்குள் பாலர் பாடசாலை ஒன்றையும் நிறுவினார். அத்துடன் சிறுவர்களுக்கு காலை உணவு, குடிநீர் வசதி, கல்வி போன்ற வசதிகளையும் செய்து கொடுத்தார். பாலர் பாடசாலையில் கல்வி கற்ற சிறார்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடாத்தி பரிசில்கள் வழங்கி சிறார்களை ஊக்கப்படுத்தினார்.

இவரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி 2005ஆம் ஆண்டு அன்றைய புனித யாகப்பர் பங்கு கனடாக் கிளைத் தலைவர் திரு.ஜேம்ஸ் நவரெத்தினம் அவர்களால் ஆடி மாதம் 25ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய திருவிழா திருப்பலி நிறைவில் பொன்னாடை போர்த்தி, கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவ்வண்ணம் எம்மத்தியில் பெருமைக்குரிய மனிதராகவும்,போற்றத்தக்கவராகவும் வாழ்ந்த திரு. மரியநாயகம் அவர்கள் 2013ம் ஆண்டு பங்குனி மாதம் 22ஆம் திகதி இயற்கை எய்தினார்.

திரு. எல்மோ அன்ரனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.செபமாலை குருசுமுத்து

## (Superintendent of Police)

புனித. யாகப்பர் சமூகத்துக்கு பல வழிகளிலும் உதவியவர்களில் திரு. குருசுமுத்து செபமாலை அவர்களுக்கு ஒரு தனிஇடம் உண்டு. புனித. யாகப்பர் திருவிழா நாட்களில் வானவேடிக்கை காட்டுவதி லிருந்து ஆலயத்துக்கென மணிக்கோபுரம் கட்டிக் கொடுத்தது என அவர் பணிகள் பல வகையில் எமது சமூகத்துக்கு உதவியாக இருந்திருக்கிறது. இவர் கண்டியில் பணிபுரிந்த காலத்தில் கோயில் திருவிழாக் காலங்களில் பீட அலங்காரத்துக்கென இயற்கை மலர்களை கண்டியிலிருந்து அனுப்பி வைப்பார்.

காவல் பணியில் முத்திரை பதித்த திரு. குருசுமுத்து செபமாலை அவர்கள், Inspector of Police ஆகப் பணிபுரிந்தார். யாழ்ப்பாணம், மட்டகளப்பு, மன்னார், சுன்னாகம், கண்டி எனப் பல காவல் நிலைய ங்களில் பணிபுரிந்தார். இவர் கடைசியாகக் கண்டி காவல் தலைமை அலுவலகத்துக்குப் பொறுப்பாக இருந்தபோது 1970 களில் நடைபெற்ற சேகுவரா கலவரத்தின்போது கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிட்டு தலைமை அலுவலகத்தையும் அங்கு கடமையிலிருந்தவர்களையும் சேதமின்றி பாதுகாத்தார். இவரின் இந்த தீர செயற்பாட்டிற்காக, உதவி பொலிஸ் அத்தியட்சகராக இவர் பதவி உயர்த்தப்பட்டார். ஆனால் குடும்பத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கி வேலையை இராஜிநாமா செய்துவிட்டு ஊர்காவற்றுறைக்கே வந்துவிட்டார்.

இவர் கண்டியில் பணிபுரிந்த காலத்தில் அங்கு பொலிஸ் அத்தியட்சகராக பணியில் இருந்தவர் திரு. எம்.சண்முகம் அவர்கள். அவரின் கீழ் Inspector ஆக இருந்தவர் செபமாலை அவர்கள். கடமை நேரத்தில் இருவரும் சந்தித்துக் கொள்ளும்போது திரு. சண்முகத்தை Sir என்று அழைப்பார் திரு. செபமாலை. பதிலாக திரு. சண்முகமும் திரு. செபமாலை அவர்களை Sir என்றே அழைப்பார். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று திரு. சண்முகம் ஊர்காவற்றுறை காவல் நிலையப் பொறுப்பதிகாரி யாக இருந்தபோது திரு. செபமாலை குடும்பத்தை நன்கறிவார். அன்று ஏற்பட்ட பழக்கம் பல தசாப்தங்கள் கடந்தும் அவரின்மேல் மதிப்பை ஏற்படுத்தியது. இரண்டாவது காரணம் திரு. செபமாலை அவர்கள் தமது பணியில் நேர்மையும், கடமையுணர்வும் கொண்டவர்.எனவேதான் S.P. சண்முகம் அவர்கள் திரு. செபமாலை மேல் மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தார். நேர்மை, கடமையுணர்வு கொண்டு பணியா ற்றினால் உலகம் உன்னை வணங்கும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

1970 களின் பிற்பகுதியில் திரு. செபமாலை ஓய்வுபெற்று ஊர்காவற்றுறைக்கு வந்தபின்பு, யாழ்ப் பாண நகரில் Mercantile என்ற ஒரு நிறுவனத்தில் தலைமை முகாமையாளராக (**Director**) பணியாற்றினார். அங்கிருந்து அவர் பல பணியிடங்களுக்கும் நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பணியில் அமர்த்-தினார். அதன்மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளித்தார். அதோடு மட்டுமல்லாமல் புனித.யாகப்பர் ஆலய-த்தின் நிர்வாகக் குழுத் தலைவராகவும் இருந்து பல நன்மைகளைச் செய்தார்.

திரு.ஜேம்ஸ் நவரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவில்



என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறள் வளத்திற்கு ஏற்ப, வாழ்ந்த போதும், மறைந்த போதும் நினைவழியா உற வாக நம்மில் ஒன்றாகக் கலந்து நினைக்கவும், பேசவும் தக்கதாக வாழ்ந்துகாட்டிய அமரர் இரா ஜசேகரம் அவர்களை இத்தாள் நினைவு கூர்வது பொருத்தமானதேயாகும்

கனடாவில் புனித. யாகப்பர் சமூகமக்களாக ஒன்று கூடி 25 வருட நிறைவு விழாவைக் கொண்டாடும் இத்தருனத்தில் குறைந்தது ஒரு வருடம் வாழ்ந்திருந்தால் நம்மத்தியில் கெம்பீர மாக நடைபோட்டு நம்மை ஆற்றுப்படுத்தியிருப்பார் என்று நினைக்கத் தோன்றுகிறது. காரணம் நிச்சயமாக இன்றய சூழ்நிலையில் முக்கியமான ஏதோ ஒரு பகுதி வேலையைப் பொறுப்பெடுத்து வெற்றிகரமாகச் செய்து முடித்திருப்பார் திரு. சேகர் அவர்கள். பொறுப்பென்று எடுத்துவிட்டால் அதை இறுதிவரை செம்மையாகச் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர். எந்தச்சிறு குற்றமும் கண்டுகொள்ள முடியாத அளவிற்கு ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதில் திறமை படைத்தவர்.

எமது சமுதாய முன்னேற்றத்துக்காக அரும்பெரும்பாடுபட்டவர். கனடாவில் எமது நிர்வாகக் குழுவிற்கு வேண்டிய ஆலோசனைகளையும், செயல் திட்டங்களையும் தந்துதவியவர். விழிப்புணர்வுடன் சமுதாய வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படாது, இனம்கண்டு, களை அகற்றிச் செயல்பட்டவர். மனதில் சரி எனப்பட்டதை சற்றும் தயக்கமின்றி சொல்லிவைப்பார். குற்றமென்றோ, குறையென்றோ கண்டால் அது யாரானாலும் முகத்துக்கு முகம் பேசுவதில் தயங்க மாட்டார். இதனால் சில சந்தர்ப்பங்களில் இவரைத் தவறாக எடைபோட்டவர்களும் உண்டு. எத்தனை வருடங்கள் சென்றாலும் நடந்த சம்பவங்களை படம் போட்டுக் காட்டுவதுபோல் சொல்லிக் காட்டுவார். நிர்வாகக் குறிப்பில் தவறவிட்ட விடயங்களை சுட்டிக்காட்டுவார்.

புனித. யாகப்பர் திருவிழாவிற்கு முன்னின்று உழைத்தவர். திருவிழா முடிவில் சிற்றுண்டி வகைகளை தவறாது தமது செலவில் தந்துதவியவர். கோடைகால ஒன்று கூடலில் வயது வித்தியாசம் பாராது அன்போடு பழகுவார். விளையாட்டுக்களிலும் பங்கெடுப்பார். பகிடியான கதைகளைச் சொல்லி சிரிக்க வைப்பார். இளமைக்கால அனுபவங்களை அப்போதுதான் நடப்பதுபோல் விபரித்துச் சொல்லுவார்.

தோல்வியைக் கண்டு பின்வாங்க மாட்டார் இழப்புகளைக் கண்டு சோர்ந்து போகமாட்டார், வருத்த துன்பங்களுக்கு அஞ்சமாட்டார். பிற்பட்ட காலத்தில் சுகவீனமுற்ற போதும், காட்டிக்கொள்ளாமல் சமுதாயத்தில் இடம்பெறும் நன்மை, தீமைகளில் கலந்து சிறப்பிப்பார். மனைவியை ஆழமாக அன்பு செய்தவர். தனது ஒரே மகனை ஆன்மீக விடயங்களில் அக்கறையுடன் பங்கு பெறச் செய்தவர். இப்படிப்பட்ட ஒருவரை நாம் இழந்து நிற்பது எமது இதயத்துக்கு கனமாக இருந்தாலும் இன்னும் நம் மத்தியில் நம்மோடு இருப்பதுபோல் ஒரு உள்ளுணர்வு நம்மை அறியாமலே நமக்குள் பொதிந்துள்ளதை உணரக்கூடியதாக உள்ளது.

N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் நத்தார் விழா.



1993ஆம் ஆண்டு மார்கழி 26ஆம் திகதி No 1 Beiner Trail இல் அமைந்துள்ள திரு. திருமதி ஜேம்ஸ் நவரெத்தினம் அவர்களின் இல்லத்தில் கனடா புனித யாகப்பர் பங்கைச் சேர்ந்த சில குடும்பங்களும், இளைஞர்களும் இணைந்து முதன் முதலாக நத்தார் விழா கொண்டாடப்பட்டது. அதன் தொடர் பயணம் இன்று எமது பங்கின் 25 ஆவது வருட நிறைவைக் கொண்டாடுவதற்கான நிகழ்வாக அமைந்துள்ளமை மகிழ்வுக்குரிய விடயமாகும்.

கனடாவில் எமது யாகப்பர் பங்கு மக்களுள் அன்றைய காலகட்டத்தில் குடும்பங்களாக இருந்தவர்கள் ஒரு சிலரே. கூடுதலாக இளைஞர்களே வாழ்ந்து வந்தனர். எனவே முதலாவது நத்தார் விழா நத்தார் தாத்தாவின் வருகையும், சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குவதும், இராவுணவு பரிமாற்றத்துடனும் கொண்டா டப்பட்டது. ஆயினும் தொடர்ந்து வந்த நத்தார் விழாக்கள் கலை நிகழ்ச்சிகளுடனும், மகிழ்விக்கும் விளை யாட்டுக்களுடனும் படிப்படியாக வளர்ச்சி பெற்றது. திருமணமாகாத இளைஞர்கள் திருமணமாகி குடும் பஸ்தர்களாக மாறியதால் எம்மிடையே சிறுவர்கள் அதிகரித்தனர். எனவே எமது பிள்ளைகளின் மகிழ்ச்சி க்காகவும், பிள்ளைகளுக்கு அவர்களின் உறவுகள் தெரியவேண்டும் என்பதற்காகவும் ஒவ்வொரு வருட மும் நத்தார் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

கடந்த 25 வருடகாலத்தில் பல்வேறு இடங்களில் நத்தார் விழாவை நாம் கொண்டாடியுள்ளோம். ஆரம்பத்தில் St.Bonifasc, St.Columba, St. Andrew , Port Union New Testament Church of God போன்ற ஆலய மண்டபங்களில் கொண்டாடி வந்தோம். அடுத்து வந்த வருடங்களில் Canadian Druzc Socity மண்டபம், Hop per Hut, Eastown, Erra, Newjasmine **Estate Banquet Hall** போன்ற விழா மண்டபங்களில் நடைபெறும் அளவிற்கு வளர்ச்சி பெற்றது. எமது நத்தார் விழா வருடம் தோறும் மார்கழி 26 திகதியே தொடர்ந்து கொண்டாட-ப்பட்டு வருகின்றது. தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒரு முறை மட்டுமே மார்கழி 26ஆம் திகதி கொண்டாட-படவில்லை.

ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள சிறுவர்கள் தமது வீடுகளில் தமது பெற்றோ ரால் பயிற்சி கொடுக்கப்பட்டோ அல்லது தாமாகவே முயற்சி செய்தோ, தனியாக அல்லது குடும்பத்தின் மற்றைய சகோதரர்களுடன் இணைந்தோ நடனம், பாட்டு, இசைக்கருவிகள் மீட்டு நிகழ்ச்சிகளை அலங்கரித்தனர். இவ்வாறாக கலை நிகழ்ச்சிகள் புதுப்பொலிவைப் பெற்றன. இப்படியாக படிப்படியாக வளர்ச்சி பெற்றுவரும் காலத்தில் 1999ஆம் ஆண்டு திருமதி சறோ நவரெத்தினம் அவர்களின் முயற்சியி னால் சிறுவர்களை ஒன்று சேர்த்து, தமது இல்லத்திற்கு வரவழைத்து செல்விகள் றொபின்ரா, தனுஷா அவர்களின் உதவியுடன் சிறுவர்களுக்கு குழு நடனங்கள், பாட்டுக்கள் என்பனவற்றை பயிற்சி கொடுத்து மேடையேற்றினார். அந்த ஆண்டு நடந்த நத்தார் விழாவின் நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து வந்த காலங்களில் நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் பிள்ளைகளை, நிகழ்ச்சிகளைப் பழக்குபவர்களின் வீடுகளுக்கு தன்னார்வத் தொண்டர்கள் அழைத்து வந்து நிகழ்ச்சிகள் பழகுவதற்கு உதவி செய்தார்கள் இப்படியாக ஒவ்வொரு வருடமும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் சிறுவர்கள் ஒன்று சேர்ந்து நடனங்கள், பாட்டுக்கள் பழகுவதில் மும்மரமாக ஈடுபடத் தொடங்கினார்கள். 2006ஆம் ஆண்டு திரு. சேவியர் ஆசீர்வாதம் அவர்களினால் சிறுவர்கள் அனைவரையும் இணைத்து பாலன் பிறப்பு பயிற்றுவிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. அந்நிகழ்வில் அனைத்து சிறுவர்களும் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. அந்தக் காலம் ஒரு பொற்காலமாகவே அமைந்தது.

வருடங்கள் உருண்டோட பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி கல்லூரிகள், பல்கலைக்கழகங் கள் என செல்லத் தொடங்கினர். வருட முடிவில் குறிப்பாக மார்கழி மாதத்தில் அவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறும் காலமாதலால் கலை நிகழ்ச்சிகள் சிறிது சிறிதாக குறையத் தொடங்கின. ஆனால் எப்படியாவது நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டுமென்ற ஆவலிலும், மக்களின் உந்துதலினாலும் எமது பங்கைச் சேர்ந்த பெண்கள் பலர் இணைந்து வில்லுப் பாட்டு, கிறிஸ்மஸ் கறோல் பாட்டுக்கள, நடனங்கள் என்பனவற்றை மேடையேற்றினர். ஒவ்வொரு வருடமும் எம்மால் இயன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டேயிருந்தன. அண்மைய வருடங்களில் திரும்பவும் நமது சமூகத்தில் சிறுவர்கள் கனிசமான அளவு காணப்படுவதினால் கலை நிகழ்ச்சிகள் களைகட்டத் தொடங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.

கலை நிகழ்ச்சிகள், களியாட்டங்கள் என்றில்லாமல் சிறு பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்தும் நோக் கில் பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும் நத்தார் தாத்தாவினால் நடனமாடி மகிழ்வித்து இனிப்புகள், பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதேவேளையில் ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழ கங்கள், கல்லூரிகளுக்கு புதிதாக இணையும் எமது சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளை உச்சாகப்படுத்தும் முகமாக அவர்களுக்கும் பரிசு அட்டைகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சிறுவர்கள் அவர்களின் வயது அடிப்படையில் பிரிக்கப்பட்டு இசை நாற்காலி, விளையாட்டுக்கள் வைக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகிறது. சிறுவர்களுக்கு மட்டுமல்லாது வாலிப ஆண்கள், பெண்கள், தம்பதியினருக்கும் விளையாட்டுக்கள் நடத்தப்பெற்று பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இந்நிகழச்சிகளில் எல்லாம் அனைவரும் உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் கலந்துகொள்வதற்கு அடையாளமாக மண்டபத்தில் கூடி உள்ள மக்கள் எழுப்பும் கரகோசமும், ஆரவாரமும் அடையாளமாகக் காணப்படுகின் றது. நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக அமைவதற்கு நிகழ்ச்சித் தொகுப்பாளருடைய கெம்பீரமான குரல் வளமும் கவர்ச்சியான சொற்பதமும் காரணமெனலாம்.

இப்படியாக இருபத்தைந்து வருடங்களாக தொடர்ந்து நடைபெறும் புனித யாகப்பர் பங்கின் நத்தார் விழாக்களால் குடும்பங்களிடையே ஒற்றுமையும், புரிந்துணர்வும் அதிகரித்தன. அதோடு மட்டுமல்லாமல் எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதுவும் கைகூடியது. தொண்ணூறுகளில் பிறந்த பிள்ளைகள் இன்றும் நண்பர்களாக இருப்பதோடு, தமக்கிடையே உள்ள உறவுகளையும் தெரிந்து கொண்டுள்ளனர். அதுமட்டுமல்லாது எமது பங்கின் கோடைகால ஒன்றுகூடலுக்கும், நத்தார் விழாவுக்கும் பணம் சேர்த்து இப்போதுள்ள சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் வைத்து பரிசில்களும் வழங்கி வருகின்றனர்.

நத்தார் விழாக்களே எமது பங்கு மக்கள் அனைவரும் ஒன்று கூடும் இடமாதலால், அந்நேரங்களி லேயே எமது ஊருக்கான தேவைக்காகவும், மற்றும் நம் தாய் நாட்டின் தேவைகளுக்காகவும் பணம் சேகரிக்கப்படுகின்றது. மக்களும் தாராள மனதுடன் தமது பங்களிப்பை அளித்து வருகின்றனர். இப்படியாக பல நன்மைகளையும், சந்தோஷங்களையும் பெற்றுத்தரும் பயனுள்ள விழாவாக புனித யாகப்பர் பங்கின் நத்தார் விழா கொண்டாடப்பட்டு வருவதால் இறைவனுடைய நாமம் மகிமைப்படுகின்றது.

திருமதி. றொசிற்றா எல்மோ அன்ரனி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2015 Christmas Party

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Christmas party 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




300 Years of Kayts St. James Church Celebration
in Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# 2017 Christmas Gathering

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகப் பணியாற்றிய திரு. றோகான் லீனஸ் அவர்கள் அகில இலங்கை கல்வித் சேவை அதிபர் தேர்வில் சித்தி பெற்று தற்போது சரவணை நாகேஸ்வரி வித்தியாலய அதிபராகப் பணியாற்றுகிறார். இவரது மனைவி திருமதி றஸ்மி லீனஸ் அவர்கள் மெலிஞ்சிமுனை றோ.க. பாடசாலை அதிபராக அண்மையில் நியமனம் பெற்றுள்ளார். புனித யாகப்பர் ஆலயப் பங்கிலிருந்து இன்னும் பல ஆசிரியர்கள் தோன்றிய போதிலும் ஒரு சிலரை மட்டுமே இங்கு குறிப்பிட முடிந்தது.

## ஊருக்குப் பெருமை சேர்த்த பெரியார்கள்.

அரசாங்க சேவையிலும் தனியார்துறையிலும் உயர் பதவி வகித்த பலர் தம்முடைய அரும்பணியினால் ஊருக்குப் பெருமை தேடித்தந்திருக்கிறனர்.



திரு.A.J. கிறிஸ்தோத்திரம் அவர்கள் விதானையார் பரம்பரையில் வந்தவர். இவருடைய தகப்பனார் விதானையராகக்(கிராம சேவகராக)கடமையாற்றியவர். தகப்பனாருடைய தொழிலை செய்ய விரும்பாததினால், ஆரம்பத்தில் கப்பலில் வணிகத்தொழிலில் ஈடுபட்டார், அதன்பின் சுயதொழில் (வியாபாரம்) சிறிது காலம் செய்தார், அதற்குப்பிற்பாடு கட்டிடக்கலை மேசன் தொழிலில் முழுமூச் சாகச் செயல்பட்டு கைதேர்ந்த மேசனாக விளங்கினார். இவருடைய காலத்தில் புனித. யாகப்பர் ஆலய முகப்பு வேலைப்பாடுகள் இறுதியாக மேற்கொள்ளப்பட்டபோது, இவர் அதில் முக்கிய பங்கு வகித்ததாகவும் சொல லப்படுகிறது. அத்துடன் வங்காலையிலும் ஒரு ஆலயம் இவருடைய தலைமையில் கட்டப்பட்ட தாகவும் அறிகிறோம். இறுதியாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் முப்பத்தியொரு ஆண்டுகள் கடமையாற்றினார். இவரது கடமையுணர்வைப் பாராட்டி நீதிமன்றால் ஆராய்ச்சி என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



பொலிஸ் அதிகாரியாக நீண்டகாலம் பணியாற்றிய திரு. குருசுமுத்து செபமாலை அவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் சமூக முன்னேற்றப் பணிகளில் மிக ஈடுபாட்டுடன் உழைத்துவந்தார். இவரது புதல்வர் மருத்துவர் திரு. சேவியர் மலையகத்தில் மருத்துவராக நீண்டகாலம் பணிபுரிந்தார்.



காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை காசாளராகப் பணியாற்றிய திரு.பி.என்.மரியநாயகம் அவர்கள் ஆற்றிய அளப்பரிய சமூகக் பணியினை எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது. போர்க்கால அனர்த்தங்ளினால் சேதமுற்ற ஆலயத்தைப் புதுப்பிப்பதற்கு இவரது அயராத உழைப்பு மிகவும் முக்கியத்துவம் பெற்றது. ஊர்காவற்றுறை பட்டின சபை உறுப்பினராகவும் பட்டின சபைத் தலைவராகவும் தேர்வாகிய திரு. ஐயாத்துரை அவர்கள் ஆலய வழிபாடுகளுக்குத் தேவையான ஆயத்தங்களை மிகச் சிறப்பாகச் செய்துவந்தார்.



ற்பிள்ளை நவரெத்த்
(Retd Tug.Master)

கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவில் சுதேச இழுவைக் கப்பல் அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. மனுவேற்பிள்ளை நவரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அமைதிக்கு சாட்சியாக விளங்கினார். இலங்கை பொலிஸ்படை கடற்படை சுங்கத் திணைக்களம் ஆகியவற்றில் காவலூர் புனித யாகப்பர் ஆலயப் பங்கு மக்கள் பலதரப்பட்ட பதவிகளை வகித்துவந்திருக்கிறார்கள்.



சுங்கத் திணைக்களத்தில் உயர்பதவி வகித்த திரு. பாக்கியநாதன் அவர்கள் A.P.O தரத்துக்குப் பதவியுயர்வு பெற்றார். குறிப்பாக சுங்கத் திணைக்களத்தில் பணியாற்றியவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தினூடாக வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்குப் பேருதவியாக இருந்திருக்கிறார். தற்காலத்தில் நம்மவர் எவரையும் கட்டுநாயக்காக விமான நிலையத்தில் காணமுடியாதிருப்பது வேதனைக்குரிய விடயமே. கடற்படையில் பணிபுரிந்த திரு. மரியாம்பிள்ளை அவர்கள் கள்ளக் கடத்தல்காரர்களை மடக்கிப் பிடிப்பதில் வல்லவராயிருந்தார்.



திருவாளர் கொலின் அவர்கள் இலங்கையின் பல்வேறு பாகங்களில் தபால் அதிபராகப் பணியாற்றிறியிருக்கிறார். சுங்க திணைக்களத்தில் கடமையாற்றிய திரு. ஈசாக் லூர்துசாமி அவர்கள் கடமையின் நிமித்தம் ஜீப் வண்டியில் யாழ்நகர் சென்று திரும்பிவரும்போது விபத்தில் சிக்குண்டு ஸ்தலத்திலேயே மரணமான சம்பவம் காவலூர் மக்களுக்குப் பேரதிர்ச்சியாக அமைந்தது. கொழும்பு லேக் கவுஸ் நிறுவனத்தில் பணியாற்றிய திரு. அல்வின் துரைசிங்கம் அவர்கள் பாரிய லொறியினால் மோதப்பட்டு அகால மரணமான சம்பவம் இன்னுமொரு அதிர்ச்சி தரும் நிகழ்வாகும்.

## விளையாட்டுத்துறைச் சாதனையாளர்கள்.



பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்கள் புனித யாகப்பர் ஆலயப் பங்கிலிருந்து தோன்றியிருக்கிறார்கள். சையிக்கிள் ஓட்டப் போட்டி என்றவுடன் ஞாபகத்தில் வருபவர் திரு. அருமை என்பவர். முன்னாள் கடற்படை வீரரான இவர் தீவுப்பகுதியில் நடைபெறும் சகல சையிக்கிள் ஓட்டப் போட்டிகளிலும் பங்குகொண்டு முதல் இடத்தைப் பெறுவது ஒரு கால கட்டத்தில் வழக்கமாகவிருந்தது. அவ்வாறே மரதன் ஓட்டப் போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுவந்தவர் திரு. பிரான்சிஸ் சிங்கராயர் அவர்கள். இவர் தனது நண்பர்களால் மைலர் பிரான்சிஸ் என்றழைப்பது வழக்கமாகும். குண்டெறிதல் தட்டெறிதல் போட்டிகளில் சாதனை படைத்தவர் திரு. அந்தோனிப்பர்னாந்து செபமாலைமுத்து அவர்கள் மாவட்ட தேசியமட்டப் போட்டிகள் பலவற்றில் பங்குகொண்டு பல விருதுகளைச் சுவீகரித்திருக்கிறார்.சிறந்த உதைபந்தாட்டப் போட்டி நடுவரான இவர் வடமாகாணத்தில் நடைபெற்ற பல உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு நடுவராகக்க கடமையாற்றியிருக்கிறார். யாழ் பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரியாகப்பணியாற்றிய அவர் போர்க்கால அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு இளவயதில் அகாலமரணமடைந்தமை தீவுப்பகுதி விளையாட்டுத்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். 1960களில் புனித அந்தோனியார் கல்லூரியால் பிரசுரிக்கப்பட்ட சிறப்பு மலரில் சிறந்த விளையாட்டு வீரராகவிருந்த திரு. சந்திரன் அந்தோனிப்பிள்ளை அவர்களின் கம்பீரத் தோற்றமிக்க புகைப்படம் இன்றும் எம்மனதைவிட்டகலவில்லை. இவர் இலங்கை சுங்க இலாகா பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றியவர். இவரது தந்தை திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள் பொலிஸ் படையைச் சேர்ந்தவர்என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள்



Rev. Fr.Saverimuthu Jebanesan
Called to Eternity



Rev. Fr. Charles Collins



Rev. Fr.Joseph Raj Claier O.M.I



Rev. Fr. Sathiaseelan Vimalasakaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரிகள்



Rev. Sr. Ludivian Christa Mariathas



Rev. Sr. Frigidia - CMS



Rev. Sr. Jeen Judesala Jude



Rev. Sr. Helen Mary Savirimuthu.
Called to Eternity



Rve. Sr. Mary Jacquline Aseervatham



Rev. Sr. M.Seraphine Fernando
Called to Eternity



Rev. Sr. Marie Stella Soosipillai



Rev. Sr. Nimalin Stanislaus



Rev. Sr. M.Valentine

**Rev. Sr. Dorothy Anthony**
**Called to Eternity**



Rev.Sr. Thecla Chrysostom
Called to Eternity

**Rev. Sr. Benickna Manuelthambi**
**Called to Eternity**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறை மேற்கு புனித. யாகப்பர் ஆலய சமூகத்தின் இரண்டாவது அருட்பணியாளர் சாள்ஸ் கொலின்ஸ்.



ஒரு சமுதாயத்தில் காணப்படும் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் அச்சமுதாயத்தில் வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தையும் அந்நீரோட்டத்தில் கலந்து பயனிக்க வழிவகுக்கின்றது. அந்த வகையில் புனித. யாகப்பர் பங்கு சமுதாயத்தில் 300 வருடங்களுக்கு மேலாக கத்தோலிக்க விசுவாசத்தில் ஆழமாக வேரூண்டிவளர்ந்து வரும் குடும்பங்களில் எந்தவித கட்டுப்பாடோ, கட்டாயமோ இல்லாமல் இயற்கையாகவே விசுவாச வாழ்வில் ஈர்க்கப்பட்டவர்களாக வாழ்ந்துவரும் சமுதாயமாக புனித. யாகப்பர் பங்கு சமுதாயமும் காணப்படுகிறது.

குடும்பங்களில் நாளாந்தம் கடைப்பிடிக்கப்படும் காலை, மாலைச் செபம், பாடசாலைகளில் இறை பற்றோடு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆலய வழிபாடுகளில் பங்குபெற அன்புடன் அணைக்கும் குருக்கள் இவையாவும் அச்சமுதாயத்தில் வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தையும் இறைவன்பால் ஈர்த்து சிறு வயதிலேயே தெய்வ பக்தியும், விசுவாசமும் கொண்டமனிதர்களாக வாழ வழி வகுக்கின்றது.

தன்னையே அறியாமல் ஆலயத்திற்குச் சென்று வந்த சாள்ஸ் அடிகளாரும் விளங்குகிறார். திருப்பலிக்கு உதவும் வாலிபர்கள் அணியும் ஆடையின் அழகால் கவரப்பட்டு, அவரும் திருப்பலிக்கு உதவும் காலம் வந்தபோது சிகப்பு நிற ஆடை அணிந்து முதல், முதல் உதவிய நிகழ்ச்சி பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மிகச்சிறிய வயதில், சிறு பையனாக சிகப்புநிற அங்கியில் கண்ணுற்ற இவரது உறவினர்கள் குறிப்பாக இவரது அப்பம்மாவின் சகோதரி திருப்பலி முடிந்ததும் அளவிலா ஆனந்தத்துடன் கட்டி அணைத்து முத்தமிட்டு நீ சுவாமியாக வரவேண்டும் அதுவே எங்கள் ஆசை என்று ஊண்றிய அந்த விதையே இன்று 25 வருடங்களைக்கடந்து பெரு விருட்சமாகக் காட்சி அளிக்கின்றது.

ஊர்காவற்றுறை மேற்கில் வசித்துவந்த பஸ்தியாம்பிள்ளை வில்லியம் கொலின்ஸ் அவர்கட்கும், உபகார றீற்றா அவர்கட்கும் 21-05-1963 ஆண்டு மகனாகப் பிறந்தார். குடும்பத்தில் எல்லாமாக ஏழு பிள்ளைகள், நான்கு ஆண்கள், மூன்று பெண்கள். அடிகளார் மூன்றாவது மகனாகப் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை தமிழ்க் கத்தோலிக்க புனித. அந்தோனியார் பாடசாலையில் பயின்றார். தொடர்ந்து வேலணை மத்திய மகா வித்தியாலயத்திலும், புனித. பற்றிக்ஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார். படிக்கும் காலத்தில் தகப்பனார் தபால் அதிபராக வேலணையில் கடமை ஆற்றியதால் வேலணையில் வசித்து வந்தார். அப்போது வண. வில்வரசிங்கம் (OMI) அவர்கள் சாட்டி மாதாஆலயம், சின்னமடுமாதா ஆலயம் ஆகியவற்றிற்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கச் செல்லும்போது சாள்ஸ் அடிகளாரை உதவுவதற்காக அழைத்துச் செல்வார். அந்த வேளையில் குருவானவர் படிப்படியாக ஊட்டிய விசுவாச வார்த்தைகள், ஏற்கனவே ஊண்றப்பட்ட வித்திற்கு உரமாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976ஆம் ஆண்டு குருத்துவப் படிப்பிற்காக புனித. மடுத்தினார் சிறிய குருமடத்தில் இணைந்தார். 1982 இல் புனித. சவேரியார் குருத்துவக் கல்லூரியில் (பெரிய குருமடத்தில்) தத்துவஇயல், இறையியல் முதலானவற்றில் தேர்ச்சிபெற்றார். இடைக்காலக் குருத்துவப் பயிற்சியை மிருசுவில் புனித. நீக்கிலாஸ் ஆலயத்திலும், சமகாலத்தில் ஆயர் இல்லத்திலும், நெடுந்தீவுப் பங்கிலும் பெற்றுக்கொண்டார்.

1990 ஆம் ஆண்டு ஆடி மாதம் முப்பத்தொராம் திகதி குருவானவராகத் திருநிலைப்படுத்த இருந்த வேளையில் முப்பதாம் திகதி இரவு யாழ் ஆசனக் கோயில் இலங்கை இராணுவத்தின் விமானக் குண்டுத்தாக்குதலால் சேதப்படுத்தப்பட்டது. ஆனாலும் இயன்றவரை கோயில் நிர்வாகம் ஆலயத்தை சீர்படுத்தி (1990-07-31) சாள்ஸ் அடிகளார் அவர்கள் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களினால் குருவானவராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

போர் அனர்த்தம் காரணமாக பாதுகாப்புக் கருதி ஊர்காவற்றுறை புனித. யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்க முடியவில்லை. புனித. மரியன்னை ஆலயத்தில் வண. கிருபானந்தன் அடிகளாரின் காலத்தில் முதல் திருப்பலியை வண. சாள்ஸ் அடிகளார் இறையருளோடு ஒப்புக்கொடுத்தார். மானிப்பாய் புனித. அந்தோனியார் ஆலயத்தில் முதல் உதவிப் பங்குத்தந்தையாக பொறுப்பேற்றார். தொடர்ந்து ஆனைக்கோட்டை, நாவாந்துறை, யாழ் பேராலயம் ஆகியவற்றில் உதவிப் பங்குத்தந்தையாகக் கடமையாற்றினார். ஆயர் இல்லத்தில் ஆயருக்குச் செயலாளராகவும் கடமையாற்றினார். பாசையூர் புனித. அந்தோனியார் ஆலயத்தில் (1997ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டுவரை) பங்குத்தந்தையாகக் கடமை ஆற்றினார். யாழ் மறைமாவட்ட இளையோர் அமைப்பின் இயக்குனராகவும் பணியாற்றினார்.

2005 ம் ஆண்டு தொடக்கம் 2009 வரை Newyork Fordham University USA. Education Religious EDUCATION கல்வித்துறையில் உயர்கல்வி முதுமானிப் பட்டம் பெற்றுள்ளார். இந்தியாவில் பெங்களுாரில் அமைந்துள்ள கிறிஸ்து ஜோதி கல்லூாயீல் இளைஞர்களுக்கான ஆன்மீக வழிநடத்துதல் அமைப்பில் பயின்று டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார்.

2009ம் ஆண்டு தொடக்கம் 2016 வரை யாழ் புனித மடுத்தினார் குரு மடத்தின் அதிபராகராகப் பணிபுரிந்தார். இங்கு பணிபுரியும் காலத்தில் யாழ் கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராகவும், கத்தோலிக்க பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

உலக இளைஞர் தினம் (World Youth Day 2002) கனடா நாட்டில இடம் பெற்றபொழுது முன்னாள் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வருகை தந்துள்ள வேளையில் யாழ்மறை மாவட்ட இளைஞர்களோடு வந்து பங்குபெற்றியிருந்தார்.

கடந்த இரு ஆண்டுகளாக ரொரன்ரோ உயர் மறைமாவட்டத்தில் (Bayview / Finch) சந்தியில் அமைந்துள்ள Blessed Trinity Parish உதவிப்பங்குத் தந்தையாக பணியாற்றிய அனுபவமும் இவருக்குண்டு. தற்போது ரொரன்டோ தமிழ் கத்தோலிக்க புனித ஆரோக்கிய அன்னைப்பங்கில் ரொறொண்டோ ஆயர் அதி வண. Vincent Nguyen அவர்களினால் பணி அமர்வுச் சடங்கு நிறைவேற்றப்பட்டு பங்குத் தந்தையாக பொறுப்பேற்றுள்ளார். இவரது பணி சிறக்க இறைவனிடம் வேண்டுகின்றோம்.

N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் திருக்குடும்பக் கன்னியர் சபை வட மாகாணத் தலைவி லூட்வின் கிறிஸ்ரா மரியதாஸ்.





கிறீஸ்தவ சமுதாயத்திற்கே சாட்சியம் பகரும் பல இடங்களில் ஒன்றாக எங்கள் ஊர்காவற்றுறைப் பங்கும் பழம்பெருங்காலந் தொடக்கம் இன்றுவரை இமயமென மிளிர்கின்றது. இதற்குச்சான்றாக எமது ஊரில் அமைந்துள்ள தேவாலயங்கள், கிறிஸ்தவ குடும்பங்கள், பக்திச் சபைகள், கிறிஸ்தவப் பாடசாலைகள் புனிதர்களின் பெயர்கொண்ட மக்களைத் தன்னகத்தேகொண்டு மிளிர்கின்றது.

எம் மூதாதையர் காலத்திலிருந்தே பல குருக்கள், துறவியர்கள் தோன்றியது நாம் அறிந்ததே. இந்த வரிசையில் அருட் சகோதரி லூட்வின் கிறிஸ்ரா மரியதாஸ் அவர்களும் ஒருவர். இவரது பெற்றோர் திரு. ஈசாக் மரியதாஸ், திருமதி. யேசு அன்னராணி மரியதாஸ் என்பவர்கள். இவருக்கு மூன்று சகோதரிகளும், ஒரு சகோதரனும் உண்டு. சகோதரி கிறிஸ்ரா அவர்கள் குடும்பத்தில் இரண்டாவதாக 1969ஆம் ஆண்டு பங்குனி மாதம் பதினைந்தாம் திகதி பிறந்தார்.

சிறு வயதிலிருந்தே பெற்றோர் சொற்படி நடக்கும் பண்பு, சகோதரர்களுடன் ஒற்றுமையாகப் பழகுதல், பெரியோரை மதித்தல், முதியோருக்கு உதவி செய்வது, சகமாணவரிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம், அடக்கமான, எளிமையான, நடை, உடைபாவனை, இறைபக்தி, இறையன்பு கொண்டவராகத் திகழ்ந்தார். முதல்நிலைக் கல்வியை செல்வி. இந்திரா நவரெத்தினம் அவர்களிடம் தொடங்கி, ஆண்டு ஒன்று தொடக்கம், ஆண்டு 10 வரை ( G. C. E. O/L ) ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயத்தில் பயின்றார். உயர்தரக் கல்வியை யாழ் திருக்குடும்பக் கன்னியர் பாடசாலையில் கற்றுத் தேர்ந்தார். கல்வி பயிலும் காலத்தில். படிக்கும் பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதோடு, விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினார். நாடகத்துறையிலும் திறம்பட நடித்து பலரது பாராட்டுதலையும் பெற்றார்.

ஊர்காவற்றுறை புனித மரியாள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் காலத்தில், அப்போது அதிபராகக் கடமையாற்றிய அருட்சகோதரி, கிளேயா அவர்களது தேவ அழைத்தலை உணர்த்தும் அறிவுறுத்தல்களால் தனது தேவ அழைத்தலை உணர்ந்து தன்னை அர்ப்பணிப்பதாக ஒரு கட்டுரையில் விபரித்திருந்தார் எங்கள் வீட்டில் கல்வி ஆசானாக இருந்த எங்கள் தாயார் இவருடைய கட்டுரையை திருத்தம் செய்தபோது இந்த உண்மையைத் தெரிந்துகொண்டார்.

பாடசாலைக்காலத்தில் பாப்பரசரின் பிரதிநிதி உரோமையிலிருந்து ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தைத் தரிசிப்பதற்கு வருகை தந்த பொழுது, வீதி அலங்காரத்துடன், மக்கள் வெள்ளம் குழுமியிருக்க, பாடசாலை மாணவர்கள் சீருடை அணிந்து கொடிகள் அசைத்து அணிவகுத்து நிற்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட பாப்பரசரின் பிரதிநிதி, சில மாணவர்களின் தலையில் கைவைத்து ஆசி வழங்கிச் சென்றார். அவர்களுள் இவரும் ஒருவர். இந்த விடயம் வீட்டில் தெரியவந்தபோது. எங்கள் அம்மம்மா "இறைவன் உம்மையும் தெரிந்தெடுத்திருக்கின்றார்" அன்று சொன்ன வார்த்தை பொய்யாகவில்லை இவர் தமது துறவறப் பயிற்சியை பாசையூரில் மேற்கொண்டார். இவரது முதல் அர்ப்பணம் 31-05-1992ம் ஆண்டில் இளவாலையில் இடம்பெற்றது. இறுதி அர்ப்பணம் 06-09-1999ல் கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள புனித மரியாள் ஆலயத்தில் இறையருளால் நிறைவுபெற்றது. தமது சேவைக் காலத்தில் தலவாக்கலையில் புனித பத்திரிசியார் கல்லூரியிலும், யாழ்ப்பாணத்தில் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இத்தனை பணிகளின் மத்தியில் தமக்குக் கொடுக்கப்பட்ட தவிசாளர் பொறுப்பையும் கன்னியத்துடன் கையாண்டு வந்தார். சிறிய வயதில் குறுகிய காலத்தில் இவரிடத்தில் காணப்பெற்ற இறை பக்தி, கடமையுணர்வு, கடுமையான உழைப்பு, இவற்றைக் கவனித்த நிர்வாகப் பொறுப்பாளர்கள், மற்றும் சக துறவறச் சகோதரிகள் இவரை "யாழ் திருக்குடும்பக் கன்னியர் சபை வட மாகாணத் தலைவி" யாகத் தேர்ந்தெடுத்தார்கள். மூன்று ஆண்டுகள் தமக்குத் தந்த (மாகாணத் தலைவி) பணியை இறை பக்தியோடும், பணிவோடும் திறமையுடன் பணியாற்றி நிறைவுபெற்ற வேளையில் இரண் டாவது தடவையாகவும் "யாழ் திருக்குடும்பக் கன்னியர் சபை வட மாகாணத் தலைவி" யாகத் தெரிந்தெடுக்கப்பட்டு கடமையாற்றுவது புனித யாகப்பர் பங்கு மக்களுக்கு மட்டுமன்றி, தீவகத்திற்கே பெருமைக்குரிய விடயமாகும்.

31-05-2017ல் தம்முடைய பணிவாழ்வின் 25 வருட நிறைவை மிக அமைதியாக, எளிமையாக. எந்தவித ஆடம்பரமுமின்றி நிறைவுசெய்தார். விழா எடுப்பதற்கு பெற்றார், சகோதரர்கள், உறவினர்கள், கனடா வாழ் நம் உறவுகள் விரும்பிய போதும் சகோதரி கிறிஸ்ரா விரும்பாததினால், அமைதியாக திருப்பலிப் பூசையில் 25 வருட வெள்ளிவிழா நிறைவுபெற்றது

திருமதி. அன்னராணி மரியதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பரின் வாழ்க்கை வரலாறு.



செபதேயி என்பவரின் மகனாகிய யாகப்பர் இறைகுமாரன் இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவர். இவரே முதலாவதாக வேதசாட்சியாக மரித்த அப்போஸ்தலர் என்று நம்பப்படுகிறது.

செபதேயி, சலோமை தம்பதியரின் மகனாகிய யாகப்பர், அப்போஸ்தலராகிய யோவானின் சகோதரனாவார். புனித யாகப்பரை இயேசுவின் சகோதரன் யாக்கோபிடம் இருந்தும், அல்பேயுவின் மகனாகிய யாக்கோபிடம் இருந்தும் வேறுபடுத்திக் காட்டுவதற்கே அவரை பெரிய யாகப்பர் என்று குறிப்பிடுவது வழக்கம்.

இவரது தந்தை செபதேயி இஸ்ரவேல் நாட்டில் கலிலேயாக் கடலில் மீன்பிடிப் புத் தொழிலில் ஈடுபட்டவராக செயற்பட்டு வந்தார். அவர் கலிலேயாவிற்கு அருகே பெத்சேயிடா என்னும் ஊரில் வாழ்ந்தார். அவரது மனைவி சலோமை.

புனித யாக்கோபு ஸ்பெயின் நாட்டவர்களின் பாதுகாவலராக ஏற்றுக் கொள்ளப் பட்டவராவார்.

றோமன் கத்தோலிக்க சபையில் மட்டுமன்றி அங்கிலிக்கன் சபை, லூத்தரன் சபை, சில பெந்தகோஸ்தே சபைகள் ஆகியவற்றிலும் ஆடி மாதம் 25ஆம் திகதி புனித யாக்கோபின் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஏரோது அகரிப்பா என்ற மன்னனின் ஆணைப்படி சிரச்சேதம் செய்யப்பட்ட புனித யாக்கோபின் தலை ஜெருசலேமில் உள்ள பெரிய யாக்கோபின் ஆலயத்தின் பலிப்பீடத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

கி.பி 44ல் கொலை செய்யப்பட்டு வேதசாட்சியாக மரித்த புனித யாக்கோபின் உடல் பாகம் அவரது உதவியாளர்களால் லைபீரியா நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சான்டியாகு டீ கொம்பஸ்ரெல்லா என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

S. R. Rajabalan B.Sc (Hons) (Ceylon)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலூரில் புனித யாகப்பர் ஆலயப் பங்கின் தொன்மையும் மேன்மையும்.





கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. ஊர்காவற்று றையில் கோவில்களுக்கு குறையேயில்லை. இங்குள்ள ஆலயங்களில் மிகவும் தொன் மையானது. மேற்கெல்லையில் அமைந்து ள்ள புனித யாகப்பர் ஆலயமாகும். இது முன்னூறு ஆண்டுகால வரலாற்றுப் பின்ன ணியைக் கொண்டது. புனித சந்தியோகுமை யோர் ஆலயப் பங்கு மக்கள் இறை பக்தியும், விடாமுயற்சியும், சமூக உணர்வும் கொண்டவர்கள். பல துறவியரையும், ஆசிரி யர்களையும், அரச உத்தியோகஸ்கர்களையும் கலைஞர்களையும், பொலிஸ் படை, கடற்படை, சுங்கத் திணைக்கள உத்தியோகத்தவர்களையும் உருவாக்கிய சமூகம் இது. பெருமைக்குரிய மேற்குப் பகுதி மக்களின் சுயநினைவுக் கெட்டிய வரலாற்றுச் சாதனைகளை ஆவணப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்ககமாகும்.

### புனித யாகப்பர் ஆலயக் குருக்களும் துறவிகளும்.



புனித யாகப்பர் ஆலயப் பங்கு பல சிறந்த குருக்களை உருவாக்கியிருக்கிறது. அருட்திரு சவிரிமுத்து கில்லறி ஜெபநேசன் அடிகளாரே இப்பங்கில் தோன்றிய முதல் குருவானவராவர். ஆசிரியப் பணியைத்துறந்து ஆன்மீகப் பணியைத் தேர்ந்துகொண்ட அருட்திரு கில்லறி ஜெபநேசன் அடிகளார் யாழ் மறைமாவட்டத்தில் பல பங்குத்தளங்களில் பணியாற்றி இறுதியாக யாழ் மரியன்னை பேராயலத்தில் பங்குத்தந்தையாக .பணியாற்றும்போது திடீர் நோய்வாய்ப்பட்டு இறைபதமடைந்தார். தற்போது கனடாவில் இறைபணியாற்றிவரும் அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் இறைவனால் காவலூருக்குக்கொடுக்கப்பட்ட இன்னுமொரு கொடையாகும். பல பங்குத் தளங்களில் பணியாற்றிய சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் அமெரிக்கப் பல்கலைக்கழகமொன் றில் உயர் கல்வி கற்றபின் யாழ் மரியன்னை பேராலயப் பங்குத் தந்தையாகவும், யாழ் மாட்டினார் குருமட அதிபராகவும், யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகப் பரிபாலகராகவும் பணியாற்றியிருக்கிறார். அருத்திரு.ஜோசவ் ராஜ் கிளேயர், அருட்திரு சத்தியசீலன் விமலசே கரன் ஆகிய இரண்டு இளம் குருக்களும் அண்மையில் இறை அழைத்தலைப்பெற்று மறைபணியாற்றிவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



முத்தான பத்து அருட்சகோதரிகரிகளும் யாகப்பராலயப் பங்கில் உருவாகியு ள்ளனர். இவர்களில் அருட்சகோதரி கெலன் மேரி சவரிமுத்து, அருட்சகோ தரி செறப்பீன் பெனாண்டோ, அருட்சகோதரி தெக்ளா கிறிஸ்சோஸ்ரம் ஆகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர் சிறந்த ஆன்மீகப் பணியாற்றியபின் இறைபதம் அடைந்துள்ளனர். அவர்கள் ஆன்ம இளைப்பாற்றி பெறுவார்களாக.

தொடர்ந்து சேவையாற்றிவருபவர்களுள் அருட்சகோதரி லுட்வின் கிறிஸ்ரா மரியதாஸ் அவர்கள் திருக்குடும்ப கன்னியர் சபை யாழ் மாகாணத் தலைவியாகப் பணிபுரிவது காவலூரு க்குக் கிடைத்த பெரும்பேறாகும். இளம் குருக்களும், அருட்கோதரிகளும் இப்பங்கிலிருந்து உருவாகிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி மேலும் பல இளைஞர்கள் ஆன்மீகப்பணியை நாடிவர ஆண்டவன் அருள்புரிவாராக!

ஆசிரியர்களும் அரச அதிகாரிகளும்.



புனித யாகப்பர் ஆலயப் பங்கிலிருந்து பல சிறந்த ஆசிரியர்கள் தோன்றியிருக்கிறார்கள். அமரர் திரு. தோமஸ் செல்லத்துரை அவர்கள் சிறந்த தமிழ் ஆசிரியராவார். ஊர்காவ்றறுறை றோ.க. பாடசாலை எழுவைதீவு றோ.க. பாடசாலை ஆகியவற்றில் தலைமை ஆசிரியரராகவும் பணியாற்றினார். சிறந்த மேடைப் பேச்சாளரான அவரது சொற்பொழிவினை சகல சமய நிகழ்சிகளிலும் ஒரு காலத்தில் கேட்க முடிந்தது. திரு. தேவசகாயம் பூராசா அவர்கள் சுருவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபராகப் பணிபுரிந்தார்.





வேலணை மத்திய மகா வித்தியாலய ஆசிரியராகப் பணியாற்றிய திரு. லீனஸ் கிறிஸ்தோஸ்ரம் அவர்களை அறியாதவர்கள் காவலூரில் எவருமில்லை. பலதுறை விற்பனரான இவர் சிறந்த புகைப்படப் பிடிப்பாளராவர். எத்தனை இடர் வந்தபோதும் ஊரைவிட்டு ஓடிவிடாது தொடர்ந்து ஊரிலேயே வசித்துவரும் ஊர்ப்பற்றாளர் இவர். புனித அந்தோனியார் கல்லூரி உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய திரு. அல்பேட் அவர்களும் தொடர்ந்து ஊரிலேயே வசித்து வருகிறார். ஊர்காற்றுறை பிரதேச சபை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர் போரினால் பாதிப்புற்ற நம்முறவுகளுக்குச் சிறந்த சேவையாற்றிவ ருகிறார்.



திரு. வில்பேட் அவர்கள் புனித. அந்தோனியார் கல்லூாயீல் விஞ்ஞான ஆய்வுகூடப் பொறுப்பாளராகக் கடமையாற்றி, பின்பு உடல் கல்வி ஆசிரியராகப் பொறுப்புபேற்றவர் இவருடைய காலத்தில் புனித. அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சிப் போட்டிகளில் சிறந்து மிளிர்ந்தது, தொடர்சியாக பல வருடங்கள் முதன்மை நிலையை தன்னகத்தே தக்கவைத்தது. பாடசாலையில் மட்டுமல்ல ஊர்காவற்றுறை சென்.யேம்ஸ் விளையாட்டுக் கழகத்திலும் உதைபந்தாட்ட பயிற்சியாளராக சிறந்து விளங்கினார். கனடாவுக்கு இடம்பெயர்ந்த பிற்பாடும் ஊர்காவற்றுறை கனடா சென். யேம்ஸ் கோடைகால ஒன்று கூடல் விளையாட்டுக்களுக்கு தலைமைதாங்கி செயல்படுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



புனித ஆந்தோனியார் கல்லுரியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. தவநேசம் கிறிஸ்தோஸ்ரம் அவர்கள் ஊர்காவற்றுறை றோ.க. பாடசாலை அதிபராகப் பதவியுர்வு பெற்றார். புனித அந்தோனியார் கல்லூரியில் கணித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்யேம்ஸ் உதைபந்தாட்டக் குழுவினர் 1980களில் தமக்கொப்பா ரும்மிக்காருமற்ற சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தனர். தொடர்ச்சியாகஏழு முறை தீவுப்பகுதி வெற்றிக்கேடய த்தை வென்று சாதனை படைத்தவர் கள் செற்றப் முறை கரப்பந்தாட்ட விளையாட்டினை தீவுப்பகுதிக்கு அறி முகம் செய்தவர்களும் இவர்களே தீவுப்பகுதியில் தொடர்ச்சியாகப் பல விருதுகளைவென்று வரும் சென். யேம்ஸ் உதைபந்தாட்டக் குழுவினர் தமது விளையாட்டுத் திறமையால் ஏனைய உதைபந்தாட்ட வீரர்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தனர். இவர்கள் இன்றும் தீவுப்பகுதியில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் பங்குகொண்டு சாதனை புரிந்துவருகின்றனர்.

சென் ஜேம்ஸ் சன சமுக நிலையம்.

புனித யாகப்பர் ஆலய இளைஞர் யுவதிகளை ஒன்றுதிரட்டி அவர்களை நல்வழிப்படுத்தி நற்பிரசைகளாக உருவாக்குவதில் சென். ஜேம்ஸ் **சனசமூக** நிலையம் முக்கிய பங்குவகிக்கிறது இப்பங்கு இளைஞர்கள் விளையாட்டுப் போட்களில் சாதனை படைப்பதற்கு ஆதாரமாக இருப்பதும் இதுவேயாகும். இளைஞர்களின் அயராத உழைப்பினால் உருவாகிய இந்த சனசமூகத்தினை ஆரம்பிப்பதற்குப் பலர் அயராது உழைத்திருக்கிறர்கள். திரு. எஸ். சாந்துமுத்து லூாசியன் திரு. அந்தோனிசாமி திரு. சிங்கராயர் பிலுப்புபிள்ளை திரு. அந்தோனிஜயா ஆகியோரின் பங்களிப்பு மிக முக்கியமாக இருந்தது. வருடாவருடம் ஆண்டு விழாக்களையும் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி இளைஞர்களை ஊக்கப்படுத்தினர். பாலர் பாடசாலையை மிகவும் திறம்பட நடத்தி சிறுவர்களை கல்வியில் நாட்டம்கொள்ளச் செய்தனர்.

அம்பலப்புலமும் புனித யாகப்பர் ஆலயமும்.

காவலூர்க் கவிஞர் திரு. ஞா.ம.செல்வராசா 1953ம் ஆண்டு எழுதிய காவலூாரின் பெருமையுள்ள பழங்குடி மக்கள் என்ற கட்டுரையில் பின்வரும் தகவல்களைக் குறிப்பிட்டிரு க்கிறார். 1600 ம் ஆண்டில் கத்தோலிக்க சமயம் ஊர்காவற்றுறையில் பரப்பப்படுவதற்கு முன் இங்கு வாழ்ந்த பூர்வீகக் குடிமக்கள் அனைவரும் சைவ சமயத்தவர்களாகவே இருந்தனர். காலகதியில் கத்தோலிக்க மதம் கண்ணாடிச் சுவாமியார் என அழைக்கப்பட்ட பேதுறு தே பெற்றங்கோர் அடிகளாரால் இங்கு பரப்பப்பட்ட போதிலும் ஊர்காவற்றுறை மக்களில் பிரமுகர்களாக விளங்கிய சிலர் சைவ சமயத்தைக் கைவிடாது சமய வைராக்கியராக இருந்தனர் அவர்களில் முதன்மைவாய்ந்தவர்கள் ஆண்டி அம்பலரும் ஐயப்பனாருமாவர். தற்போது அம்பலப்புலம் என அழைக்கப்படும் பகுதி முழுவதும் அக்காலத்தில் ஆண்டி அம்பலருக்கே சொந்தமாக இருந்தது. அதனாலேயே அம்பலர் புலம் என்றழைக்கப்பட்ட இந்த இடம் காலப்போக்கில் அம்பலப்புலமாக மாறியதெனலாம். ஐயப்பனாருக்கும் ஏராளமான காணிகள் இருந்தன. ஐயப்பன் தோட்டம் என்றழைக்கப்படும் காணி இன்றும் காணப்படுகின்றது. ஆண்டி அம்பலரின் மகன் பேதுறுதே பெற்றக்கோன் எனும் கத்தோலிக்க குருவானவரால் ஞானஸ்ஞானம் பெற்று மத்தேசு எனும் பெயர் பூண்டு மேற்குப் பகுதி பெண் ஒருவரைத் திருமணம் செய்தார். இதுவே அம்பலப்புலத்துக்கும் மேற்குப் பகுதி மக்களுக்கும் **இடையில்** ஏற்பட்ட முதல் சம்பந்தமாகும். மத்தேசு பெயரால் வெட்டப்பட்ட நீரோடை ஒன்று இன்றைக்கும் மத்தேசு வாய்க்கால் என்று அழைக்கப்பட்டு வருகிறது. வருடாவரும் நடைபெறும் கிறிஸ்மஸ் பண்டிகையின்போது சென் ஜேம்ஸ் கரோல் பாடகர் குழுவினர் அம்பலப்புலத்து மக்களைத் தரிசித்து மகிழவிப்பது இன்றும் வழக்கமாகவிருக்கிறது.



மனுவேல்தம்பி லீனஸ்

அம்பலப்புலம் என்றவுடன் எமது ஞாபகத்தில் வருபவர் திரு.மனுவேல்தம்பி லீனஸ் அவர்கள். இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் உயர் பதவிவகித்த இவர் தனது ஆங்கில எழுத்தாற்றலாலும் பேச்சாற்றலாலும் காவலூார் மக்களுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பணியாற்றியவர். இவரது அயராத உழைப்பினாலேயே ஊர்காவற்றுறை Y.M.C.A. கழகம் உருவாகியது. போர்க் காலகட்டத்தில் திரு. எம்.லீனஸ் அவர்களின் தலைமையில் Y.M.C.A. ஆற்றிய அளப்பரிய பணியை யாவரும் அறிவர். காவலூர் Y.M.C.A. கூடைப்பந்தாட்ட அணி யாழ் மாவட்டத்தில் பல சாதனைகள் புரிந்து நமது ஊருக்குப் பெருமை தேடித் தந்திருக்கிறது.

ஊர்காவற்றுறை மேற்கில் 1970கள் வரை பொம்மலாட்டக் கலையின் அடிப்படையில் திருப்பாடுகளின் காட்சியை "பாசு" என்ற கலைவடிவில் மேடையேற்றுவதிலும் பொம்மைகளை உருவாக்குவதிலும் கைதேர்ந்தவராக விளங்கியவர் திரு. மரியான்தம்பி மேஸ்திரியார். அம்பலப்புலத்தைச் சேர்ந்த திரு.செபஸ்தியாம்பிள்ளை என்பவரும் அவருடன் இணைந்து இத்துறையில் பிரபல்யம் பெற்றிருந்தார். இம்மேடை நிகழ்ச்சிகளை மிகவும் கவனமாக அவதானித்துவந்த திரு. அருமைநாயகம் திரு. இருதயதாசன் திரு. பூபால் ஆகியோர் "பாசு" கலைவடிவின் நுட்பங்களைத் தெளிவாக அறிந்துகொண்டனர். புனித அந்தோனியார் ஆலய முன்றலில் 1980 களில் இறுதியாக நடைபெற்ற "பாசு" நிகழ்ச்சியை திரு. அருமைநாயகம் அவர்கள் சிறப்பாக நெறிப்படுத்தினார் என்பது குறிப்பிடதக்கது. பாரம்பரியமிக்க இந்தக் கலைவடிவத்தினை அழியாது பாதுகாப்பது நமது கடமையாகும். காவலூர் பாடகர் குழுவுக்கும், ஏனைய கத்தோலிக்க கலை நிகழ்ச்சிகளுக்கும் சிற்ப்பாக வயலின் வாத்தியம் வாசித்துவந்த திரு. சவிரிமுத்து லீயோ அவர்களின் கலைப்பணியை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

இடப்பெயர்வும் புலம்பெயர் உறவுகளும்.




கலகலப்பபாகக் காணப்பட்ட காவலூர்ர் போர்க்கால அனர்த்தங்களினால் பேரழிவினைச் சந்திக்க நேர்ந்தது. போரின் கொடூரத்தைத் தாங்கமுடியாத மக்கள் ஊரைவிட்டு வெளியேறி உள்ளூர்களிலும் வெளிநாடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். புனித யாகப்பர் ஆலயப் பங்கு மக்களில் பலர் கனடிய மண்ணில் அகதிகளாகத் தஞசம் புகுந்தனர், அவர்கள் தமது கடின உழைப்பபினால் கனடாவில் வளமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். கனடா வாழ் புனித யாகப்பர் ஆலயப் பங்கு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு சென். ஜேம்ஸ் நலன்புரிச் சங்கம் கனடா என்ற அமைப்பினை 1993ம் ஆண்டில் உருவாக்கினர். இச்சங்கத்தின் உருவாக்கத்துக்கு உறுதுணையாக இருந்த பலரில் திரு. எஸ். இராஜசேகரம் திரு. ஜோசவ் ஆகியேரின் பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரத்தக்கது. போரின் வடுக்களை அகற்றி புனித யாகப்பர் ஆலயமும் அதனைச் சார்ந்த சமூகமும் புதுப்பபொலிவுடன் காணப்படுவதற்கு மூலகாரணமாக இருப்பது சென் ஜேம்ஸ் நலன்புரிச் சங்கமே. சென் ஜேம்ஸ் நலன்புரிச் சங்க உறுப்பினர்களின் ஒற்றுமையும் பங்களிப்பபும் கனடாவில் இயங்கிவரும் ஏனைய சங்கங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று சொல்லுவது மிகையாகாது. வெள்ளி விழாக்காணும் கனடா சென் ஜேம்ஸ் நலன்புரிச் சங்கம் மேலும் சிறப்பாகச் செயற்பட்டு தொடர்ந்தும் ஊருக்கு நற்பணிபுரிய ஆண்டவன் அருள்புரிய வேண்டுமென்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயப் பங்கு மக்கள் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்ரன் றெக்சி இளைப்பாறிய ஆசிரியர்

புனித அந்தோனியார் கல்லூரி

ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KAYTS MECHANICAL LTD

Custom HVAC/R Solutions

**REFRIGERATION, AIR CONDITIONING,
HEATING, ELECTRICAL
COMMERCIAL, INDUSTRIAL, RESIDENTIAL**

**3809 Sheppard Ave. E.,
R.P.O. BOX – 46535
Scarborough, Ontario
M1T 3J0
Kayts-technology.com**

**Antonistan Raymond**

**Tel: (416) 254-3965
(905) 764-1906
(416) 374-9124
Toll Free: 1-800-242-5219
Email:Kaytsmechanical@msn.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Congratulations and best wishes to the parishioners of
St. James Church West, Kayts, Canada branch
on your milestone Anniversary.

**Jude Anthonypillai Professional Corporation**

CRIMINAL LAW | REAL ESTATE | IMMIGRATION LAW | WILLS AND ESTATES
CORPORATE & COMMERCIAL | LANDLORD AND TENANT | FAMILY LAW & DIVORCE



**Jude Anthonypillai LL.B (Canada)**
Barrister, Solicitor & Notary Public
Former Assistant Crown Attorney - Toronto
Tel : 416-332-8547
Fax: 416-332-8379
info@judelaw.ca www.judelaw.ca
1200 Markham Road, Suit #305, Toronto, Ontario M1H 3C3

JUDE ANTHONYPILLAI PROFESSIONAL CORPORATION




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ஜேம்ஸ் சன சமூக நிலையம்
# ஊர்காவற்றுறை.

ஒரு பிரதேசத்தில் காணப்படும் பல்வேறுபட்ட அமைப்புகளில் தலை சிறந்து விளங்குவது சன சமூக நிலையமாகும். சன சமூக நிலையம் சிறுவர்களுக்கு மட்டுமல்ல, வளர்ந்தவர்களுக்கும், வயதானவர்களுக்கும் பயன்தரும் ஒன்றாகும். அதுமட்டுமல்ல ஆண்களுக்கும், பெண்களுக்கும் பயன்தரும் ஒன்றாக விளங்குகிறது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிப்படிகளுக்கு சன சமூக நிலையம் முக்கிய பங்காற்றுகிறது. ஒரு நாட்டின் முதுகெலும்பு என்று கணிக்கப்படும் வாலிபர்கள் கூடுதலாகப் பங்கேற்று ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஒன்று கூடும் இடமாக சன சமூக நிலையம் விளங்குகிறது.

வாடி வீட்டுக்கு முன்பாக அமைந்திருந்த தங்கமாணிக்கம் அம்மையாரின் கல் வீட்டில் முன்பாக இருந்த விறாந்தையில் ஒரு பகுதியை அடைத்து 1948ஆம் ஆண்டு புனித ஜேம்ஸ் சன சமூக நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதாக வாய் மொழி மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. சன சமூக நிலையத்தை யார் ஆரம்பித்து வைத்தார் என்பது உறுதியாக அறியமுடியாதிருக்கிறது. ஆயினும் திரு. சவிரிமுத்து பொன்னையா என்பவர் முன்னின்று செயற்பட்டு வந்தார் என்று அறியக்கூடியதாக இருக்கிறது. இவர் ஊர்காவற்றுறை சுங்க இலாகாவில் தொழில் புரிந்தவர். அன்றைய காலத்தில் ஊர்காவற்றுறையில் வெளியிடப்பட்ட "தீவக யோதி" என்ற மாதம் ஒரு முறை வெளியாகிய புதினப் பத்திரிகை புனித ஜேம்ஸ் சன சமூக நிலையத்தில் வாசித்துப் பயன்பெற வைக்கப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கிறது. பொன்னியின் செல்வன், கல்கி, குமுதம் போன்ற நூல்களும் பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டதாக திரு.றேமன் இராசபாலன் அவர்கள் உறுதிபட எடுத்தியம்புகிறார்.

பின்பு சன சமூக நிலையம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த திரு.ஜே.என். பொன்னையா அவர்களுடைய காணியில் கொட்டில் அமைத்து செயற்பட்டு வந்ததாகவும், காலையில் சிறுவர்களுக்கு மாப்பால் கரைத்துக் கொடுக்கப்பட்டதாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது.

1949ஆம் ஆண்டு சன சமூக நிலையம் அரசாங்கப் பதிவில் பதியப்பட்டதாகவும், புனித யாகப்பர் பங்குப் பணி மனையில் இயங்கிவந்த "விக்ரோறியா" விளையாட்டுக் கழகம் சன சமூக நிலையத்துடன் இணைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

புனித ஜேம்ஸ் பங்கு இளைஞர்களின் காலத்தின் தேவையை உணர்ந்து யாழ் மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் அனுசரனையுடன் பங்குத் தந்தையாக இருந்த வண. பிலிப் பொன்னையா அவர்கள் 1950ஆம் ஆண்டு ஆலய வளாகத்தில் சன சமூக நிலையத்தை அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டதனால் முதலில் ஓலைக் குடிலாக புனித ஜேம்ஸ் சன சமூக நிலையம் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டது. பங்குத் தந்தை வண. வி.ஆர். தார்சியஸ் காலத்தில் கட்டிடமாகக் கட்டப்பட்டது.

சன சமூக நிலையம் இளைஞர்களின் அயராத பெரு முயற்சியினால் படிப்படியாகவே கட்டப்பட்டு வளர்ச்சி அடைந்தது. அந்தக்காலத்தில் இந்தியாவிலிருந்து டிங்கிக் கப்பல் மூலம் கொண்டுவரப்பெற்ற மாடுகளை டிங்கிக் கப்பலில் இருந்து இறக்கி மாட்டுக்காலையில் சேர்ப்பதற்கு நூல்நிலைய இளைஞர்கள் கூலிக்கு வேலை செய்து அதன் மூலம் பெறப்பெற்ற பணத்தின் மூலமும், நிதி உதவிப் படக்காட்சி மூலம் சேகரித்த பணத்தின் மூலமும், பட்டின சபையில் வறட்சிக் காலத்தில் குடிநீர் வினியோகம் செய்வதற்கு ஒப்பந்தம் மூலம் உத்தரவு பெற்று நீர் வினியோகம் செய்து கிடைத்த பணத்தின் மூலமும், வருடாந்தம் நடைபெறும் "கறோல்" நிகழ்ச்சியினால் கிடைக்கும் பணத்தின் மூலமும், நிலைய இளைஞர்களின் தன்னலமற்ற சிரமதானத்தொண்டின் காரணத்தினாலும் புனித ஜேம்ஸ் சன சமூக நிலையம் அழகுறத் தோற்றம் அளிக்கிறது.

சன சமூக நிலையத்தின் செயற்பாடாக விளையாட்டுக் கழகம், நூலகம், கலை கலாச்சாரக்குழு, ஆலய நற்பணி மன்றம், சாரணர் இயக்கம் போன்றவை செயற்பட்டு வந்தன. தீவகத்தில் காணப்பட்ட சன சமூக நிலையங்களில் சாரணர்குழு அமைக்கப்பெற்று செயற்பட்ட ஒரே ஒரு சன சமூக நிலையம் என்றால் அது புனித ஜேம்ஸ் சன சமூக நிலையம்தான். இதை அறிமுகம் செய்தவர் திரு. மரியநாயகம் அவர்கள் என்று கருதப்படுகிறது.

சாரணர் குழுக்கள் ஆலய, சமூக அபிவிருத்திப்பணி போன்ற பணிகளில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தனர். யாழ் திருச்சபையின் யாத்திரை ஸ்தலமாகிய சாட்டி மாதா ஆலயம், சின்ன மடு மாதா ஆலயப் பெருவிழாக்களில் சென் ஜேம்ஸ் சாரணர் குழுக்களின் சேவை தலை சிறந்து விளங்கியது.

புனித ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் தீவகத்தில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்திலும் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது. தீவக உதை பந்தாட்ட சங்கத்தினால் சிறந்த ஒழுக்கமுள்ள விளையாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகமாக புனித ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதை விட ஏனைய பல விளையாட்டுக் கழகங்கள் நடாத்திய போட்டிகளிலும் பங்குபற்றி முதலாம், இரண்டாம் இடத்துக்கான கேடயங்கள் பல பெற்று அப்போட்டிகளில் கலந்துகொண்ட சிறந்த விளையாட்டுக் கழகம் என்பதற்கான ஒழுக்கத்துக்குரிய கேடயங்களையும் பெற்று, யாழ் மாவட்ட ரீதியில் நடைபெறும் போட்டிகளில்கூட சிறப்பாக செயற்பட்டதன் மூலம் யாழ் மாவட்ட ரீதியிலே பெயர் சொல்லக்கூடிய மிகச் சிறப்பான கழகமாக விளங்குகிறது.



விளையாட்டுக் கழகத்தில் நம்மவர்கள், உதைபந்தாட்டம், கரப்பந் தாட்டம் (செற்றப்) மெய்வல்லுனர் போட்டிகள், அலங்கார உடைப் போட்டிகள், என்பனவற்றில் சிறந்து விளங்கினார்கள். குறிப்பாக திரு. சந்திரன் அந்தோனிப்பிள்ளை, உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட நடுவர் திரு. செபமாலைமுத்து, றேஸ் அருமை, மைலர் பிரான்சிஸ் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கை சுதந்திரதின விளை யாட்டுப் போட்டிகளில் சயிக்கிள் ஓட்டம், நீச்சல் போட்டி, மரதன் ஓட்டம் என்பவற்றில் தொடர்ந்து சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் முதலிடத்தைப் பெற்று வந்தது பெருமைக்குரியது. திரு.செப மாலைமுத்து, தீவகம், யாழ்மாவட்டம், அகில இலங்கை தேசியமட் டம் வரையில் வெற்றி ஈட்டியது காவலூருக்கே பெருமையான தொன்றாகும். பரிவட்டம் எறிவதில் 2ஆம் இடத்தையும், குண்டு எறிதலில் 3ஆம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் இடம் பிடித் தவராவார் இவரது காலத்தில் பெண்களுக்கான கரப்பந்தாட்டம் பயிற்றப்பட்டு வெற்றி பெற்றமை புனித ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு இரட்டிப்பான பெருமையாகும்.

நிலையத்தில், நூல் நிலையம் சிறப்பாக இயங்கியதால், நூல் நிலையப் பொறுப்பாளரிடம் தரமான நூல்களைப் பெற்றுச்சென்று படித்துப் பயன்பெற ஏதுவாக இருந்தது. இதனால் வாசிப்பதில் ஆர்வம் உடையவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். தினப்பத்திரிகைகள் (வீரகேசரி,தினகரன்) தினமும் வழங்கப்பட் டது. உள்ளூர் பத்திரிகைகள் மட்டுமல்ல வெளிநாட்டு ஆங்கில, தமிழ், வாராந்த, மாதாந்த நூல்களும் வாசிப்பதற்கு வழங்கப்பட்டது. பத்திரிகைகள் காற்றுக்கு அடித்துச் செல்லாதிருக்கவும், பலர் ஒரே நேரத்தில் பத்திரிகையின் பிரதிகளை பாவியாமல் இருக்கவும் பத்திரிகைகளை பலகைச் சட்டத்தில் பொருத்தி பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டிருந்தது. வாசித்துப் பயன் பெற்றதால் பொது அறிவுப் போட்டிகளும் நடத்தப்பட்டது.

வானொலி வசதி இல்லாத வீட்டார் வானொலி மூலம் நாட்டு நடப்புகளை தெரிந்துகொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. மாணவர்களிடையே கல்வி வளர்ச்சியை ஊக்கப்படுத்த இரவு நேர கல்வி வகுப்புக்களும் நடத்தப்பட்டன.

நிலைய அங்கத்தவர்களுடைய சிரமதானப் பணி தலை சிறந்து விளங்கியது மாரிமழை காலங்களில் பள்ளக் காணிகளில் குடி இருந்தவர்களின் வீட்டு வளவில் தேங்கி நின்ற மழை வெள்ளத்தை வாய்க்கால் வெட்டி வெள்ளம் கடலில் செல்வதற்கு வழி வகுத்தனர். ஆலய முகப்புக்கு தீந்தை பூசுவதற்கு சாரம் கட்டி அதில் நின்று தீந்தை பூசி முகப்பை அழகுபடுத்தினர். புதிதாக ஆலயத்தை புனரமைப்பதற்கு நிலக்கீழ் தண்ணீர்த் தாங்கி அமைப்பதற்கு பெரிதும் பாடுபட்டு உழைத்தனர். சுதந்திரதினக் கொண்டாட்ட ங்களில் அலங்கார ஊர்தி செய்து பவனி வந்து அரசாங்க அதிபர்களின் பாராட்டுக்களையும் பெற்றனர்.



போர்க்காலச் சூழலின் பின்பு புதிதாக மாதர் சங்கம், முன்பள்ளி போன்ற அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்த பட்சத்தில் ஆலய வளாகத்தில் செயல்பட்ட காரணத்தினால் அரசாங்க உதவிப்பணம் பெறுவதற்கு இது தடையாகக் காணப்பட்டது. அதனால் சன சமூக நிலையத்துக்கு சவிரிமுத்து யூலியஸ் றீசா குடும்பத்தினரால் 25-11-2015ல் நன்கொடையாக அவர்களது காணியை அன்பளிப்பாகத் தந்தார்கள். இதனால் முன்பள்ளி தற்போது அவர்களது வீட்டிலேயே நடைபெறுகிறது. ஆதலால் முன்பள்ளியை தற்போது அரசாங்க நிதி உதவியுடன் சன சமூக நிலையமும் இணைந்து நடத்திவருகிறது.

1980ஆம் ஆண்டு மதிப்புக்குரிய பண்டிதர் செல்வராசா அவர்களினால் பெரிய யாகப்பரின் தென்மோடி நாட்டுக் கூத்து வடிவமைக்கப்பட்டு (எழுதப்பெற்று) அன்னாவியார் அருளப்பு என்பவரால் பழக்கப்பட்டு நிலைய அங்கத்தினர்களினால் மேடை ஏற்றப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதன் இரண்டாவது பாகம் மேடை ஏற்றப்பட இருந்த காலத்தில் யுத்தம் காரணமாகக் கைவிடப்பட்டது. மேலும் வருடம் தோறும் கிறிஸ்மஸ் கறோல் நிகழ்ச்சி நேர்த்தியாக நிலைய அங்கத்தினர் களினால் முன்னெடுக்கப்பட்டு வந்ததும் நினைவு கூரத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித ஜேம்ஸ் சன சமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு பலர் அயராது உழைத்திருக்கிறார்கள். அவர்களுள் சிலரை நாம் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கூர்வது பொருத்தமாக அமையும் என்று நம்புகின்றோம். திரு. எஸ்.சாந்துமுத்து லூசியன், திரு. அந்தோனிசாமி, திரு.சிங்கராயர் பிலுப்புப்பிள்ளை, திரு. அந்தோனிஜயா, திரு.யோன் இருதயம், திரு. சந்தியாப்பிள்ளை (எஸ்பாங்கியம), திரு. தி.இம்மானுவல் (திருபால), திரு.அருமைநாயகம். இவர்களுடன் விளையாட்டுப் போட்டிகளுக்கு உற்சாகம் ஊட்டிய திரு.எட்வேட், திரு.தி. உலகம் (பிரான்சிஸ்) யாவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

நன்றி !

திரு. அல்போன்ஸ் தயாட்றூஸ்
திரு.அந்தோனிஜயா
எம்.எவ்.எவ்.அல்பேட்

N.K




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பர் பங்கு மக்களின்(பொது நிலையினரின்)ஆன்மீகத் தொண்டு.

புனித யாகப்பர் பங்கு மக்கள் தமது சொந்த ஊரில் மட்டுமல்ல அவர்கள் எங்கெல்லாம் வசித்து வந்தார்களோ, அல்லது வேலை செய்தார்களோ அவ்விடத்தில் எல்லாம் அவர்கள் இறைவனுக்குப் பணி செய்து வந்துள்ளார்கள். திரு.J.N.பொன்னையா என்பவர் திருநெல்வேலியில் வசித்து வந்தபோது வண. சுவாமி ஞானப்பிரகாசரினால் கட்டப்பட்ட புனித சவேரியார் ஆலயத்தில் பணியாற்றி வந்தார். இவ்வாறு பணியாற்றிய காலத்தில் எமது பங்கில் பெரிதும் மதிக்கப்பட்ட பொம்மைப் பாஸ் நிகழ்ச்சிகளை இரண்டு தடவைகள் திருநெல்வேலியில் இடம்பெறச்செய்து இந்து சமய மக்கள் மத்தியில் கிறிஸ்தவ மதத்தின் பெருமையை நிலை நாட்டியவர்ஆவார். திரு.N.S.ஆபரணம் என்பவர் பரந்தனில் வசித்து வந்தார். இவருடைய குடும்பம். திருஅவைக்குச் சொந்தமான காணியில்தான் குடியிருந்தார்கள். அருகில் புனித அந்தோனியார் ஆலயம் அமைந்திருந்தது. இதனால் புனித அந்தோனியார் ஆலயத்தைப் பராமரிக்க குருமார் அனுமதி வழங்கி இருந்தார்கள். திருப்பலிக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துவந்ததுடன், புனித அந்தோனியார் பெருவிழா கொண்டாட்டம் என்பவை சிறப்புடன் இடம்பெற ஒழுங்குகள் செய்து வந்தார். காலையிலும், மாலையிலும் திருந்தாதி மணி அடித்து தினமும் கிறிஸ்துவத்தைப் பறை சாற்றி வந்தார். இவருடைய சிறப்பான பணியால் பரந்தன், கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதிகளில் வசித்த கத்தோலிக்க, இந்து சமய மக்களும் இறையருளைப் பெற்றுப் பயன் பெற்றனர்.



திரு.N.S.அரசரெட்டினம் அவர்கள் ஊர்காவற்றுறை வைத்திய சாலையில் கடமை ஆற்றிய காலத்தில் அரசாங்க அனுமதி பெற்று வைத்திய சாலை வளாகத்தில் சிறியதொரு செப ஆலயம் ஒன்றை புனித வேளாங்கன்னி மாதா பெயரில் கட்டுவித்தார். இவர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் கடமை ஆற்றிய போது அங்கும் ஒரு சிறிய செப ஆலயம் கட்டுவித்தார்.

திரு. P.N. மரியநாயகம் அவர்கள் சீமெந்துத் தொழிற்சாலையில் கடமையாற்றிய காலங்களில் புனித வளன்(சூசையப்பர்)ஆலயம் ஒண்றை பலருடைய எதிர்ப்புகளின் மத்தியிலும், பலருடைய ஆதரவாளர்கள் உடைய ஒத்துழைப்புடனும் கட்டிமுடித்து வழிபாட்டுக்கு உதவினார். இவ்வாலயத்தில் தற்போது இந்து சமய மக்களும்,கத்தோலிக்க மக்களும் வழிபாடு செலுத்தி பயன் பெற்று வருகிறார்கள். திரு.மரியநாயகம் அவர்களே புனித யாகப்பர் ஆலயத்தில் கிறிஸ்மஸ் கறோல் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தவர் என்று நம்மப்படகிறது.

திரு. C. .ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் சொந்த ஊரிலும், இடப்பெயர்வுகள் ஏற்பட்ட காலங்களிலும் அதாவது 1990 ஆவணி 22ல் இராணுவ நடவடிக்கை காரணமாக ஊரைவிட்டு எங்கெல்லாம் இடம் பெயர்ந்தோமோ அங்கெல்லாம் சுருவில், நாரந்தனை, சரவணை, சாட்டி மாதா கோவில் போன்ற இடங்களில் புது வாழ்வு என்று அழைக்கப்படும் செப வழிபாட்டை முன்னின்று நடத்தி, மக்களுக்கு இறை நம்பிக்கையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள வழிவகுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தபோதும் அங்கும் தொடர்ந்தும் இந்த வழிபாட்டை நடத்தி வருகிறார். திரு.ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள் புது வாழ்வு செப வழிபாட்டை வழிநடத்தத் தொடங்கி 40 வருடங்களை பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருடன் இணைந்து திரு.குலேந்திரன், திரு. கீதபொன்கலன் திரு. அன்ரனி என்பவர்களும் செயல்பட்டு வந்தனர். கொழும்பில் திரு. டிவோட்டா என்பவருடன் இணைந்து திரு. குலேந்திரன், திரு. கீதபொன்கலன் அவர்கள் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயம், மேட்டுத்தெரு புனித வியாகுலமாதா ஆலயம், மட்டக்குழி புனித மரியாள் ஆலயம், மோதறை புனித மரியாள் ஆலயம் ஆகிய இடங்களிலும். ஜேம்பட்டா வீதியில் குருசுப்பிள்ளைத் தோட்டத்தில் திரு.ஜெயசிங்கம் என்பவருடைய வீட்டில் திரு. குலேந்திரன், திரு.கீதபொன்கலன் அவர்கள் தனிப்பட்ட முறையிலும் புது வாழ்வு செப வழிபாட்டை நடத்தி வந்தனர்.

கனடாவில் திரு.தவறாயனால் நடத்தப்படும் செப வழிபாட்டில் நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் திரு. குலேந்திரன் அவர்கள் பங்கெடுத்து வருகிறார். புலம் பெயர்ந்த நாட்டில் திரு.N. யேசு தவறாயன் அவர்கள் புது வாழ்வு செப வழிபாட்டை சற்று விரிவு படுத்தி 26 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நடத்தி வருகிறார். புது வாழ்வு செப வழிபாடு வாரம் தோறும் வெள்ளிக் கிழமைகளில் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. கனடா தமிழ் வானொலியில் வாரம் ஒரு நாள் ஒரு மணி நேரம் "வான் புறா" என்ற பெயரில் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. அத்துடன் தினமும் தொலைபேசி வாயிலாகவும் நற்செய்தித் தியானம் இடம்பெறுகிறது. இவரது நற்செய்தி அறிவிப்பு கணனி வலை அமைப்பு வழியாகவும் அறிவிக்கப்பட்டு வருகிறது.(tamilgoodnews.com, tamilnewlife.com) திரு. தவறாயன் அவர்கள் நடத்தும் கனடா "தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வு செப வழிபாடு" ஸ்காபுறோ, மிசிசாக்கா, ஆகிய இடங்களில் வாரம் தோறும் நடைபெறுகின்றது. வாட்டலூ என்ற இடத்தில் மாதம் ஒரு முறை இடம்பெறுவது கடவுளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமம் மகிமைப்பட ஏதுவாக உள்ளது. திரு. யேசு தவறாயனுடன்இணைந்து திரு. யூட் குமார் அவர்கள் பாடகர் குலாமிற்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திரு. A.F. சிங்கறாயர் என்பவர் காரைநகரில் உள்ள நீலம்காடு என்ற இடத்தில் அமைந்திருந்த புனித அந்தோனியார் சிற்றாலயத்தைப் பராமரித்து வந்தார். மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமைகளில் எமது ஊரிலிருந்து பக்தர்களை அழைத்துச் சென்று செபமாலை, அந்தோனியாருடைய பிரார்த்தனை சொல்லி அந்தோனியாரின் அருளையும் பெற்று வந்தார். போர்க்காலச் சூழலால் இவ்வாலயம் தற்போது அகற்றப்பட்டுவிட்டதாக அறிகிறோம்.

திரு. செல்லத்துரை அவர்கள் குழந்தைகளுக்கு, நோய், பிணி, காத்துக் கறுப்பு, காத்தனுகள், குடலேற்றம், விசக்கடி போன்றவற்றுக்கு அதிதூதரான புனித. மிக்கேல் மந்திரமாலை, புனித. அந்தோனியார் சத்துரு சங்கார மாலை செபம் சொல்லி, பாதிக்கப்பட்டவர்களுக்கு கை மணிக்கட்டில் அல்லது இடுப்பில் நூல் கட்டி விடுவார். இப்படிச் செய்வதனால் அவர்கள் நலமடைவார்கள்.

திருமதி. புனிதசீலி தம்பையா அவர்கள் இடம்பெயர்ந்த காலங்களிலிருந்து, கொழும்பு புனித லூசியாஸ் பேராலயத்துக்கு அருகாமையில் வசித்துவருகிறார். இவர் இவ்வாலயத்தில் தன்னார்வத் தொண்டராக பணிபுரிந்து வருகிறார். நம்மவர்களின் திருமணம், குழந்தைகளுக்கான திருமுழுக்கு போன்ற அருட்சாதனங்கள் இடம்பெறும் காலங்களில் இவரது உதவி பெரிதும் பயனுடையதாக இருக்கிறது.

திருமதி.முத்துமணி துரைஐயா அவர்கள் எமது ஊரில் வசித்தபோது ஆலய வழிபாடுகளில் பாடல் களுக்கு வீணைப்பெட்டி இசைத்து சிறப்பித்ததுடன், இளம் வயது பெண்களுக்கு வீணைப்பெட்டி வாசிக்கவும் கற்றுக்கொடுத்தார்.

திருமதி மேரி தம்பையா, திருமதி. தங்கராசம் செபமாலை என்பவர்கள் புனித. உத்தரியமாதா பக்திச் சபையை முன்னின்று வழி நடத்தியவர்கள், நமது சமூகத்தில் வசித்த குடும்பப் பெண்களை ஒன்றிணைத்து வாரம்தோறும் செபித்து வருவார்கள், குறிப்பாக நல்மரனத்திற்காகச் செபிப்பார்கள். யாராவது இறந்துவிட்டால் இறந்தவர் வீட்டில் அவர்களுக்காகச் செபிப்பதோடு, அவர்களுடைய மரண ஊர்வலத்திலும், புனித உத்தரியமாதாவின் திருவிழாவின் போதும், புனித. உத்தரிய மாதா கொடியைப் பிடித்தபடி ஊர்வலத்தின் முன்பாகச் செல்வார்கள். புனித. உத்தரிய மாதா திருவிழாவின் போது சொருபம் தூக்கிச் செல்வதற்கு அந்த வருடம் திருமணம் செய்தவர்களையும், திருமணமாகாத இளம் பெண்களையும் இவர்கள் ஒழுங்கு செய்வார்கள்.



திரு. கீத பொன்கலன் அவர்கள் எமது பங்கைச் சேர்ந்தவர். அம்பலப்புலத்தில் வசித்து வந்தவர், கிறிஸ்துவின் மீது அதிக நாட்டம் கொண்டதால், இறை வார்த்தையை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக 'Assembly of God' என்னும் கிறஸ்தவ சபையில் இணைந்து மூன்று ஆண்டுகள் படித்து போதகராக அபிசேகம் பெற்று எமது ஊருக்கு இறை வார்த்தையை எடுத்துச் சொல்ல வந்தபோது, திரு. தவனேசன், திரு. குலேந்திரன் அவர்கள் இணைந்து நடத்திய புது வாழ்வு செபவழிபாட்டில் பங்கு எடுத்ததின் பலனாக, திரும்பவும் கத்தோலிக்க சபையில் இணைந்து புது வாழ்வு செபவழிபாட்டின் வழியாக இறை வார்த்தையை ஆழமாகப் போதித்து வந்தார்.



பழம்கோட்டை என்று அழைக்கப்படும் போத்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் இந்தக் கோட்டை தற்போது சிதைவுற்றுக் கானப்படுகிறது. இதில் மரியன்னையின் சொருபம் வைத்து வழிபட்டதற்கு அடையாளமாக வில் அமைப்பாலான பகுதி ஒன்று காணப்படுகின்றது இராசாப்பா என்றழைக்கப்பட்டவர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து, புனித மரியன்னையின் சொருபத்தை பக்தர்களுடன் எடுத்துச் சென்று செபமாலை, பிரார்த்னை சொல்லி, வணக்கம் செலுத்தி திரும்பவும் சொருபத்தை ஆலயத்துக்கு எடுத்து வந்ததாகவும் அறிகின்றோம்.



இவ்விடயத்தை எமது ஊரில் பங்குத்தந்தையாக இருந்த (1985-1991காலப்பகுதியில்) வண.S.F.கிருபானந்தன் அடிகளார் அறிந்தபோது, பக்தர்கள் சிலருடன் அன்னை மரியின் சொருபத்தை (பழம் கோட்டைக்கு) எடுத்துச் சென்று செபமாலை, பிரார்த்தனை சொல்லி வந்தார். ஆயினும் அருகில் இருந்தவர்களுடைய சிலரின் எதிர்ப்பின் காரணத்தாலும், நாட்டின் போர்க்காலச் சூழலினாலும் இந்நிகழ்ச்சி கைவிடப்பட்டது. கிருபானந்தன் அடிகளார் காலத்தில் மறைக்கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, மறைக்கல்வி கற்பிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் செல்வி. றூபி நவரெத்தினம் அவர்கள் சிறந்த மறைக்கல்வி ஆசிரியையாகக் கடமையாற்றி முதல் நன்மை, உறுதிபூசுதல் மாணவர் களுக்கு மறைக்கல்வி கற்பிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட இத்தகைய முன்னெடுப்புகளே புலம்பெயர்ந்து நம்மவர்கள் கனடாவில் தங்கிவாழும் காலங்களில் புனித யாகப்பர் பெருவிழாவை முன்னெடுக்கக் காரணமாக இருந்தது எனலாம். புனித யாகப்பர் பெருவிழாவை கனடாவில் தொடங்கியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் அமரர் திரு.யோசவ், அமரர் திரு. இராசசேகரம், திரு.யேம்ஸ், திரு.எல்மோ அன்ரனி, திரு.டிக்சன், திரு.சுரேஸ். என்பவர்களாவர்.

N.K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூரில் இருந்து கனடா வரை!
# கத்தோலிக்க புது வாழ்வு தமிழ் பணி



காவலூர் துறைமுகத்தால் கடல்கடந்து வணிகம் செய்த தலைமுறை இன்று கடல்கடந்து கர்த்தரை அறிவிக்கும் இறைபணியை நினைந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

என்னைச் சந்தித்த ஒருவர், நீர் எந்த இடம், எந்த பாடசாலையில் படித்தீர், எந்த குருமடத்தில் படித்தீர் என வினவினார். எனது ஊர் ஊர்காவல் துறை புனித யாகப்பர் வீதி. நான் படித்தது புனித அந்தோனியார் கல்லூரி. நான் படித்த குருமடம் புனித யாகப்பர் பங்கு என்று பதில் கூறினேன். குருமடம் மட்டுமல்ல ஒரு விசுவாசமுள்ள சமூகத்தாலும் இறைபணியாளர்களை உருவாக்க முடியும் என்பதை அவர் அறிந்து கொண்டார்.

**குடும்பத்தில் விழுந்த விதை:**



எனது பெற்றோர் திரு.திருமதி றோசா நவரட்ணம் அவர்கள் குடும்ப செபத்திலும், அன்றாட திருப்பலியிலும், நற்கருணை ஆண்டவர் பக்தியிலும் வேர் ஊன்ற விதை போட்டனர். திருப்பலியில் பங்குபற்றிய பின்பே காலை உணவு சாப்பிடலாம் என அனுமதித்தனர். என்தாய் என்னைத் திருப்பலிக்கு அழைத்துச்சென்று தன் அருகில் வைத்து செபங்களை வாய்திறந்து சொல்லவும், பிராக்கின்றி திருப்பலியில் பங்குபெறவும் பயிற்சித்தார்கள்.



எனது மாமி, அருட்சகோதரி தெக்லா அவர்கள் இறை அழைத்தலுக்காக செபிக்கவும், இறை அழைத்தல் பற்றியும் அடிக்கடி பகிர்ந்து கொண்டார்கள். என்ன வந்தாலும் கடவுளை நம்ப வேண்டும். வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் இறைபணி செய்து வாழ வேண்டும் என ஊக்கம் தந்தார்கள்.

எனது அண்ணன் குலேந்திரன், மாமா தவநேசம் இருவரும் புது வாழ்வில் என்னைக் கரம்பிடித்து பல ஆன்மீக பாடங்கள் புகுத்தி, பயிற்சிகள் தந்து உருவாக்கியவர்கள். அண்ணன் குலேந்திரன் சிறந்த புத்திமதிகள் கூறி அன்றில் இருந்து இன்றுவரை ஊக்கம் தந்து வருபவர். இவர் மனைவி சுமித்திரா குலேந்திரன் செபத்தின் ஆழம் அறிய வழிநடத்தியவர்கள்.



**புனித யாகப்பர் பங்கில் விழுந்த விதை:**

திருப்பலிக்கு உதவும் பணியில் இருந்து வாசகம், மன்றாட்டு மற்றும் பாடல் குழுவில் பாடவும், மத்தாளம் தட்டவும் என்னைப் பண்படுத்தி உருவாக்கியது புனித யாகப்பர் பங்கு. ஆலய பணியை மட்டுமல்ல நூல்கள் படித்து அறிவை வளர்க்கவும், மாலையில் சிறுவர் வாலிபர் ஒன்றுகூடல் மற்றும் நத்தார் கரோல் பாடல்கள் கற்று வளரவும் புனித யாகப்பர் வாசிக சாலை உரம் போட்டது.

நத்தார் கறோல் போகும்போது தவராஜன் பாட்டைத் தொடங்கும் என்று நஞ்சன் அண்ணா ஆணையிடுவதன் மூலமாக தலைமை வகிக்கும் திறமையையும், பாடல்கள் வழிநடத்தும் திறமையையும் கற்றுத்தந்தது புனித யாகப்பர் பங்கு. பாஸ்கா திருவிழாவின் போது தயாரிக்கப்படும் திருப்பாடுகளின் (பாஸ்) காட்சி, நாட்டுக்கூத்து போன்றவைகளால் யாகப்பர் பங்கு மக்களின் கலைத்திறனைக்கண்டு திகைத்துப்போன எனக்கு எவ்வாறு இறை பணியை கலைத்திறனோடு சிறப்பிக்கலாம் என்ற கலைத்திறனையும் கற்றுத் தந்தது புனித யாகப்பர் பங்கு.



**அருட்தந்தையர்களால் விழுந்த விதை:**

மறைந்து போன அருட்தந்தை கிருபாநந்தன் அடிகளார் என் வாழ்வில் ஆன்மீகப் பணி வாழ்வை ஆரம்பித்து வைத்தார். ஊர்காவல் துறை புது வாழ்வு செபக்கூட்டத்தில் என்னைக் கண்டதும் அருகில் வந்து கை குலுக்கி பாராட்டிய அருட்தந்தை தொடர்ச்சியாக ஆலய திருப்பலியில் கண்டு தேடிவந்து புன்னகையோடு சில வார்த்தைகளால் தன் அன்பை பரிமாறினார். திடீரென ஒருநாள் ஒரு மாத நற்செதிப் பணி பயிற்சிக்காக குருநகரில் உள்ள குருமடத்திற்கு போகுறீர் எனக்கூறிவிட்டுச் சென்றார். குருவின் வாக்கைத் தட்ட முடியாமல் ஒரு மாத பயிற்சியில் பங்கு பற்றினேன். வாழ்க்கை திசை திரும்பியது.

நற்செய்தி பரப்புதல் பயிற்சியிலும் தியான செபங்களிலும் எம்மைப் பயிற்றுவித்த அருட் தந்தை பொன்னையா (இரும்புப் பொன்னையா) மற்றும் அருட் தந்தை ஜெயசீலன் அவர்களும் புனித சவேரியாரின் நற்செய்தி பரப்புதல் வாழ்க்கையால் எவ்வாறு இலங்கையில் நற்செய்தி வேர் ஊன்றியது என்பதை விளக்கும்போது என் உள்ளத்தில் நற்செய்தியால் மட்டுமே மனித வாழ்வு உண்மை வளம்பெறும் என்ற நம்பிக்கை தோன்றியது. போராட்டத்தின் சூழலால் வேதனைக்குள் மரித்துக்கொண்டிருக்கும் என் தாயக உறவுகளுக்கு சமாதானத்தின் நற்செய்தி மூலமே வாழ்வில் விடியல் தோன்றும் என்ற நம்பிக்கை எனக்குள் பீரங்கியாக வெடித்தது. நானும் நற்செய்தியைக் காவிச்செல்லும் ஒரு கருவியாக வாழவேண்டும் என்ற மெய் உணர்வு எனக்குள் தோன்றியது.



**கனடாவில் விழுந்த விதை!**

நாட்டின் போர்ச் சூழலாலும், குடும்பத்திற்காக உழைக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் எனது சின்னண்ணன் ஜேம்ஸ் தெய்வேந்திரன் கனடாவில் இருந்து பணம் அனுப்ப, நீ பாதுகாப்பாக வாழ வெளிநாட்டிற்குப் போய்வா என எனது பெரியண்ணன் குலேந்திரன் செபத்தோடு வழியனுப்பி வைத்தார். நாட்டை விட்டு வெளியேறிய நான் 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கனடாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்வைத்தேன்.

கனடாவில் எனது சொந்த உறவுகளாகிய சசீந்திரன் அண்ணன், சுரேஸ், டிக்சன் அவர்களோடு ஒரு வீட்டில் வாழும் பாக்கியம் கிடைத்தது. இவர்கள் வழியாகவே கனடாவில் எனது ஆன்மீகப் பயணம் தொடர்ந்தது. இவர்கள் மூவரும் ஒவ்வொரு நாளும் காலை எழுந்து வேலைக்குப் போவதற்கு முன்பாக படத்திற்கு ஊதுபத்தி கொழுத்தி இறைவணக்கம் செய்து விட்டுச் செல்வதும், ஞாயிறு திருப்பலிக்கு என்னைத் தவறாமல் அழைத்துச் செல்வதும் என் விசுவாச வாழ்வில் உறுதிபெறத் தூண்டியது.



**கனடாவில் கத்தோலிக்க நற்செய்திப் பணியின் மரம் வளர ஆரம்பித்தது:**

இலங்கையில் பெற்ற புது வாழ்வு செப அனுபவம் உள்ளத்திற்குள் அணையாமல் எரிந்துகொண்டிருந்ததால் சகோதரன் கொலின் சுரேஸ் அத்தீபத்தை ஏன் கனடாவில் நாம் ஏற்றி எரியவைக்க கூடாது? என்ற வேள்வியோடு நற்செய்திப் பணியைத் தொடங்குவதற்கு முன்வந்தார். 1991 ஆம் ஆண்டு பங்குனி மாதம் புது வாழ்வு நற்செய்திப் பணி கனடாவில் சிறிய தீபமாக சுடர் வீச ஆரம்பித்தது. இதன் பயனாக பலருடைய வாழ்வில் ஆண்டவர் இயேசு மணம் வீச ஆரம்பித்தார்.

**குருக்கள், ஆயர்களின் ஆசீர்:**

2004 ஆம் ஆண்டு என் தாய் மண்ணில் வாழும் என் தாயக உறவுகளுக்கு அருள் நாதர் இயேசுவின் வார்த்தையை பறைசாற்ற வேண்டும் என்ற தாகத்தோடு சென்றிருந்தேன். எனது நற்செய்திப் பணி வாழ்வுக்கு அத்திவாரமிட்ட அருட் தந்தை கிருபானந்தன் அடிகளாரின் ஆசீருக்காக அவர் முன் மண்டியிட்டேன். அவர் தனது ஆசீரைத் தந்ததோடு, மேதகு இராயப்பு யோசவ் ஆண்டவரிடமும், மேதகு தோமஸ் சவுந்திர நாயகம் ஆண்டவர் அவர்களிடமும் அழைத்துச் சென்று எனது பணியைப்பற்றி எடுத்துக்கூறினார். அவர்களும் எனது பணி சிறந்து வளர ஆசீர் தந்தனர். அத்தோடு பல இடங்களில் நற்செய்திக் கூட்டங்களும் சிறப்பாக நடைபெற்றன.





வைகாசி மாதம் 2012 ஆம் ஆண்டு எனது இறையியல் பட்டமளிப்பு விழாவை கனடாவில் எமது செபக்குழுவினர் கொண்டாடியபோது அருட் தந்தை பீற்றர் ஜிற்நேற்திரன் அடிகளாரும் அங்கு சமூகம் தந்து தனது ஆசீரை வழங்கினார். இவர் கனடாவில் எமது பணி சிறப்பாக நடைபெறுவதற்கு சிறந்த ஆலோசனைகளையும், உதவி-களையும் தந்து வருபவர்.

**முழுநேர பணியாளன்:**

இப்பணியின் வளர்ச்சி காரணமாகவும், தொடர்ச்சியாக வேலைக்குச் செல்ல முடியாத காரணத்தினாலும், இறைவன் இப்பணிக்காக என்னைப் பிரித்து எடுக்கிறார் என்று உணர்ந்ததாலும் நான் செய்து கொண்டிருந்த Tools and Die Maker என்ற வேலையை விட்டு விட்டு இறை பணிக்காக வந்தேன். இப்பணியை சிறந்த இறையியல் அறிவோடு செய்ய வேண்டும் என்பதற்காக Master's College and Seminary என்ற இறையியல் கல்லூரியில் படித்து 1992 ஆம் ஆண்டு பட்டம் பெற்றேன்.

**கனடாவில் என் குடும்பம்:**



1997ஆம் ஆண்டு இளவாலையைச் சேர்ந்த யூடித் ஜெசிலின் டோமினிக் அவர்களை திருமணம் செய்தேன். அன்றில் இருந்து இன்றுவரை இவர்கள் எனது பணிவாழ்விற்கு முழு ஆதரவும், ஊக்கமும், உதவியும், உருவாக்கமும் தந்து வருபவர்கள். நானும் என் மனைவியும், மகன் ஐசாக்குமாக இணைந்து எமது நற்செய்திப் பணியை பல கோணங்களில் மக்களுக்கு வளம் தரும் வாய்க்கால்களாக வளங்கி வருகின்றோம்.

**எமது பணிகள்!**

இதில் புனித யாகப்பர் பங்கு உறவுகள் பலரும் இணைந்து இப்பணியை முன்னெடுத்து வருகிறார்கள்.

- வெள்ளிக்கிழமைகளில் செப வழிபாடுகள்,
- விசேட கூட்டங்கள், கருத்தரங்குகள்,
- குடும்பங்களுக்கான படிப்பினைகள்,
- தொலைக்காட்சி மூலம் நற்செய்திப்பணி,
- வானொலி மூலம் நற்செய்திப்பணி,
- தொலைபேசி மூலம் நற்செய்திப்பணி,
- இணையத்தளங்கள் மூலம் நற்செய்திப்பணி,
- முக நூல் மூலம் நற்செய்திப்பணி,
- பத்திரிகை மூலம் நற்செய்திப்பணி,
- மக்களுக்காக தொலை பேசியில் செபித்தல்,
- நோயாளர்களைச் சந்தித்து செபித்தல்,
- நேராகச் சந்தித்து செபித்தல்,
- இல்லங்களுக்குச் சென்று செபித்தல்,
- வைத்திய சாலைகளுக்குச் சென்று செபித்தல்,
- குடும்பங்களை, வாலிபர்களைச் சந்தித்து ஆலோசனை வழங்குதல்,
- கோடை கால ஒன்று கூடல்

என்று பல கோணங்களில் மக்களுக்கு நற்செய்தி கொடுக்கும் நல் வாழ்வை பகிர்ந்து வருகின்றது கனடா கத்தோலிக்க புது வாழ்வு தமிழ் பணி.

இப்பணிக்கான விதையும், வேரும் காவலூர் புனித யாகப்பர் சமூகத்தில் இருந்தே ஆரம்பமாகியது எனக்கூறுவதில் மகிழ்ச்சி அடைவதோடு இறைவனுக்கு நன்றியும் கூறுகின்றேன்.

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப்பாதையில் புனித யாகப்பர் ஆலயம்.



காவலூரில் உள்ள பழமைமிகு மூன்று ஆலயங்களுள் புனித யாகப்பர் ஆலயமும் ஒன்று. இலங்கையில் காணப்படும் புனித யாகப்பர் ஆலயங்களில் மூத்தது என வரையறை செய்யப்பட்டவற்றுள் இவ்வாலயமும் ஒன்று. இவ்வாலயத்தின் பூர்வீகம் அறிய முடியாதிருக்கின்றது. இலங்கையில் ஸ்பானிய நாட்டுக் குருமார் தொண்டாற்றிய இடங்களில் தம்நாட்டின் பாதுகாவலரான புனித யாகப்பரின் பெயரால் ஆலயங்களை எழுப்பினர் எனத்தெரியவருகிறது. காவலூரிலும் அவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். நல்லூர் சுவாமி வண. ஞானப்பிரகாசரின் ஆய்வுகளின்படி இங்கு ஒரு மண்கோவில் இருந்திருக்கிறது. இன்று நாம் காணும் புனித யாகப்பர் ஆலயத்திற்கு 1815ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் தேதி கோவைக்குரவரான வண. டல்காடோ என்ற தியான சம்பிரதாயசபைக் குரவர் அடிக்கல் நாட்டினார் எனத் தெரிகிறது. இவ்வாலய முகப்பு 1854ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. முகப்பின் மேல் சம்மனசுச் சுவாமியார் என அழைக்கப்பட்ட வண.விஸ்திரினி அடிகளார் ஒரு சிலுவையை நாட்டினார். இவ்வாலயத்துக்கான புதிய பீடப்பகுதி 1890ல் ஆரம்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடர்ந்தன. நடுக் கோவிற் சுவர்கள் வண.A டோறாச் சுவாமியாரின் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டன. 1911ஆம் ஆண்டுப் பகுதியில் ஆலயக் கூரை வேலையும் நிறைவு செய்யப்பட்டு ஓட்டினால் கூரை வேயப்பட்டது. அதே காலப்பகுதியில் குருமனையும் கட்டப்பட்டது எனத்தெரிகிறது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்தின் மூப்பராயிருந்த சாந்தா குரூஸ் என்பவர் ஆலயப் பணியில் மிகுந்த அர்ப்பணத்தோடு பணிபுரிந்தவர் என அன்றும் இன்றும் இவ்வாலய மூதாதையர் களாலும் வழித்தோன்றல்களாலும் நினைவுகூரப்பட்டு வருகின்றார். வண. சந்திரசேகர் ஊர்காவற்றுறையில் பணி ஆற்றியபோது புனித யாகப்பர் ஆலயத்திலிருந்தே ஒரு மாதா சுரூபத்தை எடுத்துச் சென்று சின்னமடுத் திருப்பதியில் தாபித்தார் என வரலாறு கூறுகின்றது. இங்கு தொம்மைக்குட்டி, அண்ணாவி மனவல், அடப்பனார் முதலிய பெருமக்கள் புகழுடன் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. 1975ஆம் ஆண்டு வரை இவ்வாலயத்தில் சங்கிருஸ்தாமாகவும், மூப்பராகவும் பணியாற்றி ஆலயத்துக்கு அருந்தொண்டு ஆற்றிய பே. குருசுமுத்து அவர்கள் காவலூர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

காவலூர் மேற்கு மக்கள் தனி ஒரு சமூகத்தினராயினும் முழுப்பங்கிலும் சமரச மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழ்ந்தவர்கள், பண்பாடு மிக்கவர்கள், சிறந்த மாலுமிகளாகவும் முன்னணியில் திகழ்ந்தவர்கள். கடல் வணிகத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்களாகவும் விளங்கினர். காவலூரின் கத்தோலிக்க பாரம்பரியங்களைக் கட்டிக் காப்பதில் ஊர்காவற்றுறை மேற்கு மக்கள் பெரும்பங்கு ஏற்று இருந்தனர் என்றால் மிகையில்லை. கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தவர்கள். நாட்டுக்கூத்து, நாடகம், இறைவழிபாட்டோடு தொடர்புடைய பாடல்கள், ஒப்பாரி, அம்மானை, தேவாரம், திரைவிருத்தம், பசாம் வாசிப்பு என்பவற்றிலும், பாவைக்கூத்து அல்லது பொம்மலாட்ட சம்பிரதாயத்தில் "பாசு" என்னும் திருப்பாடுகளின் காட்சியைக் காட்டுவதிலும் வல்லவர்கள். மேஸ்திரி திரு.மரியான்தம்பி, திரு.செபஸ்தியாம்பிள்ளை முதலியோர் இவர்களுள் தலை சிறந்து விளங்கினர். மன்னாரிலும், முல்லைத் தீவிலும் திருப்பாடுகளின் "பாசு" காட்டிப் புகழ்பெற்றவர்கள் இவர்கள் என்பது பெருமைக்குரியதே. போர்க் காலச் சூழலில் மிகவும் பாதிக்கப்பட்டது இவ்வாலயமேயாகும். 1988ஆம் ஆண்டளவில் புதிய ஆலயம் ஒன்றை அமைக்க பெருமுயற்சி எடுக்கப்பட்ட போதும் நம்நாட்டு நிலைமை இடந்தரவில்லை.

தாய் நாட்டிலேயே நம் விசுவாசத்தை வேரூண்டச் செய்து கிளைவிட்டுப் பரம்பி வாழ்ந்த நம் சமுதாயம், கனடா தேசத்திலும் வேரூண்டி 25 வருடங்களாக தம் விசுவாசத்தைக் காத்து செழித்து வளர்ந் திருப்பதைக் கண்டு இறைவனுக்கு நன்றி கூறும் அதேவேளை தொடர்ந்து விசுவாசத்தைக் காத்துக்கொள்ள இறைவனைப் பிராத்திக்கிறேன்.

நன்றி.திரு கி.இஸ்ரனிஸ்லாஸ்,
ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாகப்பர் ஊர்காவற்றுறை மேற்கு பங்குத் தேவசமூகம்.



பிறான்ஸ் நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை ஹென்றி மோறோ அ, ம, தி அவர்கள் இரணைதீவில் 37வருடங்கள் பங்குத் தந்தையாக பணி புரிந்தவர் இவர் எனது ஊரில் பங்குத்தந்தை பதவியில் இருந்து ஓய்வு பெறும்போது யாழ் ஆயர் அவரை ஊர்காவற்றுறை மேற்கு புனித யாகப்பர் தேவாலயத்தில் பணிபுரியும்படி அனுப்பினார் அப்போது அவருக்கு உதவியாக நான் ஊர்காவற்றுறை மேற்குப் பங்குப் பணியிலும் அவரது உணவுத் தேவைகளையும் நிறைவு செய்ய அழைக்கப்பட்டிருந்தேன் ஆகவே நான் அவருடன் கொஞ்சம் கூடக்காலம் பணிபுரியும் சந்தர்ப்பம் ஊர்காவற்றுறையில் கிடைத்தது. அப்போது அந்த ஆலயம் போத்துக்கேயரின் ஆட்சிக் காலத்தின் வடிவமைப்பையும் மக்களின் கத்தோலிக்க வாழ்வு முறைகள் ஆதிக் கிறிஸ்த்தவர்களின் இயல்புகளையும் கொண்டவர்களாகவும் இருந்ததினால் நான் மக்களின் வாழ்வு முறையில் அதிகம் ஈர்க்கப்பட்டவனாக, இணைக்கப்பட்டு அவர்களுடன் வழமையாக்கிக் கொண்டேன். இதனால் இந்த தேவாலயமும் பங்கு மக்களும் எனது இரண்டாவது ஊராகவும், உறவுகளாகவும் அமைந்தது இவற்றில் என்னுடைய நண்பன் சந்திரசேகர், குலேந்திரன், பவுலப்பர் றாஜன் மரியதாஸ் போன்றோர் நெருங்கிய குடும்ப நண்பர்களாக இருந்தார்கள் இவர்களின் உதவியுடன் ஏனையவர்களின் உறவு தொடர்ந்தது.

வேதாகமத்தில் புனித யாகப்பர் இறைவன் இயேசுவோடு வாழ்ந்த அப்போஸ்த்தலர் அவருடைய தாய் தமது இரண்டு மக்களின் அப்போஸ்தலத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு இறைவன் இயேசுவிடம் தனது இரண்டு பிள்ளைகளும் பரலோகத்தில் இறைவன் இயேசுவின் வலது பக்கமும் இடதுபக்கமும் இருக்கவேண்டும் என்று துணிச்சலுடன் விண்ணப்பம் செய்த தாயின் மகன் புனித யாகப்பர். புனித யாகப்பர் பற்றிய அறிவும் விபரமும் எனக்கு ஓர் அளவு இருந்தபோதிலும் ஸ்பெயினில் இருக்கும் புனித யாகப்பர் தேவாலயம் சென்று அவரது கல்லறையில் தரிசனம் செய்த பிறகு அவரது ஆளுமைபற்றிய விபரங்கள் அதிகரித்துள்ளன புனித யாகப்பர் இத்தாலியில் வாழ்ந்து இறை விசுவாசத்தை கிறிஸ்துவுக்கு பின்பு பரப்புவதற்கு முழு உச்சாகத்துடன் செயல்பட்டதினால் அப்போது றோமாபுரியில் இருந்த அரசன் அவரை மரணத்தண்டனைக்கு உட்படுத்தி கொலை செய்தான் அப்போது அவர் கிறிஸ்துவின் முதல் வேதசாட்சியாக மரித்தார் என்று கூறப்படுகிறது. ஆனாலும் அந்தக்காலத்தில் ஸ்பாணியர்கள் அவருடைய மரணத்தின் நிமித்தம் அவருடைய உடலை பாதுகாக்க தரும்படி கேட்டு எடுத்து வருகையில் கடலில் தவறி வீழ்ந்ததாகவும் மீண்டும் அது ஸ்பையின் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டு தேவாலயத்தில் பாதுகாக்கப்படுகிறது. அந்த தேவாலயம் பல வருடங்களுக்குப் பிறகும் உலகலாவிய அளவு பிரசித்தி பெற்று வருகின்றது. கிறிஸ்தவத்தைப் போதித்து மக்கள் மத்தியில் மட்டுமல்ல அந்தக்காலத்தில் வாழ்ந்த அரசர்கள் மத்தியிலும் இவரை இயேசுவின் பிரதிநிதியாக ஆளுமை நிறைவு செய்து கொண்டவிதம் அதிஷயமாகவுள்ளது.

போர்த்துக்கேயர்கள், ஆசியாவின் ஆளுமையின் காலத்தில் இந்தியாவின் கடலோரப்பகுதியில் பிரயாணம் செயய்ம்போது படகு சூறாவளியின் தாக்குதலை எதிர்நோக்கி தாழும் நிலைமையில் இருக்கும் போது பிரயாணம் செய்த கப்பல் ஓட்டிகள் மாதாவிடம் வேண்டி மீட்கப்பட்டபோது வேளாங்கண்ணியில் மாதாவின் தேவாலயம் கட்டினார்கள், அது வேளாங்கண்ணி தேவாலயம் என்று பெயர்பெற்றது அந்தக்கால கட்டத்தில்தான் இலங்கையில் ஆதிக்கம் செய்யும்போது முதல் தேவாலயம் ஊர்காவற்றுறை மேற்கில் கட்டப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

நான் இளமைப்பருவத்தில் ஊர்காற்றுறை புனித யாகப்பர் தேவலயத்தில் தங்கியிருந்தபோது அவரின் உலகளாவியரீதியில் உள்ள பெருமை புரியவில்லை, ஆனாலும் இப்போது நான் அவைகளை மீட்டுப்பார்க்கும்போது அந்தப்பங்கு மக்களின் இயல்புகளும் விசுவாச வாழ்வு முறையும் அடிப்படைக் கிறிஸ்த்தவர்களின் விசுவாசமும் மிளிர்ந்த விதம் புனித யாகப்பரின் ஆசீர்வாதமே என்று உறுதியாகக் கூறலாம், புனித யாகப்பர் சிறந்த கப்பல் ஓட்டியாகவும், குதிரை சவாரி செய்பவராகவும், கோடிக் கணக்கான மக்கள் மத்தியில் கனவில் தோன்றினார் என்று அவரின் சரித்திரக்குறிப்புக்கள் இருந்தபோதிலும் அவரைப்பற்றி முழுமையான விபரங்கள் வேதகமத்தில் மிகவும் குறைவாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறை! போத்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் வடமாகணத்தின் தலைநகரம். அப்போது கப்பல் ஓட்டும் பிரயாணகாலத்தில் வடமாகணத்திற்கு வரும் வெளிநாட்டவர்கள் ஊர்காவற்றுறை ஊடாகவே வரவேண்டும் அதற்கு ஆதாரமாக இன்னும் உருப்படியாக கடலில் உள்ள கோட்டையும், ஊர்காவற்றுறையின் மேற்குப்பகுதியில் பாழ் அடைந்து கிடக்கும் கோட்டையும் சாட்சிகளாகும். அத்துடன் ஊர்காவற்றுறையின் தேவாலயங்களில் முதல் கட்டப்பட்ட தேவாலயம் புனித யாகப்பர் தேவாலயமே காரணம், இந்த இரண்டு கோட்டைகளுக்கும் இடையில் ஊர்காவற்றுறையின் மேற்குப்பகுதியில் உள்ள கடற்கரையில்தான் அவர்களின் போர்வீரர்களும், உதவி செய்யும் உத்தியோகஸ்த்தர்களும், மக்களும் அடர்த்தியாக ஆரம்பத்தில் இருந்த இடமாகும் ஆகவே ஆலயம் முதலில் ஆரம்பிக்கப்பட்டு சமூக ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற துணையாக அமைந்தது. அத்துடன் கப்பல் ஏந்திய மாதா கூடமும் கடற்கரையில் தேவாலயத்தின் வடக்குப்பக்கமாகக் கட்டப்பட்டுள்ளது.

இந்தப்பங்கைச் சார்ந்தவர்கள் அதிகமானோர் கப்பல்துறையிலும், சுங்கப்பகுதியிலும், காவல்துறை யிலும். பாதுகாப்புபகுதியிலும், தொழில்புரிபவர்களாக திகழ்ந்தார்கள். பெரும்பான்மையானவர்கள் விடுமுறைக்கே ஊருக்கே வருவார்கள் ஆனாலும் அவர்களின் விசுவாசம் மிகவும் அதிகமாக அவர்களிடம் இருந்ததினால் ஞாயிற்றுக்கிழமைத் திருப்பலி ஒருபோதும் பார்க்காமல் இருக்கமாட்டார்கள் இவர்கள் வார இறுதி நாட்களில் தேவாலய வளவில் வாழ்பவர்கள் போல் எல்லா நேரமும் தேவாலய முன்றலில் பலர் பிரசன்னமாக இருப்பார்கள், இவர்களை தேவாலய வளவில் இறுதி நாட்களில் சந்திக்கலாம் சிலர் கூடிக் கதைத்தவண்ணமே இருப்பார்கள், சிலர் விளையாட்டில் ஈடுபட்டவண்ணமிருப்பர், இன்னும் சிலர் தேவால யம் சென்று செபித்தவண்ணமிருப்பர். ஆலயத்தின் உட்புறமும் வெளிப்புறமும் மக்களின் பிரசன்னத்தால் சுறுசுறுப்பாகவே இருக்கும். திருப்பலிக்கு உதவுகிறவர்களின் குழு, பாடல் குழாம், மரியாயின் சேனை கூட்ட அங்கத்தவர்களின் பிரசன்னம் பெரியோரின் சந்திப்பு, இளைஞர்களின் விளையாட்டு ஈடுபாடு, அத்துடன் புதிதாக வெளியிடங்களில் இருந்து வருகை தரும் சிலரின் வியப்பான பிரசன்னம் போன்றவைகள் எனக்கு அதிசயமாகவே இருக்கும். அவர்களோடு நானும் அவர்களில் ஒருவனாக மாறி, மாறி அக்குழுக்களுடன் இணைந்து அவர்களின் இயல்பை அனுபவித்து வாழ்ந்தேன்.

எனக்கு மிகவும் நெருக்கமாக இருந்த அருட் தந்தை ஜெபநேசன் அவர்களும் அவரது சகோதரி கன்னியாஸ்திரி கெலன் மேரி அவர்களும் கூட ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்தார்கள் என்றால் அது மிகையாகது. இதேவேளை எனது நம்பிக்கைக்குரிய நண்பன் குலேந்திரன் அவர்கள் ஒரு புது வாழ்வுக் குழுவின் பிரதிநிதியாக வலம் வந்து கொண்டிருந்தார் அப்போது அவரோடு நான் எனது ஒய்வு நேரங்களில் அவரது பணியில் பங்குகொண்டேன் அப்போது இல்லத்தரிசிப்புகள் செய்தோம் குலேந்திரன் அவர்கள் வீடுகளில் விருந்தோம்பலை குறைத்துக்கொண்டு விசுவாசப்பரப்பலில் அதிமாக ஈடுபட தனக்குத்தானே சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தார், அதாவது போகும் இடங்களில் தேநீர் கூட அருந்துவதில்லை என்று கூறி, வேறு ஏதோ நற்சீரக குடிநீர் அருந்துகிறேன் என்று விருந்தோம்பலை குறைத்துக்கொண்டு விசுவாச அறிக்கையிலும் செபவாழ்விலும் அதிகமாக நேரத்தை ஈடுபடுத்திக்கொண்டு ஊர்வலம் செய்வார் அவருடன் பல முறை பங்கெடுத்துள்ளேன். அது எனது ஆரம்ப விசுவாசவாழ்வுக்கு அடித்தளம் இட்டதென்றால் மிகையாகது.

எனது வாழ்க்கைப் பயணத்தில் நான் இரசாயனத் தொழிற்சாலையில் வேலை செய்யும்போது என்னுடன் நான் மேற்குறிப்பிட்ட பவுலப்பர் மகன் இராஜன் என்பவர் வேலை செய்தார் அவரும் அடிக்கடி என்னுடன் தொடர்புகொண்டார் அடுத்து நான் இலங்கை, இந்தியா. சிங்கப்பூர். மலேசியா. இலண்டன். அமெரிக்கா. கனடா போன்ற நாடுகளின் வாழ்வில் எனது விசுவாச வாழ்வு முறையில் எனது பணிகள் நான் ஒரு தமிழ் கத்தோலிக்க விசுவாசப் பணித்தொடக்க நாயகனாக வலம் வந்துள்ளேன். அதன் அடிப்படையில் கனடாவிலும் தமிழ் கத்தோலிக்க விசுவாச வாழ்வு முறைகள் ஆரம்பிப்பதற்கு ஆரம்பகர்த்தாவாக ஆகினேன் என்றால் அது மிகையாகாது. 1988ம் ஆண்டுக்கு முன்பு வருகை தந்த தமிழ் மக்கள் அதிகமானோர் கனடா வருகை தரும்போது மொன்றியலில் வந்து இறங்கி அங்கு வசித்தார்கள், அநேக தமிழ் மக்கள் 1988ல் மொன்றியலில் இருந்து பெருந்தொகையானோர் ரொறொன்ரோ நோக்கி இடம் பெயர்ந்து வந்துகொண்டிருந்த சமயம். அந்த வருடம் தபசு காலம் நிறைவு அடையும் தருணம் பெரிய வெள்ளிக்கிழமை தமிழில் ஒரு இடத்திலும் சிலுவைப்பாதை கூட பார்க்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு, அப்போது மரியகொறற்றி தேவாலயத்தில் பங்குத்தந்தையாகவும் ரொறொன்ரோ மறை மாவட்டத்தின் டீணாகவும் பதவி வகுக்கும் அருட் தந்தை எட்வின் கலகர் அவர்கள் அப்போது இருந்த கருதினால் அம்புறோசிக் அலோசியஸ் ஆண்டகை அவர்களின் செயலாளரக பதவி வகுத்திருந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று கூடலில் முதல் நிகழ்ச்சியாக புனித யாகப்பர் கொடியும், கனடா தேசியக் கொடியும் ஏற்றப்பட்டு, கனடா தேசியக் கீதம் பாடப்பட்டு, ஆரம்ப செபத்துடன், நிகழ்ச்சிகளை பெரியவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

காலை உணவு, மதிய உணவு, விளையாடிக் களைத்து வருபவர்களுக்கான உணவு தயார் செய் வதில் மும்மரமாக ஈடுபடுவார்கள். ஆரம்ப காலத்தில் காலை உணவாக பாண், பாபிக்கியு போன்றவையும் காலப்போக்கில் எமது ஊர் வழக்கில் காணப்படும் அப்பம், தோசை, பால் பொங்கல். சக்கரைப் பொங்கல், சுண்டல் கடலை, பாண் என்பனவும், மதிய உணவாக ஒடியல் கூழ் காய்ச்சியும் மகிழ்ந்தோம். இவற்றோடு கூட சிலர் தாமாகவே விரும்பிய உணவுகளையும் தயார் செய்து வருவார்கள். இந்த வகையில் திரு. ஜேம்ஸ் அவர்கள் பழைய சோற்றுக் கஞ்சி தயார் செய்து வந்தது குறிப்பிடத்தக்கது.

மதிய உணவை ஆண்களும், பெண்களும் இணைந்து சமையல் செய்வார்கள். ஆண்களில் அருள் கோல்பேட், அமரர் திரு. இராசசேகர், றஞ்சன் ஆகியோரும், பெண்களில் திருமதிகள் சதா, லின்ரா, அனன்சியா, றதினா, ஜெயந்தி, றொசிற்றா, மாலா, விஜி, டீலியா, ஜெனி போன்றோர் சேர்ந்து சமயல்களை செய்வார்கள். சமையல் செய்வதற்கான மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், மாமிச வகைகள் போன்றவற்றை றொய்சன், எல்மோ, றஞ்சன் ஆகியோர் இணைந்து வாங்கி ஆயத்தங்களை செய்து எடுத்து வருவார்கள். எடுத்து வரப்பட்ட சமையல் பொருட்களைப் பயன்படுத்தி சமையல் தடல்,புடலாக அட்டகாசமாக சிரித்துக் கதைத்து, பகிடிக் கதைகளுடன், உப்புப், புளி கூடிக்,குறையாமல் சுவையாகச் சமைத்து முடிப்பார்கள். வருகை தந்த அனைவரும் உண்டு, மகிழ்ந்து சமையல் செய்தவர்களைப் பாராட்டுவார்கள். இத்துடன் செல்வி. பிறைற்னி புகைப்படம் எடுப்பதில் மும்முரமாகச் செயற்படுவார்.

விளையாட்டுப் போட்டிகளை முன்பு தெரியத் தந்தபடி, திரு.பயஸ், திரு. வில்பேட் அவர்களுடன் கூடிய உதவியாளர்களினால் முன்னெடுத்துச் செல்லப்படும். முதலில் திரு.பயஸ் அவர்கள் கூடி வந்த மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து சிகப்பு, பச்சை, மஞ்சள் இல்லங்களாகப் பிரிக்கப்பட்டும் சிறுவர்களை வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டும் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகும். விளையாட்டுப் போட்டிகளை பொறுப்பாளர்கள் எந்த வித பாகு பாடுமின்றி ஒழுங்காக நடத்துவார்கள். நடுவர்கள் திறம்பட செயல்படுவார்கள். விளையாட்டுப் போட்டிகளில் ஒவ்வொரு வருடமும் புதிது, புதிதான விளையாட்டுக்கள் இடம்பெறும். போட்டிகளில் பங்கெடுப்பவர்களுடைய பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் வெற்றி பெறவேண்டுமென்பதில் மிக உற்சாகமாக ஆர்ப்பரிப்பார்கள், அதேபோல் தங்களு டைய இல்லம் வெற்றி பெற வேண்டும் என்று கூச்சலிட்டு, துள்ளிக் குதித்து ஆரவாரம் செய்வது விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமல்லாது, பார்வையாளர்களுக்கும் உற்சாகத்தையும், விறுவிறுப்பையும் உண்டுபண்ணும்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு. பதக்கங்களும் அணிவிக்கப்படும். இளைஞர்கள் பொறுப்பெடுத்து நடத்திய காலங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றி மேடையின் மேல் (Victor stand) ஏற்றி பரிசில்கள் வழங்கி, பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். குறிப்பாக டெல்மன் யோசப், அலெக்சமன் யோசப், சூட்டி யோசப், நிரஞ்சன் என்பவர்களைக் குறிப்பிடலாம். இவர்களுடைய காலத்தில், எமது ஊரில் விளையாடப்பட்ட விளையாட்டுகளான சறுக்குமரம் ஏறுதல் தலையணைச் சண்டை, முட்டி அடித்து உடைத்தல், கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டுக்களை சிறப்பாகச் செய்து முடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றார்கள். கயிறு இழுத்தலில் பெண்களுக்கும், ஆண்களுக்குமான போட்டியில் பெண்கள் வெற்றியீட்டி யாவரையும் வியக்க வைத்தார்கள்.

மாலையில் தேனீர், சிற்றுண்டிகள் வழங்கப்படும். விளையாடிக் களைத்து வரும் சிறுவர்களுக்கு நெருப்பில் வாட்டிய இறைச்சிகள். சோழன் பொத்தி என்பனவும், பெரியவர்களுக்கு கொத்து றொட்டியும் வழங்கப்படும். அதேவேளை மிகுதியாக இருக்கும் உணவை ஒன்றாகச் சேர்த்துப் பிரட்டி ஒவ்வொருவருக்கும் கொடுத்து விடுவதில் பெண்கள் பரபரப்பாக இருப்பார்கள்.

ஒன்று கூடலில் ஏற்றப்படும் புனித யாகப்பர் சின்னம் பொறித்த கொடியை முதலில் டெல்மன் யோசப் அவர்களே வரைந்து தந்தார். சில வருடங்களின் பின்பு திரு. டிறோசன் யேசுதாசன் அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட அச்சுப்பதிவு செய்த கொடி ஏற்றப்படுகிறது. கூடாரங்களை திரு சேவியர், திரு. சசீந்திரன், மற்றும் சிலர் தந்துதவுகிறார்கள், கொடிக் கம்பங்கள் கரப்பந்தாட்ட வலை கட்டும் கம்பங்கள், கொத்து றொட்டி போடும் இரும்பாலான சட்டி என்பவற்றை திரு. ஜேம்ஸ் அவர்கள் தந்துதவுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று கூடும் காலம் கனடாவில் இடை,இடையே மழை பெய்யும் இந்த வேளையில் நாம் பாதுகாப்பாக இருப்பதற்கு நாம் அமைத்த கூடாரங்கள் உதவியாக இருக்கும். நாம் தெரிவு செய்யும் பூங்கா முன் கூட்டியே பதிவு செய்ய வேண்டும், வேறு யாராவது பதிவு செய்துவிட்டால் நாம் வேறு பூங்காவை பதிவு செய்ய வேண்டும், இதனால் வருடா. வருடம் ஒரே இடம் நமக்குக் கிடைப்பது அரிது, எனக்குத் தெரிந்த வரை Ajax Park, Pickring Park, Adams Park, Conal Danforth Park. இப்படியாக வசதிக்கு ஏற்றவாறும், இடம் கிடைப்பதைப் பொறுத்தும் ஒன்று கூடல் இடம்பெறும். உறவுகளை இணைக்கும் பாலமாக ஒன்று கூடல் திகழ்கிறது. நீண்ட நாட்களின் பின் ஒருவரை, ஒருவர் சந்தித்துப் பேசும் போதும், உறவாடும் போதும் ஏற்படும் மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் விபரிக்க வார்த்தைகளே இல்லை. நீண்ட நாட்களின் பின் உறவுகள் ஒரே இடத்தில் சந்திப்பதும் ஒரு சந்தாப்பம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இச் சந்தர்ப்பத்தைத் தந்த கனடா புனித யாகப்பர் ஆலயக் குழுவிற்கு நன்றிகள். இறைவன் நம்மை எப்போதும் ஆசீர்வதிப்பாராக.

திருமதி. அருள்நாயகி லின்ரா சிறீ றஞ்சன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2015 Summer Get together

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



St. James Kayts Summer Get together - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




St. Janes Kayts Summer Get together - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Buying/Selling or Investing?

Dir: 416.464.7228

Helping You is What I Do

RE/MAX

KS TEAM

Real Estate

Kumar Selvaratnam
Sales Representative
416.464.7228
luckykumar640@gmail.com
www.kumarhomesforsale.com



RE/MAX

RE/MAX
REALTRON
Reality Inc.
Brokerage

PLATINUM
Award Winner

Home of the Top Producers



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமை, அது இனிமை.



நம்மவர்களிடம் காணப்பட்ட பலதரப்பட்ட ஆற்றல்கள் பதிவுகள் இல்லாததினால் இளம் தலைமுறையினரால் அறிய முடியாது இருக்கின்றது. குறிப்பாக அரசியல் சூழ்நிலையால் அற்பசொற்பமாக இருந்த ஆதாரங்கள் கூட தற்போது நம் கைவசம் இருந்து பறிக்கப்பட்டு விட்டது. இதனால் நாம் கண்டதையும் கேட்டதையும் ஒருகணம் நினைவுபடுத்திப் பார்க்கும்போது இதயம் குளிர்கிறது.

நவீன உலகில் வைத்திய சாலைகள் வந்ததினால் தாய்மை அடைந்தவர்கள் தங்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்க வைத்திய சாலையை நாடுகிறார்கள். நாங்கள் அறிய சிலர் வைத்தியசாலை செல்லாமலே தமது வீடுகளில் குழந்தையைப் பெற்றெடுத்தார்கள். அப்போது வீடுகளில் குழந்தையைப் பாதுகாப்பாகப் பெற்றெடுக்க அந்தோனியாப்பிள்ளை என்பவர் மருத்துவிச்சியாகச் செயல்பட்டுள்ளார். அதேவேளை வைத்தியசாலைக்குச் செல்பவர்களுக்கு மெற்றிலின் என்பவர் பேருதவியாக இருந்துள்ளார்.





கடற்கரையில் நம்முன்னோர்கள் கயிறு திரிக்கும்காட்சி நமக்கு வேடிக்கையாக இருக்கும். அது நமது காலத்திலேயே கைவிடப் பட்டுவிட்டது. இதை விட கடற்கரையில் பெண்கள் கிடுகு (தென்னோலை) பின்னும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. இது நமது சமூகத்தின் கைத் தொழிலாகக் காணப்பட்டது. ஊர்காவற்றுறையின் பல பாகங்களிலும் இருந்து மாட்டு வண்டிலில் வந்து கிடுகுகளை வாங்கிச் செல்வார்கள். கடற்கரை ஓரங்களில் கிடுகைப் பின்னி காயவைத்திருப்பார்கள். அதன்மேல் சயிக்கிளில் (உந்துருளி) செல்லும்போது ஏற்படும் ஓசை மனதிற்கு அது இதமாக இருக்கும். இந்தக் கிடுகு பின்னுவதற்கான ஓலைகளை பளையில் இருந்து றக்ரரில் ஏற்றி வருவார்கள். றக்ரர் பெட்டியில் ஓலைகள் மிக உயரத்துக்கு அடுக்கப்பட்டிருப்பதினால் ஓலைகளுக்கு மேல் ஒருவர் இருப்பார். அவர் சாரதியின் இடுப்பில் கயிற்றைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பார். பின்னால் வாகனம் வரும்போது மேல் இருப்பவர் கயிற்றைப் பிடித்து இழுப்பார். சாரதி பின்னால் வரும் வாகனத்திற்கு வழிவிட்டுக் கொடுப்பார். இது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தாலும் எவ்வளவு ஆபத்தானது என்பது இப்போது தெரிகிறது.





கிடுகுகளை வீடு வேய்வதற்கும், வேலி அடைப்பதற்கும் பயன்படுத்தினார்கள். பனை ஓலையினாலும் வீடு வேயப்பட்டது. வேலி அடைக்கவும் பயன்படுத்தினார்கள். பனை ஓலையால் வேலி அடைப்பதற்கு பனை ஓலையை அதன் மட்டையுடன் பயன்படுத்தி னார்கள். பனை ஓலையால் அடைக்கப்படும் வேலி மிக அழகாக இருக்கும். காரணம் பனை மட்டைகளை மிக அழகாகப் பின்னிப் பின்னி அடைப்பார்கள். இதைவிட பனை ஓலை இல்லாமல் தனியாகக் கருக்கு மட்டையாலும் வேலி அடைப்பார்கள். கருக்குமட்டையின் கீழ்ப்பகுதி அகலமாக இருப்பதினால் அதை வெட்டிச் சரி செய்வார்கள். கருக்குமட்டையின் அடிப்பாகத்திற்கு சொலிக்கனம் என்ற ஒருவகை கறுப்பு நிற எண்ணை பூசுவார்கள். இதனால் கருக்கு மட்டை கறையான் அரிக்காமல் நீண்ட காலம் பாவிக்கும். கருக்கு மட்டைகளை வள்ளம் வைத்திருப்பவர்கள் எழுவைதீவு போன்ற இடங்களில் இருந்து வாங்கி வருவார்கள். அதை வள்ளத்தில் இருந்து இறக்குவதற்கு வாலிபர்களுக்கு பணம் கொடுத்து இறக்குவார்கள்.

இதைவிட இன்னுமொரு கைத்தொழில் நமது சமூகத்தின் பெண்களிடம் காணப்பட்டது. தென்னம் மட்டைகளை வெய்யிலில் நன்றாகக் காயவைத்து அதை ஒரு கல்லின் மேல் வைத்து இரும்புக் கம்பியினால் அடித்து தண்ணீர் தெளித்து அதைப் பக்குவமாக தும்புகளாகப் பிரித்தெடுத்து இரண்டு இழை கொண்ட கயிறுகளாகத் திரிப்பார்கள். இதை ஆறு முளம்கொண்ட நீள் சதுரப் பந்துகளாகக் கட்டி பின்பு அதை ஐம்பது அல்லது நூறு பந்துகளாகக் கட்டி விற்பனை செய்வார்கள். இதை மரக்கப்பல் அல்லது வள்ளம்வைத்திருப்பவர்கள் வாங்கிச்சென்று வள்ளத்தில் பலகைகளுக்கிடையே காணப்படும் இடைவெளிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் இறுக்கமாகச் செருகி லெப்பம் என்றதொரு பொருளைப்பூசி அதற்கு மேலாகத் தார் அல்லது கீல் பூசுவார்கள். இதனால் கப்பலுக்குள் தண்ணீர் வராது பாதுகாக்கப்படும்.



நமது சமூகத்துப் பெண்கள் மேற்கூறப்பட்ட கைத்தொழிலால் பெரிதும் பயன் அடைந்தார்கள். அத்துடன் ஆடு, மாடு, கோழிகள் வளர்த்து விற்பனை செய்து தங்கள் வீட்டுப் பாவனைக்கான பொருட்களை மட்டுமல்லாது தங்களுக்குத் தேவையான நகைகள் ஆடைகள் என்பவற்றையும் வாங்கினார்கள்.



இலங்கையின் இரண்டாவது இயற்கைத் துறைமுகமாக விளங்கிய ஊர்காவற்றுறை, பல விதமான பொருட்களை நமது இலங்கைத் தேசத்துக்கு இறக்குமதி செய்து வழங்கியது மட்டுமல்லாது ஒரு காலத்தில் சுங்கவரி மூலம் அதிக வருவாய் ஈட்டிக்கொடுத்த ஊராகவும் இருந்ததை நினைக்கும் போது பெருமைக்குரியதாக இருக்கின்றது. நாங்கள் அறிய டிங்கி என்றழைக்கப்படும் கப்பல் மூலம் ஆடுகள், ஓடுகள் (பவுண்மார்க்), வெங்காயம், செத்தல் மிளகாய், பீடி இலை, உருளைக்கிழங்கு முதலியன எமது ஊருக்கு எடுத்து வரப்பட்டு, இலங்கையின் ஏனைய இடங்களுக்கும் வினியோகிக்கப்பட்டு வந்தது வரலாற்று உண்மை. இது மட்டுமல்லாமல் தம்பிஜயா கிட்டங்கியில் லொறியில் (பாரஊர்தியில்) அரிசி மூட்டைகள் வந்து இறங்கும் காட்சிகளும் நினைவுக்கு வருகிறது. அரிசி மூட்டைகளை இறக்கும் போது பந்தயம் கட்டி போட்டி போட்டு விரைவாக முதுகில் சுமந்து இறக்குவார்கள். இதில் குருசுமுத்து என்பவர் இரண்டு கை இடுக்கிலும் இரண்டு அரிசி மூட்டைகளை ஒரே தடவையில் தூக்குவது வியப்புக்கு உரியது. அதை விட வியப்பு என்னவென்றால் வாயின் பற்களால் அரிசி மூட்டையைக் கடித்துத் தூக்குவதைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்கும். இவ்வாறாக கப்பல்களில் இருந்தும் லொறியில் இருந்தும் இறக்கப்படும் மூட்டைகளை முதுகில் சுமக்கும் போது அதன் பளுவும் களைப்பும் தெரியாதிருக்க அவர்கள் ஏலேலோ ஏலோஏலோ ஏலேலோ, ஏலேலோ ஏலோஏலோ ஏலேலோ என்றவண்ணம் அவர்கள் இராகத்தோடு பாடும் பாடலை கேட்கும் போது ஒரு கணம் அவ்விடத்தில் நின்று அதைக்கேட்டு இரசித்துச் செல்பவரும் உண்டு.

நமது சமூகத்தில் யாருக்காவது திருமணம் என்று சொன்னால் சமூகமே ஒன்று கூடிவிடும் பலகாரச்சட்டி வைப்பதற்கு இனசனங்களை அழைத்து பலகாரம் சுடுவது, பந்தல்கால் நடுவதற்கு கிளை இல்லாத முள்முருங்கைக் கதியாலில் பட்டுத்துண்டு கட்டி நடுவது, பந்தல் போடுவது, பந்தல் வேய்ந்த கிடுகுகளை மறைத்து வெள்ளை கட்டுவது(வெள்ளை வேஸ்டி அல்லது வெள்ளைச் சேலையால் மறைத்துக் கட்டுவது)குருத்தோலை பின்னிக் கட்டுவது, குருத்தோலை இரண்டு விதமாகப் பின்னுவார்கள். குருத்தோலை கீழ் நோக்கி மடித்தால் மங்களகரமான காரியங்களுக்கும், மேல்நோக்கி மடித்தால் அமங்கல காரணத்துக்கும் பயன்படுத்துவார்கள். கலியான வீடு அன்று சமையல் கட்டு களை கட்டும். பெரும் சமையல் என்பதனால் ஆண்களே சமைப்பார்கள். அனேகமாக கிடாய் அல்லது காளை மாட்டுக் கன்றுக்குட்டி இறைச்சிக்காக அடிப்பார்கள். அதைக் கொன்று தோல் உரிக்கும் காட்சியைப் பார்ப்பதற்கு நேரத்தோடு கண்விழித்து எழுந்து அவ்விடம் சென்று காத்திருப்போம். சாப்பாட்டு வேளையில் முதலில் ஆண்களையே பந்திக்கு அழைப்பார்கள். ஆண்களுடைய பந்தி முடிந்த பின்பே பெண்களை பந்திக்கு அழைப்பார்கள். வாழை இலையிலேயே உணவு பரிமாறுவார்கள். உணவை நிலத்தில் அமர்ந்திருந்தே சாப்பிடுவார்கள். வயதில் மூத்தவர் சரி சாப்பிடலாம் என்று சொல்லி சாப்பாட்டில் கை வைத்த பின்பே எல்லோரும் சாப்பிடுவார்கள். முதலில் சாப்பிட்டு முடித்தவர் இலையை மடித்து வைத்துவிட்டு பக்கத்தில் இருப்பவர் சாப்பிட்டு முடிக்கும்வரை அமர்ந்திருப்பார்கள். பக்கத்தில் இருப்பவர் நீர் எழும்பும் என்று சொன்னதும் முதலில் சாப்பிட்டு முடித்தவர் எழுந்து செல்லுவார். முதல் பந்தி முடிந்த பின்பு இரண்டாவது பந்திக்கு மக்களை அழைப்பார்கள். இந்தக் காட்சிகளை கனடாவில் காண முடியுமா? ஏன் தற்போது நம் தாய்நாட்டிலும் காண முடியுமா என்பது சந்தேகமே.



திருமண வீட்டில் புகைப்படம் எடுப்பவர் பின்னால் வாலிபர்கள் போட்டி போட்டுக்கொண்டு நிப்பார்கள் ஏன் தெரியுமா? கமறாவில் பொருத்திய சுட்ட (மின்வெட்டொளி) Flash light மின்குமிழை எடுப்பதற்கு. முன்பு ஒரு படத்திற்கு ஒரு முறைதான்Flash light மின்குமிழ் பாவிக்கலாம் அதன்பின், அதைக் கழற்றி எறிந்து விடுவார்கள். அதை எடுப்பதற்கு அடி பிடி. படம் எடுப்பவர் சொண்டுக்குள் சிரித்தபடி அதைக் களட்டி வீசுவார். இதைப் படிக்கும் போதே யார் அந்தப் படப்பிடிப்பாளர் என்று புரிந்திருப்பீர்கள். அவர் வேறு யாருமல்ல பெயர் பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் திரு. லீனஸ் (மாஸ்ரர்) அவர்களே. இன்று நேற்றல்ல 1949ஆம் ஆண்டிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த படப்பிடிப்பாளராக விளங்குகின்றார். படப்பிடிப்பாளர் மட்டுமல்ல சிறந்த வானொலி திருத்தினர், அன்ரனா பொருத்தினர், வீட்டு மின் இணைப்பாளர். இப்படியாகப் பல திறமைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குபவர். எமது சமூகத்தில் வெளிநாடு (இந்தியா) சென்று படித்துப் பட்டம் ( B-A ) பெற்ற முதல் கல்விமானாக பெருமை தேடித் தந்தவர். திரு. லீனஸ் கிறிஸ்தோத்திரம் அவர்கள்.



இவ்வளவு நேரமும் நம்மவர்களின் ஆற்றல்களில் சிலவற்றைப் பார்த்தோம். இப்போ மாரிகாலம் வந்தால் நம் வாலிபர்கள் எப்படித் தமது பொழுதைக் கழிப்பார்கள் என்று மேலோட்டமாகப் பார்ப்போம். மாரிகாலம் வந்தால் நம் வாலிபர்களுக்கு அது ஒரு பெருமகிழ்ச்சியின் காலம். எமது கோவில் முன்றலில் நின்ற தேக்க மரம் பூத்துக்காய்க்கும். இதைக் கத்தாப்பு மரம் என்று சொல்வதுதான் பொருந்தும். மரம் பூத்துக் காய்காய்த்து முற்றும்வரை யாரும் காய்களைப் பறிக்காதவாறு கட்டுப்பாடு இருக்கும். காய்கள் ஓரளவு முற்றியபின்பு காய்களைப் பறிப்பதற்கு அனுமதிக்கப்படும். அந்தவேளையில் கூட எல்லோரும் ஒரே நேரத்தில் ஏறிப் பறிப்பதற்கு விடமாட்டார்கள். ஒரு பகுதியினர் ஏறிப்பறிக்க அடுத்த பகுதியினர் கீழே நின்று காய்களைச் சேகரிப்பார்கள். அதன் பின்பு எல்லோரும் பங்கிட்டுக் கொள்வார்கள். காய்கள் நன்றாக முற்ற முன்னதாகவே பறித்து முடித்து விடுவார்கள். நன்றாக முற்றிய காய்களின் விதை கடினமானதாக இருக்கும். இந்த விதையை கல்லில் வைத்து வேறொரு கல்லால் அடித்து அதற்குள் இருக்கும் பருப்பை எடுத்துச் சாப்பிடுவார்கள். ஒரு முறை "ஆசை" என்பவர் மரத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்தார். கடவுள் கிருபையினால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.



மாரி காலம் என்றால் எமது ஊரில் தும்பி என்ற ஒருவகைப் பூச்சி பறந்து திரிவதைப் பார்த்தால் சிறியவகை உலங்குவானூர்தி (கெலிகப்ரர்) பறப்பது போல் காணப்படும். மரங்களில் ஒட்டி இருக்கும் தும்பிகளைப் பிடித்து மகிழும் காட்சி மிகவும் சுவாரசியமாக இருக்கும். தும்பிகளைப் பிடிப்பதற்கு நம் வாலிபர்கள் மாட்டின் வாலில் உள்ள மயிரைப் பிடுங்கி அதில் சுருக்குத் தடம் செய்து அதை ஈக்கில் ஒன்றில் கட்டி மரத்தில் தங்கி இருக்கும் தும்பியின் செட்டையினுள் தந்திரமாகச் செலுத்தி தும்பியைப் பிடிப்பார்கள். சோறு, மாம்பழம், கண்ணாடி, கள்ளச்சூரியன், ஊசித்தும்பி. என்றெல்லாம் பலவகை உண்டு. பொழுது சாய்ந்து கருக்கலான நேரத்தில் ஒரு தும்பியை நூலில் கட்டி அதைப் பின்பு ஈக்கிலில் கட்டி அசைவாட்டும்போது ராசான் தும்பி என்றழைக்கப்படும் பெரிய தும்பி அதைச் சாப்பிடுவதற்கு வந்து வாயால் கடித்தப் பிடிக்கும். அப்போது அதைப்பிடிப்பார்கள். ராசான் தும்பியிலும் பல வகை உண்டு அதில் ஒன்று வெள்ளிஅறனால் என்று அழைக்கப்படுகிறது. தும்பி பிடிப்பதற்கு வாலிபர்கள் மாட்டின் வால் மயிரைப் பிடுங்குவதினால் இந்தக்காலங்களில் மாடுகள் வாலிபர்களைக் கண்டதும் வாலைக் கிளப்பிக்கொண்டு ஓட்டம் பிடிக்கும்.

மாரி காலம் வந்து மழை பெய்யத் தொடங்கியதும் ஆங்காங்கே குப்பை மேடுகளில் மிளகாய், பாவை, பூசனி, தக்காளி, கத்தரி. போன்ற காய்கறிக் கன்றுகள் முளைக்கும். இவற்றை பாடசாலை முடிந்து வரும்போது மாணவர்கள் தேடிச்சென்று கிண்டி எடுத்து வந்து தமது வீடுகளில் நட்டு வளர்த்துப் பயன்பெறுவார்கள்.



இதைவிட இன்னும் உச்சாகப்படுத்தும் பொழுதுபோக்கு என்னவென்றால் மாரி மழை காலத்தில் மண்குளி என்ற இடத்தில் உள்ள கிணறுகள் எல்லாம் நிரம்பி வழியும். அதற்குள் குதித்து நீந்துவது பொடிகளுடைய பிரதான விளையாட்டாக இருக்கும். இந்த வேளையில் கிணற்றுத் தண்ணீர் கலங்கிவிடும். இதனால் கிணற்றில் வாளியால் தண்ணீர் அள்ளிக் குளிப்பவர்களிடம் பொடிகள் ஏச்சு வாங்குவார்கள். சில வேளைகளில் வாளி அறுந்து கிணற்றுள் விழுந்துவிட்டால் பொடிகள் சுளி ஓடி எடுத்துக் கொடுப்பார்கள். மண்குளி என்ற இடத்தில் பட்டின சபையால் அமைக்கப்பட்ட நான்கு கிணறுகள் காணப்படுகிறது. இதைவிட துரையப்பா கிணறு, உடையார் கிணறு, சூசையப்பர் கோவில் கிணறு என்று வேறு கிணறுகளும் காணப்படுகிறது. காலை ஐந்து மணிக்கெல்லாம் இந்தக் கிணறுகளுக்கு மக்கள் தோய்ப்பதற்கான உடு புடவைகளுடன் சீயாக்காய், அரப்பு, பழையகஞ்சி என்பவை தலைக்கு வைத்து தோய்வதற்கு ஆயத்தமாக வருவார்கள். றெக்ஸ்சோனா, றாணிசந்தன சோப், லக்ஸ், டேக்னைற் சோப் வாசனைகள் மூக்கைத் துளைக்கும். கிணறுகள் மட்டுமல்ல அக்கா தங்கைக் குளம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறணவண்ணான் குளம், பாலாவிக் குளங்களையும் மக்கள் பயன்படுத்தினார்கள். கிணற்றில் தண்ணீர் ஆழமாக இருக்கும் காலங்களில் ஆண்கள் ஒரு உன்னலில் (இழுவையில்) போட்டா போட்டியாகத் தண்ணீர் அள்ளித் தோய்வது தனி அழகாக இருக்கும். கிணறு குளங்களில் மட்டுமல்ல கடலிலும் நீந்திக் குளிப்பார்கள். இதனால் நமது வாலிபர்கள் நீச்சல் போடுவதில் சிறந்து விளங்கினார்கள். றேஸ் அருமை (கடற்படையில் கடமைஆற்றியவர்) குறிப்படத்தக்கவர். லாசர் ஜோன்சன் இவருக்கு ஒரு கால் சரியாக வழங்காது அப்படி இருந்தும் நீச்சல் போட்டியில் பங்கெடுத்து இரண்டாம் இடத்தைப் பெற்றார்.



பொதுவாக நமது கலாச்சாரத்தில் ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவுமே விளையாடுவார்கள். இருந்த போதும் ஆண்களும், பெண்களும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்களும் காணத்தான் செய்கின்றது. அந்தவகையில் கிளித்தட்டு விளையாடுதல், ஊஞ்சல் ஆடுதல் விளையாட்டுக்களில் ஆண்களும், பெண்களும் இணைந்து விளையாடிய விளையாட்டாக இவை இரண்டும் காணப்படுகிறது. இதில் ஊஞ்சல் ஆடுவது குறிப்பிடத்தக்கது. நமது கடற்கரையில் காணப்பட்ட பூவரசம் மரத்தில் கிறிஸ்மஸ் காலங்களில் ஊஞ்சல் கட்டி ஆடும் காட்சி மறக்க முடியாததொன்று. பூவரசு மரக்கிளையில் இரண்டு பகுதிகளாகக் கயிறுகள் கட்டப்பட்டு அதன் நடுவே நீளமான பலகை ஒன்றை வைத்து அதில் சிலர் இருக்க இரண்டு பக்கக் கயிற்றுப் பகுதியிலும் இருவர் நின்ற வண்ணம் ஊஞ்சலை உன்னி, உன்னி வலித்து ஆடும் போது அவர்கள் பாடும் பாடல்கள் எல்லாம் கேட்பதற்கு இன்பமாக இருக்கும். அதில் ஒரு பாடல் இப்போதும் காதில் தொனிக்கின்றது. என்ன பாடல் என்று கேட்க ஆவலாக இருக்கிறதா? உங்களுக்கும் தெரிந்த பாடல்தான். "அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்" என்ற பாடல்தான் அந்தப் பாடல். இந்தக் காட்சிகளை எல்லாம் நாம் எப்போது காண்போம்?.



வேறு பல விளையாட்டுக்களும் காணப்பட்டன அதற்கிடையில் ஒன்றைச் சொல்லிவிட்டு அடுத்ததற்குப்போவோம். எட்டுமூலைபட்டம், பாம்பன்பட்டம், ச பட்டம், பிராந்துப்பட்டம். என்று பலவிதமான பட்டங்களைக் கட்டிப் பறக்கவிட்டு மகிழ்வார்கள். சில பட்டங்களில் மூங்கில் தடியை வில்லாக வளைத்து அதில் பனை ஓலை அல்லது செப்புத் தகட்டை தடியின் இரு ஓரங்களையும் இணைத்துப் பொருத்திப் பட்டத்தின் பின்புறமாக இணைத்துப் பறக்க விடும்போது அதிலிருந்து ஓசை வரும் இதை விண் கூவுதல் என்று அழைப்பார்கள். இந்த ஓசை மிகவும் சத்தமாக இருக்கும். பல மைல் தூரத்துக்கு இந்த ஓசை கேட்கும். விண் கட்டிப் பட்டம் விடுவதை பிற்காலத்தில் படையினர் குறிப்பாக கடற் படையினர். விமானப்படையினர் தடை செய்தார்கள் காரணம் காற்றொலிவாங்கிக்கு அதுபெரிதும் இடைஞ்சலாகக் காணப்பட்டது.





சமுதாயத்தில் காணப்பட்ட விளையாட்டுக்கள் உடற்பயிற்சிக்கு மட்டுமல்ல அறிவு வளர்ச்சிக்கும் பக்க பலமாகக் காணப்பட்டன. எட்டு,அல்லது தாயம் என்று அழைக்கப்படும் விளையாட்டு. இதில் நான்கு நபர்கள் அல்லது எட்டு நபர்கள் சோடி அமர்ந்து விளையாடுவார்கள். இந்த விளையாட்டுக்கு நான்கு கடற்சோகிகள், அல்லது நான்கு நத்தை ஓடுகள் அவசியமானது. தாயம் விளையாடும்போது ஒரு சோகி நிமிர்ந்தும் மூன்று சோகி கவிழ்ந்தும் கிடந்தால் தாயம் என்றும், இரண்டு சோகி நிமர்ந்தும் இரண்டு சொகி கவிழ்தும் கிடந்தால் இரண்டு என்றும், மூன்று சோகி நிமிர்ந்தும் ஒரு சோகி கவிழ்ந்தும் கிடந்தால் மூன்று என்றும், நான்கு சோகிகளும் நிமிர்ந்து கிடந்தால் நான்கு என்றும், நான்கு சொகிகளும் கவிழ்ந்து கிடந்தால் எட்டு என்றும் அழைப்பார்கள். இவை மட்டுமல்ல பசுவும் புலியும், டாம், கரம்போட், பல்லாங்குழி அல்லது பாண்டி என்றழைக்கப்பட்ட விளையாட்டுக்களும் விளையாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேணிகள்மேல் பேணிகளைவைத்து விளையாடும் விளையாட்டு இப்போ பத்து வாலிபர்கள் ஒன்று கூடினால் ஐந்து ஐந்து நபர்களாகப் பிரிந்து இரண்டு பகுதிகளாகப் பிரிந்துகொள்வார்கள். ஒரு பகுதியினர் பேணிகள்மேல் பேணிகளை அடுக்கி ஆயத்தமாக நிற்பார்கள். அடுத்த பகுதியில் ஒருவர் சிறிய றபர் பந்தினால் எறிந்து பேணிகளை விழ வைப்பார்கள். அடுத்த பகுதியினர் விழுந்த பேணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்க வேண்டும். பேணிகளை அடுக்கும்வரை பந்தை எறிந்த அணியினர் பேணிகளை அடுக்கும் அணியினரை நோக்கி பந்தால் எறிந்து தொந்தரவு செய்வார்கள். பேணிகள் அடுக்கி முடிந்தால் தொந்தரவு செய்வதை நிறுத்தி விடுவார்கள்.



றவுண்றெஸ் என்ற ஒருவிளையாட்டு. 100—150 யார் சுற்றளவை நான்கு இடைவெளி தூரத்தை கற்கள் வைத்து இடம் குறிப்பிட்டபின்பு முதல் கல்லில் நிப்பவரை நோக்கி பந்தை வீசுவார். இந்தப் பந்தை முதல் கல்லில் நிப்பவர் துடுப்பால் அல்லது கனமான தடிஒன்றால் அடித்துவிட்டு மூன்று கல் இடைவெளிகளையும் ஓடி எற்கனவே நின்ற இடத்துக்கு வரவேண்டும். அடித்த பந்தை ஆங்காங்கே நிற்பவர்கள் பிடித்து எறிந்தவரிடம் எறிவார்கள். எறிந்தவர் பந்தைப் பிடித்து அவர் நின்ற இடத்தில் உள்ள கல்லில் தொட்டார் என்றால் அடித்தவர் போட்டியில் இருந்து விலக வேண்டும்.



பெண்கள் விறுவிறுப்பான விளையாட்டு ஒன்று விளையாடுவார்கள். தரையில் பெட்டி வடிவில் மூன்று சதுரங்களை ஒன்றன் மேல் ஒன்றாக வரைவார்கள். அதன் பின்பு மூன்றாவது சதுரத்தின் மேல் வலப்பக்கம் ஒன்றும் இடப்பக்கம் ஒன்றுமாக இரண்டு சதுரங்களை அமைப்பார்கள். அதன் மேல் ஒரு சதுரம் அதற்கு மேல் நீள் சதுரத்தில் இரன்டு சதுரம் வரைவார்கள்! நீள் சதுரத்தின் முன் நின்று நெற்றியில் வட்ட வடிவான ஓட்டுத் துண்டு ஒன்றை வைத்து மேல்நோக்கிப் பார்த்தபடி சரியா?சரியா? எண்று சதுரப் பெட்டிகளைக் கடந்து செல்ல வேண்டும். இவ்வாறு நடந்து செல்லும் போது கோட்டை மிதித்தால் விளையாட்டில் இருந்து விலக வேண்டும். சதுரங்களை கடந்த பின்பு மேலா? கீழா? என்று திரும்பிப் பார்க்காமல் கேட்பார். மேல் என்றால் மேலால் கீழ் என்றால் கீழால் சில்லை எறிய வேண்டும். சில்லு கோட்டிலோ அல்லது கோட்டின் வெளியிலோ விழுந்தால் விளையாட்டில் இருந்து விலகவேண்டும். சதுரத்துக்குள் விழுந்தால் விளையாடும் நபர் திரும்பி ஒரு காலை மடித்து ஒரு காலால் கெந்திக் கெந்தி வந்து சில்லை எடுத்துக் கொண்டு கெந்திக் கெந்தி சதுரங்களைக் கடக்க வேண்டும். கெந்தி வரும்போது கோட்டை மிதித்தாலும் விளையாட்டில் இருந்து விலகுவார். கெந்தி விளையாடியவர்களுக்கே இப்போது இந்த விளையாட்டு ஞாபகம் இருக்குமோ அவர்களிடம் கேட்டால்த்தான் தெரியும்.



கயிறு அடித்து விளையாடுவதும் நல்லதொரு உடற் பயிற்சி. இந்த விளையாட்டை பெரும்பாலும் பெண்கள்தான் விளையாடுவார்கள். ஆண்களும் விளையாடலாம். ஆனால் ஆண்கள் விளையாடுவது குறைவு. கிட்டத்தட்ட 6 அல்லது 10 அடி நீளமான கயிற்றின் இரண்டு தலைப்பையும் இரண்டு கைகளினால் பிடித்துக்கொண்டு துள்ளித் துள்ளி கயிற்றைச் சுழற்றிச் சுழற்றி அடிக்க வேண்டும். கயிற்றை முன்னாலும் சுழற்றி அடிக்கலாம் பின்னாலும் சுழற்றி அடிக்கலாம். கயிற்றை சுழற்றி ஓடியபடியும் நீண்ட தூரத்துக்கு அடித்து விளையாட லாம். பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கும் இவ்விளையாட்டைப் பயன்படுத்துவார்கள். தனி ஒருவர் மட்டுமல்ல இருவர் சேர்ந்தும் விளையாடுவார்கள்.



ஒளித்துப் பிடித்து விளையாடுவது. ஒருவருடைய கண்களை ஒருவர் கைகளினால் பொத்திப் பிடிக்க ஏனையவர்கள் ஒளிந்துகொள்ள வேண்டும். கைகளை எடுத்ததும் ஒளிந்துகொண்டவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடிப்பவர் ஒளிந்திருப்பவரைக் கண்டதும் அவருடைய பெயரைச் சொல்லி கண்டேன் என்று சொல்ல வேண்டும். இந்த விளையாட்டை ஆண்கள் சற்று வேறு விதமாகவும் விளையாடுவார்கள். கள்ளன் பொலிஸ் என்று சொல்லி விளையாடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியங் கொட்டைகள் சுண்டி விளையாடுவார்கள். செகரித்து வைத்த புளியங் கொட்டைகளை தரையில் கொட்டி இரண்டு புளியங்கொட்டைகளுக்கிடையே உள்ள இடைவெளியே ஒரு விரலினால் கோடு வரைந்து கோடு வரைந்த புளியங்கொட்டையை ஏனைய புளியங்கொட்டைகளில் படாதவாறு ஒன்றை ஒன்று தட்டுமாறு சுண்ட வேண்டும். கோடு வரையும்போது விரல் புளியங்கொட்டையில் பட்டால் அவர் ஆட்டத்தை அடுத்தவரிடம் ஆடும்படி கொடுத்து விடுவார். யார் கூடுதலாக புளியங்கொட்டைகளைச் சேகரிக்கின்றாரோ அவர் வெற்றிபெற்றவர் ஆவார்.



பம்பரம் ஆட்டும் விளையாட்டு என்றதொரு விளையாட்டுக் கலை நம்முன்னோர்களினால் விளையாடப்பட்ட விளையாட்டுகளில் பிரபல்யமானது. மரத்தால் செய்யப்பட்ட கூம்புவடிவிலான பம்பரத்தை மெல்லிய கயிற்றினால் சுற்றி கயிற்றின் ஒரு தலைப்பைப் பிடித்துக்கொண்டு பம்பரத்தை வீசி எறிந்து கயிற்றை பின் நோக்கி வேகமாக இழுக்கும்போது பம்பரம் நிலத்தில் விழுந்து சுழலத்தொடங்கும். நிலத்தில் சுழன்றுகொண்டிருக்கும் பம்பரத்தை அடுத்தவர் தனது பம்பரத்தினால் குறிபார்த்து எறிந்து சுழற்றுவார். இப்படியாக எறிந்து சுற்றும்போது முதலில் சுற்றிக்கொண்டிருக்கும் பம்பரம் உடைந்து விடுவதும் உண்டு. அனேகமான பம்பரங்களில் பம்பரத்தின் ஆணியினால் குத்தப்பட்ட அடையாளங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அதுமட்டுமல்ல முதலில் பம்பரத்தை தரையில் ஆடவிட்டு அதை பம்பரக் கயிற்றினால் தந்திரமாகத் தூக்கித் தங்கள் உள்ளங்கையில் ஆடவிடுவார்கள். இந்த விளையாட்டு நமது சமுகத்தில் முற்றாக மறைந்து விட்டதென்றே சொல்லலாம்.



இவற்றுக் கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் நமது வாலிபர்களிடம் இன்பகரமான பொழுதுபோக்கு ஒன்று காணப்பட்டது. V வடிவிலான கவர்த்தடியை வெட்டி அதில் சயிக்கிள் ரியூப்பை ஒரு அங்குல அகலத்தில் ஒரு அடி நீளத்துக்கு இரண்டு துண்டுகள் வெட்டி அதைக் கவர்த் தடியின் இருதலைப்பிலும் கட்டி மற்றய தலைப்பில் ஒரு அங்குல அகலம் இரன்டு அங்குல நீளத்தில் செருப்புத் தோலைக் கட்டி தோல் பகுதியில் சிறிய கல் ஒன்றை வைத்து அணில், குருவி போன்றவற்றைக் குறிபார்த்து அடித்து விழுத்துவார்கள். சிறுவர்களுக்கு அது விளையாட்டு. அதைப்பார்க்கும் பெரியவர்களுக்கோ அது மனதுக்கு வேதனையைக் கொடுக்கும்.





மாபிள்(போளை) அடித்து விளையாடுவதும் சிறந்த விளையாட்டுக்களில் ஒன்று. சதுரமாகக் கோடு அமைத்து நடுவில் சிறு பள்ளம் ஆமைத்து அதற்குள் மாபிளைப் போடுவார்கள். நடுவில் அமைத்த குளியில் மாபிள் விழுந்தால் ஜில் என்று சொல்லுவார்கள், அப்படி பள்ளத்தில் மாபிள் விழாத பட்சத்தில் சதுரத்தில் உள்ள மாபிளில் ஒன்றை குறிபார்த்து இன்னொரு மாபிளால் அடிக்கவேண்டும். அடிக்கும் போது ஒரு மாபிளை மட்டும்தான் அடிக்க வேண்டும் சதுரத்துள் உள்ள மற்றைய மாபிள்களில் அடிக்கும் மாபிள் படக்கூடாது. சதுரத்துள் உள்ள மாபிளை இன்னொரு மாபிளால் எறிந்தும் அடிக்கலாம் அல்லது போனால் மாபிளை இரண்டு விரலால் பிடித்தபடி மற்றய கை விரலால் சுண்டியும் அடிக்கலாம். இந்த விளையாட்டை நடந்து நடந்தும் விளையாடலாம்.





கிட்டியும் புல்லும் என்றதொரு விளையாட்டும் காணப்பட்டது. தரையில் 3 அங்குல நீளத்தில் 2 அங்குல அகலத்தில் சிறிய பள்ளம் அமைத்து அதன் மேல் 4 அங்குல உருண்டைத் தடி ஒன்றை வைத்து ஒரு அடி (1அடி) தடி ஒன்றினால் கிண்டி எறிய வேண்டும். அப்படியாகத் தூக்கி எறியப்பட்ட தடியை (புல்) அடுத்த தடியால் (கிட்டி) தட்டி உயரே பறக்க வைத்து கீழே விழமுன் அடிக்க வேண்டும். பின்பு பள்ளம் அமைத்த இடத்தில் இருந்து கிட்டித்தடியால் எத்தனை அடி தூரம் என்று அளக்க வேண்டும் இது சற்று ஆபத்தான விளையாட்டாகக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சயிக்கில் (உந்துருளி) ரயர், சயிக்கில் றிம் ஓட்டி மகிழ்தல். வாலிபப் பருவத்தில் இது மிக இன்பமான விளையாட்டு. பாவனைக்கு பயன்படாத சயிக்கில் ரயர்களை கையினால் அல்லது சிறிய தடியினால் தட்டித் தட்டி உருட்டிய வண்ணம் அதனுடன் சேர்ந்து ஓடுவது. அவ்வாறே சயிக்கில் றிம்மையும் பயன்படுத்துவார்கள். சிலர் சிறிய இரும்பினாலான வளையத்தை பனை மட்டையைப் பயன்படுத்தி ஓட்டுவார்கள். இதைப் பயன்படுத்தும் காலத்தில் வாலிபர்கள் கடைக்குப் போவதானாலும் இவற்றோடுதான் செல்வார்கள்.



நமது ஊரில் முள்முருங்கை, வாதனாறாணி, சீர்மைக்கிழுவை, பூவரசு, கிழுவை, முற்கிழுவை போன்ற மரங்களின் கதியால்களை வேலிக்குப் பயன்படுத்தினார் கள். இதில் பூவரசு மர இலையைப் பறித்து அதைச் சுருட்டி குழல் வடிவமாக அமைத்து பிப்பி என்றழைத்து ஊதுவார்கள் அதிலிருந்து ஓசை வெளிப்படும்.



ஆகா இன்னுமொரு இன்பகரமான விளையாட்டு அதுதான் சயிக்கிள் ஓடப் பழகுதல். கெந்திக் கெந்தி ஓடுவது. வாலிபர்கள் சிறுவர்களாக இருப்பார்களானால் பாறுக்கு மேலாகக் காலைப் போட்டு ஓட முடியாது. அப்போது அவர்கள் பாறுக்குக் கீழாக தமது காலை விட்டு பெடல் செய்து ஓடுவார்கள். பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். இந்தக் காலங்களில் வாலிபர்களுடைய கால்களில் காயங்கள் அதிகமாகக் காணப்படும். சொந்தமாகச் சயிக்கில் இல்லாதவர்கள் சயிக்கில் பழுது பார்க்கும் கடைகளில் வாடகைக்கு சயிக்கிலை வாங்கி ஓடிப் பழகுவார்கள். தற்போது சயிக்கில் ஓடும் பழக்கம் அருகிவருகிறது. பதிலாக மோட்டார் சயிக்கில் ஓடும் பழக்கம் அதிகரித்து வருகிறது.



இவ்வளவு நேரமும் மனதைக் கிளுகிளுக்க வைத்த விடயங்களைப் பார்த்தோம். அடுத்து சற்று வித்தியாசமான சம்பவங்களைப் பார்ப்போம். இதைப் படிக்கும்போது சில வேளைகளில் வாயில் உமிழ்நீர் சுரக்கலாம். வாடி வீட்டு வளவில் நின்ற புளியமரத்தில் காணப்படும் புளியங்காய்களை கல்லினாலோ அல்லது தடியினாலோ எறிந்து விழவைத்து எடுத்துச் சாப்பிடுவது. புளியங் காய்களை சேகரித்து உப்பும் மிளகாய்தூளும் சேர்த்து இடித்து அதனுடன் உண்பது அலாதி இன்பம். சிலர் புளியங்காய்களை உப்பு, மிளகாய்த்தூள் உடன் சேர்த்து இடித்து சம்பலாகவும் உண்பார்கள். சிலர் புளியங்காய்களை அவித்து கறிகளுக்கும் பயன்படுத்துவார்கள். புளியங்காய்களில் செம்பழம் மிகவும் ருசியாகயாக இருக்கும். வாடி வீட்டில் எல்லாமாக ஏழு புளியமரங்கள் காணப்பட்டன. இதில் சக்கரைப் புளி, சீனிப்புளி மிகவும் இனிப்பாக இருக்கும். வாடி வீட்டு வளவில் புதிதாக காவல்நிலைய தொழிலாளர்களுக்கு(பொலிஸ் காரருக்கு)தங்கு விடுதி அரசாங்கத்தால் கட்டப்பட்ட போது புளிய மரங்கள் அகற்றப்படாதமை வரவேற்கத் தக்கது. இந்த வாடி வீடு அமைந்துள்ள நிலப்பகுதி தங்கமாணிக்கம் நீக்கிளாப்பிள்ளை அவர்கட்குச் சொந்தமாக இருந்த போது பிரித்தானிய அரசாங்கம் தங்கமாணிக்கத்துடன் வழக்காடி அரசுரிமையாக்கி வாடி வீடு கட்டப்பட்ட தாக தங்கமாணிக்கம் அவர்களால் சொல்லக் கேள்வி.



தங்கமாணிக்கத்தின் வளவில் நின்ற விளாமரத்து விளாங் காய்களை எடுப்பதற்கு நேரகாலத்துடன் எழுந்து சென்று எடுத்துச் சாப்பிட்ட காலங்களை மட்டுமல்ல, மாட்டுக்காலை தென்ன மரத்தில் இளநீர் குடித்த காலங்களையும் மறக்கமுடியாது. மாட்டுக்காலை இளநீர் குடிப்பதில் அன்று ஒரு சுகம் காணப்பட்டாலும் அது எவ்வளவு தப்பான செயல் என்பது இப்போது விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமது சமுதாயத்தில் சிலரது குடும்பங்களில் காணப்பட்ட பசி, பட்டினியைப் பெரிதும் போக்கியது கற்பகதரு என்று அழைக்கப்பட்ட பனம் பழம். இதில் நுங்கு, என்றும் சீக்காய், என்றும் பனம் பழம் என்றும். பனங்காய் பயன்பட்டது. பனங்காய் முற்றாத பருவத்தில் அதன் குமிழ்ப்பகுதியை சற்று ஆளமாக வெட்டினால் மூன்று கண் வடிவத்தில் நுங்கு காணப்படும் அதை பெருவிரலினால் தோண்டி எடுத்துச் சாப்பிடுவார்கள். அதுமிகவும் இனிப்பாக இருக்கும். முற்றிய பனங்காயை சீக்காய் என்றழைப்பார்கள். இதை பெரும்பாலும் மாட்டுக்கு உணவாகப் பயன்படுத்துவார்கள் சிலர் இதை அவித்துச் சாப்பிடுபவர்களும் உண்டு. பனை மரத்திலிருந்து பழுத்து விழும் பனம் பழங்களை நெருப்பில் சுட்டு உண்பவர்களும் உண்டு. பனம் பழத்தில் விதை இல்லாத சக்கையை சொத்தம்பி என்றழைப்பார்கள்.



பனம் பழத்திலிருந்து அதன் கழியைப் புளிந்து (கறண்டியால் வழித்து எடுத்து) பனங்காய்ப்பலகாரம், சுடுவார்கள். பனங்கழியை பாயில் பரவிப் பூசிக் காயவைத்து பனாட்டுச் செய்வார்கள். பாணிப் பனாட்டு மிகவும் சுவையாக இருக்கும். பனம் பாளையை பதப்படுத்தி அதிலிருந்து பதநீர் எடுப்பார்கள். இதிலிருந்து பனம்வெல்லம் தயாரிப்பார்கள் தேனீர், கோப்பி நமதுநாட்டில் அறிமுகமாவதற்க்கு முன்பு நம் முன்னோர்கள் காலையில் தேனீருக்குப் பதிலாக பதநீரையே அருந்தி வந்தனர். பனம் விதைகளை பாத்தி அமைத்து பராமரித்து அதிலிருந்து பனம்கிழங்கை எடுத்து காயவைத்து இடித்து மாவாக்கி பிட்டு, கூழ் போன்ற உணவு வகைகளைத் தயாரித்தார்கள். பனங்கிழங்கை அவித்து அதன் தும்புகளை வார்ந்து வட்டம் வட்டமகவும் நீளமாகவும் சீவிக் காயவைத்தும், இரண்டாகக் கிழித்துக் காயவைத்தும், காயவைத்த கிழங்கை இடித்து மாவாக மாற்றியும் உண்பார்கள். இதை புளுக்கொடியல் என்று அழைப்பார்கள். பனங்கிழங்கை நெருப்பில் சுட்டும் உண்பார்கள். சுட்ட கிழங்கும், அரைப்பதமாகக் காய்ந்த கிழங்கும் மிகவும் சுவையாக இருக்கும்.



அன்னமுன்னா பழக்காலத்தில்(பீத்தாப்பழம்)நம்மவர்கள் தமது வீடுகளில் உள்ள மரங்களில் பறித்து அதைப் பழுக்க வைத்து தாமும் உண்டு மற்றவர்களுக்கும் கொடுப்பார்கள். இதில் முள்ளு விரிந்த காய்களைப் பறித்தே பழுக்க வைப்பார்கள். இதோடு நம் வீடுகளில் மாதுளம் பழ மரங்களும் காணப்பட்டது. இந்தப் பழங்களையும் மக்கள் விரும்பி உண்பார்கள். மாதுளம் பழங்களை அணில், கிளி முதலியவற்றில் இருந்து பாதுகாக்க பழைய சீலையினால் மறைத்துக் கட்டிவிடுவார்கள்.



1975ஆம் ஆண்டு சென் யேம்ஸ் பாலர் பாடசாலை இந்திரா செபமாலைமுத்து அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. பாலர் பாடசாலையை ஆரம்பித்து வைத்தவர் அமரர் செல்லத்துரை ஆசிரியராவார். நமது சமுகத்துப் பிள்ளைகள் மட்டுமல்ல அயல் சமுகத்துப் பிள்ளைகளும் படித்தார்கள். பாடசாலைக்கு ஆரம்பத்தில் பிள்ளைகள் வரும்போது அழுதுகொண்டு வந்தார்கள் ஒரு இருநாட்களில் ஆசிரியையின் திறமையினால் மிகவும் மகிழ்ச்சியோடு வர ஆரம்பித்தார்கள். நத்தார் தினத்தையொட்டி பட்டினசபை திறந்த வெளியரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. புனித யாகப்பர் பெருவிழா அன்று ஆலய திறந்த வெளியரங்கிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, ஆசிரியரின் திறமையை அவதானித்த பட்டினசபை அலுவலகம் தங்களுடைய செலவில் பாடசாலையைப் பொறுப்பெடுத்து நடத்தலாயினர். அரசியல் சூழ்நிலை காரணத்தால் கைவிடப்பட்ட இப்பாடசாலை அமரர் P.N. மரியநாயகம் அவர்களின் அயரா முயற்சியால் பாலர் பாடசாலை சென் யேம்ஸ் சனசமுக நிலையக் கட்டிடத்தில் சமாதானக் காலத்தின் பின் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை நமது சமுகத்துப் பெண்கள் மிகவும் விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் காணப்படுவார்கள். காரணம் அந்த நேரம்தான் தண்ணீர்க் குழாயில் தண்ணீர் வருகின்ற நேரம். காலை 4 மணிக்கெல்லாம் தண்ணீர்க் குழாயடியில் குடங்களை வைத்து விடுவார்கள். குடங்கள் வைக்கும் முறையிலேயே தண்ணீரைக் குடங்களில் பிடிக்கவேண்டும். குடும்ப அங்கத்த வர்களுக்கு ஏற்றாற் போல் தண்ணீர் மட்டுப்படுத்தப்பட்டிருந் தது கோடை காலத்தில் தண்ணீர் சவர்(கயரத்தொடங்கும்) எடுப்பதால் லோப்பர் கிணறு என்ற அழைக்கப்படும் கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்துவருவார்கள். இந்தக்கிணறு கரம்பொன் பாலாவி என்ற இடத்தில் காணப்பட்டது. பெண்கள் தண்ணீர்க் குடத்தை தலையிலும், இடுப்பிலும் சுமந்து வருவார்கள். ஆண்கள் தண்ணீர்க் குடத்தை தோளில் சுமந்து வருவார்கள். மண்குடம், அலுமினியக் குடம், பித்தளைக் குடம் என்பன தண்ணீர் எடுத்துவரப் பயன்படுத்தப்பட்டது. காலப் போக்கில் ஆண்கள் பிளாஸ்ரிக் பரல்களில் தண்ணீர் எடுக்கலாயினர். ஆண்கள் சயிக்கிளில் சருவக் குடத்தை தோளில் சுமந்து எடுத்து வந்தார்கள். சில ஆண்கள் சயிக்கில் கரியரில் ஒரு குடத்தைக் கட்டிக்கொண்டும், ஒரு குடத்தை தோளில் சுமந்து கொண்டும் வருவார்கள்.



கோழிக் குஞ்சு பொரிப்பதற்காக கடகப் பெட்டியில் வைக்கோலைப்பரப்பி அல்லது குருமணலைப் பரப்பி அதன்மேல் முட்டைகளை வைத்து கோழியை அதன் மேல் படுக்க வைப்பார்கள். கோழி முட்டைகளை அடைகாக்கும். 15 நாட்களுக்கப் பிற்பாடு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து அதற்குள் ஒவ்வொரு முட்டையாய் மெதுவாகப் போடுவார்கள். குஞ்சு இருக்கும் முட்டை தண்ணீரின் குளிர்ச்சியால் ஆடும். ஆடாத முட்டை கூள் முட்டை. அதிலிருந்து குஞ்சு பொரிக்காது. 21ஆம் நாளில் குஞ்சு பொரிக்கும். பருந்து வந்து குஞ்சுகளைத் தூக்காதபடி தாய்க் கோழி குஞ்சுகளைப் பாதுகாப்புடன் வளர்க்கும். சில வேளை பருந்து குஞ்சுகளைத் தூக்கிச் செல்லுமானால் கோழி பறந்து சென்று குஞ்சுகளைக் காப்பாற்றும். பருந்தின் பிடியில் இருந்து குஞ்சுகளைப் பாதுகாக்க, குஞ்சுகளுக்கு சிகப்பு, மஞ்சள், நீல நிற சாயம் பூசுவார்கள் தாரா முட்டைகளை கோழி இடம் அடைவைத்தே தாராக் குஞ்சு களை பொரிக்க வைப்பார்கள். இனிமையாகப் பாடும் குயில் காகத்தின் கூட்டில் முட்டையை விட்டுச் செல்லும். காகம் அதை அடைகாத்து குஞ்சுபொரித்து வளர்க்கும் காலம் செல்லச் செல்ல குயிலின் குரலின் வித்தியாசத்தைத் தெரிந்ததும் குயில்க் குஞ்சை கூட்டில் இருந்து அடைகாத்த காகம் துரத்தி விடும்.



முத்துத் தெறித்தல் அல்லது கொக்கான் வெட்டுதல். இதற்கு 5 சிறிய கற்கள் தேவை. முதலில் 5 கற்களையும் தரையில் போடுவார்கள். முதலில் ஒரு கல்லை எடுத்து மேல் நோக்கி எறிந்து தரையில் உள்ள நான்கு கற்களில் ஒன்றை கையில் எடுத்து அதேகையால் மேலே எறிந்த கல்லை தரையில் விழ முன்பு பிடிக்கவேண்டும். இப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக நான்கு கற்களையும் எடுக்க வேண்டும். அதன்பின் திரும்பவும் 5 கற்களையும் தரையில் போட்டு 2, 2. கற்கள் அதன்பின் 3, 2 கற்கள் கடைசியாக 4 கற்களையும் சேர்த்து எடுத்த பிற்பாடு திரும்பவும் கற்களைத் தரையில் போட்டு ஒரு கல்லை எடுத்து மேலே எறிந்து அதை இப்போது கைகளைப் பொத்திப் பிடித்தபடி பெருவிரலுக்கும், சுட்டுவிரலுக்கும் இடையில் உள்ள வட்டத்துக்குள் ஏந்த வேண்டும். 5 கற்களையும் இப்படியாக ஏந்தியதின் பின்பு 5 கற்களையும் ஒன்றாக மேல் நோக்கி மெதுவாக எறிந்து எல்லா விரல்களையும் ஒன்று சேர்த்து நீட்டிய படி உள்ளங்கை தரையைப் பார்த்தபடி இருக்க புறம்கையில் 5 கற்களையும் ஏந்த வேண்டும். தரையில் போட்ட கற்களை எடுக்கும் போது கை விரல்கள் அடுத்த கல்லில் படக்கூடாது. பட்டால்(முட்டினால்) விளையாட்டில் இருந்து விலகவேண்டும்.

எமது சமூகத்து மக்களுக்கு அவசரகால சேவை, மங்களகரமான விடயங்கள், அமங்கலகரமான விடயங்கள் முதலியவற்றுக்குக் கை கொடுத்து உதவிய நபர் ஒருவரை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவர் இரவு வேளையானாலும், பகல் வேளையானாலும் அழைத்தால் எந்நேரமும் நமக்கு மனமகிழ்வோடு உதவி செய்தவர். அந்த நபர் யார் என்று ஊகித்துக் கொண்டீர்களா? அவர் நமக்கு மிகவும் பழக்கப்பட்டவர். அவரை நாம் சீனிமணி என்று அன்போடு அழைப்போம். நமது தாய்மாரின் மகப்பேற்றுக் காலங்களில் இரவில் எத்தனை மணிக்குச் சென்று அழைத்தாலும் உடனடியாகவே தம்முடைய வாகனத்தில் ஏற்றிச் சென்று வைத்திய சாலையில் சேர்ப்பார்.

இவ்வளவு நேரமும் நமது முன்னோர்களது கைத்திறன்களையும், சிறுவர்கள், வாலிபர்கள், வாலிபப் பெண்களுடைய விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள் போன்ற விடயங்களை படித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தோம். சமுதாயத்தின் தேவைகளுக்காக, சேவை செய்வதற்காக ஈடுபட்டவர்களுடைய ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம். ஒரு இன்பகரமான விடயம்தான். ஒரு காலத்தில் பட்டினசபைத் தேர்தல் இடம்பெற்றது. அப்போது நமது சமுகம் இரண்டாம் வட்டாரத்துக்குள் காணப்பட்டது. கடைசியாக திரு ஐயாத்துரை அவர்கள் நமது சமுகத்தின் சார்பில் பட்டின சபை உறுப்பினராகப் போட்டியில் நின்றார். நாங்கள் அறிந்த மட்டில் திரு குருசுமுத்து, திரு.தேவசகாயம், திரு.ஐயாத்துரை அவர்கள் நமது சமுகத்தின் பட்டின சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். இவர்களை எதிர்த்துப் போட்டியிட்டவர் திருமதி நீக்கிளாப்பிள்ளை மரியமாணிக்கம்.(தங்கமாணிக்கம்). இவர் ஒரு முறை அல்ல ஏழு முறை மனம் சலிக்காமல் போட்டிபோட்டு தோல்வியைத் தழுவிக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. எட்டாவது முறையும் போட்டியில் ஈடுபட முற்பட்டபோது பிள்ளைகளின் கட்டாயத்தினால் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். ஒரு முறையாகிலும் போட்டியில் வெற்றி பெற்றுப்பாராயின் நான் நினைக்கிறேன் இவரே பட்டின சபை அங்கத்தவரில் முதல் பெண் உறுப்பினராகத் திகழ்ந்திருப்பார். எது எப்படி இருப்பினும். பட்டின சபைத் தேர்தலில் போட்டியில் பங்கெடுத்த முதல் பெண்மணியாக திருமதி நீக்கிலாப்பிள்ளை மரியமாணிக்கம் விளங்குகிண்றார்.

இதில் சுவையான விடயம் என்னவெனறால் போட்டியாளர்களுக்கு ஆதரவு திரட்டுபவர்களின் கோசங்கள். இப்பொழுதும் நம்மவர் சிலரின் காதுகளில் அது ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றது. திரு. ஐயாத்துரையின் அணியினர். எங்கள் துரை ஐயாத்துரை, எங்கள் துரை ஐயாத்துரை என்று கோசமிடுவார்கள். திருமதி.நீ.மரியமாணிக்கத்தின் அணியினர். எங்கள் மாணிக்கம் மரியமாணிக்கம், எங்கள் மாணிக்கம் மரியமாணிக்கம் என்று கோசமிடுவார்கள். கேட்பதற்கு மிகவும் இதமாக இருக்கும். பட்டினசபைத் தேர்தல் காலங்களில், துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகளும் பயன்படுத்தப்பட்டன. இதில் போட்டியில் பங்கெடுப்பவர், தங்களுடைய பெயர், புகைப்படம், ஆதரவுக்கான வசனங்கள், சின்னம் (அடையாளம்) என்பன அச்சிடப்பட்டுக் கொடுப்பார்கள், அல்லது சுவர்களில் ஒட்டுவார்கள். இப்படிப்பட்ட இன்பமான காலங்களை நாம் கனவில்தான் காண முடியும்.

குலேந்திரன் நவரெத்தினம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சமையல் விளையாட்டு பொருட்கள்


கைவிளக்கு


தபால்காரன்




திண்ணை




தொட்டில்


மண்ணெண்ணை வண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CELL TEL MOBILITY

For all your cellphone and accessory needs...

*We sell new & used cellphones and accessories for:*

**Rogers Wireless, Fido, Telus Mobility, Bell Mobility, Mobilicity, Public Mobile, Wind Mobile and Chatr Wireless.**



- *Car & Home Charger
- *Leather & Clear Case
- *HeadSets
- *Bluetooth Headsets
- *Bluetooth Mirror
- *Data Cable
- *Batteries
- *Memory Card






**We are your One-Stop Solution!**

Call Toll Free: 1-877-312-5123

Shop Online @ www.celltelmobility.com

**CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTRE**

***We do all kind of repairs:*** *Unlocking, Broken Screens, Liquid Damage, Software & more.*

**iPhone, Samsung, HTC, Motorola, LG, Nokia, BlackBerry, Etc.**

| | | |
|---|---|---|
| 2637 Eglinton Ave. East, Eglinton Ave / Midland Rd | 5C-2950 Birchmount Rd Birchmount Rd / Finch Ave | 45 Karachi Dr, Unit 49 Markham Rd / 14th Ave |
| 416-266-6818 | 416-495-7776 | 905-201-4859 |

If You Have The Opportunity To Suggest A Real Estate Agent To Anyone,

## Think Of Me



RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

Raj REALTOR

**GunaRaj Arumugam**

Sales representative

**416-543-4737**

(416) 287-2222 | 1265 Morningside Ave, Scarborough, ON M1B 3V9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்கமற நிறைந்துள்ள காவலூர் நினைவுகள்!!



குடும்பமும் உறவுகளும் மட்டுமல்ல, எமது கிராமம் அல்லது ஊரே ஒன்றாக இணைந்து வாழ்வது போல நிறைவான சமூக வாழ்வியலுக்குப் பழக்கப்பட்ட அந்நியோன்யமான தமிழினம், நாட்டின் போர்ச்சூழல் மற்றும் இயற்கை அழிவுகள் காரணமாக பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றதால், குடும்ப உறவின் வலுநிலையில் சற்று விழுக்காடு உருவாகிவருவதை பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். புலம்பெயர் நாடுகளின் வேகமான வாழ்வோட்டம், எமது உறவுகளின் வலுநிலைக்கு மிகப் பெரும் சவாலாக இருந்தாலும், தாயகத்தின் உணர்வையும் நினைவையும் அது பாரிய அளவில் பாதித்து விடவில்லை என்பதே உண்மை.

காவலூர் நினைவுகள் எமது மக்களின் மனங்களில் நீக்கமற நிறைந்துள்ளதை, இலகுவாகக் கண்டுகொள்ளலாம். எப்போது எமது ஊரவர்கள் சந்தித்தாலும், பேச்செல்லாம் ஊரைப்பற்றியும் உறவைப் பற்றியும் பெருமளவில் இருப்பதை அவதானிக்கலாம். பழைய நினைவுகளை மறக்கமுடியா மல் தவிப்பது பட்டென்று பேச்சில் வந்துவிடுவது கண்கூடு.

மிக அழகான ஊர் காவலூர். கடல் வர்த்தகத்திற்குப் பெயர்பெற்ற ஊராக, ஈழத்தின் பாதுகாப்பிற்கு பிரதான அரணாக அமையும் ஊராக, இயற்கைத் துறைமுகமும் கல்வியில் பெரு வளர்ச்சியும் கொண்ட சிறப்பான ஒரு ஊராக காவலூர் இருந்து வந்தது. கரம்பன், சுருவில், நாரந்தனை, வேலணை, சரவணை, அல்லைப்பிட்டி, புளியங்கூடல், சாட்டி, சின்னமடு, மண்கும்பான், அராலி என்று ஏராளமான பல கிராமங்களை உள்ளடக்கியதாக அமைந்த ஊர்காவற்றுறை தொகுதி, கல்வியிலும், வணிக-வர்த்தகத்திலும், அரசியலிலும், கப்பற்துறையிலும் சிறந்து விளங்கியதை வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன. கேயிஸ் என்ற போர்த்துக்கேயச் சொல்லுக்கு, துறைமுகம் என்று அர்த்தம். இதை ஆங்கிலேயர்கள், கயிற்ஸ் என்று தங்கள் மொழிக்கு இலகுவாக மாற்றியமைத்தார்கள் என்கிறது வரலாறு. கடற்படை, பொலிஸ், சுங்கத்துறை என்று காவலுக்கும் பாதுகாப்பிற்கும் பெயர்பெற்றிருந்த தோடு, நாட்டின் மிகச் சிறந்த துறைமுகத்தைக் கொண்டிருந்த ஊரை, ஊர்காவற்துறை என்றும் காவலூர் என்றும் அழைத்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. இப்பகுதியை பண்ணைத்துறை என்றும் மாதுறை என்றும் அழைத்ததாகவும் வரலாறுகள் குறிப்பிடுகின்றன. மிகப்பெரிய துறைமுகம் என்பதை மா-துறை என்ற வகையிலும், மாட்டுப் பண்ணைகளும் குதிரைப் பண்ணைகளும் இருந்ததால் பண்ணைத்துறை என்றும் அழைத்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில், கடல் வர்த்தகத்திலும், நெசவு, விவசாயம், சிற்பவேலை, கடற்தொழில் போன்றவற்றிலும் மிகவும் தேர்ச்சிபெற்றிருந்த காவலூர் மக்கள், கடல் கடந்த வர்த்தகத்திலும் கைதேர்ந்தவர்களாக இருந்ததாலும், அக்காலத்தில் ஊர்காவற்றுறையில் சுங்கத்துறை செயற்பாடுகள் கனதியாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்ததாலும், காவலூர் மக்கள் கப்பல் தொழிலிலும் சுங்கத் துறையிலும் மேலதிக ஆர்வம் காட்ட ஆரம்பித்தனர். வடபகுதியில் அமைந்திருந்த ஒரு பாரிய இயற்கைத் துறைமுகமாகவும், தென்னிந்திய பிரதேசங்களுடன் நெருங்கிய கடல் மார்க்கம் கொண்டதாகவும், சப்த தீவுகளுக்குமான வணிக வர்த்தக பிரயாணத் தொடர்புகளுக்கான ஒற்றைத் துறைமுகமாகவும் ஊர்காவற்றுறை விளங்கியதால், பாரிய பாய்மரக் கப்பல்களும் ஏனைய தெற்காசிய நாடுகளுடனான வணிகத்திற்குப் பயன்படுத்தப்படும் பாரிய கப்பல்களும் அதிகம் பயன்படுத்துகின்ற துறைமுகமாகவும் ஊர்காவற்றுறை வேக வளர்ச்சி கண்டது.



ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பலரும், சுங்கத் துறையில் பணியாற்றியதால், பின்னாளில் கொழும்பிலும் விமான நிலையத்திலும் கப்பற்துறைமுகத்திலும் உயர் பதவிகளில் இருந்தார்கள். நீச்சல் போட்டிகளிலும், வள்ளம் வலிக்கும் போட்டிகளிலும் நிறையவே பயிற்சியுள்ளவர்களாக இருந்ததுடன், ஊர்காவற்றுறையில் நிறையவே குளங்களும் இருந்ததால், நன்கு நீச்சல் தெரிந்தவர்களாகவும், ஆழம் நிறைந்த தண்ணீருக்கும் நிறையவே பரிச்சயம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். இதன் காரணமாக, 70, 80களில் கிரேக்க கப்பல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணியாற்ற ஆட்கள் கோரப்பட்டபோது, ஏராளமான ஊர்காவற்றுறை இளைஞர்கள் கப்பல் தொழிலுக்கென வெளிநாட்டுக் கப்பல்களில் பணியாற்றச் சென்றதுடன், மிக வெற்றியுடன் தொடர்ந்து பல வருடங்கள் மீளவும் மீளவும் பல கப்பல்களில் பணியாற்றச் செல்லும் வாய்ப்பையும் பெற்றார்கள். பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் துணிச்சலுடன் கப்பல் தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்றதால், இந்த ஊர்களின் ஆலயங்களும் வீடுகளும் செழிப்புற்றதுடன், ஏராளமான குடும்பங்களும் வளமான வளர்ச்சிப்படியில் ஏறிச்செல்லவும், அவர்களது சகோதரர்களும் பிள்ளைகளும் நன்கு படிக்கவும் மேலதிக வாய்ப்பும் உருவானது.

வடமாகாணத்தில் மட்டுமன்றி, இலங்கையிலே கல்விக்குப் புகழ்பெற்றது ஊர்காவற்றுறை. காவலூர் புனித அந்தோனியார் பாடசாலை, புனித மரியாள் பெண்கள் பாடசாலை மற்றும் சண்முகநாதன் மத்திய மகா வித்தியாலயம் உட்பட வேலணை மத்திய மகா வித்தியாலயம், கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் பாடசாலை என்று ஊர்காவற்றுறையில் மாணவர்கள் கல்வியில் அதிக உத்வேகத்தையும் அக்கறையையும் செலுத்திய அனைத்துப் பாடசாலைகளுக்கும் புகழ் சேர்ப்பது போல், ஊர்காவற்றுறையிலிருந்து ஆயிரமாயிரம் கல்விமான்கள் கிளைத்தெழுந்தார்கள். புகழ்பெற்ற வைத்தி யர்கள், இலக்கியவாதிகள், புலவர்கள், பண்டிதர்கள், அண்ணாவிமார் உட்பட பல ஆயர்கள் குருக் கள், துறவியர் இந்துமத வித்தகர்கள், போதகர்கள் என்று பல துறைகளிலும் பிரபல்யம் பெற்று ஊர்காவற்றுறைக்குப் புகழ்சேர்த்தார்கள். ஊர்காவற்றுறையிலே பிறந்து புனித அந்தோனியார் பாடசாலையிலே கல்வி பயின்ற பீற்றர்பிள்ளை அடிகளார் அகில இலங்கையிலேயே மிகச் சிறந்த மாணவராகவும், வித்தகராகவும், போதனாசிரியராகவும், கல்விமானாகவும் புகழ்பெற்றதை சரித்திரங் கள் என்றென்றும் சுட்டிக்காட்டி நிற்கின்றன.



காவலூரில் அமைந்துள்ள பழமைவாய்ந்த யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த ஆலய விழா மட்டுமன்றி, தவக்கால நிகழ்வுகள், சிலுவைப்பாதை, நத்தார் மற்றும் ஈஸ்ரர் கொண்டாட்டங்கள் அனைத்துமே வரலாற்றுப் பெருமைமிக்கவை. பெரிய வெள்ளியன்று, பாரிய பாரஊர்தியில், இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் நேரடி நிகழ்வாக நடாத்தியபடி வீதியால் செல்வது, ஆலயத்தின் வளவில், இயேசுவின் இறுதி நிகழ்வை, சிலுவையில் நடித்துக்காட்டியபடி, சிறந்த உச்சஸ்தாயியில் பசாம் வாசித்து பரவசமூட்டுவது, ஆலய வளவிலுள்ள மேடையில் பொம்மலாட்டம் மூலம் இயேசுவின் பாடுகளை நடாத்திக்காட்டுவது என்று, பல்வேறு வகையிலும் காவலூர் யாகப்பர் ஆலய பங்கு மக்கள் ஆலய நிகழ்வுகளைச் சிறப்பிப்பது தற்போதும் இளமையாக ஞாபகத்தில் நிற்கி றது. வருடாந்த ஆலய விழாவின்போது, நீச்சல் போட்டி, வள்ளம் ஓட்டும் போட்டி, கைப்பந்தாட்ட உதைபந்தாட்டப் போட்டிகள் என்று ஊரே களைகட்டிவிடும்.



மிகுந்த செழிப்பும் இளமையும் நிறைந்த வளமான பூமியாக ஊர்காவற்றுறை விளங்கியது. விளையாட்டுத் துறையிலே ஓர் யதார்த்தம் இழையோடும். நீச்சல், உதைபந்து, கிரிக்கெட், கைப்பந்து, விளையாட்டுப் போட்டிகள், சயிக்கிள் ஓட்டம், மாட்டுவண்டி ஓட்டம் போன்ற போட்டிகள் வருடம் முழுவதும் இளையவர்களையும் பெரியவர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். மிகவும் தரமாக நடாத்தப்படும் இத்தகைய போட்டிகள் மக்களுக்கு உடற்பயிற்சியுடன் பல நல்ல பழக்கவழக்கங்களையும் மனஆளுமையையும் கொடுப்பது கண்கூடு. இங்கே மாட்டு வண்டில் ஓட்டம் பற்றி சில வரிகள் எழுதியே ஆக வேண்டும். ஊர்காவற்றுறையிலிருந்து வடக்குநோக்கி எட்டாவது கல் தொலைவிலே நாய்க்குட்டியான் வாய்க்கால் என்று ஓர் பகுதி உண்டு. அங்கே, பாரிய ஓர் வயல்வெளி உண்டு. சுற்றியடர்ந்த பனை மரங்களுக்கிடையிலே இந்தப் பாரிய வயல்வெளிப் பகுதியிலே மாட்டுவண்டில் சவாரியும் போட்டியும் மிகவும் சிறப்பாக இடம்பெறும். தீவுப்பகுதியின் அனைத்து மக்களும் அங்கே கூடுவார்கள். பல மாட்டுவண்டில் ஓட்டுனர்கள் கடும் பயிற்சியுடன் அங்கே வருவார்கள். ஏராளமான வண்டில்கள் கலந்துகொள்ளும் இந்த சவாரி, நீண்டநாட்கள் எம் நெஞ்சத்தை விட்டகலாது ரீங்காரமிடும். இதைக்கண்டு களிப்பதே ஓர் அலாதியான விருந்தென்றுதான் கூறவேண்டும்.



ஊர்காவற்றுறை துறைமுகத்திலே வருடாவருடம் நடாத்தப்படும் பாரிய நீச்சல் போட்டியும் இது போன்றே பல மக்களின் கவனத்தை ஈர்க்கும். காலையிலே ஆரம்பித்து, பல வயதினரையும் பலவித வேகம் தூரம் போன்றவற்றையும் உள்ளடக்கி நடாத்தப்படும் இப்போட்டிகளின் பின்னர், கையால் வலிக்கும் சிறிய வள்ளங்களுக்கான போட்டியும் இடம்பெறும். பல ஓட்டுனர்கள் மிக லாவகமாக வலித்து இப்போட்டிகளை உற்சாகமுள்ளவையாக மாற்றுவது இங்கே காணப்படும் சிறப்பம்சம். இதைத்தொடர்ந்து, பல விளையாட்டுக் குழுக்கள் வள்ளம் வலிக்கும் போட்டிகளும் இடம்பெறும். இதுபோன்று, சறுக்குமரம் ஏறும் போட்டிகளும் மிக உற்சாகமாக நடைபெறுவதுண்டு. குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகப்பர் ஆலய வளவில் மிக உயர்ந்த சறுக்குமரத்தின் உச்சியில் உள்ள பணமுடிச்சை எடுப்பத ற்கு ஏராளமான இளைஞர்களும் மணமான இளையவர்களும் போட்டிபோட்டுக்கொண்டு ஏறுவதும், இடையில் சறுக்கி விழுவதுமாக, மிகவும் கேளிக்கை நிறைந்ததாக இந்த சறுக்குமரம் ஏறும் போட்டிகள் நடைபெறும். இப்படி ஏனைய ஆலயங்களும் தங்கள் திருவிழாவின்போது சறுக்குமரம் ஏறும் போட்டிகளை நடாத்துவதுண்டு. இவை ஊர்காவற்றுறைக்கே உரிய தனித்துவம்மிக்க புகழ் பெற்ற போட்டிகள் என்று கூறினால் அது மிகையல்ல.

ஊர்காவற்றுறையிலே வருடாவருடம் முன்னெடுக்கப்படும் பாரம்பரிய கூத்துக்கலை பற்றியும் இங்கே குறிப்பிடவேண்டும். கூத்து அண்ணாவிமார்களின் பிறப்பிடமாய் அமைந்தது சப்த தீவுகளென்று வரலாற்றுச் சான்றுகள் பகர்கின்றன. ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை போன்ற மருதநில நெய்தல் நில மக்கள், தங்களது தொழில்நேரம் போக மீதி நேரத்தை இசை, மொழி, பண்பாடு மற்றும் பாரம்பரியக் கலைகளிலேயே செலவழித்தனர். தொன்மையான கூத்துக்கலைகளின் இரு விழிகளாகத் திகழ்பவை தென்மோடி, வடமோடி கூத்துக்கள். தென்மோடிக் கூத்தின் மூலவரும் பிதாமகனுமாகப் போற்றப்படுகின்ற, உச்சநிலைகொண்ட பாடகராக பன்முகத் திறனுடன் திகழ்ந்தவர் கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி அண்ணாவியார். கலைக்குரிசில் அவர்கள் ஊர்காவற்றுறையின் மெலிஞ்சிமுனைக் கிராமத்தைச் சேர்ந்தவரே. நான்கு தலைமுறைகொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களை, யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும், கலைக்குரிசில் அந்தோனி அண்ணாவியார் எழுதிய கூத்துக்களை, தாமே எடுத்துச்சென்று மரபு தவறாமல் பாடி, நடித்து, பழக்கிக்கொடுத்து பல கலைஞர்களையும் அண்ணாவிமார்களையும் உருவாக்க வழிசமைத்தார். கலைக்குரிசில் அவர்களே, இளவாலை, மாதகல், நாவாந்துறை, மண்டைதீவு, பருத்தித்துறை மற்றும் மன்னார், முல்லைத்தீவு போன்ற பல பிரதேசங்களில் கூத்துக்கலை வளர வித்திட்டதுடன், தொடர்ச்சியான பயிற்சிகளைக் கொடுத்து, அந்த ஊர்களிலும் கூத்துக்கலை வளர அயராது உழைத்தார். ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கலைக்குரிசிலின் புதல்வரே பின்னாளில் பெயர்பெற்ற கூத்துக் கலை அண்ணாவியார் சவிரிமுத்து அவர்கள். அவருடைய புதல்வனே அண்ணாவியார் ச.மிக்கேல்தாஸ். இவருக்கு பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் 2015ல் 'கூத்துக்கலைச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது. பூந்தான் யோசேப்பு, அண்ணாவியார் அருளப்பு, அண்ணாவியார் மா.செல்வராசா, அண்ணாவிமார் பொன்னுத்துரை, சைமன், சவிரிமுத்து போன்ற புகழ்பெற்ற திறமையான அண்ணாவியார்களின் தயாரிப்பில், இத்தகைய நாட்டுக்கூத்துக்கள் தீவுப்பகுதியில் வரலாறு படைத்திருக்கின்றன. ஞானசவுந்தரி, காத்தவராயன், மயானகாண்டம், தாவீது-கோலியாத், கண்ணகி, யுவானியார் போன்ற பாரிய நாட்டுக்கூத்துகள் ஊர்காவற்றுறையிலே மேடையேறும். பிற்பகல் ஆரம்பித்து, மறுநாள் அதிகாலை வரை செல்லும் நீண்ட நாட்டுக்கூத்துக்கள் இங்கே மேடையேறி ஊரையே தன் வசம் இழுத்து வைத்திருக்கும். இவற்றைக் கண்டுகளிக்க வடமராட்சி தென்மராட்சி யாழ் நகரின் ஏனைய பகுதிகளிலிருந்து மட்டுமன்றி, தூர இடங்களிலுமிருந்து மக்கள் வெள்ளம் அலைமோதும். கலைப்பிரியர்களுக்கு இந்த நாட்டுக்கூத்துக்கள் விருந்து படைக்கும். இப்படி கூத்துக்கலையை வளர்த்த பெருமை ஊர்காவற்றுறை அண்ணாவிமார்களுக்கு இருக்கின்ற போதிலும், கூத்துக்கலையின் பிதாமக்களை மறந்து, வேறு பல யாழ்ப்பாணக் கிராமங்களும், கூத்துக்கலை தங்கள் மண்ணிலேயே பிறந்ததாக அவ்வப்போது வரலாற்றைத் திரிப்பதும் மறைப்பதும் கவலைக்குரியது மட்டுமல்ல, தங்கள் வாழ்வையே கூத்துக்கலைக்காக அர்ப்பணித்த கலைக்குரிசில் போன்ற அற்புதமான கலைஞர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவும் நோக்கலாம்.

கூத்துக்கலையின் மிகக் கடினமான சில வடிவங்களான வசாப்பு, நாட்டை, வடபாங்கு, தென்பாங்கு போன்ற வடிவங்களை, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கலைக்குரிசில் அவர்களே பெரிதும் ஏனைய பிரதேசங்களில் பயிற்சி வழங்கி வளர்த்தெடுத்தார் என்கிறது வரலாறு. பசாப்பு வடிவம் ஊர்காவற்றுறையில் மேடையேறும் பாரிய நாட்டுக்கூத்தில் முக்கிய பங்கெடுக்கும். பபூன் வேடங்களில் இரு கலைஞர்கள் தோன்றி, அவ்வப்போது மக்களை சிரிக்கவைத்து களிப்பூட்டும் சிறப்பம்சங்களுக்கும் எமது ஊர் கூத்துக்கள் முக்கிய இடமளித்து வந்தன. ஆடல் பாடல் மட்டுமன்றி, வேடப் பொருத்தம், உடை மற்றும் ஒப்பனைக்கும் எமது ஊர் நாட்டுக்கூத்துக்களில் மிக முக்கிய கவனம் செலுத்தப்படுவதை அவதானிக்கலாம். ஒப்பனைத் துறையில் பெயர்பெற்ற திரு.சாமுவேல் பெஞ்சமின் அவர்கள், ஊரில் நடைபெறும் கூத்துக்களுக்கு அற்புதமான ஒப்பனை வழங்கியதில் முக்கிய பங்காற்றினார். எமது ஊரில், இரவிரவாக மரங்களிலும் கூரைகளிலும் ஏறியிருந்து கூத்துப் பார்த்து மகிழ்ந்த ஞாபகங்கள் மறக்கமுடியாதவை.

ஊர்காவற்றுறையில் பல ஆற்றல்மிக்க கூத்துக் கலைஞர்கள் இருந்தனர். மிக உச்ச ஸ்தாயியில் பாடி ஆடி மேடையே களைகட்ட பல மணிநேரங்கள் நாட்டுக்கூத்தை வழங்குவார்கள். சந்தியோகு மையோர் ஆலயத்தின் வளவில் இவர்கள் கூடியிருந்து கூத்துப்பாட்டுப் பாடுவதை கேட்பதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். பாஸ்கா கால இறுதி நாட்களில், இவர்கள் பசாம் வாசிப்பதைக் கேட்பதற்கென்றே மக்கள் படையெடுப்பார்கள். அனைவரும் ஓலமிட்டு ஒப்பாரிவைத்து அழும் அளவிற்கு மிக உச்ச துயரமான தொனியில் மிக லாவகமாக இவர்கள் பசாம் வாசிப்பார்கள்.



கனடாவில் வாழுகின்ற மேற்குப்பகுதி மக்கள், மிகுந்த ஊர்ப்பாசமும், அவர்களது ஆலயமான யாகப்பர் கோயில் மீதான அளப்பரிய பற்றும் கொண்டவர்கள். தங்கள் ஆலய நன்மைக்காகவும் எழுச்சிக்காகவும் எத்தனை தியாகங்களையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பது பெருமைக்குரியது. 300 ஆண்டுகள் வரலாற்றுப் பெருமைமிக்க சந்தியோகுமையோர் ஆலயத்தின் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வைத்திருக்கும் மிக இறுக்கமான நம்பிக்கையும் பற்றும், அவர்களது குடும்பத்தின் மீதான புனித யாகப்பரின் ஆசீர்வாதமாக மீளக் கிடைப்பதை அவதானிக்கலாம்.

காவலூரின் மேற்குப்பகுதி, என்னைப் பொறுத்தவரையிலும்கூட தனிப்பட்ட முறையில் அதிகபட்ச தொடர்புகளைக் கொண்ட ஒரு பிரதேசம். எனது பெற்றோர், மேற்குப்பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் நிலையத்திற்கு அருகே உள்ள ஒரு வீட்டிலேயே குடியிருந்தனர். எனது மூத்த சகோதரர்கள் அனைவரும் மேற்குப் பகுதியிலுள்ள அந்த வீட்டில் பிறந்தவர்களே. மாலை நேரங்களில் அந்தக் கடல் மண்ணில் ஓடி விளையாடிய, தண்ணீரில் கால் நனைத்து மகிழ்ந்த, அழகான சிப்பிகளைத் தேடித்தேடிச் சேர்த்த அந்த சின்னப்பிள்ளை ஞாபகங்களும், கோயில் திருவிழாக்களில் கச்சான், கடலை, சோழம், பொரிவிளாங்காய் வாங்கி உண்டுமகிழ்ந்த ஞாபகங்களும் இளமையாய் மனதில் ரீங்காரமிடுகின்றன. பின்னாளில் எமது குடும்பம், மேற்குப் பிரதேசத்திலிருந்து வெளியேறி, காவலூரின் மத்திய பகுதியில் வீடுகட்டிக் குடியேறியது. தேவமாதா கோவிலின் பின்னதான நகரசபைக் கட்டடத்துடன் குளங்கள் அமைந்துள்ள பகுதியை 'சின்னக் கரம்பன்' என்றும் அழைப்பார்கள். புதிய வீட்டில் குடியேறிவிட்டாலும், மேற்குப் பிரதேசத்துடனான தொடர்பு இறுக்கமாகவே இருந்துள்ளது. உறவு ரீதியாக, எனது குடும்பத்தின் பல உறுப்பினர்களுக்கு ஞானப் பெற்றோராக மேற்குப் பிரதேச உறவுகளே உள்ளனர். பின்னர் நான் திருமணம் முடித்ததும் மேற்குப் பிரதேச மணமகளையே என்பதால், மீண்டும் எமது குடும்பத்திற்கு மேற்குப்பிரதேச தொடர்பு புதுப்பிக்கப்பட்டது.

கனடாவில் வாழும் காவலூர்-மேற்குப்பகுதி மக்கள், வருடாவருடம் தங்களது கோடைகால ஒன்றுகூடலை மிகச் சிறப்பாக நடாத்தி வருகிறார்கள். ஒன்றாகக் கூடி, காலையுணவுடன் ஆரம்பிக்கும் அவர்களது கேளிக்கை நிகழ்வுகள், முழுநாள் நிகழ்வாக, அங்கு நேரடியாகச் சமைக்கும் சுவையான மதிய உணவுடனும், பல்வேறு போட்டி நிகழ்வுகளுடனும், திட்டமிட்ட வகையிலான மகிழ்ச்சியான ஒன்றுகூடலாக நடாத்தப்படுகின்றன. குறிப்பாக, காவலூர் யாகப்பர் ஆலய கொடியை ஏற்றி, செபம் செய்து, வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகள், அந்நாளின் இறுதியில், கொடியிறக்கம், நன்றிச் செபம் மற்றும் தலைவரின் இறுதி உரையுடன் அமைதியாக நிறைவுக்கு வருவதை பெருமையுடன் குறிப்பிடலாம். ஏனைய பல கோடைகால ஒன்றுகூடல்களோடு ஒப்பிட்டால், யாகப்பர் ஆலய பங்குமக்களின் ஒன்றுகூடல், எந்தவித கூச்சல் குழப்பங்களுமின்றி, சண்டை சச்சரவுகள், வாக்குவாதங்கள், பேதமைகள் இன்றி, பெண்களும் ஆண்களும் இளையவர்களும் இணைந்து சமைப்பதும், பரிமாறுவதும், கூடிப்பேசி மகிழ்ச்சியாக பொழுதைக் களிப்பதும் விதந்துரைக்கத்தக்க விடயங்களே. இதுபோன்று, பிறிதொரு கோடைகால ஒன்றுகூடலில், ஊர்ச் சுவையுடன் கூழ் காய்ச்சி, பார்பக்கியூ மற்றும் உணவு வகையுடன் மகிழ்ச்சியான ஒன்றுகூடலையும் மேற்குப்பகுதி மக்கள் நடாத்துவதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

கிறிஸ்மஸ் காலத்தில், யாகப்பர் ஆலய பங்குமக்கள் நத்தார் விழாவையும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். நான் அறிந்த வரையில், கடந்த 25 வருடங்களாக, ஒரு வருடம்கூடத் தவறாமல், ஒவ்வொரு வருடமும் நத்தார் விழா கொண்டாடிய பெருமை கனடாவில் வாழும் யாகப்பர் ஆலய பங்குமக்களையே சாரும். சில வருடங்களில் மக்கள் வரவு குறைவாக இருந்தாலும், இளைய தலைமுறையினர் தங்கள் பொறுப்பில் இவ்விழாக்களை நடாத்தி, ஏனையவர்களுக்கும் உற்சாகம் கொடுத்து, இந்த ஒன்றுகூடல்களைத் தொடர்வது பாராட்டுக்குரியது. குறிப்பாக இந்த நத்தார் விழா வில், அந்த வருடத்தில் பல்கலைக்கழகத்தில் நுழைகின்ற மாணவர்களை பரிசுவழங்கி கௌரவிப்பது, ஆரம்பகாலத்தில் யாகப்பர் பங்கின் வளர்ச்சிக்கு உதவியோரை இனம்கண்டு கௌரவிப்பது, சமயரீதியாக செபத்திற்கும் பாடல்களுக்கும் முக்கியத்து வம் கொடுப்பது என்று, இவர்களது நத்தார் விழாவும் மிக ஒழுங்காக நடைபெற்று நிறைவடைவது சிறப்பம்சமாகும்.

தூய யாகப்பரின் வருடாந்த ஆலய விழா, யூலை மாதத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ரொறன்ரோ நகரின் மத்தியில், வெலஸ்லி-பார்லிமென்ட் சந்திப்பிற்கருகே, இலக்கம் 520 செர்போன் வீதியில் அமைந்துள்ள தூய லூர்து அன்னை ஆலயத்தில், ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் காவலூர் மேற்குப்பகுதி மக்கள் இணைந்து தங்களது பெருவிழாவை சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். கனடாவில் 2018ம் ஆண்டு தங்களது 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் காவலூர் யாகப்பர் ஆலய பங்குமக்கள், அதன் நினைவாக இந்த அழகான மலரை யும் வெளியிடுவது சிறப்பம்சமாகும்.

வெள்ளிவிழாக் காணும் காவலூர் யாகப்பர் ஆலயப் பங்கு மக்களுக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், யாகப்பரின் ஆசிகளையும் வழங்கி வாழ்த்துகிறோம்.

அன்புடன்,
குயின்ரஸ் துரைசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆலயமே எங்களது அடையாளம்!



என்னுடைய இளமைக்காலம் பெருமளவில் கொழும்பிலேயே கடந்து சென்றதால் என்னிடத்தில் கொழும்பு வாழ் மக்களின் அனுபவங்களே அதிகமாகக் காணப்பட்டது. நல்ல பாடசாலையில் என் பெற்றோர் என்னைப் படிக்கவைத்தார்கள், பலதரப்பட்ட நண்பர்களுடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. குறிப்பாக என்னுடைய பெரும்பாலான பொழுது போக்குகள் ஆலயத்தில் குருக்களோடும், பீடப்பரிசகர்களோடும் செலவானது. அதனால் கட்டுப்பாடும், நல்லொழுக்கமும் என்னையறியாமலே எனக்குள் வளர்ந்தது. படிப்பு விடயமாக சிங்கப்பூர் சென்று வாழ்ந்தபோது இன்னுமொருபடி உலகத்தைப் படிக்கக் கூடியதாக இருந்தது.

விடுமுறைக்காக சிங்கப்பூரிலிருந்து கொழும்பு வந்து நின்றபோது யாழ்ப்பாணத்தில் எனது உறவினர் ஒருவருடைய மரணச் சடங்கிற்காக சென்றிருந்தேன். அங்கு பாதர் சாள்சும் வந்திருந்தார். அவரிடம் எனது பெற்றோர் திரும்பவும் வெளிநாடு செல்வதற்கு முன்பு ஒரு முறை எமது ஊருக்குக் கூட்டிக் கொண்டு போய்வாருங்கள் என்று கேட்டிருந்ததால் பாதர் சாள்ஸ் என்னை அவரது மோட்டார் சயிக்கிளில் கூட்டிச் சென்றார். இவ்வளவு காலமும் மோட்டார் வாகனத்தில் பிரயாணம் செய்யாத எனக்கு இது புதிய அனுபவமாக அமைந்தது. ஏற்கனவே ஊர் போன அனுபவம் இருந்தாலும், போர் காரணமாக எமது மக்கள் அந்த ஊரிலிருந்து வெளியேறிய நிலையில், அந்த மண்ணைத் தரிசிக்கும் உணர்வு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை உருவாக்கியது.

மோட்டார் சயிக்கிள் யாழ் மாநகரத்தைக் கடந்து பண்ணைப் பாலத்துக்குள் பிரவேசித்த போது எனக்குப் பேரானந்தமாக இருந்தது. காரணம் பண்ணைப் பாலத்தில் மீனவர்கள் தூண்டிலால் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவருடைய தூண்டிலில் மீன் அகப்பட்டு தூக்கி எடுத்த காட்சியைப் பார்த்துவிட்டு பாதரிடம் மோட்டார் சயிக்கிளை நிறுத்தச் சொல்லி மீன் பிடிப்பவர்களைப் பார்த்து இரசித்தேன். கடலில் காணப்பட்ட களங்கண்டி வலைகளைப்பற்றி எல்லாம் விபரமாக எடுத்துக் கூறினார்.

பிரயாணத்தைத் தொடர்ந்தோம். கரடு முரடான வீதியில் பிரயாணித்தாலும், பயணம் கஸ்ரமாகத் தெரியவில்லை, காரணம் ஆங்காங்கே பனை மரங்களும், பற்றைக் காடுகளும், மாலைநேரப் பொழுதாகையால் பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறப்பதும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஈச்சமரம், நாகதாளிமரம், தாளம்பூமரம் என்றெல்லாம் எனக்கு விளக்கம் தந்தார் பாதர். ஆங்காங்கே புல் வெளிகளும் மணல் வெளிகளும் காணப்பட்டது. மாடுகளும் ஆங்காங்கே மேய்ந்து கொண்டிருந்தன, இப்படியான தொரு இயற்கைக் காட்சியை நான் இதுவரை இரசித்ததில்லை. இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று பாதரிடம் கேட்டேன், அதற்கு அவர், நீர் பிறந்த ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்றார். ஒரு தடவை இதயமே வெடித்துவிடும்போல் இருந்தது. குண்டும் குழியுமான அந்த வீதியில், மிகுந்த சிரமத்துடன் மோட்டார் சயிக்கிள் போவதையும், அதிலே நான் இருக்க முடியாமல் தூக்கித்தூக்கிக் குத்தும் அந்தப் பயணத்தையும் உடனே உணர்ந்தேன். அப்படியானால் எனது பெற்றோர் ஊரைவிட்டுப் புறப்பட்டபோது இவ்வழியாகவா கொழும்புக்கு வந்தார்கள் என்று கேட்டேன். ஆம் என்று பதில் சொன்னவரிடம் அவர்கள் வரும்போது வாகனங்கள் இருந்ததா என்று கேட்டேன். இருந்தது, ஆனால் அந்தவேளை யாரும் வாகனத்தில் பயணிக்கவில்லை, நெருக்கடியானவேளை கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டும் கால்நடையாகவும், சிலர் மாட்டு வண்டில், சிலர் சயிக்கிள் இப்படியாக மிகுந்த இடர்களுக்குள் பயணப்பட்டார்கள் என்று சொன்னபோது என் கண்கள் என்னையறியாமலே கலங்கியது. எம்மைப்போன்ற இளைய தலைமுறையினரைப் பாதுகாக்க, வளர்த்தெடுக்க, உணவும் உடையும் கல்வியும் வழங்க எத்தனை கஸ்ரங்களை எமது பெற்றோர் அனுபவித்திருப்பார்கள் என்று நினைத்தபோது என் நெஞ்சம் கலங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைமோதும் இதயத்தோடும், கலங்கிய கண்களோடும் பயணம் தொடர்ந்தபோது மோட்டார் சயிக்கிள் யாகப்பர் ஆலயத்துக்கு முன் வந்து நின்றது. பொழுது சாய்ந்து விட்டதால் கோயிலைப் பார்க்க முடியவில்லை. பாதர் மோட்டார் சயிக்கிளை றேஸ்செய்து அதன் மின் வெளிச்சத்தில் கோயிலைக் காட்டினார். மின்னல் வேகத்தில் என் மனம் வேலை செய்தது, என் கண்கள் திறந்தன, என் இதயம் எமது ஆலயத்தின் அடையாளத்தைத் தேடியது. இடிந்துபோயிருந்த என் ஆலயத்தைப் பார்த்து கண் கலங்கினேன். கொழும்பு லூசியாஸ் பேராலயம், கொழும்பு அந்தோனியார் ஆலயம் உட்பட, ஏராளமான பல ஆலங்களைத் திருத்திக் கட்ட முடியுமானால் ஏன் எமது இந்த ஆலயத்தைக் கட்ட முடியாது என்ற முடிவெடுத்தவனாய் பாதரிடம் இதுபற்றி வினாவினேன். அதற்கு அவர் பல வழிகள் இருக்கிறது என்று சுருக்கமாக விபரித்தார். ஒரு வீட்டில் இரவுச்சாப்பாட்டை முடித்துவிட்டு அன்றிரவே ஊரிலிருந்து புறப்பட்டு, யாழ் மடுத்தினார் குருமடத்துக்கு வந்துவிட்டோம்.

என்னுடைய இந்தச்சிறு வயதில் எத்தனை இடங்களுக்குச் சென்றிருப்பேன், எத்தனை இடங்களைப் பார்த்திருப்பேன், ஆனால் என் தாய் மண்ணைப் பார்த்ததும் என் மனதில் நிம்மதி இல்லாத நிலை ஏற்பட்டது. எப்படியாவது இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க வேண்டும் என்று முடிவு எடுத்தேன். இத்தனை காலமும் கொழும்பில் கோயில் கூட்டம் இடம்பெற்றபோதும் ஒரு கூட்டத்திலும் நான் பங்கெடுத்ததில்லை. இம்முறை அறிவித்தபோது நானும் பங்கெடுத்தேன். அதில் ஆலயத்தைக் கட்டுவதற்கான ஆலோசனைகளையும் சொன்னேன். ஒருசிலர் ஏற்றுக்கொண்டார்கள், ஒருசிலர் ஏற்றுக்கொள்ளவில்லை ஆனாலும் பிற்பட்ட காலத்தில் ஆலயம் கட்டப்பட்டது. கொழும்பில் இயங்கிய எமது யாகப்பர் ஆலய கிளையினர், எமது ஆலயத்தை மீளவும் புனரமைக்கும் முயற்சிகளை வேகமாக எடுப்பதென தீர்மானித்தனர். கொழும்பில் நமது உறவுகள் இருந்தபோது லூசியாஸ் பேராலயம், வியாகுலமாதா ஆலயம், வேளாங்கன்னிமாதா ஆலயம், குழந்தையேசு ஆலயம் என்று நிரந்திரம் இல்லாது வருடாவருடம் ஆலயப் பெருவிழா ஒவ்வொரு கோயிலாக இடம்பெற்றது. இப்போது நாங்கள் ஒரு முடிவுக்கு வந்தோம், இனிவரும் காலங்களில் ஊருக்குச் சென்று திருவிழா கொண்டாடுவோம் என்று, அது நடைமுறைக்கும் வந்தது. திரு.செபமாலை அவர்களுடைய காலத்திலும், அவருக்குப்பின்னர் அவருடைய மகன் திரு.சேவியருடைய காலத்திலும், எனது பெற்றோர் திரு.திருமதி யேசுதாசன் அவர்களது உதவியுடன், இயற்கை மலர்களினால் பீடம் அலங்கரிக்கப்பட்டு திருவிழா கொண்டாடப்பட்டது. தற்செயலாகக் கிடைத்த எனது ஊர்ப்பயணம், எமது ஆலயத்தின் புனரமைப்பு பற்றிய போதிய பட்டறிவை எனக்குத் தந்ததையும், இறைவனின் கருவியாக உரிய காலத்தில் என்னை புனித யாகப்பர் பயன்படுத்திய ஆசீர்வாதத்தையும் என் வாழ்நாள் உள்ளவரை மறவேன்.

எமது ஆலயக் கட்டுமானப் பணிகளில் கொழும்பில் வசித்து வந்த நம் உறவுகளின் பங்களிப்பும் கணிசமானது என்று கூறலாம். இதற்கு முன்னின்று உழைத்தவர் மரியநாயகம் மாமா அவர்கள். அவருக்குத் தோள்கொடுத்து உதவிய பலரில் யூச்சின், எமலசி , புனிதம் மாமி, அகஸ்ரின் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலதிக உதவிகளை வழங்கிய டெல்வியன் **மற்றும் யேசுதாசன் அவர்களையும் நாம் மறக்க முடியாது.**

அகஸ்ரின் அங்கிள், மரியநாயகம் மாமாவுக்கு வலது கரம் போன்றவர். மிகவும் அமைதியானவர். ஆனால் சேவை செய்வதில் உறுதியானவர். தனித்தே பல காரியங்களை செய்து முடிப்பவர். எடுத்துக்காட்டாக எமது பங்கு மக்கள் யாராவது இறந்துவிட்டால் மலர் வளையம் வாங்குவது, உரிய நேரத்தில், உரிய இடத்திற்கு எடுத்துச்செல்வது போன்ற காரியங்களை மரிநாயகம்மாமாவுடனும், தனி யாகவும் செய்து முடித்தவர்.

மரியநாயகம் மாமாவுக்குப் பின்னர், டெல்வியன், யேசுதாசன், பாதர் சாள்ஸ் போன்றவர்கள், எமது ஆலயத்தின் புனரமைப்பையும் தொடர்ச்சியான நிர்வாகத்தையும் அதன் பாதுகாப்பையும் சிறப்பாகத் தொடர்ந்து கவனித்து உதவி வருவதுடன், கப்பலேந்தி மாதா கோயிலையும் முழுமையாக புனரமைத்து, சிறந்த முறையில் பேணி வருகிறார்கள். புனிதம் மாமி அவர்கள் ஆலய ஒழுங்குகள், செபமாலை, பிராத்தனை, திருப்பலி ஆயத்தம் குருமாரைக்கண்டு ஒழுங்கு செய்வது, திருமண ஆயத்தம் இப்படியாக பல ஆன்மீகக் காரியங்களை வயதான காலங்களிலும் மன உச்சாகத்துடன் செய்து முடிப்பார்.

கனடாவில் வாழும் எமது யாகப்பர் ஆலய இளைஞர்கள், மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும் தங்களது ஆதரவை எமது ஆலயத்திற்கு வழங்கி வருவதை நான் நேரில் கண்டு பெருமை கொண்டேன். இளைய தலைமுறையினரிடம் கையளிக்கப்பட்ட நிர்வாகக்குழுவுக்கு சூட்டி தலைமைதாங்க, அனைத்து இளையவர்களும் ஒன்றிணைந்து வெற்றியுடன் யாகப்பர் ஆலய கனடிய கிளையை நடாத்தியதை பெருமையுடன் இங்கே குறிப்பிடலாம். இந்த இளையவர்கள் தொடர்ந்தும் ஆலய மக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எனது ஊரில் காரிருள் நேரத்தில் மோட்டார் சயிக்கிள் மின் ஒளியில் திறந்த கண்கள் கனடாவில் அகலத் திறந்துள்ளது. வேண்டுவோருக்கெல்லாம் நலன்கள் புரியும் எம் பாதுகாவலராம் புனித யாகப்பரின் அருளும் ஆசியுமே, என்போன்ற இளைஞர்களின் கண்களையும் இதயத்தையும் திறந்துள்ளன என்று

முழுமையாக நம்புகிறேன். எமது மோட்டார் சயிக்கிள் பயணம், சந்தியோகுமையோர் குதிரையில் ஊரைப் பாதுகாக்க சுற்றிவருகின்ற ஒரு பயணம் போன்றே அமைந்தது.

டிறோசன் யேசுதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கறோல்!



ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய கனடா வாழ் மக்களின் 25 வருட ஒன்று கூடலின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது நல்லாசிகளும், வாழ்த்துக்களும்.

எமது புனித யாகப்பர் ஆலயம் 300 ஆண்டுகால வரலாற்றைத் தாண்டி நிமிர்ந்து காட்சியளிப்பதானது எமது சமுகத்தின் ஒற்றுமையும், விடாமுயற்சியுமே என்று கூறலாம். எமது ஆலயம் போரினால் பாதிக்கப்பட்டு அழிவுறும் நிலையில் இருந்த போது இதை மீண்டும் புதுப்பொலிவுடன் விளங்கிட அடிக்கல்லாக இருந்தவர் திருவாளர் காலம் சென்ற நீக்கிலாப்பிள்ளை மரியநாயகம் அவர்களின் விடா முயற்சியே காரணம் எனலாம். அதைத்தொடர்ந்து ஆலயத் திருத்த வேலைகளை முன்னகர்த்திய அருட் தந்தை சாள்ஸ், பங்குத் தந்தை, இராசலிங்கம், கொழும்பு வாழ் உறவுகள். இடம்பெயராது தாய்த்திருநாட்டில் வசிக்கும் நம் உறவுகள் என்பதை நன்றியோடு நினைக்கிறோம்.

போரினால் இடம் பெயர்ந்து பல நாடுகளில் எமது மக்கள் வாழ்ந்து வந்தாலும் எமது ஆலய முன்னேற்றத்தில் பற்றுக் கொண்டவர்களாக பல உதவிகளைச் செய்தார்கள். இதை முன்னகர்த்த கனடாவில் வாழ்ந்த மூத்தமகனாகக் கால் பதித்த காலம் சென்ற திரு திமுங்குமுத்து யோசப், திரு இராஜசேகரம், திரு.யேம்ஸ், திரு.எல்மோ போன்றோர். காவலூர் புனித யாகப்பர் ஆலய நலம்புரிச் சங்கம்(கனடா) அமைத்து செயற்பட்டு வந்துள்ளனர். இந்த நலம்புரிச் சங்கம் 25 ஆண்டுகளை நிறைவு பெற்றிருப்பதை முன்னிட்டு பெருமிதம் அடைகின்றேன். 1999ஆம் ஆண்டு முதன் முதலில் கனடா வந்தபோது திரு. சேவியர் இல்லத்தில் நான் தங்கியிருந்த காலத்தில் கோவில் கூட்டதுக்கு என்னையும் அழைத்துச் சென்றார்கள். அங்கே எங்கள் உறவுகள் அனைவரையும் கண்டு பெரும் மகிழ்ச்சி அடைந்தேன்.

புனித யாகப்பர் ஆலய நலம்புரிச்சங்கம், ஆரம்பம், அதன் அங்கத்தவர்கள், அதன் செயற்பாடுகள் பற்றிய விபரங்களை எனது மூத்த சக உறுப்பினர்கள் விபரமாக அறியத்தருவார்கள் என நம்புகிறேன். நான் அனுபவித்த விடயங்கள், என் மனதை விட்டகலாத என் இளவயதில் என்மனதைக் கொள்ளை கொண்ட சம்பவங்களைச் சுருக்கமாக உங்களுடன் கலந்துகொள்ள விரும்புகின்றேன்.

புனித யாகப்பர் ஆலய 300 ஆவது ஆண்டுச் சிறப்பு மலரில் எமது ஆலய வரலாறு, சென் யேம்ஸ் சனசமுக நிலையம் பற்றிய சில விடயங்களை ஓரளவு தெரிந்துகொண்டாலும். நானும் சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் நாங்கள் விளையாடுவதற்கு கோவில் வளவிற்குத்தான் போவோம். அங்கு சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் வியைாடுவதற்கு மட்டுமல்ல, விளையாட்டைப் பார்த்து இரசிப்பதற்கும், விளையாடுபவர்களை உச்சாகப் படுத்துவதற்கும் எல்லோரும் ஒன்று கூடும் இடமாகக் காணப்பட்டது. தங்கள், தங்கள் வயதுக்கேற்ப விளையாடி மகிழ்ந்த காலம். "சொர்க்கமே என்றாலும் நம்ம ஊர் போல் வருமா" இதில்த்தான் எமது சமுகம் கட்டிஎழுப்பப்பட்டது.

வருடா,வருடம் கொண்டாடப்படும் கோவில் திருநாள், வருடம் தவறாமல் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் எதையும் எம்மால் மறக்கமுடியுமா? கோவில் திருநாட்கள் என்றால் அந்தப் பத்துநாட்கள் எத்தனை ஆனந்தம். அந்த விழாக்காலத்தில் இறுதி நாள் ஆடிமாதம் 25ஆம் நாள் நாடகம், நாட்டுக்கூத்து, கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவை எமது நாட்களில் மறக்க முடியாதவை. முக்கியமாக கிறிஸ்து பிறப்பு விழாவில் எமது இளைஞர்கள் நடத்தும் "கறோள்". பாடசாலை விடுமுறை விட்டவுடன் "கறோள்" நிகழ்வுக்கு ஆயத்தமாகி விடுவோம். ஒவ்வொரு இரவும் எமது மூத்தவர்கள் திரு.சந்தியாப்பிள்ளை, காலம்சென்ற திரு. செபமாலைமுத்து, திரு. பாலசிங்கம், காலம் சென்ற திரு.உலகம் ஆகியோர் இதற்கு ஆயத்தமாக பாடல்கள், நடனங்களைப் பழக்குவார்கள்.
இந்தக் "கறோள்" நிகழ்ச்சி எமது சமுகத்தில் எப்போது ஆரம்பமானது என்று எனக்குத் தெரியாது. பொதுவாக திரு.மரியநாயகம் அவர்களினால்தான் எமது சமுகத்தில் அறிமுகமானது என்று அறிந்தேன். அவர் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பணிநிமித்தம் காங்கேசந்துறையில் வசித்து வந்தார் அப்போது அங்கே மேலைத்தேய கலாச்சாரத்தைத் தழுவிய சில சமுகத்தினர் உதாரனமாக "பறங்கியர்" அல்லது "பேகர்"இனமக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் அவ்விடத்தில் நடைமுறைப்படுத்திய"கறோள்" நிகழச்சியை எமது சமுகத்து இளைஞர்களிடையே அறிமுகப்படுத்தினார் என அறிகிறேன். அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். மார்கழி 24ஆம் திகதி கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலி நிறைவுபெற்றதும் நாம் சனசமுக நிலையத்தில் ஒன்றுகூடி ஆடை அலங்காரம் செய்து இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் வீடுவீடாகச் சென்று "கறோள்" பாடல்கள் பாடி மக்களை குறிப்பாக சிறுவர்களை மகிழ்விப்பது வழக்கம். எமது வரவை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். வீதியில் பாடல்கள் பாடிய வண்ணமாகவே செல்வோம். பாடல் சத்தம் கேட்டதும் வீட்டார் ஆயத்தமாக இருப்பார்கள். இரவுநேரமாகையால்வீட்டார் வீட்டுவாயிலில் வந்துநின்று எங்களை வரவேற்பார்கள். நாங்கள் பாடல்கள் பாடி நடனம் ஆடி வீட்டாரை மகிழ்விப்போம். அவர்களும் எமது பாடல்கள், நடனங்களைப் பார்த்து மகிழ்ந்து எங்களுக்குப் பலகாரங்கள், பணம்(காசு) தந்து எங்களை வீட்டில் உள்ளவர்கள் மகிழ்விப்பார்கள்.

"கறோள்" நிகழ்ச்சியில் முக்கிய பாத்திரம் வகிப்பவர் "கிறிஸ்மஸ்தாத்தா" இவரை யாரும் அடையாளம் காண முடியாதவாறு அலங்காரம் செய்யப்பட்டிருப்பார். முழுநீள சிகப்பு அங்கி தரிக்கப்பட்டவராக வெண்மையான தாடி, தலைமுடி அணிந்தவராக பெருத்த வயிறு உடையவராக அலங்காரம் செய்யப்பட்டிருப்பார். கையில் தடியும் சிறு மூட்டையும்(இனிப்பு) வைத்திருப்பார் பாடல்களுக்கு ஏற்றவாறு தாத்தா வயிற்றைக் குலிக்கி அசைத்து ஆடும் காட்சி அனைவரையும் வயிறு குலுங்கச் சிரித்து மகிழ வைக்கும். தாத்தாவின் ஆட்டம் சிறுவர்களை பெரிதும் மகிழவைக்கும். ஆனாலும் சில சிறுவர்கள் பயந்து தமது பெற்றோரை இறுகக் கட்டிப்பிடிப்பதும் உண்டு. ஆனாலும் தாத்தா இனிப்புகள் கொடுத்துச் சிறுவர்களை சமாதானப்படுத்துவார். இந் நிகழ்ச்சி பார்ப்பதற்கும் இரசிப்பதற்கும் சுவாரசியமாக இருக்கும்.

ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ பாடல்களுடன் சிங்கள "பைலா" பாடல்களும் இடம்பெற்றன. சிங்கள "பைலா"பாடல்கள் ஆட்டத்துக்கு இரசிக்கக் கூடியதாக இருக்கும். காலப் போக்கில் நான்(றஞ்சன்) பொறுப்பேற்று, என்னுடன் எனது நண்பர்கள் திரு. தவறாயன், திரு.சுறேஸ், திரு.டிக்சன் அவர்கள் வழிநடத்திய காலத்தில் "பைலா" ஆட்டம் இல்லாமல் கிறிஸ்மஸ் கீதங்கள் மட்டும் பாடி "கறோல்" நிகழ்ச்சிகளை நடத்தினோம். இதற்கான காரணம் நாட்டில் பெரும் உணவுத்தட்டுப்பாடு, பொருளாதாரப் பிரச்சனை. அன்றைய சிறிமா அரசு ஆட்சியில் இருந்தபோது வெளிநாட்டுப் பொருட்கள் தடைசெய்யப்பட்டு உள்நாட்டு உற்பத்தி பெருக்கத்தை ஊக்குவித்தார். இதனால் மக்கள் சில கஸ்ரங்களை எதிர் நோக்கியதால் ஆடம்பரமில்லாத ஆனால் கருத்துள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துக் கீதங்களைப் பழகி நிகழ்ச்சிகளை நடத்தினோம். இப்போது கிறிஸ்மஸ் பாடல்களைப் பழகுவதற்குப் பெரிதும் கை கொடுத்தவர்கள் கோவில் பாடகர் குலாமைச் சேர்ந்த அன்னமலர், அகஸ்ரீன், யோசப்பீன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதில் இன்றும் மனதைவிட்டகலாப் பாடல் "மானிட மன்னவரே மனுக்குலத்தை மீட்டவரே" என்ற பாடல். எமது "கறோல்"புனித யாகப்பர் ஆலயச் சுற்றுவட்டாரத்தில் மட்டுமல்ல அம்பலப்புலம், மெலிஞ்சிமுனைப் பகுதிகளுக்கும் சென்று மகிழ்விப்பார்கள். அவர்களும் எங்கள் வரவை ஆவலுடன் காத்திருந்து வரவேற்று மகிழ்வார்கள். "கறோல்" நிகழ்ச்சி மூலம் சேகரிக்கப்படும் பணம் எமது "சென் யேம்ஸ்" சனசமுக நிலையக் கட்டிட வளர்ச்சிக்காகப் பயன் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்றய காலத்தைப் போன்று கடையில் சென்று "கிறிஸ்மஸ் ரீ" வாங்கிச் சோடனை செய்வது அல்ல எமது காலம். நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் வாலிபர்கள் ஒன்றாகச் சேர்ந்து சயிக்கிளில் காரை நகரில் உள்ள "கசோரீனா பீச்"சுக்குச் சென்று அங்கு காணப்பட்ட பெரிய பெரிய சவுக்கு மரங்களில் இருந்து சவுக்கு மரக்கிளைகளை வெட்டிவந்து அலங்கரிப்போம். நமதுகாலத்தில் மார்கழி 22அல்லது23ஆம் திகதிகளில்தான் அலங்கரிப்போம். ஆனால் மேலை நாடுகளில் கார்த்திகை மாதமே அலங்காரம் செய்யத் தொடங்கி விடுகிறார்கள்.

கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு வீட்டிலும் விதம் விதமாகப் "பாலன் குடில்"அமைத்துச் சோடனை செய்வார்கள். இதில் சிலர் மிகவும் அழகாகச் சோடனை செய்வார்கள். குறிப்பாக குலேந்திரன் அவர்கள் ஒவ்வொரு வருடமும் புதுப்,புதுக் கற்பனையில் பாலன் குடில் அமைப்பார். இதில் இரண்டை நான் விரும்பி இரசித்தேன். ஒன்று பாலகன் ஒரு பச்சைப் பசேலான மலை அடிவாரத்தில் காணப்பட்ட நெல் வயல்களின் மத்தியில் சிறிய கற்குகையில் பிறந்திருக்க, மலையிலிருந்து நீர் வீழ்ச்சி வழியாக தண்ணீர் விழுந்து நீரோடையின் வழியாக ஓடி குளம் ஒன்றில் தேங்குவது போன்றும், ஆடுகள் புல் மேய்வது போலவும் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது தத்துருவமான இயற்கையாக அமைந்திருந்தது.

அடுத்தது இராச அரண்மனை ஒன்றில் பாலன் பிறந்த காட்சி. தங்கத்தினால்(பொன் பேப்பர் ஒட்டப்பட்ட) கட்டப்பட்ட மாடி வீட்டில்,தங்கத்தொட்டிலில் பாலன் படுத்திருக்க சிறிய சுவர் மணிக்கூடு நேரம் சரியாகக் காட்டி நிக்க, சிறிய(நெருப்புப் பெட்டி அளவு) வானொலிப் பெட்டியில் கிறிஸ்தவ பாடல் ஒலித்துக் கொண்டிருந்த நிகழ்வுக்காட்சிகள் நெஞ்சைவிட்டகலாதவை. இவற்றை விட போர்காலச் சூழலில் படையினர் எம்மீது ஏவிய செல் துண்டுகள் வெற்றுத் தோட்டாக்களைப் பாவித்து சிதைவடைந்த வீட்டில் பாலன் பிறந்த காட்சி நெஞ்சைத்தொட்டது. அப்போது பங்குக் குருவாக இருந்த வண.கிருபானந்தன் அடிகளார் கேள்விப்பட்டு நேரில் வந்து பார்த்து பாராட்டிச் சென்றமை குறிப்படத்தக்கது. கனடா வந்தும் பாலன் குடில் அமைத்து முகநூலில் வெளியிட்டிருந்தமை அர்த்தமுள்ளதாகக் காணப்பட்டது. தாய்நாட்டு மக்கள் இலங்கை இராணுவத்தினால் முட்கம்பி வேலிகளுக்குள் சிறை வைக்கப்பட்டிருந்தபோது முட்கம்பி வேலி அடைத்து கந்தல் துணியினால் கூடாரம் போட்டு பாலன் பிறந்த காட்சி, இந்தியாவில் வெள்ளப் பெருக்கால் மக்கள் துன்பப்பட்டபோது வெள்ளத்தில் மிதந்தபடி குடில் அமைத்துக் காட்சிப்படுத்தியமை அர்த்தமுடையவையாகக் காணப்பட்டது. இப்படியாகச் சொல்லிக்கொண்டே போகலாம்.

கனடா சென் யேம்ஸ் நலம்புரிச்சங்கத்தில் நான் 2001ஆம் ஆண்டிலிருந்து 2010வரை செயலாளராகக் கடமையாற்றி உள்ளேன். தொடர்ந்து நமது கனடா காவலூர் நலம்புரிச்சங்கத்தை இளைய தலைமுறையினர் மேலும் சிறப்புடன் வழிநடத்திச் செல்ல வாழ்த்தி நிற்கின்றேன்.

ம. சிறீ றஞ்சன் பேனாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pleasant memories of the past 25 years



When my dad asked me to write something for the 25th anniversary of Canada St. James church Kayts association , I thought he was Just making fun of me and didn't take it seriously; he too didn`t pressure me much about it. However, seeing him writing and typing day and night for this souvenir, I thought of giving this a try.

Celebrating St. James feast isn`t something new to me. During my days in Colombo, Sri Lanka, I and my mother used to visit the St. James church every Thursday on a regular basis since my mother is a devotee of St. James. We take part in the flag hoisting ceremony, festive mass and the procession of the statute of St. James being taken around the church premises.

During the celebrations in Colombo, I and my mother were just a part of the general audience, but in Canada we really are integral part of the celebrations. There, it is celebrated by the people of Colombo most of whom are unfamiliar to us. However in Canada, we have the great pleasure of celebrating the feast our very own people and families. I feel the enormous difference between both situations. When we come up as a family to join and do something of our own, there is more enthusiasm and great satisfaction. Celebrating St. James feast alone doesn`t show the unity of our community. We have many other occasions where we meet and express our solidarity. During our annual summer get together, we all gather and have great fun. With so many games, making a tent and cooking our own food for everyone, hoisting the flag etc. we always have a wonderful time. During our Christmas get together we watch with great amazement the various forms of great talents of our people. These events doesn`t just show the unity of a group of people, they also help the next generation to increase the patriotic feeling and be constantly aware of the roots of our nation.

In a time period where the culture is all developed, families usually tend to grow apart. In this context, what the community of St. James Kyats is doing is very heartening and uplifting. In fact, if not for these events, I wouldn't know anything about who my father`s families and friends are.

It`s been 25 years since we all left our country, yet we can proudly still call ourselves Thamizans as our roots are still engrained in us and forever will be.

Congratulations to our community for all the great achievements during these past years and bonding all of us as a whole family.

My sincere best wishes for the future.

Brightni Kulendran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Christmas with the St. James Church Association of Canada



The Canadian St. James Church Association has a phenomenal reputation for meticulously organizing their annual summer get together and Christmas parties with great success. For the past 25 years, the St. James community in Toronto has been continuing their yearly Christmas tradition, bonding the community together as well as bringing great joy and cheer to children and spreading the Christmas spirit. Members of this great community without fail always come together to bring this day to life every year on December 26th. From well-coordinated performances to a wide variety of games, the day is always filled with unbridled enthusiasm and plentiful Christmas cheer.

Every year the children and youth of the association showcase their talents with amazing singing, well-choreographed

Dances, and excellent instrumental performances. The games are always fun, enjoyable and sometimes seem very competitive. The mini performance each contestant gives at the end of their game is always fun and unexpected. From dancing to singing we always get a snippet of the varying talents hidden within our youth as well as the older members of the association.

One of the most unique aspects of this group's yearly Christmas party is that as the youth of the community grew up and shied away from performing, the parents always take the efforts to coax them and make them provide astonishing performance s that never fail to impress the the members of the association. From Tamil Christmas Carols, Villu Paattus, to mesmerizing dance performances, the talented mothers, leaders and women of the community all come together to fill up the itinerary of the Christmas party. It seems like the clock ticks backwards in this community. As the children get older and shy away from the spotlight, the young at heart fill the vacuum and take to the spotlight to spread the joy and cheer. It seems like nothing can break this community's Christmas spirit.

With such great pool of talents available within the community, it's never a dull moment at these Christmas parties. Let's wait and see what the next generation has in store for the upcoming 25 years of the St. James Church Association. Judging by the past record of this association one can expect future Christmas celebrations will be more colourful and creative.

Logitha Pius

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Pleasant memories



Congratulations to Canada's Kayts St. James Community for celebrating 25 years of success. This community has been a part of my life ever since I remember and it played a very significance role during my childhood and has created very pleasant memories.

I remember partaking in singing and dancing performances for the annual Christmas party since I was a young child. In the very early years, my mom would spend weeks teaching me Christmas songs so that I could perform them on stage. My first performance was at 3, where I sang a Tamil Christmas song. Eventually, I learned to sing along with my peers as part of a group. One particular performance that stands out to me is when a group of us performed the 12 Days of Christmas. To this day, people still remind us of that particular event. As we got older, we moved on to incorporate dancing routines to the program. Leading up to Christmas, we would spend every weekend of the fall at each other's house trying to learn our routine and practice them until they were perfect. They were usually taught by Robinta Akka and Thanusha Akka who spent their time creating the moves and then making sure each one of us had learned it to the best of our abilities. They would also spend time figuring out the music, our outfits and any props that would be needed for the big night. I remember I usually felt nervous right before it was time to perform, but eventually my nerves would ease after I began receiving applause from a supportive audience. The summer picnics were much more relaxed as it was just a time to see everyone come together, cook meals and compete in outdoor activities and games.

Through this community, I have been able to build and strengthen friendships with other members of the community who are around my age. We have bonded during practices, competed and played games with each other and have caught up with what's new in each other's lives whenever a new event brings us together.

Now that we are young adults. We are giving back to the community by actively participating in the planning and execution of the events. Every year, the youth contribute money in order to purchase gifts for children to be distributed at the Christmas party. One major component of the Christmas party is when Santa Claus arrives and dances with the young children who are under 10 and then goes on to hand over them their Christmas gifts. Last year, the youth raised over 500 dollars, which we used to shop at various stores and get personalized gifts according to the age and gender of the kids. We then wrap those gifts and prepare them for distribution by Santa Claus. It's heartwarming to see the children get excited when Santa Claus arrives dancing .Their broad smiles once they receive their gifts from Santa is a very pleasing experience. For the summer get together, the youth come together to plan games and activities for everyone. The summertime is yet another happy occasion for us to collectively raise money in order to purchase supplies and prizes for the games.

The youth of this committee have given their time and energy through several ways, whether it's planning events, purchasing gifts, MC'ing events, capturing memories through photographs and even showcasing their talents. I hope that these traditions continue to go on for 25 more years and that the children's of today's Kayts community eventually become active youth and adult members of the community.

**Tharsika Elmo Antony**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Fond Memories
# FROM THE BOTTOM OF OUR HEARTS





Kayts-Canada St. James Association has been the platform to showcase our childhood talents, whether it be dancing, singing, playing instruments or taking part in various games. As kids, we were shy individuals but the St. James community has provided us the support and encouragement we needed to express our talents and break free of our shell. By acknowledging our budding talents and giving us the extra push to perform every year, the members of this great association have made us feel more confident in our abilities to express our love for the various forms of art. The community has encouraged us in many ways, especially when we make some considerably noteworthy achievements. For example, on countless occasions they have encouraged the youth within our community to pursue their dreams .Further more they have always acknowledged our success in our desired fields. I could be as simple as rewarding us with small prizes and awards. For Lanissha's arangetram, the St. James community recognized this milestone achievement by honouring her with a plaque, which further encouraged her to continue pursuing her love for music. This memorable experience will be permanently etched in our memory.

Growing up, every Saturday consisted of meeting up with family members to practice for dance rehearsals, although that wasn't all. It meant pizza parties, movie nights, sleep overs and playing .When our parents thought we were actually involved only in practicing, we would go as a big group to the mall to plan our shopping so we could all have matching outfits. We also had great dance mentors (Robinta Acca & Dhanusha Acca), and our mom's weren't too far away as they were cheering us on.

Whenever we meet as a community we all have sense of great unity .On each such occasion, we always felt that it was a great time to create close bonds and it's something we will cherish for the rest of our lives. Such occasional gatherings have allowed us to become closer members to the community as well.

Now that we are older, as proud members we have a new responsibility to give back to the community and make a difference. We now encourage our youth members to showcase their individual talents. We hope to give back to the community by participating in fundraisers and helping those in need. We look forward to the many more years of great entertainment, community get-togethers in order to create new memories.

We are proud to be a part of the St. James community. We are who we are today because of our supportive community and we are forever thankful!

Lanissha Navaratnam & Jannikka Navaratnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JS MECHANICAL SERVICE

→ Heating → Air Conditioning → Freezers → Fridges

→ Washers → Dryers → Rangers → Dishwashers

→ Electrical & Electronic Appliances.

S. Rajan

Cell: (416) 520-9516

Tel: (905) 642-4264

# LEON REFRIGERATION

## Air Conditioning Appliance Service

:: Fridge :: Stove :: Washer :: Dryer:: Freezer

:: Central Air Conditioning :: Heating System (Home)

:: Sell Commercial walk in Cooler and Freezer

:: Commercial Refrigeration :: Walk in Cooler & Walk inFreezer

:: Ice Maker :: Rooftop A/C Commercial / Heat

:: Kitchen Exhaust System :: H.V.A.C :: Restaurant Equipment

**S. Venistan**

Licensed Technician

91 Rylander Blvd, P.O.Box: 83528 Scarborough, ON, M1B 0B2

Tel: 416-451-0477



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா அந்த இனிய ஞாபகங்கள்



மண்ணையும் மனங்களையும் கவர்ந்த இனிமையான காவலூரின் வாசனையில் பிறந்து வளர்ந்தவள் என்ற பாக்கியம் பெற்றவள் நான். நாம் எங்கு வாழ்ந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் எமது மண்ணையும், வீடு, சுற்றம், சூழலையும் நினைக்கும் போதெல்லாம் மனதில் மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் ஏற்படுவதுடன், காவலூரில் பிறந்தவள் என்று பெருமையும் ஏற்படுகிறது. இயற்கையோடு இணைந்த ஆரோக்கியமான வாழ்வையும், நேசமும் பாசமும் மிகுந்த உறவுகளையும், களங்கமில்லாத மனிதர்களையும் சமூகப் பற்றுள்ளவர்களையும், கல்விமான்களையும், சமயப் பெரியார்களையும், தேசப் பற்றுள்ளவர்களையும், அறிவியலாளர்களையும் தன்னகத்தே கொண்ட அழகான ஊர் எங்களுடையது.

என் இதயத்திலிருந்து விடுபட மறுக்கின்ற சில காவலூரின் நினைவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். எமது ஊர் யாகப்பர் பங்கின் திருவிழாவிற்கு ஆயத்தங்கள் செய்வதற்கு எமது பங்கிலுள்ள தோழிகளோடு பிழிந்த-தேங்காய்ப்பூ சேகரித்து, ஆலயத்தின் வெளி விறாந்தை, உள் விறாந்தை பகுதிகளை மினுக்கி துப்பரவு செய்து, ஆலயத்தை தூசிதட்டி தூய்மையாக்கி, கொடி கட்டி, பூக்களால் அழகு படுத்திய ஞாபகங்கள், பாடல்களை வாத்தியக் கருவிகளுடன் பழகி பாடிய ஞாபகங்கள் அனைத்தையும் மீட்டுப் பார்க்கிறேன். திருவிழாக் காலங்களில் ஒலி பெருக்கியில் முதலில் ஒலிக்கப்படும் 'கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற பாடல், எம்மையெல்லாம் திருவிழாவுக்கான களைகட்டுதலுக்கு தயார்படுத்தும். பெருநாளன்று மதியம் சரியாக பன்னிரண்டு மணிக்கு கோயில் மணியடித்து வழங்கப்படுகின்ற பால்கஞ்சி வாங்கிச் சுவைத்த ஞாபகங்கள் என் நாவில் இன்றும் உருசித்துக் கொண்டிருக்கிறது. மாலை வேளையில் திருச்சுரூபச் சுற்றுப்பிரகாரத்துக்கு எமது இடங்களை துப்பரவு செய்து, கொடிமரம் கட்டி குருத்தோலை பின்னிக்கட்டி, உற்சாகமாக திருவிழா கொண்டாடி மகிழ்ந்த அந்த நினைவலைகள் இன்றும் இனிக்கின்றன. திருவிழாவின் இறுதியில் எமது நண்பிகளுடன் நடனங்கள் பழகி, மேடையில் ஆடியதும் இன்றுபோல் இருக்கிறது. கடைசியாக, பட்டாஸ் வெடித்து வானவேடிக்கை காட்சிகளால் மக்களைப் பரவசப்படுத்தியதையும் என்னால் மறக்க முடியவில்லை.

நத்தார் தினத்திற்கு ஆயத்தமாக மார்கழி மாத ஆரம்ப நாட்களில் சிறுவர்களும் இளைஞர்களும் சேர்ந்து வாசிகசாலையில் நத்தார் கரோல் கீதங்கள் பழகுவதை சென்று பார்த்து மகிழ்ந்த நாட்கள், நத்தார் திருப்பலி நிறைவேறியதும் கரோல் கீதங்களை வீடு வீடாகச் சென்று சிறுவர்களும் வளர்ந்தவர்களும் நத்தார் பாப்பாவுடன் பாடுவதும், ஒவ்வொரு வீட்டிற்கும் பொருத்தமாக ஒரு பொப்இசைப் பாடலையும் பாடி ஆடுவதும், இளம் பெண்கள் இருக்கின்ற வீடுகளாகப் பார்த்து, இன்னும் சில விசேட பொப் பாடல்களைப் பாடி வயிறு குலுங்க சிரிக்க வைப்பதும் இன்றும் மறக்க முடியாத அம்சங்களே. ஒவ்வொரு நாளும் மாலை மூன்று மணிக்கு ஊர்களில் இருக்கும் முதியவர்கள் செபமாலை சொல்லப் போகும் சாக்கில் ஊர்லாப்புகளும் கிசுகிசுப்புக்களும் கதைத்து மகிழ்வதையும் பார்த்து நாம் ரசித்தோம். எனது வயதையொத்த இளையவர்கள் தேக்குமரக் கிளையில் ஊஞ்சல்கட்டி பாடல்கள் பாடி ஆடிய காலம், கோயில் வளவில் கரப்பந்தாட்டம், கைப்பந்தாட்டம் அடித்துப் பழகியதுடன், பயிற்சியெடுத்து சண்முகநாதன் பாடசாலை, றேஞ்சேர்ஸ் கழகஅணி போன்றவற்றுடன் போட்டிக்குச் சென்று விளையாடி, சண்டைபிடிப்பதும், மறுநாள் எதுவுமே நடக்காததுபோல் மீளவும் ஒன்றாய்ச் சேர்ந்து விளையாடுகின்ற அந்தப் பொன்னான நினைவுகள் இன்றும் இதயத்தில் இளமையாய் இருக்கின்றன.

பாடசாலை பருவ வாழ்க்கையில் சைக்கிளில் தோழிகளுடன் சுற்றித்திரிந்த காலம், வேளாங் கன்னிக் கோயிலுக்கு செல்லும்போதும், ரியூசனுக்கு செல்லும்போதும், இளம் வயதினர் சைட் அடிப்பதும் மறைந்திருந்து பார்க்க முயற்சிப்பதும் பெரியவர்கள் யாரும் வந்தால் ஓடி ஒளிப்பதுமாக சென்ற இனிய நினைவுகளை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

மாலை நேர பாடசாலை முடிந்ததும் எமது நண்பிகளுடன் சென்று, புளியம்பழம், கூழாம்பழம், இலந்தைப்பழம், நாவல்பழம், அன்னவன்னாப்பழம், மாதுளம்பழம், நெல்லிக்காய், மாங்காய், பருத்திக் காய், கொய்யாக்காய் என்று களவாகப் பிடுங்கி உண்டு மகிழ்ந்த காலங்கள் பொற்காலங்கள். பனங்கிழங்கு, ஒடியல், தவன், நுங்கு, பனம்பழம், பனங்குருத்து, தென்னங்குருத்து, இளநீர், வழுக்கல், தேங்காய்ச்சொட்டு எல்லாம் சுவைத்து மகிழ்ந்த காலங்கள் இனிக் கிடைக்குமா? சனி ஞாயிறு தினங்களில் கடற்கரை நீரில் ஓடிவிளையாடி, கரைமணலில் வீடுகட்டி மகிழ்ந்த அந்த நீங்காத நினைவுகள் இன்றும் மறக்கமுடியாதவை.

எமது காவலூர்த் தோழிகளோடு சில்லுக்கோடு, கிளித்தட்டு, முத்துத் தெறித்தல், புளியங்கொட்டையில் பல்லாங்குழி, கிட்டிப்புல், டிக்-டக்-டோஸ், எட்டு, நாயும் முள்ளும், போளை அடித்தல், தும்பி-ராசான் பிடித்தல், மட்டையில் வளையம் ஓட்டியது, ஓலையில் காற்றாடி விட்டது, வண்ணப் பட்டங்கள் விட்ட காலம், மாரி கால வெள்ளத்தில் பேப்பர் கப்பல் விட்டு விளையாடியது, கிழுவமரத்தில் பொன்வண்டு பிடித்து நெருப்புப்பெட்டியில் வைத்திருப்பது, மயிலிறகை புத்தகத்தில் வைத்து குட்டிபோடுமென்று காத்திருத்தல், சைக்கிள் பழகப்போய் கருக்குமட்டைக்குள்ளும் கல்லு மேட்டிலும் விழுந்து காயப்பட்ட காலங்கள் என்று எதை நினைத்தாலும் புளகாங்கிதமடைய வைக்கின்றன.

பசுமை நிறைந்த அந்த நினைவுகளை மீட்டிப் பார்த்து மகிழ்கிறேன். அந்த பசுமை நிறைந்த நினைவுகளும், எம்மோடு பாடித்திரிந்த தோழர்களும், பழகித்திரிந்த வீதிகளும், மரங்களில் தாவி மகிழ்ந்த அந்த இனிய காலங்களும் இனி வருமா?

எமது ஊரின் நினைவுகளில்,டலியா குயின்ரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையழைத்தலின் தனித்துவம்.



இறையழைத்தல்கள் பலவிதம்!
அதற்குள் ஏன் குருத்துவத்திற்கும்,
இல்லறத்திற்கும் தனித்துவம்?

தொடக்க நூலில் பதியப்பட்டதின்படி கடவுள் ஆதிப்பெற்றோராகிய ஆதாம்,ஏவாளைப் படைத்து ஏதேன் தோட்டத்தில் வாழ்வதற்கு அழைக்கப்பட்டது முதல் அழைப்பாகும்.

மாற்கு, லூக்கா நற்செய்தியின்படி பன்னிரு சீடர்களைத் தெரிந்தெடுத்து, "என் பின்னே வாருங்கள், உங்களை நான் மனிதரைப் பிடிப்பவன் ஆக்குவேன்" என்றதும் ஒரு வகை அழைப்பாகும்.

ஆபிரகாமின் சந்ததியை "வானத்து விண் மீன்களைப் போலும், கடற்கரை மணலைப் போலவும் பலுகிப் பெருகச் செய்வேன்" என்றதும், மனிதரெல்லோருக்கும் பூமியில் வாழ்க்கையை சுதந்தரித்துக் கொள்ள விடுக்கப்பட்டதும் இறையழைத்தலின் ஒரு வகைதான்.

மனிதன் சென்ம பாவத்துடன் பூவுலகில் முதல் மூச்சைச் சுவாசித்த போதும், திருமுழுக்கின் மூலம் திருஅவைக்குள் அழைத்ததும், திருவருட்சாதனங்கள் மூலம் அருள் வாழ்விற்கு மெருகூட்டுவதும் ஆண்டவரின் அழைப்பன்றோ.

பாலக யேசுவை உலகிற்கு அளிக்க இளம் பெண் மரியாவை அழைத்ததும் இறையழைத்தலின் மகத்துவமாகும்.

மனித மீட்புக்காக இயேசு சிலுவையில் மரித்ததும், இறை சித்தம் நிறைவேற்றத்தானே, இதுவும் இறை இழைத்தலல்லவா?

பெந்தக்கோஸ்து நாளில் பன்னிரு அப்போஸ்தலரை அக்கினியால் அபிஷேகித்து "உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்று அழைப்பு விடுத்ததும் இறையழைத்தல் தானேயாகும்.

இறைவன் மரியாளைத் தெரிந்தெடுத்தது போல், குருக்கள், துறவியர் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் சிறப்புடையவர்கள். ஆதலால், எங்கள் குடும்பங்களிலிருந்தும் தேவ அழைத்தல் பெருகிட செபிப்போம். ஆண்டவரின் அன்பினில் இணைக்கப்பட்ட எம் குருக்கள், துறவியர் இறையழைத்தலுக்கு அர்த்தம் கொடுத்து சேவை செய்திட செபிப்போம்.

புனித யாகப்பரின் புதுமைகள் கோடி, கோடியாயினும், புதிய தலைமுறயினர் எமக்கு அனுபவங்கள் இல்லை. இரவு நேரத்தில் வெள்ளைக் குதிரையில் குளம்பொலி சத்தத்துடன் வீதியில் வலம் வரும் இடங்களில் மக்கள் நோய், பிணி தீர்ந்து குணமடைந்தார்கள் என்று எம் முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம். எங்களால் குதிரையின் குளம்பொலிச் சத்தத்தைக் கேட்க முடியாவிட்டாலும், யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த போதும், புனித யாகப்பர் ஆலய மணி ஓசை தினமும் எம் காதில் கேட்பதே நாம் காணும் புதுமையாகும்.

"ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற கூற்றுக்கிணங்க, இவர்கள் ஒவ்வொருவரினதும் பெற்றோர், அவர்களது தியாகம், அர்ப்பணிப்பு, செபதப வாழ்வு, மனவலிமை யாவும் பொன் எழுத்தால் பொறிக்கப்பட வேண்டியவை. விசுவாசம் தழும்பாமல் வேரூன்றி நின்ற நம் முன்னோர் போற்றப்பட வேண்டியவர்கள். சிறுவர்களைச் சான்றோராக உருவாக்குவதில் பெற்றோர், ஆசிரியர்கள், உற்றார், உறவினர்கள், பங்கெடுத்தவர்கள் யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

வாழ வழி தெரியாமல் வெளியே தள்ளப்பட்டோர் துறவிகள் அல்ல, ஆசைக்கொன்று, ஆஸ்திக் கொன்று போதும் என்று எஞ்சியவர்கள் துறவிகள் அல்ல, சீதனப் பிரச்சனைகள் தலை தூக்கும் அதிலிருந்து தப்பியவர்கள் துறவிகள் அல்ல, ஒரு குடும்பத்தில் சகோதரர் அதிகம் இருக்கும் போது பொருளாதாரக் கஸ்ரத்தில் பிரிந்தவர்கள் துறவிகள் அல்ல, காதல் தோல்வியில் களம் மாறிக் குதித்தவர்களும் துறவிகள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல தவறான கருத்துக்களும் உண்டு. மாறாகப் பால்மணம் மாறாப் பருவத்திலிருந்தே பெற்றோரின் பராமரிப்பு, நிலாச்சோறூட்டும் காலத்திலிருந்தே மூதாதையரின் வேதாகமக் கதைகள், பள்ளிப் பருவத்திலே பெரியோர், ஆசிரியர்களின் அறிவுரைகள், மறைவாழ்வில் குருக்கள், கன்னியர்களின் வழிகாட்டல்கள், திருப்பலிகள், மறையுரைகள், நன்னெறிப் பாதைக்கு வழி காட்டும் புத்தகங்கள், பத்திரிகைகள், ஞானஒடுக்கம், தியானம், நற்செய்திப் பெருவிழாக்கள் இன்னும் பல வழிகளால் புடமிடப் பட்டு தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்தவர்களே தேவ அழைத்தலுக்கு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.

இளைஞர்கள், யுவதிகள் பலர் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டுக் குருத்துவம், துறவறம் எனப்படும் தேவ அழைத்தல் என்னும் மகுடத்தை வெற்றி வாகையுடன் சூடிக் கொள்ளும்போது மாந்தர் நாமனைவரும் அவர்களுக்குத் தலை வணங்குதல் தன்னிகராமே.

அவ்வகையில் எங்கள் காவலூரிலும் ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் தோன்றியதும் கிறீஸ்தவ விழுமியங்களுக்குச் சான்றாகச் சிகரம் எழுப்பித் திகழ்கின்றது.

துறவறத்திக்கு அத்திவாரமான இல்லறம் பல இன்னல்களைத் தகர்த்தெறிந்து, குட்டித் திருச்சபையாக, ஒரு மனிதனைக் கிறிஸ்தவனாக, இறை சாட்சியாக உருவாக்குகின்றது. இறைவனை உரிமையாக்கிக் கொள்ள அனைத்தையும் குப்பை எனக் கருதி, அழைப்பின் குரலுக்குத் தங்களையே முழுமையாக **அர்ப்பணித்து** வாழ ஏழ்மை, கீழ்ப்படிதல், விரதத்துவம் என்னும் மூன்று வாக்குத்தத்தங்களும் அடிக்கல்லாக அமைகின்றது. இவ் வார்த்தைப்பாடுகள் இறைவனோடு ஒன்றித்து இருக்கவும், வாழ்வின் ஊடாக இறையன்பை மக்களோடு கலந்துகொள்ளவும் உதவுகிறது. இன்றைய உருளும் உலகின் வேகத்தை விட நவீனங்களும், மாயைகளும் மனிதனைத் தடம் புரட்டுகின்றன. பல்வேறு சவால்கள் மத்தியில் ஆழமான இறை ஞானத்துடன் பலவகையான பணிகளினூடாக அன்பின் செய்தியை துறவிகள் அறிவிக்கின்றார்கள்.

இறை சித்தத்திற்குத் தங்களை முற்றும் முழுதாக அர்ப்பணித்து செபத்திலும், தபத்திலும் ஆழமாக இயேசுவுடன் உறவாடி அன்பு, சேவை, புரிந்துணர்தல், பகிர்தல், கற்பித்தல், போன்ற பல விதைகளை வித்திட்டு அதன் பலன்களை அயலவர்களின் வாழ்வில் கண்டு ஆனந்தமடைகிறார்கள்.

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, பேணிப்பாதுகாத்து, இயேசுவின் விழுமியங்களுக்கு வரைவிலக்கணம் கொடுத்து அர்ப்பண வாழ்வை சமர்ப்பணமாக்கிக் குருக்களால் சாதிக்கக் கிடைத்த சந்தர்ப்பம், மானிட மக்களுக்கு இறையழைத்தல் ஒரு வரப்பிரசாதம்.

புலம்பெயர்வாழ் எம் பங்கு மக்களுக்கு எம்மிதயங்கனிந்த பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். அன்றுமின்றும், எங்குமெப்பொழுதும் புனித யாகப்பரின் பரிந்துரையும், பாதுகாப்பும், ஆசீரும் தங்கள் பணி தொடர்ந்திடப் பக்கபலமாயிருக்கட்டும்.

திருமதி. லுமினா அன்ரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகக் காற்று!



"சொர்க்கமே என்றாலும் அது நம்ம ஊரப் போலவருமா" என்ற பாடல் வரிகளை என் மனதிற்குள் முணுமுணுத்தபடி என் மனக்கண் முன் உள்ள நினைவலைகளை இச்சிறு பதிவின் மூலம் வரைகின்றேன்.

மேன்மை மிகு காவலூரின்
மேற்கு புற வீதியிலே
மாண்பு மிகு காவலராய்
மாட்சியுடன் யாகப்பராம்

கண் இமைக்கும் பொழுதினிலே
கருணை மழை பொழிவீரே
கொள்ளை நோயின் கொடூரத்தை
கொடும் வாளால் கடிந்தீரே
குதிரை மேல் கொலுவிருந்து
குரோதங்கள் அடக்கினீரே
படையாட்சி குலத்தினரின்
படை வீரனாய்த் திகழ்ந்தீரே

கூழாமரத்தடியினிலே
கூடி நின்ற வேளையிலே
கிட்டிப் பொல்லும் கிளித்தட்டும்
கிளப்பியதே புழுதியினை
கரப்பந்தும் கால்பந்தும்
கரை கண்டு நின்றதுவே

மூன்று மணி வேளையிலே
முதியோர் கூடியிருந்து
செபமாலை ஓதி பின்
செய்திகள் பல பரிமாறினரே
உற்றார் உறவினரின்
ஊர் புதினம் பேசி நிற்பர்
இவை எல்லாம் எம் மனதில்
இனிமையாய் இனிக்குதல்லோ
உள்ளங்கை நெல்லியாக
உள்ளமதை மீட்டுதல்லோ

ஊர் கூடி தேரிழுத்து
உவகையோடு இருந்த வேளை
கால தேவன் கண் அசைவால்
கடல் கடந்து வந்தோமே
காவலூரில் மட்டுமல்ல
கனடா தேசத்திலும்
வெள்ளி விழா காணச்செய்த
வெண் குதிரை புனிதரே
வாழ்த்துகிறோம் உம்மையே
வாழிய வாழியவே வளர்க நின் புகழ்

திருமதி. றதினா பயஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canada: What it Means to Me

By: Kevin Quintus

Canada is a nation that is rich with culture of all kinds, and this is what makes our home and native land unique. It is known for its diversity, inclusiveness and peace on a global scale. Canada has been my home for my whole life, and it is important to acknowledge its 150th birthday which is approaching on July 4th. In honour of this, I would like to share my country's importance to myself.

I love food, and Canada is full of different foods from various cultures and of its own culture itself. First off, Canadian classics such as poutine and maple syrup are cherished by all. But there are some foods which you may not have known to originate from Canadian society. Nanaimo bars are loved for their sweet chocolate-coconut flavour, and are a surprise that they came from Canada, as it is a necessity is every bakery and pastry shop. Another delicacy to come from Canada is the butter tart, which is known for its saccharine taste with a hint of creamy butter. These foods meant the world to me as I grew, and helped me recognize what Canada has accomplished in the food industry.

Sports are loved by many all over the globe, but Canada has many deep roots when it comes to physical activity. Basketball was actually invented by a Canadian, Dr. James Naismith, when he wanted to create an indoor sport for his students during the winter that could be easily set up. He found some peach baskets, hung them up and used a volleyball and the rest is history. Canada's official sport is lacrosse, which is hard to believe since hockey is the most popular one, and it came from the Aboriginals who played it as a pastime dating back to over 1100 AD. The name lacrosse means "the stick" in French, after one settler from Europe saw the Iroquois play the sport with a stick that had a curved end. Hockey is the major sport of Canada, and thousands of Canadians have invested their lives in watching the NHL, which is the National Hockey League, that consists of 30 teams – 7 from Canada and 23 from the U.S – play hockey competitively. There are also many other sports that Canada partakes in like baseball, Football, Soccer, golf, Skiing and curling which should also be noted. Personally, I enjoy basketball as it is much safer than hockey and others and it is really easy to pick up and learn. Sports in Canada play a big part of my life, as I consistently watch the NBA (National Basketball Association) and play basketball, and my family watch the Toronto Leafs, Raptors, and Blue Jays on a regular basis while cheering on our favourite players.

Another big piece of my life is music. For as long as I can remember, music has been in my blood. There have been many musical icons and legends from Canada throughout the years, for example Drake, Justin Bieber, and Celine Dion. Drake is one of the biggest names in the rap music industry currently. His music is easily distinguishable from other rappers and he is a role model for many imminent singers. Justin Bieber blew up in the pop industry with his many hits and appeal to young girls. His popularity has increased to the point where he is one of the most recognized people on the planet. Celine Dion was a huge superstar in the R&B and pop industry in the 80's and 90's and put Canada on the map in terms of what Canadian music could achieve. Her music is still treasured by several Canadians, and her legacy will never be lost. Canadian music covers assorted genres such as hip-hop, country, and rock, just to name a few. Canadian music has had a big influence on my life as I constantly listen to different types of songs. It helps me think clearly and keeps me entertained.

The last aspect of Canada that is important to me is the vast amount of traditions and customs. Canada's multiculturalism is what unites all Canadians together, and it is one of the most important characteristics of a Canadian citizen. It is the foundation of every Canadian, since everyone came from another place, whether it be Sri Lanka, Britain, France or anywhere else. These shared customs allows all of us to experience different kinds of culture that we never would have known unless we were Canadian. It is truly an amazing facet of being Canadian, as I can embrace Chinese, Tamil, French, and any other culture in more or less the whole country and learn more about all these traditions. Overall, I'm grateful that I get to live in such a pleasant place where different food, sport, music, and traditions are connected through the millions of people that live here. Happy Birthday Canada!

Kevin Quintus
Grade 12 IB Program
St.John Paul II High School

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காால் பதிந்த இடங்களும்,நபர்களும்!

பாடசாலை.




துரைஜயா,குணசிங்கம்,முத்துமணி,பூமணி,அல்பேட்,றொகான் லீனஸ், டயஸ் பொனிபஸ்,றஞ்சினி,அனற்றாசி,கலா,அரசலா,யெசிலா, றஸ்மி.

சுங்கப்பகுதி!




பொன்னையா,செபஸ்ரியாம்பிள்ளை,கிறிஸ்ரியாம்பிள்ளை,
சூசைப்பிள்ளை,காணிக்கமுத்து,பவுலப்பர்,செங்கோல்,அந்தோனிமுத்து,ஈசாக்,மரிசிலீன்,சிங்கறாயர்,
அருளானந்தம்,புஸ்பராசா,தம்பையா,செபமாலைமரியான்,பாலசிங்கம்,
ஆசை,தங்கையா,பொனிபஸ்,சைமன்,சிங்கராயர்,டோமினிக்,அமிர்தம்.சந்தியாப்பிள்ளை.

கடற்படை!




நவரெத்தினம்,ஆசீர்வாதம்,மரியாம்பிள்ளை,அருமை,திருச்செல்வம்,சேவியர்.

காவல்துறை!



அந்தோனிப்பிள்ளை,சவிரிமுத்து,அலோசியஸ்,துரைசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைப்படை!

பொன்னையா,ஆபரணம்,அன்ரன்.

தபால் கந்தோர்!



அந்தோனிசாமி,யோசப்,லியோ,பினான்டோ,மரியதாஸ்.

துறைமுகம்!

சவிரிமுத்து,செபஸ்ரியாம்பிள்ளை,சாந்துமுத்து,மரியதாஸ்,யேசுதாசன்,செபஸ்ரியாம்பிள்ளை,வரப்பிரகாசம்,எட்வேட்.

தொழில்கந்தோர்!



வைத்தியசாலை!



மெற்றிலின்,அரசரெத்தினம்,அந்தோனிசாமி,டேவிட்,

விவேகானந்தி,அமலியேசுதாசன்.

அரசபணி மனை!



செபமாலைமுத்து,லீனஸ்,லூசியன்,இருதயதாசன்,சிலுவைமுத்து,மரியனாயகம்,அகஸ்ரின்,அலோசியஸ்,யேசுதாசன்,செல்லப்பர்னாந்து,பாக்கியராசா,குயின்சியேசுதாசன்,

நீதிமன்றம்!

கிறிஸ்தோத்திரம்,செல்லத்துரை,யோசப்,

யேசுதாசன்,சவிரிமுத்து,

சிறைச்சாலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டின சபை!




ஐயாத்துரை,அழகையா.

கூட்டுறவு!

பரமநாதன்.

கல்விக் கந்தோர்!




வங்கி!

வதனா.

தொழில் பயிற்சிநிலையம்!



பத்திரிகைத்துறை!




பொறியியல்துறை!

யுவக்கீன் யேசதாசன்,மோகன் அந்தோனிப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரசபை!

குலேந்திரன்.

சீமெந்துத் தொழிற்சாலை!




இரசாயனத் தொழிற்சாலை!

ஆபரணம், இருதயராசா,

வானொலி!

பிரான்சிஸ்.

பாதுகாப்புத் துறை!



சேவியர்.

மீன்பிடி இலாகா!

திமிங்குமுத்து,அந்தோனிஜயா,பிறிற்ரோ,அல்பிறட்,தாசன்,மரியவியானி,திருபால்.

கடலோடிகள்!



குயின்ரஸ் MASTER,தேவனாயகம்MATE,தாசன் MATEஅன்ரன் MATE, இம்மானுவேல் R-O,

காலத்தின் பற்றாக்குறை காரனத்தினால் மேற்குறிப்பிடப் பட்டவர்களின் முழுப்பெயர்களையோ, பெயர்களின் முதல் எழுத்தையோபதிவுசெய்யமுடியாமைக்குவருந்துகிறோம். பேச்சுவழக்கில் உள்ளபெயர்களையேபதிவுசெய்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Committee Members 1993-1999




**President: Joseph. Secretary: N. Jesu Thavarajan. Treasurer: Rajasegaram**

## Committee Members 1999-2011




**President: James Navaratnam. Vice President: Xavier Asirwatham. Secretary: Collin Suresh, Sri Ranjan Bernard. Asst. Secretary: Premala Rajasegaram. Treasurer: D. Elmo Antony. Asst.Treasurere: Collins Royson.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Committee members 2011-2014**

President: Nimalan Joseph. Vice President: Delman John. Secretary: Niranjan Xavier. Treasurer: Dickson Alwin. Committee members: Rossita Elmo, Anancia Collins, Ratheena Pius, Rohan Rajanayagam, N.F.X. Kulendran, Xavier Asirwatham.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Committee Members

Standing: Rossita Elmo, Anancia Collins, Ratheena Pius.

Sitting: Rohan Rajanayagam, Deroshan Jesuthasan, N.F.X. Kulendran, Fr. Charles Collins, Xavier Asirwatham, Niranjan Xavier.



**<u>Present Committee Members (2014-Present)</u>**

President: N.F.X. Kulendran. Vice President: Deroshan Jesuthasan. Secretary: Anancia Collins. Asst. Secretary: Rossita Elmo.
Treasurer: Xavier Asirwatham. Committee Members: Ratheena Pius, Rohan Rajanayagam, Niranjan Xavier.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவுக்கு நன்றி!

இந்த அற்புதமான கனடா நாட்டிற்கும், பொன்னிதயம் கொண்ட கனடியர்களுக்கும் எங்கள் இதய நன்றியைத் தெரிவிக்கும் திறந்த மடல் இது. இந்த நாட்டிற்கு நாம் என்றும் நன்றியுடைவர்களாக இருக்கிறோம். எமது தற்போதைய கௌரவமான வாழ்வியலுக்கு எம்மைப் புடம்போட்டதுடன், இனி வரப்போகின்ற எமது சந்ததியின் வளர்ச்சிக்கும் பாதையை செப்பனிட்டுத் தந்த இந்த நாடு போற்றுதற்குரியது.

நாம் இந்தக் கனடிய நாட்டிலிருந்து தொடர்ச்சியாக நிறையவே கற்று வருகிறோம். அனைவரையும் சமமாக மதிக்கும் பன்முகத்தன்மை, கனடிய நாட்டில் மிகவும் மேன்மையுடன் பேணப்படுகிறது. கனடாவின் முழுமையான பண்பாட்டில் இப் பன்முகத்தன்மை மதிக்கப்படுவது மட்டுமன்றி, அதற்கான பாராட்டும் கௌரவமும் கொடுக்கப்பட்டு, அதன் தனித்தன்மையும், தகுதரமும், பண்பும் இந்நாட்டின் கலாச்சாரத்தின் மூலவிசையாக பேணப்படுகின்றது. இதற்கான சகிப்புத்தன்மையையும் தாராளப்போக்கையும் வெறும் கொள்கையாக மட்டுமன்றி, தனது பண்பாட்டிலும் நாளாந்தம் பயன்படுத்தக் கற்பித்துத் தருகிறது கனடிய நாடு. மக்கள் ஒருவரையொருவர் புரிதலுடன் பொறுத்துக் கொள்கிறார்கள், மற்றவர் சொல்வதைக் கேட்கிறார்கள், உதவி செய்யவும் ஏற்றுக் கொள்ளவும் என்றும் தயங்கியதில்லை. இவற்றைத் தாங்கும் சமூக மாண்பாக சகிப்புத்தன்மை பேணப்படுவதுடன், இந்தப் பண்பு, மக்களிடையே காணப்படும் வேற்றுமைகளையும், பேதங்களையும், இவர்களது தொடர்பாடல்களிலுள்ள பதற்றங்களையும் மனக்கசப்புக்களையும் குறைக்கும் அடிப்படை விடயமாகக் கைக்கொள்ளப் படுகிறது. சகிப்புத்தன்மையும் பரிவும் மிக முக்கிய குணாதிசயங்களாக கனடாவில் அழகுடன் பயன்பாட்டில் உள்ளன.

ஒரு சமூகமே ஒன்றிணைந்து, நிறைவான - மதிப்புநிறைந்த சூழமைவை எப்படி உருவாக்கலாமென்பதை கனடாவிடம் நாம் கற்றுக்கொண்டோம். பெண்கள் தமது வாழ்வின் எத்தகைய சூழலிலும் சமூகத்தில் சம கௌரவத்துடனும் அந்தஸ்துடனும் வளர்ந்து வெற்றிபெற கனடிய நாடு உற்சாகம் கொடுத்து ஊக்குவிக்கிறது. இந்த நாட்டில் வெற்றிபெற்ற ஏராளமான பெண்கள், அவர்களது அனுபவம், ஆற்றல் மற்றும் புத்திக்கூர்மை மூலம் எமக்கு நிறையவே கற்றுத்தருகின்ற முன்னுதாரண தாரகைகளாக இருக்கிறார்கள். இத்தகைய உயர்ந்த விழுமியங்கள், கனடாவில் எப்போதாவது தற்செயலாகக் கிடைக்கும் அனுபவங்களல்ல, இவை கனடிய நாட்டு மக்களால் ஒன்றாக இணைந்து எடுக்கப்பட்ட முடிவுகளாக, அரசசாசனங்களிலும் நிறுவனமயப்பட்ட சட்டதிட்டங்களிலும் உத்தியோகபூர்வமாக உள்ளிடப்பட்டு கடைப்பிடிக்கப்படும் அம்சங்களாக இருப்பது கனடாவிற்கே உரிய தனித்தன்மையாகும்.

பல்கலாச்சாரத்திற்குப் பெருமை பெற்ற இந்நாட்டில் பன்நாட்டு மக்களும் புரிதலுடன் வாழ்கிறார்கள், மிக அழகான இந்த நாட்டில் ஏராளமான வளங்களும் வாய்ப்புக்களும் நிறைந்திருக்கின்றன. கனடாவில் வாழும் பெரும்பான்மையான மக்களைப் பொறுத்தவரை, இந்த நாடு மிகத் திருப்திதருகின்ற தங்கள் வாழ்விடமாக அவர்கள் கருதுவதுடன், வேறு ஒரு நாட்டிற்குச் சென்று வாழவேண்டுமென்ற எண்ணம் பொதுவாக இருப்பதில்லை. இதன் காரணமாகவே, திரு. ஜாக் கிறநெற்ஸ்ரீன் கூறுகையில் "கனடா கடவுளின் பூமி" என்று குறிப்பிடுகிறார். திரு. போனோ கருத்துக் கூறுகையில், "இந்த உலகில் இன்னும் பல கனடா நாடுகள் உருவாக வேண்டும்" என்றார்.

உலகில் அதிகபட்சம் அமைதி நிறைந்த முதன்மை நாடுகளில் கனடாவும் ஒன்று. கனடிய மக்கள் இந்தப் பெருமையை இறுமாப்பாகக் கருதாமல், அடக்கத்துடன் ஏற்றுக் கொள்கிறார்கள். கனடாவில் வாழும் மக்கள், கனடாவை தம் சொந்த நாடு என்ற பெருமையுடனும், தாம் வாழும் பகுதியை தமது சொந்த சமூகம் என்ற கௌரவத்துடனும் மதிக்கிறார்கள். தான் ஒரு கனடியப் பிரஜை என்பதில் பெருமிதமடையும் இம்மக்கள், தாம் வேறு எந்த நாட்டிற்குப் பயணித்தாலும், தாம் கனடியர்கள் என்பதில் மிகுந்த நிறைவு கொள்கிறார்கள்.

கனடிய நாடு ஜனநாயகப் பண்புகளைப் போற்றி மதிக்கிறது. நிறைவான சுதந்திரத்தை எமக்கு வழங்கும் இந்த ஜனநாயக நாட்டில் வாழ்வதற்குத் தந்த வாய்ப்பிற்காக நாம் நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறோம். ஏராளமான மக்கள், இந்நாட்டின் சுதந்திரத்தையும் தனியுரிமையையும் தங்கள் வாழ்வில் நிறைவுடன் வாழ்கிறார்கள். அதாவது நம்பிக்கையில் சுதந்திரம், மத சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், ஜனநாயக தேர்தலில் வாக்களிக்கும் உரிமை போன்றவற்றுடன், நாம் நாமாக வாழ்வதற்கான முழு உரிமையையும் இந்நாடு எமக்குத் தருகிறது.

கனடிய நாட்டின் மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளின் தகுதரம், உலக நாடுகளில் தலைசிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. கனடிய நாட்டின் மருத்துவ அமைப்புமுறை, இந்நாட்டின் குடிமக்களை நன்றாகப் பராமரிக்கும் வகையிலும், எத்தகைய நோய்கள் வந்தாலும் அவற்றிற்கான எத்தகைய செலவுகள் வந்தாலும் அவற்றைப் பொறுக்கும் வகையிலும், புற்றுநோய், முடவாதம், இதயக் கோளாறு போன்ற எத்தகைய நோயாக இருந்தாலும் அவற்றிற்கு மருத்துவம் செய்யும் வசதியை உள்ளடக்கியதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத் துறையில் முழு சுதந்திரம் வழங்குகிறது இந்த நாடு. முயற்சியுடைய எவரும், கடுமையாக உழைக்கத் தயங்காத எவரும், இந்த நாட்டில் பெருவெற்றிபெற இந்நாட்டின் தொழில்துறையும் வியாபார உலகும் போதிய வாய்ப்புக்களை வழங்குகிறது. அதாவது பாடசாலைக் கல்வியை முடிக்காதோர், கல்லூரியிலிருந்து இடையில் விலகியோர், வேறு நாடுகளிலிருந்து வந்தோர் என்று யாராக இருந்தாலும், எந்த வரையறையோ தடைகளோ இன்றி, இந்நாட்டில் முழுமையான வெற்றிபெற முடியும். கனடிய நாடு வழங்குகின்ற வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் கைக்கெட்டிய தூரத்திலேயே உள்ளன, அவற்றை உரிய காலத்தில் பற்றிக்கொண்டு வெற்றிபெறுவது தனிநபர்களிலேயே தங்கியுள்ளது.

வாழ்வதற்கு மிகவும் சிறந்த ஒரு நாடு கனடா. இந்த நாட்டிற்கும், மக்களுக்கும், இந்த நாட்டைப் பெருமைபெற வைக்கும் இடங்கள் பொருட்கள் அனைத்திற்கும் நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

நன்றி கனடா!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THANK YOU CANADA!

This is an open letter to Canada and to the Canadians to tell them how profoundly thankful we are. We feel we are for ever indebted to them. Canada has shaped a lot of what we are now and what we would like to be and do for the generations to come.

We continue to learn a lot from Canada. The respect for diversity is superior in Canada. An entire culture that not only respects but also appreciates it and builds on it as a source of strength, beauty and uniqueness to this culture. Canada teaches us tolerance, not just as a concept, but as a cultural practice. Tolerance makes diversity possible. People are patient with each other, willing to listen, help and accept one another. Tolerance creates this social buffer, this cushion that reduces tension and friction of interactions and all kinds of differences. Tolerance and compassion are important values that we see beautifully practiced in Canada. We also learnt in Canada on how a society can be an example in creating an enabling and respectful environment that encourages women to rise up across all spheres of life and partner with ease in leading and developing society. We have seen examples of pioneer women, young and old, who have taught me us a lot and are beacons of wisdom, experience and energy.

The best thing about Canada is that these values are not random experiences but are institutions carefully built within society, enshrined in legislation and collectively sought by everyone. We have great diversity of people, we have a wonderful land and we have great possibilities. For most of the people living in this country, they don't want to go to any other country. It's good enough here for them. That is why Mr.Jack Granatstein once said "Canada is God's Country". And Bono said "The world needs more Canada".

Canada is one of the world's most peaceful countries. The Canadian people are a proud, yet humble enough. In Canada, there is a sense of belonging and a sense of community and pride of who we are. There is also a humble, yet confident pride that comes with being a Canadian citizen, something that many Canadians are able to gracefully pull off even while traveling around the world in different countries.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Canada is a democracy. We are thankful to be living in this democratic nation due to the many freedoms afforded here. Many people here enjoy a life of liberty and freedom. This means: Freedom of belief, freedom of religion, freedom of opinion, the right to vote in a democratic election and the freedom to be who we are.

The Canadian healthcare system is amongst one of the best in the world. The Canadian healthcare system has been setup to take good care of its citizens without the extensive costs that can sometimes arise when one is paying for costly treatments to treat health problems such as cancer, lupus, heart disease etc.

Entrepreneurship and business success is something that anybody can achieve within this country as long as you are willing to work for it. Yes, that means even if you didn't finish school, dropped out of college or moved here from a different country, – you can still find success in Canada without any limits. Canada offers a lot of opportunities and success is within your reach, all you have to do is grab it.

Canada is a great place to live. We are ever thankful for this great nation and the people, places and things that make Our country what it is.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி!

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

என்ற குறள் மொழிக்கு இணங்க புனித. யாகப்பர் சமூகத்துக்கு பெருமை சேர்த்துத் தந்தவர்களை நினைவில் கொண்டும், நமது சமூகத்தின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் அழிந்திடாது காத்துவரும் இன்றய சமுதாயத்திற்கும் நன்றி கூறுவது கட்டாயமானது என்ற பொருள்பட எமது சமூகத்தின் வரலாற்றுத் தடயங்களை பதிவு செய்து புத்தக வடிவில் வெளிவர உதவி செய்த ஆண்டவருக்கும், எம்காவலராகப் போற்றப்படும் புனித. யாகப்பருக்கும் முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இடம்பெயர்ந்து வந்தும் எம்மண் வாசைன மாறாது, ஒற்றுமையாக, ஒரு குழுமமாக ஒன்று சேர்ந்து கனடா தேசத்தில் ஒரு வரைவிலக்கணதிற்கு உட்பட்டு, நிர்வாகக்குழு அமைத்து, எமது இளைய சமுதாயத்தை தட்டிக்கொடுத்து, 25 வருடங்களாக நான்கு படிமுறையில் அன்று தொட்டு இன்றுவரை பேணிக்காத்து வரும் சகல நிர்வாகக் குழு அங்கத்தவர்க்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கி றோம்.

போர்க்காலச் சூழலால் சிதைவுற்று அழிந்தொழிந்து போகும் நிலையில் காணப்பட்ட புனித.யாகப்பர் ஆலயம், புனித. கப்பல்ஏந்தி மாதா ஆலயம் புதுப்பொலிவு பெற்று தீவகத்திற்கே அழகு சேர்க்கும் வகையில் காணப்படுவதற்கு நிர்வாகத்தின் பங்கு முதலிடம் வகிக்கின்றது.

எமது 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு மலர் வெளியிட வேண்டும் என்று எங்கோ ஒரு குரல் கேட்க சற்றும் தாமதமின்றி அமரர் இராசசேகரம் அவர்கள் கட்டாயம் அதைச் செய்ய வேண்டும் என்று முதல் குரல் தொடுக்க, என்ன வந்தாலும், எவ்வளவு செலவானாலும் மலர் வெளியிடத்தான் வேண்டும் என்று அடுத்ததாகக் குரல் பதித்தவர் செல்வன் டிறோசன் யேசுதாசன் அவர்களாகும். இந்த உறுதி மொழிகளை வாய்ப்பாகக் கொண்டு நிர்வாகம் புத்தகக் குழுவொன்றை தெரிவு செய்து எடுத்த முயற்சியின் பலனை இன்று தெட்டத் தெளிவாகக் காண்கிறோம்.

இதற்கான முன் ஆயத்தமாக திரு. குலேந்திரன் அவர்கள் வெளியீட்டு மலரில் இடம்பெற வேண்டிய விடயங்களைத் தொகுத்து நிர்வாகக் குழுவிடம் கையளித்தார். நூல் வெளியிடுவதற்கு முடிவு எடுத்ததும், ஆலோசனையைப் பெறுவதற்காக திரு. இராசபாலன் மாஸ்ரருடன் தொடர்பு கொண்டு அவரைச் சந்திக்க புத்தகக் குழு சென்றபோது அகமும், முகமும் மலர நம்மை அன்புடன் வரவேற்று, புத்தகம் எப்படி அமைய வேண்டும் என்ற கோவை ஒன்றை தயாரித்து நமது கையில் கொடுத்தது மட்டுமல்ல, அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளையும் , உற்சாகத்தையும் தந்துதவிய திரு.இராசபாலன் மாஸ்ரருக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மலரின் சிறப்பம்சமாக விளங்குவது புரிந்துகொண்ட ஒருவரால் பதியப்பபடும் அணிந்துரையின் உள்ளடக்கமேயாகும். இவ்விடயத்தில் திரு. S.M.யோசப் (இளைப்பாறிய ஆசிரியர் ) அவர்கள் வடித்துத்தந்த அணிந்துரை மிகச்சிறப்பான இடத்தை வகுத்துள்ளதுடன் நிறைவைத் தந்துள்ளது. அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் எமதுமலர் வெளியீட்டுக்கு ஆசீரோடு கூடிய வாழ்துக்களை நல்கிய வணக்கத்துகுரிய கத்தோலிக்க ஆயர்களுக்கும், குருமாருக்கும் வெளிநாடுகளிருந்து பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது சமுதாயப் பதிவுகளை நூல் வடிவில் வடித்தெடுப்பதற்கு எமக்கு ஆக்கங்களைத் தந்தவர்களுள் திரு. றெக்சிமாஸ்ரர், திரு. குயின்ரஸ், திரு. டேவிட் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் இன் நூலில் வெளிவந்துள்ள விடயங்களுக்கு தரவுகளைத் தந்துதவியவர்களுள் திரு. லீனஸ் மாஸ்ரர், திருமதி. றோசா நவரெத்தினம், திருமதி. அன்னறாணி மரியதாசன், திரு. அந்தோனி ஐயா, திரு. அல்பேட் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள். ஏனையவர்களை இப்புத்தகத்தைப் படிப்பதன் மூலம் தெரிந்துகொள்ளலாம். அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

தரவுகளை கணணி அச்சுப்பதிவு செய்வதில் முன்னிறு உழைத்தவர் திரு. குலேந்திரன் அவர்கள். கணணியில் பதிவு செய்ய வேண்டிய இடங்களில் புகைப்படங்களைப் பதிவு செய்வதற்கும், மற்றும் கணணியில் தேவையான படங்களை பிரதி எடுத்து இணைப்புச் செய்வதில் முக்கிய பங்காற்றியவர் செல்வி. Brightni குலேந்திரன் அவர்கள். இவரே அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்தவர். அத்துடன் தேவையான புகைப்படங்களைத் தந்துதவியவர்களுக்கும், பிரதிகளை பிழை திருத்தம் செய்து சரி பிழை பார்த்தவர்கள் திரு. மரியதாசன், திருமதி. றொசிற்றா எல்மோ அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்

புத்தகம் வெளிவருவதற்கு தேவையான பணத்தைச் சேகரிப்பதற்கு ஆலோசனையும், ஊக்கமும் காட்டியவரும், அச்சுக்கூடங்களை அணுகி குறைந்த செலவில் புத்தகம் வெளிவர முன்னின்று உழைத்தவர் செல்வன். டிறோசன் யேசுதாசன் அவர்கள். விரைவாகவும், அழகாகவும் புத்தகத்தை அச்சிட்டு குறித்த தவணையில் புத்தகம் வெளிவர உதவிய அச்சுக்கூட நிர்காகத்தினருக்கும், விளம்பரம் தந்து உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கி றோம். நன்றி, வணக்கம்.

புத்தக வெளியீட்டுக் குழுவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தரும் தாய்நாடு

தாய் நாடு நமக்குண்டு
தாங்கிட யாருமில்லை
சமத்துவமாய் வாழ்வதற்கு
வழியுமில்லை தாய்நாட்டில்

அமைதிகொண்டு வழிபட
ஆலயங்கள் பலவுண்டு
வித்தகனாய் வாழ்வதற்கு
பாடசாலை பலவுண்டு

உழைத்து நாம் வாழ்வதற்கு
வழிகளுண்டு நம் நாட்டில்
தமிழனாய் பிறந்ததினால்
எதற்குமங்கு இடமில்லை

குனிந்து நாம் வாழ்வதற்கு
இடமில்லை நம்மனதில்
உயர்ந்து நாம் வாழ்வதற்கு
ஆசையுண்டு நம்மனதில்

வரலாறு சிதைவுண்டு
நெருக்கங்கள் வந்ததினால்
புறப்பட்டோம் மண்ணைவிட்டு
கரம் நீட்டி வரவேற்றாள்
கனடாத் தாய்நாடு

அடிமை என்றோ
வந்தேறு குடியென்றோ
விலை கொடுத்து
வாங்கிய மக்களென்றோ
அகதியாய் வந்திங்கு
சேர்ந்துவிட்ட மக்களென்றோ
அழைக்கவில்லை நம்மை
கனடாத் தாய் நாடு

முன்னைய தாய் நாடு
குருதியின் சொத்து
பின்னைய தாய்நாடு
சிந்தையின் சொத்து

சிரித்த முகத்தோடு
தூய்மையான மனதோடு
கரம் நீட்டி வரவேற்று
உபசரித்தாள் நம்மை

கட்டாத வீட்டில்
குடியமர்த்தி எம்மை
நட்டாத பழங்களை
மகிழ்வாக உண்பதற்கும்
தேனோடு சேர்ந்து பாலும்
மகிழ்வுடன் பருகச் செய்தாள்

பல வர்ணப் பூக்களோடு
வண்ணத்துப் பூச்சிகளாய்
சிறகடித்துப் பறப்பதற்கு
வழியுண்டு இந்நாட்டில்

ஏழு சுரம் கொண்டு
எழுப்புகின்ற ஓசையதில்
நம்மோசையும் இடம்பெற
வழியுமுண்டு இந்நாட்டில்

வழிபட விருப்பமென்றால்
விருப்பமாய் வழிபடலாம்
படிக்க நீ விரும்பினால்
பலவழிகள் உனக்குண்டு
உயர்வடைய விரும்பினால்
அதற்குமிங்கு இடமுண்டு

சிதைவுற்ற வரலாற்றை
கலைந்துவிட்ட கனவுகளை
புதுமையான வழியில்
எடுத்து நீ நிறுத்துதற்கு
இடமுண்டு இந்நாட்டில்
எழுந்து நீ வந்திடுவாய்

காவலூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# St. James the Great
# Pray for us



Printed by: Apex Creations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org